**MSU/2021-2022/PG-Colleges/M.A.Tamil/Semester-IV/Ppr.no.20/Core-14**

**இலக்கணம் - IV - தொல்காப்பியம் - பொருள் - II (6 – 9 இயல்கள்) LTPC**

**3204**

நோக்கம்:

1. பொருளதிகாரம் விளக்கும் மெய்பாடுகளை அறிதல்
2. பொருளதிகாரத்தில் அடங்கியுள்ள பாவியல் அடிப்படைகளை அறிதல்
3. மரபியலின் சிறப்பினை உணர்தல்

**முன் தேவை:**

1. பா வகைகளை அறிந்திருத்தல்
2. அணி வகைகளை அறிந்திருத்தல்
3. இளங்கலையில் யாப்பருங்பலக்காரிகை தண்டியலங்காரம் ஆகிய நூல்களைக் கற்றிருத்தல்

**கற்றலின் பயன்:**

1. மரபுக் கவிதைகள் புனைவதற்கான அடிப்படைத் திறன் பெறதல்
2. இலக்கிய நயங்களின் இனிமை அறிந்து அதன் வழி கவி படைக்கும் ஆற்றல் அடைதல்
3. அ∴றிணை உயிரினங்கள் குறித்த தொல்காப்பியரின் அறிவியல் சிந்தனைகளை அறிதல்
4. தமிழ் நாடக – மெய்பாட்டு மரபை அறிதல்

**அலகு : 1**

தொல்காப்பியம் - மெய்பாட்டியல், உவமவியல் (9L6T)

**அலகு : 2**

தொல்காப்பியம் - செய்யுளியல் , மரபியல் (9L6T)

**அலகு : 3**

தொல்காப்பியம் செய்யுளியலிலிருந்து யாப்பருங்கலக்காரிகை வேறுபடும் இடங்கள்

1.எழுத்து 2. அசை 3. சீர் 4. அடி 5. தொடை 6. பா வகை (9L6T)

**அலகு : 4**

வண்ணம் , வனப்பு, நூல் வகை, குற்றம் , உத்தி (9L6T)

**அலகு : 5**

தொல்காப்பியம் எழுந்ததன் நோக்கம் (வரலாற்றப் பின்னணியில் ஒரு ஆய்வு) - தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியம் - தொல்காப்பியப் பொருளதிகாரம் காட்டும் மொழிப் பொருண்மை அமைப்பு - இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் (தொல்காப்பியம் பன்முக வாசிப்பு நூலிருந்து மேற்குறிப்பிட்ட 4 கட்டுரைகள் மட்டும்) (9L6T) (45L+30T=75hours)

# அலகு 1

# மெய்ப்பாட்டியல்

**மெய்ப்பாட்டியல்**

மெய்ப்பாட்டியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஆறாவது இயலாக அமைந்துள்ளது. இவ் இயலில் இருபத்து ஏழு நூற்பாக்கள் அமைந்துள்ளன. மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடு ஆயிற்று என்பார் இளம்பூரணர். உள்ளத்தின்கண் தோன்றும் உள்ளக்கிளர்ச்சிகள் மெய்யின்கண் வெளிப்படுமாற்றையே மெய்ப்பாடு என்கின்றனர்.மெய்ப்பாட்டின் இலக்கணமும் அதன் வகைகளும் அது செய்யுளில் இடம்பெறும் பாங்கும் இவ்வியலில் பேசப்படுகின்றது.

## மெய்ப்பாடு:

**பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**

**கண்ணிய புறனே நானான் கென்ப .**

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பிறர் வேண்டுமாற்றால் சுவையுஞ் சுவைக்குறிப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

பண்ணைத் தோன்றிய என்பது - விளையாட்டாயத்தின்கண் தோன்றிய என்றாறு அமைந்தது. பண்ணையுடையது பண்ணை என்றாயிற்று.

எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான்கென்ப என்பது முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர்.

முப்பத்திரண்டாவன - நகை முதலானவற்றிற்கு ஏதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டு ஈறாக முன்னெடுத்து ஓதப்படுகின்றன அவற்றைக் குறித்த புறனாவன சுவையும் குறிப்பும் வீரம், அச்சம் இழிப்பு வியப்பு, காமம், அவலம், உருத்திரம். நகை, நடுவுநிலைமை என்றும், வீரக்குறிப்பு, அச்சக் குறிப்பு இழிப்புக் குறிப்பு, வியப்புக்குறிப்பு, காமக் குறிப்பு, அவலக் குறிப்பு, உருத்திரக் குறிப்பு, நகைக் குறிப்பு, நடுவு நிலைமைக் குறிப்பு என்றும் சொல்லப்பட்ட பதினெட்டினும், நடுவுநிலைமையும் அதன் குறிப்பும் ஒழித்து ஏனைய பதினாறுமாம்.

வியப்பெனினும் அற்புதமெனினும் ஒக்கும், காமமெனினுஞ் சிங்காரமெனினும் ஒக்கும். அவலம் எனினும் கருணையெனினும் ஒக்கும், உருத்திரம் எனினும் வெகுளியெனினும் ஒக்கும், நடுவு நிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும். வீரம் என்பது மாற்றாரைக்குறித்து நிகழ்வது, அச்சம் என்பது அஞ்சத்தகுவன கண்டவழி நிகழ்வது. இழிப்பென்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது.வியப்பென்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது, காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது அவலம் என்பது இழவுபற்றிப் பிறப்பது, உருத்திரம் என்பது அவமதிப்பாற் பிறப்பதுநகையென்பது இகழ்ச்சி முதலாயினவற்றாற் பிறப்பது, நடுவுநிலைமை என்பது யாதொன்றானும் விகாரப்படாமை.

“இருவகை நிலத்தின் இயல்வது சுவையே" என்றும்

“நின்ற சுவையே.........

ஒன்றிய நிகழ்ச்சி சத்துவம் என்ப"

என்றும்

“சத்துவம் என்பது சாற்றுங் காலை

மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்

நடுக்கங் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்

கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த

பத்தென மொழிப சத்துவந் தானே."

என்றும் சார்பொருள் உரைப்ப

அவை வருமாறு:
பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி மயக்கமுங் கரத்தலும் நடுக்கமும் வியர்ப்பு முளவாகின்றே.அவற்றுள் அச்சத்திற்கு ஏதுவாகிய புலியும் பேயும் சுவைப்படுபொருள்.அவற்றைக்கண்டகாலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வெயர்ப்புஞ் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனாவது என்று கொள்க ஏனைய மனநிகழ்ச்சி பிறவு மன்ன. இவற்றின் பிரிவை நாடகநூலிற் காண்க என்பது உரையாசிரியர் குறிப்பாகும்.

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே**

மேற்சொல்லப்பட்ட பதினாறு பொருளும் எட்டென வரும் பக்கம் உண்டு.

அவையாவன குறிப்புப் பதினெட்டனையுஞ் சுவையுள் அடக்கிச் சுவை எட்டுமாக்கி நிகழ்தல்

## மெய்ப்பாட்டின் வகைகள்:

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப.**

நகைமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று சொல்லுவர்.

மெய்ப்பாடென்பது யாதோவென்னின்

**“உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்**
**மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே” எனக் குறிக்கும் செயிற்றியம்.**

அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும் மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று அ.்.தேல், இவ் விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்யவேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டு மென்க .

**“உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்**
**மெய்ப்பது முடிவது மெய்ப்பாடாகும்”**(செய்யுளியல். (196)

என இவ்வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க.

நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது. அழுகை என்பது அவலத்திற் பிறப்பது. இளிவரல் இழிப்பிற் பிறப்பது. மருட்கை வியப்பிற் பிறப்பது, அச்சம் அஞ்சத் தகுவனவற்றாற் பிறப்பது. பெருமிதம் வீரத்திற் பிறப்பது. வெகுளி வெறுக்கத்தக்கனவற்றாற் பிறப்பது உவகை சிங்காரத்திற் பிறப்பது.

## நகை பிறக்கும் நிலைக்களன்கள்:

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

**உள்ளப் பட்ட நகைநான் கென்ப.**

எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப் பொருளாம்.

எனவே காரணம் பற்றி நகையும் நான்காயின. எள்ளல் என்பது எள்ளி நகுதல் ஆகும். முடவர் செல்லுஞ் செலவு எள்ளுதற் பொருண்மை யாயிற்று. மடவோர் சொல்லுஞ் சொல் மடைமைப் பொருண்மையாயிற்று. கவற்சி பெரிதுற்றுரைப்போர் கூற்றுப் பேதைமை யாயிற்று குழவிகூறு மழலை இளமைப் பொருளாயிற்று.

**நகையாகின்றே தோழி - என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,**

**மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின்றதுவே** (அகம் . 56 )

எனக்கூறி நகையாகின்றே தோழி என்றமையின் எள்ளல் பற்றி நகை தோன்றிது

## அழுகை பிறக்கும் நிலைக்களன்கள்:

**இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே.**

இழிவு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் அழுக்கைப் பொருளாம்.

இழிவு - பிறர் தன்னை எளியன் ஆக்குதலாற் பிறப்பது.

இழவு - உயிரானும் பொருளானும் இழத்தல்

அசை - தளர்ச்சி, அது தன்னிலையில் தாழ்தல்.

வறுமை - நல்குரவு.

இவை ஏதுவாக அழுகைபிறக்கும்.

இதுவும் தன்மாட்டு உற்றதனானும் பிறர்மாட்டு உற்றதனானும் பிறக்கும்.

**“ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே**

**அணைத்தனன் கொளினே அகன்மார்பெடுக்க வல்லேன்**

**என்போற் பெருவிதுப் புறுக நின்னை**

**இன்னாதுற்ற அறனில் கூற்றே**

**நிரைவளை முன்கை பற்றி**

**வரைநிழல் சேர்க நடத்திசிற் சிறிதே”**

இது இழிவுபற்றி வந்த அழுகை.

## இளிவரல் பிறக்கும் நிலைக்களன்கள்:

**மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**

**யாப்புற வந்த இளிவரல் நான்கே.**

மூப்பு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் இளிவரலுக்குப் பொருளாம். இவை நான்குந் தன் மாட்டுத் தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

மூப்பு - முதுமை

பிணி - பிணியுறவு கண்டு இழித்தல்,

வருத்தம் - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும்,

மென்மை - நல்குரவு

**“தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**

**வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா**

**மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்**

**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று”** (நாலடி - 14)

பிறர்மாட்டு மூப்புப்பற்றி இழிப்புப் பிறந்தது.

**“மாக்கேழ் மடநல்லாய் என்றாற்றுஞ் சான்றவர்**

**நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை - யாக்கைக்கோர்**

**ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே**

**காக்கை கடிவதோர் கோல”** (நாலடி - 41

இது உடம்பினை அருவருத்துக் கூறுதல்.

**“செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்**

**உற்றார் அறிவதொன் றன்று”** (குறள் - 1255)

இது பிறன் வருத்தங் கண்டு இழிப்புப் பிறந்தது .

**“தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய**

**கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**

**மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்**

**தாமிரந் துண்ணுமளவை**

**ஈன்ம ரோவிவ் வுலகத் தானே”** (புறம் - 74 )

இது தன்மாட்டு வருத்தத்தான் இழிப்புப் பிறந்தது .

**“அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்**

**பிறன்போல நோக்கப் படும்”** (குறள் - 1047)

**“இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**

**சொற்பிறக்கும் சோர்வு தரும்”** (குறள் - 1044)

## மருட்கை பிறக்கும் நிலைக்களன்கள்:

**புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**

**மதிமை சாலா மருட்கை நான்கே .**

புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் மருட்கைபிறக்கும்.

புதுமை - யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினுந் தோன்றாததோர் பொருள்தோன்றியவழி வியத்தல், அது கந்திருவர் அந்தரம் போவதுகண்டு வியத்தல் போல்வன.

பெருமை - பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள்கள் அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தல் அவை மலையும் யானையும் செல்வமும் முன்கண்ட அளவின் மிக்கன கண்டவழி வியப்பு வரும்.

சிறுமை - பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது கடுகின்கட் பல துளை போல்வன .

ஆக்கம் - ஒன்றன் பரிணாமங்கண்டு வியத்தல். அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின. ஆகியவழி வியத்தலும்நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின், அதற்குக் காரண முணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங் கண்டு வியத்தலுமாம். பிறவும் உலகத்து வியக்கத்தகுவன எல்லாம் இவற்றின்பாற் படுத்திக் கொள்க.

**“பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல் --**

**ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்**

**கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்**

**காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்**

**கட் புலங் காண விட்புலம் போயது**

**இறும்பூது போலும் அ்.தறிந்தருள் நீயென”**(சிலம்பு - பதிகம்) -

புதுமை

## அச்சம் பிறக்கும் நிலைக்களன்கள்:

**அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே .**

அணங்குமுதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் பிறக்கும் மாறுபடுதல் அமையாத அச்சம் நால்வகைப்படும். பிணங்கல் சாலுமாயின் நடுக்கம் முதலாயின உளவாகா, அவை பிணங்கல் சாலாத வழியே உளதாவ தென்று கொள்க.

கொலை, களவு, கட்காமம், பொய் என்பனவற்றை நிகழ்த்தினவர்க்கு அரசனால் அச்சம் வருதலின் அவனும் அஞ்சப்படும் பொருளாயினான்.

**“மையல் வேழ மடங்கலின் நெரிதர**

**உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்**

**திருந்துகோல் எல்வளை தெளிர்ப்ப நாணமறந்து**

**விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்**

**சூருறு மஞ்ஞையின் நடுங்கி"** (குறிஞ்சிப் . 165 -1 ) எனவரும்.

## பெருமிதம் தோன்றும் நிலைக்களன்கள்:

**கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்**

**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே .**

கல்வியானுந் தறுகண்மையானும் புகழ்மை யானும் கொடையானும் பெருமிதம் நால்வகைப்படும்.

இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழிப் பிறக்கு மகிழ்ச்சி பெருமிதம் என்று கொள்க.

பெருமிதம் - தன்னைப் பெரியனாக நினைத்தல்.

தறுகண் - வீரம்

புகழ்மை - புகழ்

கொடை - வள்ளண்மை

**"உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்**

**சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய்- எறிசுடர்வேல்**

**தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்த நின்னொடு**

**"கலா வீரர் படை."** (புறப்.வெ.7,8)

இது வீரம்பற்றி வந்தது.

## வெகுளி பிறக்கும் நிலைக்களன்கள:

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**

**வெறுப்ப வந்த வெகுளி நான்கே.**

உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினாலும் வெகுளி பிறக்கும்.

இப்பொருள் நான்குந் தான் பிறரைச் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும் தன்னைப் பிறர் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்

உறுப்பறை - அங்கமாயினவற்றை அறுத்தல்.

குடிகோள் - கீழ்வாழ்வாரை நலிதல்.

அலை - வைதலும் புடைத்தலும்.

கொலை - கொல்லுதற்கு ஒருப்படுதல்.

ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அது இன்பத்திற்குக் காரணமாதலால் தலைமகள் புருவநெரிவும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெகுட்சி பிறவாது உவகை பிறக்கும். தலைமகன் வெகுளுவனாயின் அதன்பாற்படும்.

**“உறுதுப் பஞ்சாதுடல்சினஞ் செருக்கிச்**

**சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை**

**அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ**

**டொருங்ககப் படேஎ னாயின்.”** (புறம்.72)

வெகுளிபற்றி வந்தது

## உவகை பிறக்கும் நிலைக்களன்கள்:

**செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென**

**அல்லல் நீத்த உவகை நான்கே.**

செல்வ நுகர்ச்சியானும். கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலன்களான் நுகர்தலானும் மகளிரொடு புணர்தலானுஞ் சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினானும் உவகை பிறக்கும்.

**“தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்**

**அம்மா அரிவை முயக்கு.”** (குறள். 1107)

செல்வ நுகர்ச்சி

**வையை வருபுனல் ஆடல் இனிதுகொல் …..**

**வழிமயக் குற்று மருடல் நெடியான்**

**நெடுமாடக் கூடற் கியல்பு.”** (பரிபாடல்)

**அவையும் உளவே அவையலங் கடையே**

**ஆங்கவை,ஒருபால் ஆக வொருபா லாக**

**உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்**

**தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்**

**கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்**

**நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ**

**முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை**

**கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக**

**கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை**

**வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ**

**அவையும் உளவே அவையலங் கடையே.**

இந்நூற்பா மேற்சொல்லப்பட்ட எண்வகை மெய்ப்பாடும் ஒழிய வேறுபட்டுவருவன சில மெய்ப்பாடு உணர்த்திற்று. மேற்சொல்லப்பட்டன ஒருபக்கமாக ஒருபக்கமுடைமை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் உள, அவையல்லாத விடத்து என்றவாறு. எனவே, ஆமிடத்து இவை அங்கம் ஆகும்.

உடைமை - யாதானு மொருபொருளை உடையனாயினால் வருதலாகும் மனநிகழ்ச்சி.

**“நெடுநல் யானையுந் தேரு மாவும்**

**படையமை மறவரு முடையம் யாமென்**

**றுறுதுப் பஞ்சாது.”**(புறம்.72)

இன்புறல் - நட்டாராகிப் பிரிந்துவந்தோரைக் கண்ட வழி வருவதோர் மன நிகழ்ச்சி போல்வது.

**“விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட**

**நாளினும் இனிய நல்லாள்”**

நடுவுநிலைமை: - ஒருமருங்கு ஓடாது நிகழும் மனநிகழ்ச்சி.

**“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்**

**கோடாமை சான்றோர்க் கணி.”** (குறள்.118)

அருள் - எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்.

**“அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்.”** (கலித்.11)

தன்மை - சாதியியல்பு.

பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்கு மியல்பு. அது மெய்க்கடமையின்கண் வேறுபட்டுவருதலின் மெய்ப்பாடாயிற்று.

**“வயலைக் கொடியின ் வாடிய மருங்குல்”**

அடக்கம் - மனமொழிமெய்யன் அடங்குதல். அது பணிந்த மொழியும்

தானைமடக்கலும் வாய்புதைத்தலும் போல்வன.

**“ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்.”** (குறள்.126)

வரைவு - செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவும் வரைந்து ஒழுகும் ஒழுக்கம், அது.

**“பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை**

**கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை.”** (திரிகடுகம்.29)

அன்பு - பயின்றார் மாட்டுச் செல்லுங் காதல்.

**“புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**

**அகத்துறுப் பன்பி லவர்க்கு.”** (குறள்.79)

கைம்மிகல் - குற்றமாயினுங் குணமாயினும் அளவின் மிகுதல். அது நிலையின் வேறுபடுதலின் மெய்ப்பாடாயிற்று. கையென்பது அளவுகுறித்ததோர் இடைச் சொல்.

**“குணனிலனாய்க் குற்றம் பலவாயின்.”** (குறள்.868)

நலிதல் - பிறரை நெருக்குதல்.

அதன்கண் நிகழும் மனநிகழ்ச்சி நலிதலாயிற்று. இதுவும் மேற் சொல்லப்பட்ட எட்டும் இன்மையின் ஈண்டு ஓதப்பட்டது.

**“பகைநலியப் பாசறைவு ளான்.”** ( நெடுநல், இறுதிவெண்பா)

சூழ்ச்சி - எண்ணம்.

**“சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**

**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.”** (குறள்.445 )

வாழ்த்தல் - பிறனை வாழ்த்துதல்.

**“வாழியாதன் வாழி”** (ஐங்குறு.6) என்றும் .எங்கோ வாழிய குடுமி (புறம்.9) என்றும் இவ்வாறு வருவழி. ஆண்டு வரும் மனநிகழ்ச்சி மெய்ப்பாடாம். ஆ.்.தேல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் எனின் அது வெகுட்சியின் முதிர்வு. இது அன்பின் முதிர்வாகாதோஎனின். அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்துதலின் அடங்காதென்க.

நாணல் - தமக்குப் பழிவருவன செய்யாமை.

**“பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்**

**குறைபதி என்னு முலகு.”** (குறள்.1015)

துஞ்சல் - உறக்கம். அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

**"...........முனிவின்றி.**

**நனந்தலை யுலகமுந்துஞ்சும்."** (குறுந்.6)

அரற்று - உறக்கத்தின்கண் வரும் வாய்ச்சோர்வு.

அதுவும் ஏனைச்சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப்பாடாயிற்று முன் உறக்கம் வைத்தலானும் பின் கனவு வைத்தலானும் இப்பொருள் உரைக்கப்பட்டது.

**"பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல் -----**

**செய்பொருள் முற்று மளவு."** (கலித்.24)

இது களவியலின் பாற்படுமெனின் அரற்றென்பது ஒருபொருளைப் பலகாற்கூறுதல் அஃது அப்பொருண்மேற் காதலாற் கூறுதலின் அதுவுமோர் மெய்ப்பாடாயிற்றெனவுமாம்.

**"பொன்னார மார்பிற் புனைகழற்சாற் கிள்ளிபேர்**

**உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் கென்னோ**

**மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்**

**புனல்நாடன் பேரே வரும்."** (முத்தொள்.104)

கனவுநிலை நனவுபோலாமையின் மெய்ப்பாடாயிற்று.

முனிதல் - வெறுத்தல்

**"காலையெழுந்து கடுந்தேர் பண்ணி**

**வாலிழை மகளிர்த் தரீஇச் சென்ற**

**மல்லல் ஊர் மெல்லினன் பெரிதென**

**மறுவருஞ் சிறுவர் சாயே**

**தெறுக அம்மஇத் திணைப்பிறத் தல்லே."** (குறுந்.45)

குடிப்பிறத்தலை வெறுத்தல்

நினைத்தல் - கழிந்ததனை நினைத்தல். அது மறந்தாங்கு மறவாது பின்புந் தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

**"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்பல்**

**சினைப்பது போன்று கெடும்."** (குறள்.1203)

வெரூஉதல் - அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத்தோன்றி மாய்வதோர் குறிப்பு. அதனைத் துணுக்கு என்றாமென்பது

**“ஒருஉநீ எங்கூந்தல் கொள்ளல்யா நின்னை**

**வெரூஉதுங் காணுங் கடை.”** (கலித்.87)

மடி - சோம்புதல்.

**“மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்**

**கடிமை புகுத்தி விடும்.”** (குறள்.608)

கருதல் - குறிப்பு.

**“குறிக்கொண்டு நோக்காமை அல்லா லொருகண்**

**சிறக்கணித்தாள் போல நகும்.”** (குறள்.1095)

ஆராய்ச்சி - ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தெனவாராய்தல்.

ஆராய்தல் - தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்

**“நன்மையும் தீமையும் நாடி நலம்புரி.”** (குறள்.511)

**“ஆயும் அறிவினர்”** (குறள்.918)

விரைவு - ஒருபொருளைச் செய்ய நினைத்தான் அது தாழ்க்கில் அப்பயன் எய்தான் கடிதின் முடித்தல் வேண்டுமெனக் குறித்த மனநிகழ்ச்சி.

உயிர்ப்பு - முன்புவிடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல்.

**“.....பானாட்**

**பள்ளி யானையி னுயிர்த்தென்**

**உள்ள மின்னுந் தன்னுழை யதுவே.”** (குறுந்.142)

கையாறு - காதலர் பிரிந்தால் வருந் துன்பமும் அந்நிகரனவும் வருவது.

**“தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்**

**கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ.”** (கலித்.24)

என்றவழிக் கையாறென்பதும் ஓர் மெய்ப்பாடாயிற்று.

இடுக்கண் - துன்பமுறு

மேலதனோடு இதனிடை வேறுபாடு என்னையெனின். கையாறு என்பது இன்பம் பெறாமையான் வருந்துன்பம் இடுக்கணாவது துன்பமாயின வந்துறுதல்.

**“அடுக்கி வரினு மழிவிலா னுற்ற**

**இடுக்கண் இடுக்கட் படும்.”** (குறள்.625)

பொச்சாப்பு - மறத்தல்.

**“பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த**

**மாசறு காட்சி யவர்.”** (குறள்.199)

என்பதனாற் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

பொறாமை - பிறர்க்கு ஆக்க முதலாயின கண்ட வழியதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி அதனை அழுக்காறு என்ப.

**“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**

**தீயுழி உய்த்து விடும்.”** (குறள்.168)

அழுக்காறு

வியர்த்தல் - தன்மனத்தின் வெகுட்சி தோன்றிய வழிப் பிறப்பதோர் புழுக்கம்.

**“பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்**

**துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.”** (குறள்.487)

இதன் கண் உள்வேர்ப்பர் என்றதனான் மனநிகழ்ச்சி

ஐயம் - ஒருபொருளைக் கண்டவழி யிதுவெனத் துணியாத நிலைமை.

**“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**

**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.”** (குறள்.108)

ஐயம் மனத்தின்கண் நிகழ்ந்தது.

மிகை - ஒருவனை நன்குமதியாமை.

**“மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்**

**தகுதியான் வென்று விடல்.”** (குறள்.158)

மிகுதி யென்பது நன்குமதியாமையாம்.

நடுக்கம் - யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமென வருமனநிகழ்ச்சி.

**“கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்**

**நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.”** (கலித்.13)

இத்துணையும் கூறப்பட்டன அகத்திற்கும் புறத்திற்கும் பொது.

## அகத்திற்கும் உரிய மெய்ப்பாடு:

அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகிய மெய்ப்பாடு உணர்த்திய தொல்காப்பியர் இனி அகத்திற்கே உரியன உணர்த்துகின்றார். இதில் களவு, கற்பிற்குரிய மெய்ப்பாடுகளைக் பிரித்து உரைக்கின்றார். அகத்திற்குரிய அவத்தைகள் பத்து அவையாவன: காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல்,மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரைதல்,நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பனவாகும்.இவற்றுள் முதலாவது அவத்தையாகிய காட்சி என்பதற்குரிய மெய்ப்பாடுகளைப் பின்வரும் நூற்பாவில் உரைக்கின்றார்.

**புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்**

**நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு**

**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.**

புகுமுகம் புரிதல் - தலைமகன் புணர்ச்சிக் குறிப்பினனாய்ப் புகுது முகத்தினை மாறுபடாது பொருந்துதல்.

**“கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**

**நோக்கம்இம் மூன்றும் உடைத்து.”** (குறள்.1085)

என்றாற்போலக் கூறியவழி ஒருவாதுநிற்றல்

பொறிநுதல் வியர்த்தல் - அவ்வழி முகம்புக்கு அவனைப் பொருந்திய தலைமகள் உட்கும் நாணும் வந்துழி வரும் நுதல் வியர்ப்பு.

நகுநய மறைத்தல் - அதன்பின்னர்த் தலைமகன் கூறுவன கேட்டு நகைவந்துழி நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனாகாமை மறைத்தல்.

சிதைவு பிறர்க்கின்மை - தன் மனனழிவு பிறர்க்குப் புலனாகாமை நிற்றல்.ஓடு எண்ணின்கண் வந்தது.

இவ்வாறு தகுதியுடைத்தாய் முறைப்படவருவன நான்கும் முதல் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு.

## வேட்கைக்குரிய மெய்ப்பாடு

**கூழை விரித்தல் காதொன்று களைதல்**

**ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு**

**கெழீஇய நான்கே இரண்டெடன மொழிப.**

கூழைவிரித்தல் முதலாகச் சொல்லப்பட்ட முறைமையுடைய நான்கும் இரண்டாம் அவத்தைமெய்ப்பாடு ஆகும்.

கூழைவிரித்தல்: - மேல் நகுநயமறைத்தாள் காதன் மேல் வேட்கை செல்லுமாயின் வாளாது நிற்றல் ஆற்றாது மயிரினைக் குலைத்தல்.

காதொன்று களைதல் - காதிலணிந்த தொன்றை விழப்பண்ணியதனைத் தேடுகின்றார் போல நிற்றல்.

ஊழணி தைவரல் - முறைமுறையாக அணிந்த வணியைத் தைவருதல் என்றவாறு.

உடைபெயர்த்து உடுத்தல் - ஆடையைக் குலைத்துடுத்தல்.மூன்றாம் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு

**அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்**

**இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு**

**சொல்லிய நான்கே மூன்றெென மொழிப.**

அல்குல் தைவரல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் மூன்றாம் அவத்தை மெய்பாடு

அல்குல் தைவரல் - மேல் உடை பெயர்த்துடுத்தவள் அதனைப் பேணும் மதிப்பு உள்வழி தம்மைப்பேணுதல் பெண்டிர்க்கு அழகு.

அணிந்தவை திருத்தல் - அவ்வாறே கொள்க.

இல்வலி யுறுத்தல் - தமது இல்லதோர் வலியுறுத்தல். அது சாரநினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசைவில்லாரைப்போல மறுத்துக்கூறுதல்.

இருகையும் எடுத்தல் - அவ்வழி மறுத்த வாய் பாட்டாற் கூறினும் இரண்டிகையினையும் பிறிதோர் காரணம் பற்றிக் கிளர்த்தல். தலைமக்கள் முன்னர்ப் பெண்டிர் கை கிளர்த்தாராதலாற் புணர்ச்சிக் கொருப்பட்ட வுள்ளத்தாள் கிளர்த்துமென்க. இதனாற் பயன் நாண்நீங்கல்.

## நான்காம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு

**பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்**

**ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்**

**கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ**

**எடுத்த நான்கே நான்கென மொழிப.**

பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்காமவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு.

பாராட்டெடுத்தல் - தலைமகன் நின்றநிலையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்து மொழிதல்.

மடந்தப உரைத்தல் - பெண்டிரது இயல்பாகிய மடப்பங் கெடச் சில கூறுதல். அது தலைமகன் கூற்று நிகழும் வழியதற்கு மாற்றங் கொடுத்தலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுஞ் சொல்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல் - ஊராருஞ் சேரி யாருங் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றேன நாணுதல்.

கொடுப்பவை கோடல் - கண்ணியாயினுந் தழை யாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கோடல். மனத்தினான் உரிமை பூண்டானல்லது பிறன் பொருள் வாங்காமையின் இதுவுமோர் மெய்ப்பாடாக ஓதப்பட்டது.

## ஐந்தாம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு

**தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்**

**கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு**

**பொருந்திய நான்கே ஐந்தென மொழிப.**

தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்கு மெய்ப்பாடாம் என்றவாறு.

தெரிந்துடம் படுதல் - தலைமகன் கொடுப்பவை கொண்ட தலைமகள் ஆராய்ந்து உடம்படுதல் என்றவாறு. ஆற்றாமை பெருகுகின்ற காதலின் இத்துணையும் மறத்தவள் உடம்படுதல் என்றார். அவ்வழியுந் தெரிந்துடம்படுதல் என்றமையால் ஆராய்ந்தல்லது புணர்ச்சிக்கு உடம்படாமை கொள்க

திளைப்புவினை மறுத்தல் - விளையாட் டாயமொடு திரிவாள்

வேட்கை நலிதலான் அவ்விளையாட்டு வினையை மறுத்தல் என்றவாறு.

கரந்திடத்தொழிதல் - தலைமகனைக் காண்டல் வேட்கையால் ஒளித்துப் படத்தினின்று மொழிதல் என்றவாறு.

கண்டவழி உவத்தல் - தலைமகனைக்கண்டவழி மகிழ்தல்

## ஆறாம் அவத்தைக்கண்வரும் மெய்ப்பாடு

**புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்**

**கலங்கி மொழிதல் கையற வுரைத்தல்**

**விளம்பிய நான்கே ஆறென மொழிப.**

புறஞ்செயச் சிதைதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஆறாம் அவத்தைக்கண் மெய்ப்பாடாம்.

புறஞ்செயச் சிதைதல் - தலைமகன் கோலஞ் செய்யும்வழி யதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதைவுடையளாதல்.

புலம்பித் தோன்றல் - பொலிவழிந்து தோன்றல்.

கலங்கி மொழிதல் - கூறுங்கூற்றுக் கலக்கமுற்றுக் கூறுதல்.

கையறவுரைத்தல் - செயலறவு தோன்றக் கூறல்.

இச் சொல்லப்பட்ட ஆறு அவத்தையும் பெண்பாலார் எல்லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை.

புறனடை

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி

மன்னிய வினைய நிமித்த மென்ப

மேற் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் நிலைபெற்ற வினையுடைய நிமித்தமாம்.

வினை என்பது கற்பிற்குரிய காரணமாம்.

அன்னவை பிறவுமாவன: நோக்கானை நோக்கி இன்புறுதல் தனி யிடைநகுதல். நோக்குங் காலைச் செற்றார்போல் நோக்குதல்.

மறைந்துகாண்டல் தற்காட்டுறுத்தல்.

இந்நிகரன அவத்தை பற்றி நிகழ்ந்தனவாயின் ஏழாவது முதலாகப் பத்தாவது ஈறாகக் கூறவெனின் ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற் றேறுத லொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்பாற்படும் ஒத்த காமத்து நிகழாது எட்டாவது உன்மத்தம். ஒன்பதாவது மயக்கம் பத்தாவது சாக்காடு ஆதலான் நடுவணைந்திணைக்கண் வருவன ஆறு எனக் கூறினார்.

வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே

கரணநிகழ்ச்சி உயிர்மெலிந்தவிடத்து இன்மையும் உரித்து.

எனவே இயற்கையும் நிகழும் என்றவாறாம். உம்மை எதிர்மறை யாகலால். கரணநிகழ்தல் பெரும்பான்மை. உயிர் மெலிவிடம் என்றமையால் ஐந்தாவது முதலாக இயற்கை நிகழும்

## கைக்கிளைக் குரியதோர் மரபு

**அவையும் உளவே அவையலங் கடையே.**

மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாயின உள நடுவணைந்திணை அல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண் என்றவாறாம்.

அவையலங்கடை என்றமையாற் பாடாண்பாட்டிற் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதேல் ஆண்டுப் புகுமுகம் உளதோ வெனின். தலைமகள் காட்சிமாத்திரத்தைத் தனது வேட்கைமிகுதியாற் புகுமுகமாய்க் கொள்ளும் என்க. பிற்கூறிய அவை என்பன களவும், கற்பும் முற்கூறிய அலை என்பன புகுமுகம் புரிதல் முதலாயின. அவையலங்கடை யவையுமுளவே என மாறிக் கூட்டுக என்பார் இளம்பூரணர்

## பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள்:

**இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்**

**எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்**

**பசியட நிற்றல் பசலை பாய்தல்**

**உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்**

**கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்**

**பொய்யாக் கோடல் மெய்யை என்றல்**

**ஐயஞ் செய்தல் அவன்தம ருவத்தல்**

**அறனழித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்**

**எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்**

**ஒப்புவழி யுறுத்தல் உறுபெயர் கேட்டல்**

**நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.**

மேல் நடுவன் ஐணந்தினைப் பகுதியாகிய களவிற்கும் கற்பிற்கு முரிய மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் கைக்கிளைக்குரியவாமாறு உணர்த்தினார். இனி இச்சூத்திரத்தாற் பெருந்திணைக் குரிய மெய்ப்பாடு உணர்த்துகின்றார் தொல்காப்பியர்,

இன்பத்தை வெறுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட இருபதும் ஆராயின் நடுவணைந்தினை அல்வழி வரும் என்றவாறு.

அது என்பது - அவையுமுளவே யவையலங்கடையே என்பதைச் சுட்டி நின்றது. கலக்கமும் நாடின் என மாறுக. ஏற்புழிக்கோடல் என்பதனாற் பெருந்திணைப்பாற் கொள்ளப்படும். இது களவிற்கும் கற்பிற்கும் ஒக்கும். இவை தேறுதலொழிந்த காமத்தின்பாற்படுவனவும் மிக்க காமத்தின் மிடலின்பாற் படுவனவுமாம்.

இன்பத்தை வெறுத்தல் - கோலஞ்செய்தல் முதயினவற்றை வெறுத்தலும் தென்றலும் நிலவுமுதலாயினவற்றை வெறுத்தலும் தென்றலும் இவ்வாறு களவின்கண் வரிற் பிறர்க்கும் புலனாம். கற்பின்கண் வரிற் பிறர் இயல்வழி மயங்கல மின்றாம்.

**கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்**

**எழுதேங் கரப்பாக் கறிந்து.”** (குறள். 1127)

துன்பத்துப் புலம்பல் - துன்பத்தின் கண்ணே புலம்புறுதல்.

**“இன்பங் கடல்மற்றுக் காமம் அ.ஃ.தடுங்கால்**

**துன்பம் அதனிற் பெரிது.”** (குறள். 1166)

எதிர்பெய்து பரிதல் - தலைமகன் முன்னின்றி அவனின்றாகப் பெய்துகொண்டு வருந்துதல்.

**“கண்ணுள்ளிற் போகார் இமைபபிற் பருவரார்**

**நுண்ணியர்எங் காத லவர்”** (குறள். 1126)

ஏதமாய்தல் - குற்றமாராய்தல்.

**“துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு**

**நட்பினுள் ஆற்று பவர்”** (குறள். 1165

பசியட நிற்றல் - உண்ணாமை.

**“நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்**

**அஞ்சுதும் வேபாக் கறிந்து.”** (குறள். 1128)

பசலை பாய்தல் - பசலை பரத்தல்

**“பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்**

**துறந்தார் அவரென்பார் இல்”** (குறள். 1188)

உண்டியிற் குறைதல் உணவு சுருங்குதல்.

**“பாலும் உண்ணான் பழங்கண் கொண்டு”** (அகம். 48)

உடம்பு நனிசுருங்கல் - உண்ணாமை காரணமாகத் தன்னுடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

**“பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்**

**தொல்கவின் வாடிய தோள்.”**(குறள். 1234)

கண்துயின் மறுத்தல் - உறங்காமை.

**“மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா**

**என்னல்ல தில்லை துணை.”** (குறள். 1168)

களவொடு மயங்கல் - கனவை நனவென மயங்குதல்.

**“நனவினால் நல்காக் கொடியார் கனவினால்**

**என்னெம்மைப் பீழிப் பது.”** (குறள். 1217)

பொய்யாக் கோடல் - தலைவன் கூற்றுத்தன்னைப் பொய்யாகக் கோடல்.

**“வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்**

**மாய மருள்வா ரகத்து.”** (கலித். 88)

மெய்யே யென்றல் - உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல்.

அவன்தமர் உவத்தல் - தலைவன் தமரைக் கண்ட வழி உவத்தல்.

**“செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா**

**எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்**

**நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த**

**புலம்பெலாந் தீர்க்குவேம் மன்.”** (கலித். 83)

அறன் அழித்துரைத்தல் - அறத்தினை அழித்துக் கூறுதல்.

**“விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்**

**அளியின்மை யாற்ற நினைந்து.”**(குறள். 1209)

ஆங்கு நெஞ்சழிதல் - அறனழிந்துரைக்கு மிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

**“பெறாஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்**

**அறாஅ விடும்பைத்தென் நெஞ்சு”** (குறள்.1295)

எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல் - யாதானு மோர் உடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கோடல் என்றவாறு.

**“புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்**

**வன்கண்ண தோநின் துணை”** (குறள். 1222)

அளியின்மை யறினின்மை கூறினாளுமாம்.

ஒப்புவழி உவத்தல் - தலைமகனோடு ஒக்குமெனப் பிறிதொன்று கண்டவழி யுவத்தல்.

**“யாவருங் காணுநர் இன்மையிற் செத்தனள் பேணி.”**

உறுபெயர் கேட்டல் - தலைவன் பெயர்கேட்டு மகிழ்தல்.

**“நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்**

**டிசையும் இனிய செவிக்கு.”** (குறள். 1199)

கலக்கம் - மனங்கலங்குதல். மேற் கலங்கி மொழிதல் என்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது. இது மனங்கலங்கி நிற்கும் நிலை.

**“கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று**

**நாடுவேன் கண்டெனன் சிற்றிலுட் கண்டாங்கே**

**ஆடையான்மூஉ யகப்படுப்பேன் சூடிய**

**காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று**

**மாண்மலர்க் கொன்றை யவன்.”** (கலித். 142)

இச் சூத்திரத்துள் நலத்தக நாடி எனக் கலக்கத்தைப் பிரித்து வைத்தமையாற் சொல்லப்பட்ட பத்தொன்பதினும் முதிர்ந்துவந்த நிலை என்று கொள்ளப்படும். இச் சூத்திரம் பொதுப்படக் கூறினமையாற் தலைமகற்கு ஏற்ப வருவன கொள்க.

## கற்பிற்குரிய மெய்ப்பாடுகள்:

கற்பிற்குரிய மெய்ப்பாடுகளை வரைவு வற்புறுத்தும் மெய்ப்பாடுகள் என்றும் அதன் பின்னர் வரைந்து உடன்வாழும் திரிந்திய கற்பிற்குரிய மெய்ப்பாடுகள் என்றும் இரண்டாகப் பகுத்துக் கொண்டு இரண்டு நூற்பாக்களில் கூறுகின்றார் தொல்காப்பியர்.

வரைவு வேட்கைக்குரிய மெ்ப்பாடுகள் வரைந்து எய்தும் கூட்டத்திற்குரிய மெய்ப்பாடுகள் எவை என்பதனை

பின்வரும் நூற்பாவினுள் உரைப்பார் தொல்காப்பியர்.

**முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்**

**அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்**

**தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்**

**காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்**

**றாயிரு நான்கே அழிவில் கூட்டம்.**

மேற் கூறப்பட்டன எல்லாம் மனனழிவு நிகழ்ந்தவழி நிகழ்வனவாதலின். இவை மனன் அழியாதவழி நிகழ்வன என உணர்த்துதல் நுதலிற்று என்பார் இளம்பூரணர்,

முட்டுவயிற் கழறல் - களவு இடையீடுபட்டுழியதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றதென அவனைக் கழறியுரைத்தல்

முனிவு மெய்ந்நிறுத்தல் - வெறுப்பினைப் பிறர்க்குப் புலனாகாமல் மெய்யின் கண்ணே நிறுத்தல்.

அச்சத்தின் அகறல் - இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாம் எனக் கூட்டத்தின் அகன்றொழுகல்.

அவன்புணர்வு மறுத்தல் - இது தலைமகன் புணர்ச்சிக்கண் வாராக்காலத்துத்தானும் மனனழியாது நிற்கும் நிலை.

தூதுமுனிவு இன்மை - தூதுவிட்ட வழி வெறாமை.

துஞ்சிச் சேர்தல் - கவற்சியான் உறங்காமையன்றி யுரிமைபூண்டமையான் உறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் - அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைமிக்கு வருதல்.

கட்டுரை இன்மை - கூற்று நிகழ்த்துதலன்றியுள்ளக் கருத்தினை மறைத்தமர்ந்திருத்தல்.

இவை நடுவணைந்திணைக் குரிய. வரைந்தபின் நிகழும் மெய்ப்பாடுகள்: வரைந்து உடன் வாழும் கற்புக் காலத்திற்குரிய மெய்ப்பாடுகள் பின்வருமாறு:

**தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்**

**இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்**

**புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்**

**அருண்மிக உடைமை அன்புமிக நிற்றல்**

**பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்**

**புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்**

**சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.**

இ∴து அழிவில் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

தெய்வம் அஞ்சல் - தெய்வத்தினை யஞ்சுதல்.

**"மன்ற மராத்த பேமுதிர் கடவுள்**

**கொடியோர்த் தெறூஉம் என்ப."** (குறுந்.87)

புரையறந் தெளிதல் - "கடன்மிக்கனவே" என்ற வழிப் பரத்தைமை கண்டு புலவாது "இதனைப்போற்றல்" இல்லுறைமகளிர்க் கியல்பென்னும் அறத்தினானே எனக்கூறியவாறு கண்டுகொள்க.

இல்லது காய்தல் - தலைமகன்கணில்லாத குறிப்பினை யவன்மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

**"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**

**யாரினும் யாரினும் என்று."** (குறள். 1314)

இதனுள் சொன்னமாற்றத்தை வேறாகப் பொருள்கொண்டு இல்லாததனைச் சொல்லிக் காய்ந்தவாறு காண்க.

உள்ளதுவர்த்தல் - உள்ளதனை யுவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

**“வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்**

**முகையலர்ந் தன்ன முயக்கின் தொகையின்றே**

**தண் பனி வைகல் எமக்கு.”** (கலித்.78)

புணர்ந்துழி உண்மை - புணர்ந்தவழி யூடலுள் வழி மறைத்துக்கூறாது அவ்வழி மனநிகழ்ச்சியுண்மை கூறுதல்.

**“குளிரும் பருவத்தே ஆயினுந் தென்றல்**

**வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய்**

**ஊடி யிருப்பினும் ஊரனறுமேனி**

**கூடல் இனிதா மெமக்கு”** (ஐந்திணையைம் . 30)

பொழுதுமறுப்பாதல் - தலைவன் வரும்பொழுது நியமமின்றி மறுப்பு வந்துழிப் பொழுதினைப் பற்றி நிகழும் மனநிகழ்ச்சி .

**“புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்**

**அல்லியா கெல்லையென் றாங்கே பகல்முனிவேன்**

**எல்லிய காலை யிராமுனிவேன் யானுற்ற**

**அல்லல் களைவார் இலேன்.”** (கலித் . 144)

அருண்மிக உடைமை - தலைமகன்மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை .

முதைச்சுவற்கலித்த என்னும் அகப்பாட்டினுள்,

**“நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்**

**சென்றனன் கொல்லோதானே**

................

**வடுவர் புற்றின வழக்கறு நெறியே”** (அகம் . 86)

அன்புமிக நிற்றல் - அன்பு புலப்பட நிற்றல் .

**“கொடிய னாயினும் ஆக**

**“அவனே தோழி என்னுயிர்க்கா வலனே”** (சிற்றெட்டகம்.)

அன்புதோன்ற நின்றவாறு காண்க.

பிரிவாற்றாமை - பிரிவின்கண் ஆற்றாமை

**“செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்**

**வல்வரவு வாழ்வார்க்குரை”**(குறள் .1151)

மறைந்தவை உரைத்த கிளவி: - மறைத்த ஒழுக்கத்தைக் கூறிய புறஞ் சொல்லாகிய அலர் மாட்சிமைப் படாத கிளவியொடுகூட என்றவாறு.

மறைந்தவை உரைத்த புறஞ் சொல்: - அலர் . மாணாமையாவது - அவ்வலர் மாட்சிமைப்படாமற் கற்புக்கடம் பூண்டல் அல்லது மிகாமை.

**“மாண மறந்துள்ளா நாணிலி”**(கலித் . 89 )

என்றாற் போல மாணாமை என்பது மிகாமை என வுரைப்பினும் அமையும் . அலர் மிகாமைக் கூறுங் கூற்றினும் கற்புக்கடம் பூண்டு கூறுதல் .

**“களிறுகவர் கம்பலை போல**

**அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே”** ( அகம் . 66 )

மேற் சொல்லப்பட்ட பத்தும் அழிவில் கூட்டப் பொருள் நடுவணைந்திணைக்குரிய பொருள் ஆகும்.

## தலைவன் தலைவி ஒப்பு

இது களவியலுட் கூறுப்பட்ட தலைவற்குந் தலைவிக்கும் உளதாகும் ஒப்புப்பாகுபாடு உணர்த்திற்று.

**பிறப்பேகுடிமை ஆண்மை யாண்டோ**

**டுருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே யருளே உணர்வொடு திருவென**

**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே .**

பிறப்பு: அந்தணர், அரசர், வணிகர், ஆயர் , வேட்டுவர் போல் வரும் குலம்

குடிமை: அக்குலத்தில் ஒழுக்கம்பற்றி குடிவரவாகும்

ஆண்மை: ஆண்மைத்தன்மை அதாவது ஆள்வினையுடைமை.வலிபெயராமை பெண்மகளுக்கு இயல்பாகிய நாணம் முதலிய பெண்ணீர்மைஆண்டு: ஒத்த பருவத்தர் ஆதல். தலைமகன் 16 வயதும் தலைமகள் 12 வயதும் ஆதல்

உருவு: உருவ வனப்பு

நிறுத்த காம வாயில்,: நிலை நிறுதடதப்பட்ட புணர்ச்சிக்கு வாயில்.அதாவது ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு

நிறை: அடக்கம்

அருள்:பிறர் வருத்தத்திற்குப் புரியும் கருணை

உணர்வு :அறிவு

திரு: செல்வம்

## தலைமக்களிடம் அமையலாகா குணங்கள்

இது தலைமக்கட்காகாத குணங்களை வரையறுத்து உணர்த்துதல் .

**நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி**
**வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை**
**இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை**
**என்றிவை யின்மை என்மனார் புலவர் .**

நிம்பிரி - அழுக்காறு அவ்வியம் என்பதும் அது.

கொடுமை - அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி

வியப்பு - தம்மைப் பெரியராக நினைத்தல்.

புறமொழி - புறங்கூறுதல்.

வன்சொல் - கடுஞ்சொற் கூறல்.

பொச்சாப்பு - தம்மைக்கடைப்பிடியாமை.அது சோர்வு.

மடிமை - முயற்சி யின்மை.

குடிமையின்புறல்: - தன்குலத்தினானுந் தன்குடிப் பிறப்பினானுந்

தம்மை மதித்து இன்புறுதல்.

ஏழைமை - பேதைமை.

மறப்பு - யாதொன்றாயினுங் கற்றதனையுங் கேட்டதனையும் பயின்றதனையும் மறுத்தல்

ஒடு எண்ணின்கண் வந்தது.

ஒப்புமை - ஆண்பாலாயினும் பெண்பாலாயினுந் தான் காதலிக்கப் பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வர் என ஆண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி. அது உலகின்கட் கீழ்மக்கள் மாட்டுங் கண்ணிலோர்மாட்டும் நிகழ்தலின் அது தலைமக்கட்காகாதென விலக்கப்பட்டது. இச் சொல்லப்பட்டன தலைமக்களிடத்து இல்லையாதலும் வேண்டும்.

புறனடை:

ஈண்டுச் சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப்பாடெல்லாம் ஆராயுங்காற் கண்ணானும் செவியானும் விளங்க உணரும் அறிவுடைமாந்தர்க்கு அல்லது கருதல் அரிது.

கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.

**வினாக்கள்:**

1.மெய்ப்பாட்டின் வகைகள் யாவை?

2.அகத்திற்கும் உரிய மெய்ப்பாடுகளை விளக்கி வரைக.

3.பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை விளக்கி வரைக.

4.தலைமக்களிடம் அமையலாகா குணங்கள் யாவை?

5.தலைவன் தலைவி ஒப்பு குறித்து எழுதுக.

# உவமையியல்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஏழாவது இயலாக அமைந்திருப்பது உவமையியல் ஆகும். இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின். உவமையியல் என்னும் பெயர்த்து. ஒருபுடை ஒப்புமைபற்றி உவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர். மெய்ப்பாடு பற்றித் தோன்றி வழங்குவது.

இதனாற் பயன் என்னைமதிப்பதோவெனின், புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும், ஆப்போலும் ஆமா என வுணர்த்திய வழி,அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைப்பற்றி இ.்.து ஆமாவென்ற அறியும், ‘‘தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்” என்றவழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு துன்பம் பயக்கும். அ.்.தாவது மேற்சொல்லப்பட்ட எழுதிணையினும் யாதனுள் அடங்கும் எனின், அவையெல்லாவற்றிற்கும் பொதுவாகிப் பெரும்பான்மையும் அகப்பொருள் பற்றிவரும் என்பது உரைக்குறிப்பாம்.

மேற் குறிப்புப்பற்றி வரும் மெய்ப்பாடு கூறினார். இது பண்புந் தொழிலும்பற்றி வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

## உவம வகைகள்:

ஒரு பொருளை பிற பொருளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது அதன் பண்பு, காரணமாகவோ தொழில் காரணமாகவோ பயன் காரணமாகவோ வடிவு காரணமாகவோ நிறம் காரணமாகவோ தான் ஒப்பிட்டு நோக்குகிறோம். எனவே தான் தொல்காப்பியர் அத்தகைய செய்திகளைப் பின்வரும் நூற்பாவில் உணர்த்துகிறார்,

**வினைபயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வந்த உவமைத் தோற்றம்.**

தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைக்கண் புலனாம்.

எனவே கட்புலமல்லாதனவும் உள என்றவாறாம். அவை செவியினானும்நாவினானும் மூக்கினானும்-மெய்யினானும் மனத்தினானும் அறியப்படுவன. இவ்விருவகையும் பாகுபடவந்த உவமையாம்.

அவற்றுள், கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல் முடக்கல், விரித்தல் குவித்தல் முதலியன. பயனாவது நன்மையாகவும் தீமையாகவும் பயப்பன. வடிவாவது வட்டம் சதுரம் கோணம் முதலாயின. நிறமாவன வெண்மை பொன்மை முதலாயின. இனிச் செவிப்புலனாவது ஓசை, நாவினான் அறியப்படுவது கைப்பு காழ்ப்பு முதலிய சுவை. மெய்யினான்அறியப்படுவன வெம்மை தண்மை முதலாயின. மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம் தீநாற்றம். மனத்தால் அறியப்படுவன இன்பதுன்ப முதலியன.

**புலிபோலப் பாய்ந்தான் - வினை.**

**மாரி யன்ன வண்கை - பயன்.**

**துடி போலும் இடை - வடிவு.**

**தளிர் போலும் மேனி - நிறம்.**

**குயில்போன்ற மொழி - செவியாலறியப்பட்டது.**

**வேம்புபோலக் கைக்கும் - நாவினாலறியப்பட்டது.**

**தீப்போலச் சுடு - மெய்யினாலறியப்பட்டது.**

**ஆம்பல் நாறுந் துவர்வாய் - மூக்காலறியப்பட்டது.**

**"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்**

**அம்மா அரிவை முயக்கு. (குறள்.1107) - மனத்தானறியப்பட்டது.**

**விரவியும் வரூஉம் மரபின என்ப.**

மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஓரோவொரு பொருளான் வருதலின்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபினுடையது.

**"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"**

எனும் பொழுது வடிவும் நிறனும் விரவிவந்தது. பிறவும் அன்ன. இன்னும் விரவியும் வரூஉம் மரபின என்றதனாற் பலபொருள் விரவிவந்தது.

**"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட**

**குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ"** (கலித் . 84)

என்றவழித் தாமரையிலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமையாயினும் தோற்றத்திற் கிரண்டும் ஒருங்குவந்தமையான் வேறோதப்பட்டது

## உவமை தோன்றும் நிலைக்களன்கள்:

**உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை**

உவமை ஆராயுங்காலத்து உயர்ந்ததன் மேலதாய் வரும் இங்கு உயர்ச்சியாவது வினைமுதலாகச் சொல்லப்பட்டன உயர்தல்.

**"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்"** (பட்டினப். 298)

என்பதில் துப்புடைய பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது.

**"தாமரை புரையுங் காமர் சேவடி"** (குறுந் - கடவுள் வாழ்த்து )

என்பதில் சிவப்புடைய பலவற்றினும் தாமரை யுயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது

**சிறப்பே நலனே காதல் வலியோடு**

**அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப.**

உவமை தம்மின் உயர்ந்தவற்றோடு உவமிக்கப்பட்டதேனும் சிறப்பு, நலன் காதல் வலி என்பதனை நிலைக்களனாகக் கொண்டு வரும் .

**"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி**

**அரசவை இருந்த தோற்றம் போலப்**

**பாடல் பற்றிய பயனுடை எழாஅல்”** (பொருநராற்.54-6)

சிறப்புப் பற்றி வந்தது.

**“ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்”**(புறம்.251)

நலம்பற்றி வந்தது.

**“கண்போல்வான் ஒருவ னுளன்”**

காதல்பற்றி வந்தது.

**“அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்”** (பட்டினப்.218)

வலி பற்றி வந்தது.

பிறவு மிவ்வாறே படுத்துநோக்கிக் கண்டுகொள்க.

**கிழக்கிடும்பொருளோ டைந்து மாகும்**

மேற்சொல்லப்பட்ட சிறப்பு முதலிய நான்கும் ஒழியத் தாழ்ந்த பொருளொடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும். எனவே அதனோடுங்கூட ஐந்தாகும்.

**“ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயித**

**ழூசி போகிய சூழ்செயன் மாலையன்”** (அகம் . 48 )

மேற்சொல்லப்பட்ட நான்கும் உயர்வின் பகுதியாதலின் இதனொடுங்கூட்ட ஐந்தென்றார்.

## உவமை மரபுகள்:

தொல்காப்பியர் உவமை பற்றி விளக்கி உவமை மரபுகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார்.உவமை கூறும் பொழுது முதலும் சினையும் என்று கூறப்பட்ட இரண்டனுள் முதலொடு முதலும் சினையொடு சினையும் முதலொடு சினையும் சினைக்கு முதலும் வேண்டியவற்றால் உவமம் செய்தற்குரிய மரபு பிறழாமல் உவமம் கூற வேண்டும்.

**முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு**

**நுதலிய மரபி னுரியவை யுரிய .**

**“ஒருகுழை யவன்போல் இணர்சேர்ந்த மரா அமும்”** (கலித் . 26 )

முதற்கு முதல் உவமமாயிற்று .

**“அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட**

**குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ.”** (கலித் . 84) -

முதற்குச் சினை உவமமாயிற்று

**“தாமரை புரையுங் காமர் சேவடி”** (குறுந் கடவுள் வாழ்த்து )

சினைக்குச் சினை யுவமமாயிற்று.

**“நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி.”** (அகம் . 84 )

சினைக்கு முதல் உவமமாயிற்று.

**சுட்டிக்கூறா உவமம்**

**சுட்டிக் கூறா உவம மாயின்**

**பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன கொளலே**

உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவெனச் சுட்டிக் கூறாமை அவ்வாறு வருமாயின் உவமச்சொல்லொடு பொருந்த உவமிக்கப்படும் பொருளொடு புணர்த்து உவமவாய்பாடு கொள்ள வேண்டும்

இதனாற் சொல்லியது உவமவாய்பாடு தோன்றா உவமம் பொருட்குப் புணராக்கண்ணும் உவமை உள என்றவாறாம்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து."** (குறள்.90)

இதன்கண் “அதுபோல” எனச் சுட்டிக்கூறா வுவமை

**உவமும் பொருளும்:**

**உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்.**

இ.்.து உவமைக்குரியதோர் மரபு உணர்த்திற்று. இரட்டைக் கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச்சுண்ணமாய்வரினும், மிக்குங்குறைந்தும் வருதலன்றி உவமையடையடுத்துவரினும் தொழிற்பட்டு வரினும், ஒன்றும் பலவுமாகி வரினும் வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும்.

**பொருளே உவமம் செய்தல்:**

உவமிக்கும் பொருள் தன்னை உவமமாக்கிக் கூறினும் மயக்கமற்ற சிறப்பு நிலைமையான் அதுவும் உவமை என்றே உரைக்கப்படும்.

**பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்**

மருளறு சிறப்பின் அ.ஃ.துவம மாகும்.

இரும்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பிற்

கருங்கையானை கொண்மூ வாக (புறம் 369)

"பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாடும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரன் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமே.4:8:13)

## குறிப்பின் வருவன:

பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்

குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

"அவாப்போ லகன்றதன் அல்குன்மேற் சான்றோர்

உசாஅப்போல வுண்டே மருங்குல்"

என்பதில் அல்குல் பெரிதென்பான் ஆசையோடு உமித்தலின் இது தக்கதாயிற்று! மருங்குல் நுண்ணிதென்பான் சான்றோர் உசாவொடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. அவை சிறப்புப் பற்றி வந்தன.

இனி நெறிப்பாடின்றி வருவன இறப்ப உயர்தல், இறப்ப இழிதல் என இருவகைப்படும்.

"இந்திரனே போலு மிளஞ்சாத்தன் ..... நாறுமிணர்" (யாப்....வி....ஒழி)

இது இறப்பவுயர்ந்தது. வழக்கிறந்துவருதலின் இவ்வாறு வரும் உவமை கூறப்பட்டது.

"வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்

எள்ளி யிரிவதுபோ லெங்கெங்கும் வள்ளற்கு

மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை

மேலாரு மேலார் விரைந்து" (யாப்.வி.ஒழி)

இ.ஃ.து இறப்ப இழிதலின் இதுவுமாகாது.

## உவம உருபுகள்:

கீழ்க்கண்ட நூற்பா உவமையுணர்த்துஞ் சொற்களை வரையறுத்து உணர்த்திற்று.

அவைதாம்,

அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப

என்ன மான என்றவை யெனாஅ

ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க

வென்ற வியப்ப வென்றவை யெனாஅ

எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்

கள்ளக் யெனாஅப்

புல்லப் பொருவப் பொற்பப் போல

வெல்ல வீழ வாங்கவை யெனாஅ

நாட நளிய நடுங்க நந்த

ஓடப் புரைய என்றவை யெனாஅ

ஆறா றுவமையும் அன்னவை பிறவுங்

கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

மேற்சொல்லப்பட்ட உவமைகள் தாம் அன்ன என்பது முதலாகப் புரைய என்பது ஈறாக வந்தனவும் அன்னவை பிறவுமாகிச் சொல்லுங்காலத்துப் பல குறிப்பினையுடையன ஆகும்.

அன்னபிறவாற் கொள்ளப்படுவன: நோக்க,நேர,அனை,அற்று,இன்,ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்னும் தொடக்கத்தன கொள்ளப்படல் வேண்டும்.

“பல்குறிப்பின'' என்றதனான் இச்சொற்கள் பெயரெச்சநீர்மையவாய் வருவனவும் வினையெச்ச நீர்மையவாய் வருவனவும் முற்று நீர்மையவாய் வருவனவும் இடைஎன்பன பெயரெச்சம். ‘‘புலிபோன்று வந்தான்'' புலிபோலப் பாய்ந்தான்“ என்பன வினையெச்சம். ‘‘புலிபோலும்'' ‘‘புலிபோன்றனன'' என்பன முற்று. அன்ன, இன்ன இடைச்சொல்.

இன்னும் பல்குறிப்பின'' என்றதனான் விரிந்தும் தொக்கும் வருவனவுங் கொள்ள வேண்டும். தேன்போல இனியமொழி“ இது விரிந்தது. “தேன் போலுக் மொழி இது உவமை விரிந்து ஒப்புமை குறித்துத் தொக்கு நின்றது தேமொழி என்பது எல்லாந் தொக்கது பிறவு மன்ன.

ஈண்டு எடுத்தோதப்பட்ட முப்பத்தாறினும் ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட, நடுங்க என்பனவொழித்து நின்றமுப்பதும் அன்னபிறவாற் கொள்ளப்பட்டவற்றுள் நோக்க என்பதும் நேர என்பதுஞ் சிறப்புவிதி யுடைத்தாதலின் அதற்கு உதாரணம் ஆண்டுக் காட்டுதும், ஏனைய ஈண்டுக் காட்டுதும்.

**வேலொன்று கண்,**

**கயலென்ற கண்,**

**மணிநிற மாற்றிய மாமேனி,**

**மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்,**

வேயொடு நாடிய தோள்,

படங்கெழுநாகம் நடுங்கு மங்குல்,

குன்றினனையாருங் குன்றுவர்,

இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று,

மருப்பிற் றிரிந்து மறிந்து வீழ் தாடி

துணைமலரெழினீலத் தேந்தெழின்மலருண்கண்

முத்தேர் முறுவலாய்,

எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர்,

யாழ்கெழு மணிமிடற் றந்தணன்,

கிளை செத்து மொய்த்த தும்பி எனவரும்.

## வினையுவமத்திற்குரிய உருபுகள்:

அன்ன வாங்கு மான இறப்ப

என்ன உறழத் தகைய நோக்கொடு

கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்.

அன்னமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் வினையுவமத்திற்குரிய சொல்லாம்.

“கொன்றன்ன வின்னா செயினும்” (குறள். 109)

“பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு” (திருமுருகாற்.2

“புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்

செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்” (பெரும்பாணாற். 269,271)

“புலியிறப்ப வொலிதோற்றலின்”

“புலியென்னக் கலிசிறந் துராஅய்”

“செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (திருமுருகாற். 5)

“பொருகளிற் றெருத்தின் புலிதகையப் பாய்ந்து”

“மானோக்கு நோக்கு மடநடை யாயத்தார்” எனவரும்.

**அன்னஎன் கிளவி பிறவொடுஞ் சிவணும்.**

அன்ன என்னுஞ் சொல் மேற்குறித்த பொருள்களோடும் மட்டும் அன்றிப் பிற பொருள்களோடும் வரும்.”

**மாரி யன்ன வண்கை** (புறம். 133)

இதுபயன்.

**“பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்**

**கருவிருந்தன்ன கண்கூடு சிறுதுளை”** (பெரும்பாணாற் 7 - 8)

இதுமெய்.

**“செவ்வானன்ன மேனி”** (அகம் கடவுள் வாழ்த்து )

இது உரு

## பயன் உவமத்திற்குரிய உருபுகள்:

**எள்ள விழையப் புல்லப் பொருவக்**

**கள்ள மதிப்ப வெல்ல வீழ**

**என்றாங் கெட்டே பயனிலை யுவமம்.**

எள்ள என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் பயனிலையுவமைக்குச் சொல்லாம்

**“எழிலி வானம் எள்ளினன் தரூஉங்**
**கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்”**

**“மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி”**

**“புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல”**

**“விண்பொருபுகழ் விறல் வஞ்சி“** (புறம்.11)

**“கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி”**

**“இருநிதி மதிக்கும் பெருவள னீகை”**

**“வீங்குசுரை நல்லான் வென்ற வீகை”**

**“விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்”**

## மெய்யுவமத்திற்குரிய உருபுகள்:

**கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய**

**ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பவென்**

**றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.**

மெய் உவமத்திற் குரியசொல் உணர்த்துதல் நுதலிற்று.

கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொல்லாம்

**"விண்ணதிர் இமிழிசை கடுப்ப"** (மலைபடு. 2)

**"அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப** (அகம். 1)

**"வேய்புரை மென்றோள்"** (கலித்.39)

**"முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை வியப்பனதழீஇ"**

**"பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்"**

**"செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி"**

**"கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை"**

என்பன போன்று வரும்.

## மெய் உவமத்திற்குரிய உருபுகள்:

**போல மறுப்ப ஒப்பக் காய்த்த**

**நேர வியப்ப நளிய நந்தவென்**

**றொத்துவரு கிளவி உருவி னுவமம்.**

உருவத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவவமத்திற் குரியசொல்லாம்.

**"தன்சொ லுணர்ந்தோர் மேனி**

**பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே".** (ஐங்குறு. 41)

**"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா"**

**ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்"**

**கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்"**

**"கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்"** (அகம்,கடவுள் வாழ்த்து)

**தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி"**

எனவரும்

**தத்த மரபில் தோன்றுமன் பொருளே.**

மேல் உணர்த்தப்பட்ட சொற்கள் கூறியவாறு அன்றித் தத்தமரபில் தோன்றும் பொருளும் உளவாகும்.

மன் ஆக்கங்குறித்துவந்தது. ஈண்டு மரபு என்றது பயிற்சியை ஆகும். இதனானே நூல் செய்கின்ற காலத்து வினைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான் வருதல் பெருவழக்கிற்றென்று கொள்ளப்படும்.

**"முழவுறழ் தடக்கையி னியல வேந்தி"** (திருமுருகாற். 215)

**"மாவென்ற மடநோக்கின்"** (கலித். 57)

**"வேய்வென்ற தோள்"** (கலித்.138)

**"மாரிவீ ழிருங் கூந்தல்"** (கலித். 14)

**"பொன்னுரை கடுக்குந் திதலையர்"** (திருமுருகாற் . 145)

**"குறுந்தொடி ஏய்க்கு மெலிந்துவீங்கு திவவின்"** (பெரும்பாண். 13)

**"செயலையந் தளிரேய்க்கு எழினலம்"** (கலித். 15)

**"பாஅன் மருண் மருப்பி னுரல்புரை பாவடி"** (கலித். 21)

**"வலம்புரி புரையும் வால்நரை முடியினர்"** (திருமுருகாற். 127)

**"ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல"** (அகம். 22)

**"தாமரைபோல் வாள்முகம்"** (திணைமாலை. 1)

**"கள்வர்போ னோக்கினு நோக்கும்"** (கலித்.61)

**"ஒழுகை நோன்பக டொப்பக்புழீ"** (அகம்.30)

## உவமை எட்டு வகையாதல்:

**நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.**

மேற்சொல்லப்பட்ட உவமை நான்குவகை ஆதலேயன்றி எட்டுவகை ஆதலும் உண்டு

அவையாவன: வினையும் வினைக்குறிப்புமென இருவகையாம். பயன் என்பது நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகையாம். மெய் என்பது வடிவும் அளவும் என இருவகையாம். உரு என்பது. நிறமும் குணமும் என இருவகையாம். இவ்வாறு எட்டாயின.

**“பொன்னன்ன செல்வத்தன்”** –

இது வினைக்குறிப்பு.

**ஞாயி றனையைநின் பகைவர்க்கு”** (புறம்.59)

இது தீப்பயன்

**“நெடுவரை மிசையிற் பாம்பென விழிதருங்**

**கடுவரற் கலுழி**

என்பது அளவு.

**“பாலன்னமொழி”**

இது குணம்.

## உவமையும் மெய்ப்பாடும்.

**பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்**

**வழிமருங் கறியத் தோன்று மென்ப.**

பெருமையும் சிறுமையும் பற்றி ஒப்புமை பெறப்படும் உவமைகள் எண்வகை மெய்ப்பாடுகளின் வழியே புலப்படத் தோன்றும். எனவே மெய்ப்பாடு தோன்றாத வழி இப் புணர்ப்பினால் பயன் இல்லை.

**“அவாப்போல் அகன்றதன் அல்குன்மேற் சான்றோர்**

**உசாஅப்போல உண்டே மருங்குல்.”**

பெருமையுஞ் சிறுமையும்பற்றி உவகை நிகழ்ந்தது.

**“கலங்கவிழ்த்த நாய்கன் போற் களைதுணைப் பிறிதின்றி”**

துன்பப்பெருக்கம் சொல்லி அவலம் வந்தது.

**“பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல**

**வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு.”** (முத்தொள். 88)

இது பெருக்கம்பற்றி இழிவரல் வந்தது.

## உவமைக்குரிய வேறுபாடு:

**உவமப் பொருளின் உற்ற துணருந்**

**தெளிமருங் குளவே திறத்திய லான.**

உவமப்பொருளாலே சொல்பவனால் குறிக்கப்பட்ட பொருளை

கூறுபாட்டியலான் உணர்ந்து தெளியும் பக்கமும் உண்டு.

தெளிமருங்காவது துணிவுபக்கம். எனவே துணியாமை உவமத்தின் கண்ணே வந்தது. அவ்வாறு வரினும் இதுவேயெனத் துணிதலின் துணிபக்கம் ஆகும்

**“ஐதேய்ந் தன்று பிறையு மன்று**

**மைதீர்ந் தன்று மதியு மன்று**

**வேயமன் றன்று மலையு மன்று**

**பூவமன் றன்று கனையு மன்று**

**மெல்ல வியலும் மயிலு மன்று**

**சொல்லத் தளருங் கிளியு மன்று.”** (கலித். 55)

என்பதில் துணியாது நின்றன நுதலும் முகனும் தோளுங் கண்ணும் சாயலும் மொழியும் எனத் துணிந்தது

**உவமப் பொருளை உணருங் காலை**

**மருவிய மரபின் வழக்கொடு வருமே.**

உவமையாகிய பொருளைக் கொண்ட உவமேயமாகிய பொருளுக்குப் பொருந்தியன இவை என ஈய்ந்து உணரும் இடத்து நெடுங்காலமாக மரபு வழிப்பட்டு வழங்கிய உலக வழக்கினை ஒட்டியே அவை அறியப்படும் என்பார் தொல்காப்பியர்.

## இரட்டைக்கிளவி

**இரட்டைக்கிளவியும் இரட்டை வழித்தே**

இரட்டைக் கிளவியாவது உவமையிரண்டு சொல்லோடு அடுத்துவருவதனோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல் வேண்டும்

**“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரோ டேனை யவர்”.** (குறள். 410)

கற்றார் கல்லாதார் என்பன இரண்டும் உவமேயப்பொருள்கள். மக்கள் விலங்கு என்பன இரண்டும் உவமைகள். கற்றார், கல்லாதார் என்னும் உவமேயம் இரண்டினையும் “கற்றாரோடு ஏனையவர்” என ஒரு தொடராகவும் மக்கள், விலங்கு என்னும் உவமை இரண்டினையும் "விலங்கொடு மக்கள்” என ஒரு தொடராகவும் கொண்டுரைப்பது

இத்திருக்குறளாதலின் "இரட்டைக்கிளவி இரட்டைவழித்தே" என்பதற்கு இலக்கியமாயிற்று.

## உள்ளுறை உவமம்

**பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி**

**முன்ன மரபிற் கூறுங் காலைத்**

**துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே.**

உவம இயலில் 23 ஆம் நூற்பா முதல் 33 ஆம் நூற்பா வரை உள்ள நூற்பாக்கள் உவமையின் விகற்பங்கள் எனக் குறிப்பார் இளம்பூரணர். ஆனால் இவற்றை உள்ளுறை உவமம் பற்றியன என்பார் பேராசிரியர்.

பிறிது என்பது - உவமைப்பொருள் தான் அன்மையான் உவமைப்பொருளொடு படாது, பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கிமுன்னமரபினால் சொல்லும் பொழுது துணிவுடையோர் கொள்வர். அவர் துணிந்த துணிவின் கண்ணே உவமை வரும்.

**"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்**

**றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்."** (தொல் செய்யு.169)

இடத்தொடு பார்த்து ஏற்கும் பொருட்கட் கூறுவது.

**"நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர"** (கலித். 119)

என்ற காணப் பிறிதாகிய பொருளொடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று. மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடு நோக்கிற்று. அவ்விடத்திற் கேற்பக் கூறுதலின் முன்னமாயிற்று. அம்மதியினது தோற்றம் இத்தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச்சொல் வந்தது.

**"வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழிப்**

**பள்ளியும் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப"** (கலித்.121)

## உவமப் போலி:

**உவமப் போலி ஐந்தென மொழிப.**

உவமையைப் போன்று வருவன ஐந்தென்று சொல்லுவர்.

அவையாவன: இதற்கு உவமையில்லை எனவும் இதற்கு இதுதானே உவமை எனவும் பல பொருளினும் உளதாகிய உறுப்புக்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு சேர்த்தின் இதற்கு உவமையாம் எனவும் பலபொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்கு உவமையாம் எனவும் கூடாப்பொருளோடு உவமித்து வருவனவும் ஆகும்.

**“நின்னோர் அன்ன பிறர் இன்மையின்”**

நின்னைப் போன்ற பிறர் இன்மை என்றமையால் இ.ஃது இதற்கு உவமை இல்லை எனல்.

**“மன்னுயிர் முதல்வனை யாதலின்**

**நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே.”** (பரிபா. 1)

இதற்கு இது உவமை எனல்.

**“நல்லார்கள் நல்ல வுறுபாயின தாங்கள் நாங்கள்**
**எல்லா முடனாதுமென் றன்ன வியைந்த வீட்டாற்**
**சொல்வாய் முகங்கண் முலைதோளிடை யல்குல் கைகால்**
**பல்வார் குழலென் றிவற்றாற்படிச் சந்த மானாள்”** (பதிற்றுப். 14)

இதனுள் கண் முதலான நல்ல உறுப்புகள் எல்லாம் உடன் நேர்ந்தமை போல என்பதால் பல பொருள் உள்ளதாகிய உறுப்புகளை தேர்ந்தெடுத்துக் கொண்ட உவமை

**திங்கள் ஞாயிறு கனையழல்**
**ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை"** (பதிற்றுப்14)

இதில் நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல் ஆகிய பலபொருள்களில் உளதாகிய கவின் ஓரிடத்து வந்ததாக உரைக்கப்பட்டமையால் பலபொருளினும் உளதாகிய கவின் ஓரிடத்து வரின் இதற்கு உமையாம் எனல்

**“வாரா தமைவானோ வாரா தமைவானோ**

**வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்**

**ஈரத்து ளின்னவை தோன்றின் நிழற்கயத்து**

**நீருட் குவளைவெந் தற்று” (கலித். 41)**

இப்பாடல் குளத்து நீரில் நின்ற குளளை வெந்தது போன்றது என்ற பொருள் வந்துள்ளது, இது கூடப்பொருளோடு உவமித்து வருதல் என்பதாம்.

**தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்**

**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**

**பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப.**

மேற்சொல்லப்பட்ட ஐந்தும் உரைத்த வாய் பாட்டாற் கூறும்வழி வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்ற ஐந்தினும் ஏதுவாகச் சொல்லிப் பின்னர்க் கூறவேண்டும். நினக்கு உவமையில்லை என்னும்வழிச் செயலால், பயனால், உறுப்பால், உருவால், பிறப்பால் ஒப்பார் இல்லையெனல் வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்தாம்.

## உவமை கூறும் அக மாந்தர்

**கிழவி சொல்லின் அவளறி கிளவி**

உவமைப்பொருளைத் தலைமகள்கூறில் அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும்.

**தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது**

தோழி உவமை சொல்வாள் ஆயின் அந்நிலத்தினுள்ளன அன்றிப் பிறநிலத்துள்ளன கூறப் பெறாள்.

**கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்.**

தலைவன் உவமை கூறுவானாயின் அறிவொடு கூறுவான். தலைமகன் உவமைகூறுங்கால் இத்தகைய நிலவரையறையின்றி அவன் பல விடங்களிலும் சென்றறிந்த பயிற்சியாகிய அறிவின் திறத்தால் எல்லாப்பொருள் பற்றியும் உவயை கூறுதற்குரியன் என்பதாம். உரனொடு கிளத்தலாவது தான் பயின்றுணர்ந்த உணர்வுடைமையால் பலவகைப்பொருள்களின் தன்மையுணர்ந்து அவற்றை உவமையாக எடுத்துரைத்தல்

**ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.**

மேற்சொல்லப்பட்ட மூவருமல்லாத நற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுமிடம் வரையறுக்கப்படாது.

## இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்:

**இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்**

**உவம மருங்கில் தோன்றும் என்ப.**

இது தலைவற்குந் தலைவிக்குந் தோழிக்கு முரியதோர் மரபு.

மகிழ்ச்சி பயக்குங் கூற்றும் புலவிபயக்குங் கூற்றும் உவமப்பக்கத்தால் தோன்றும்.

**“மாரி யாம்பல் அன்ன கொக்கின்**

**பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு**

**கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்**

**கயிறிரி யெருத்திற் கதம்பூந் துறைவ”.** (குறுந் 117)

என்றது தலைமகள் உவமை கூறியவழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறிரி யெருதுபோலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி வந்தது.

**"…. ….. வான**

**தணங்கருங் கடவு ளன்னோள் நின்**

**மகன்தா யாதல் புரைவதால் எனவே" -** (அகம் 16)

**கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே.**

தலைமகள் உவமை கூறுங்கால் மேற்சொல்லப்பட்ட இரண்டிடத்தும் உரித்து. அவை முறையே மகிழ்ச்சி பயக்கும் இடம், புலவி பயக்கும் இடம் என்பதாகும். எனவே இவ் இரண்டும் அல்வழி உவமை கூறப்பெறாள்.

**கிழவோற் காயின் இடம்வரை வின்றே.**

தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணும் அமையும் என்பதாகும்.

**தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்**

**கூறுதற் குரியர் கொள்வழி யான.**

தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்கூறுதற்குரியர் கொள்வழி யான. தோழியும் செவிலியும் உவமை கூறுங்கால் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர்

**"பருதியஞ் செல்வன˙ விரிகதிர்த் தானைக்**

**கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்**

**வேறுபட வந்த உவமைத் தோற்றம்**

**கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்"**

## ஒரீஇக் கூறல்:

**ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே.**

உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் மருவிய இயல்பு.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**

**அடிக்கு நெருஞ்சிப் பழம்."** (குறள். 1120)

## உவமைத் தன்மை:

**உவமைத் தன்மையும் உரித்தென மொழிப**

**பயனிலை புரிந்த வழக்கத் தான.**

பயனிலை பொருந்திய வழக்கின் கண் உவமிக்கப்படும் பொருளோடு உவமைதோன்ற வருதலேயன்றி யுவமையது தன்மை கூறலும் உவமையாதற்குரித்து.

**"பாரி பாரி யென்றுபலஏத்தி**

**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**

**பாரி யொருவனும் அல்லன்**

**மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."** (புறம்.107)

இதுமாரி போலும் பாரியது கொடை என்னாது இவ்வாறுகூறும் பொருண்மையும் உவமமாம்.

## தடுமாறு உவமம்

**தடுமாறு வரலும் கடிவரை வின்றே.**

உவமைக்கண் தடுமாறு வருதல் நீக்கப்படாது.

தடுமாறுதல்: - ஐயமுறுதல்.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**

**நோக்கமிம் மூன்றும் உடைத்து."** (குறள். 1085)

## உவமை பல அடுக்கி வருதல்:

**அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே**

**நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்**

**வரன்முறை வந்த மூன்றலங் கடையே.**

**அடுக்கிய தோற்றம்** - உவமைபல அடுக்கித் தோற்றுதல்.

அவற்றுள், கடியப்பட்டது உவமைக் குவமையாக அடுக்கிவருவது.

**நிரனிறுத்தமைத்தல்**: - ஒரு பொருளொடு தோற்று தொடரையுடைத்தாகப் பலவுவமை வருதல்.

**"நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்**

**அளப்பரி யையே."** (பதிற்றுப். 14)

**நிரனிறை** - உவமைபலவற்றையுஞ் சேர நிறுத்தியுவமிக்கப்படும் பொருளையுஞ் சேரநிறுத்தல்.

**“கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி**

**மதிபவள முத்த முகம்வாய் முறுவல்**

**பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல**

**வடிவினளே வஞ்சி மகள்.”**

**சுண்ணம்:** - உவமையையும் பொருளையுந் துணித்து ஒட்டுதல்.

**“களிறும் கந்தும் போல நளிகடற்**

**கூம்பும் கலனுந் தோன்றும்**

**தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே.”**

வரன்முறை வந்த மூன்றலங் கடையே என்பது - **அடுக்கியலுவமை** கடியப்படும். ஆமென்று வரையப்பட்ட நிரனிறுத்தன் முதலிய மூன்றும் அல்லாதவழி என்றவாறு.

**வினாக்கள்:**

1.உவமை தோன்றும் நிலைக்களன்கள் குறித்து எழுதுக.

2.பயன் உவமத்திற்குரிய உருபுகள் யாவை?

3.உள்ளுறை உவமம் குறித்து விவரி.

4.உவமப் போலி விளக்கி வரைக.

5.தடுமாறு உவமம் - விளக்குக.

# அலகு 2

## செய்யுளியல்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் எட்டாவது இயல் செய்யுளியல் ஆகும். செய்யுளிலக்கணம் உணர்த்தினமையாற் பெற்றபெயர். செய்யுளின் வடிவம் பற்றி இவ்வியல் விரிவாகப் பேசும். இந்த இயலில் 235 நூற்பாக்கள் உள்ளன. மேல் உணர்த்தப்பட்ட பொருண்மை எல்லாவற்றிற்கும் இ∴திடமாதலின் அவற்றின் பிற் கூறப்பட்டது.

**செய்யுள் உறுப்புகள்:**

இந் நூற்பா செய்யுளுறுப்புகள் எல்லாவற்றையும் தொகுத்து உணர்த்துகின்றது.

**மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ**

**யாத்த சீரே அடியாப் பெனாஅ**

**மரபே தூக்கே தொடைவகை எனாஅ**

**நோக்கே பாவே அளவியல் எனாஅ**

**திணையே கைகோள் பொருள்வகை எனாஅ**

**கேட்போர் களனே காலவகை எனாஅ**

**பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ**

**முன்னம் பொருளே துறைவகை எனாஅ**

**மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்**

**ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்**

**அம்மை அழகு தொன்மை தோலை**

**விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்**

**பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ**

**நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென**

**வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.**

மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்து நான்கும் செய்யுட்கு உறுப்பாகும். முற்கூறிய எழுவகை இயலும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொது என்பதும், இது செய்யுட்கே உரித்தென் பதும் அறியப்படும். மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாரும் உளர். அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறுவேண்டுமெனமறுக்க. அல்லதும் எழுத்தும் சொல்லும் பொருளும் என மூன்றற்கு மூன்றதிகாரமாக்கி அதிகாரம் ஒன்றற்கு ஒன்பது ஒத்தாகத் தந்திரம் செய்ததனோடு மாறுகோளாம். இதனை வேறு அதிகாரம் என்பார்க்கென்பது. (தொல்.பொருள்.313.பேரா) என்பதுபேராசிரியர் உரையாம்.

அவற்றுள்,

மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும்

மேற்கிளந் தனவே யென்மனார் புலவர்.

மேற்சொல்லப்பட்டவற்றுள் மாத்திரை வகையும் எழுத்தியல் வகையும் மேல் எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டன என்று சொல்லுவர் புலவர்.

**மாத்திரை:**

மாத்திரை என்பது எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு ஆகும். கைநொடிக்கும் நேரமும் கை நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரை எனப்படும்.

அவையாவன குற்றெழுத்து ஒருமாத்திரை - நெட்டெழுத்து இரண்டு மாத்திரை - உயிரளபெடை மூன்று மாத்திரை - குற்றிய லிகரமுங் குற்றியலுகரமும் ஆய்த மெய்யும் ஒவ்வொன்றும் அரைமாத்திரை ஒற்றளபெடை ஒரு மாத்திரை - ஐகாரக் குறுக்கம் ஒருமாத்திரை -மகரக்குறுக்கங் கால்மாத்திரை - ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்களவாம்

**எழுத்தியல்**

உயிரெழுத்து, மெய்யெழுத்து, சார்பெழுத்து என மூவகைப்படும்.

உயிரெழுத்து - குற்றெழுத்து, நெட்டெழுத்து அளபெடையென மூவகைப்படும்.

மெய்யெழுத்து - வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும்.

சார்பெழுத்து - குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தமென மூவகைப்படும்.

மெய்யினுட் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப்பெறும்.

குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. நெட்டெழுத்து ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - அளபெடை ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ.

வல்லினம் கசடதபற - .மெல்லினம் ஙஞணநமன - இடையினம் யரலவழள - குற்றியலுகர மாவது நெட்டெழுத்தின் பின்னரும் மூன்றெழுத்து முன்னான மொழியினும் வல்லெழுத்தை ஊர்ந்து வந்து உகரம். நாகு நாக்கு: காசு -காச்சு காடு – காட்டு காது - காத்து காபு - காப்பு காறு - காற்று என இந்நிகரன. - குற்றியலிகரமாவது இவ்வுகரந்திரிந்து மகரம் ஊர்ந்து மகரமோடியைந்து வரும் நாகியாது உகரந்திரிந்தது கேண்மியா மகர மூர்ந்தது. - ஆய ் தமாவது குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடைவரும் அ்.தாவது எ்.கு எனவரும். - ஒற்றளபெடையாவது மெல்லினமும் வயலளவும் ஆய்தமும் அளபெடுக்கும். அவை மங்கலம், மஞ்ஞ்சு எனவரும்.

இனி உயிர்மெய்யுங் கூடி உயிர்மெய்யெழுத்தாம். அவை ககர முதல் னகரவீறாகிய இருநூற்றொருபத்தாரும், இன்னும் ஐகாரக்குறுக்கமும் மகரக்குறுக்கமும் என்பவும் உள. ஐகாரக்குறுக்கம் அளபெடையும் தனியும் அல்லாதவழிக் குறுகும்.மகரக்குறுக்கம்ணகர,னகரஒற்றின் பின்வரும் புணர்மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரங் குறுகும்.

**அசை:**

அசை நான்கு வகைப்படும். முதலில் நேர் அசை நிரையசை என்பதனைக் கூறி பின் நேர்பு,நிரைபு இரண்டனையும் கூறுவார் தொல்காப்பியர்.

**குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்**

**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**

**நேரும் நிரையு மென்றிசிற் பெயரே.**

**நேர்:** குறிலும் நெடிலும் தனியேவரினும் ஒற்றொடுவரினும் நேரசை – ப, பண், கா, கான்

**நிரை:** குறில் இணையும் குறில் நெடிலும் தனியேவரினும் ஒற்றொடுவரினும் நிரையசை – பக, பகல், குரா, குரால்.

**நேர்பு – நிரைபு** : நேர், நிரை இவற்றோடு இருவகை உகரமும் இணையுமாயின் நேர்பு, நிரைபு அசைகள் தோன்றுகின்றன. குற்றெழுத்தொடு பொருந்தின உகரமல்லாத இடத்து ஆகும்.

**நேர்பு, நிரைபு:**

இருவகை உகரமோடு இயைந்தவை வரினேநேர்பு நிரைபும் ஆகும் என்ப குறிலிணை உகரம் அல்வழி யான.தன்குறிலால் ஆன நேரசையுடன் உகரம் சேருமானால் அது நிரையசை ஆகுமே தவிர நேர்பு அசை ஆகாது. – தபு என்பதனை நிரையசையாகவே கொள்ளல் வேண்டும்.நேர்பு அசை எனக் கொள்ளல் கூடாது.

**இயலசை - உரியசை:**

**இயலசை முதலிரண் டேனவை உரியசை.**

நேரசையும் நிரையசையும் இயலசை எனக் குறிக்கப்பெறும். நேர்பசையும் நிரைபசையும் உரியசை எனக் குறிக்கப்பெறும்.

**தனிக்குறில்:**

**தனிக்குறில் முதலிசை மொழிசிதைந் தாகாது.**

தொடர்மொழியில் மொழி சிதைந்து தனிக் குறில் நேரசையாகாது.

**மொழிசிதைத்தல்:** ஒற்றுமைப்பட்டிருக்கின்றதனைப் பிரித்தல். அஃதாவது புளிமா என்றவழி நிரைநேராக அலகிடாது முதல் நின்றதனை நேரசையாக்கி இடை நின்றதையும் இறுதி நின்றதையும் நிரையசையாக்கல். அவ்வழிப் புளி என்னும் சொல்லைப் பிரிக்கவேண்டின் நிரையசையாகவே கொள்ளல்வேண்டும். இனி மொழி சிதையாக்கால் நேரசையாம்.

குற்றிலிகரம்:

**ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.**

குற்றியலிகரம் ஒற்றெழுத்து இயல்பிற்று ஆகும்.அதாவது குற்றியலிகரம் அலகு பெறாது.

முற்றியலுகரம்:

**முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ**

**நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.**

முற்றியலுகரமும் மொழிசிதைந்து நேர்பசை நிரைபசை என்றுரைக்கப் படாது அது ஈற்றடி மருங்கில் தனியசையாகி நிற்றலும் கிடையாது.

**குற்றியலுகரமும் முற்றிய லுகரமும்:**

**குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்**

**ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.**

குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் ஒற்றொடு தோன்றித் தனி அசையாகி நிற்கவும் பெறும்.

**"படுகிளி யாவும் பசுங்குரல் ஏனல்**

**கடிதின் மறப்பித்தா யாயின் இனிநீ**

**நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும்."** (கலித். 50) - இதன்கட் குற்றியலுகரம் ஒற்றொடுவருதலான் நேரசையாயிற்று.

**"கண்ணும் படுமோ என்றிசின் யானே."** (நற்றிணை.61) - இதன்கண் முற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையாயிற்று.

**வகையுளி:**

**அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி**

**வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே.**

அசையையுஞ் சீரையும் ஓசையோடு சேர்த்திப் பாகுபாடுணர்த்தல் வல்லோர்கள் நெறி என்றாகும்.

அஃதாவது பொருளொடு சொல்லை அறுத்தவழித் தளையும் சீரும்சிதையின் அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்து என்பதாம். அது வருமாறு

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**

**நிலமிசை நீடுவாழ் வார்."** (குறள். 3)

என்றவழி வாழ்வாரெனப் பொருள் நோக்கிச் சீராமாயின் ஓசைகெடும்.அதன்கண் "வாழ்" என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம்.

**சீர்.**

இரண்டசைகொண்டும் மூன்றசை கொண்டும் இயைத்துச் சேர்ப்பது சீரெனப்படும். ஓரோவிடத்து ஓரசையானும் சீர் அமையும்.

**ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்**

**சீரியைந் திற்றது சீரெனப் படுமே.**

**"தாமரை புரையுங் காமர் சேவடி."** (குறுந்.கடவுள் வாழ்த்து) நான்குசொல்லாகி ஓசை அற்றுநின்றது.

**"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** (குறள். 110) - மூன்றசையினாற் சீராகியவாறும் அவ்வளவினான் ஓசையற்று நின்றது.

**ஈரசைச்சீர்**

ஈரசைச்சீர்களை இயற்சீர் என்றும் உரிச்சீர்(ஆசிரிய உரிச்சீர்) என்றும் வகைப்படுத்தவர். இயலசைகள் இணைந்து வருவது இயற்சீர் ஆகும். உரிச்சீர்கள் இயைந்து வருவது ஆசிரிய உரிச்சீர் ஆகும். இதனைப் பின்வரும் நூற்பா உணர்த்தும்.

**இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை**

**உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.**

இயலசையாகிய நேரும் நிரையுந் தம்மின் உறழ நான்கு சீராம். அவை இயற்சீர் எனப்படும்.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்" - எனவரும்.

இனி உரியசையாகிய நேர்பு நிரைபு என்றவற்றைத் தம்மின் உறழ நான்குசீராம். அவை ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

**"ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகு, தவிடு."**

**நிரை இறுதி:**

**முன்நிரை இறினும் அன்ன வாகும்.**

நேர்பசை நிரைபசைப் பின், நிரை இறுதியும் ஆசிரிய உரிச்சீராம் "யாற்றுமடை, குளத்துமடை."

**நேரசை:**

**நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால.**

உரியசைப் பின்னர் நேரசை வரின் அது இயற்சீரென வரும். **"ஆற்றுக்கால், குளத்துக்கால்"** எனவரும்.

**இயலசை - உரியசை:**

**இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே**

**நிரையசை இயல ஆகு மென்ப.**

இயலசைப் பின்னர் உரியசைவரின், நிரையசை வந்தாற்போல அமையும். எனவே இவையும் இயற்சீராம்.

**"மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு."**

இத்துணையுங் கூறப்பட்டது ஈரசைச் சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரியவுரிச்சீர் ஆறுமாம் என்பதாகும்.

**அளபெடை:**

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.**

சீர்க்கண் உயிரளபெடைக்குரியதோர் மரபு உணர்த்திற்று. உயிரெளபெடை அசையாக நிற்கவும் பெறும். உம்மை எதிர்மறையாகலான் பெரும்பான்மை ஆகாது என்பது பெறப்படும்.

**"கடாஅ உருவொடு...வல்லதே ஒற்று."** (குறள்.585) இது அளபெடை அலகுபெற்றது.

**"இடைநுடங்க வீர்ங்கோதை பின்தாழ வாட்கண்**

**புடைபெயரப் போழ்வாய் திறந்த கடைகடையின்**

**உப்போஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்**

**கொப்போநீர் வேலிஉலகு."** - இதன் கண் அளபெடை அசைநிலையாகி அலகுபெறாதாயிற்று.

**ஒற்றளபு:**

**ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப.**

ஒற்றளபடைக்குரியதோர் மரபு.. ஒற்று அளபெடுத்துவரினும் அசை நிலையாகலும் உரித்து. மாட்டேற்று வகையான் பெரும்பான்மை ஆகாது.

**"கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்.**

**மூவசைச்சீர்கள்**

ஈரசைச்சீர் பதினாறோடு நான்கசையுங் கூட்டியுறழ மூவசைச் சீராம் அறுபத்துநான்கு ஆகும். அவற்றுள் இயற்சீர் நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீராம்.

**இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்**

**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.**

**"மாவாழ்கா் மாவருகான் புலிவாழ்கான் புலிவருகான்."**

இந்நான்னும் தவிர்த்த ஏனை மூவசைச்சீர்கள் அறுபதும் வஞ்சிச் சீர் எனப்படும். இதனைப் பின்வரும் நூற்பா உணர்த்தும்.

**மூவசைச்சீர் வகை:**

**வஞ்சிச் சீரென வகைபெற் றனவே**

**வெண்சீ ரல்லா மூவசை என்ப.**

இதனால் மூவசைச்சீர்கள் இரண்டு வகைப்படும் என்பது பெறப்படும். அவை முறையே வெண்பா உரிச்சீர், வஞ்சி உரிச்சீர் என்பதாம்.

1. நேர் நேர் நிரை - மா வாழ் நெறி
2. நேர் நேர் நேர்பு - மா வாழ் காடு
3. நேர் நேர் நிரைபு - மா வாழ் பொருப்பு
4. நேர் நிரை நிரை - மா வரு நெறி

5. நேர் நிரை நேர்பு - மா வரு காடு

6. நேர் நிரை நிரைபு - மா வரு பொருப்பு

7. நேர் நேர்பு நேர் - மா போகு கான்

8. நேர் நேர்பு நிரை - மா போகு நெறி

9. நேர் நேர்பு நேர்பு - மா போகு காடு

10. நேர் நேர்பு நிரைபு - மா போகு பொருப்பு

11. நேர் நிரைபு நேர் - மா வழங்கு கான்

12. நேர் நிரைபு நிரை - மா வழங்கு நெறி

13. நேர் நிரைபு நேர்பு - மா வழங்கு காடு

14. நேர் நிரைபு நிரைபு - மா வழங்கு பொருப்பு

(2)

15. நிரை நேர் நிரை - புலி வாழ் நெறி

16. நிரை நேர் நேர்பு - புலி வாழ் காடு

17. நிரை நேர் நிரைபு - புலி வாழ் பொருப்பு

18. நிரை நிரை நிரை - புலி வரு நெறி

19. நிரை நிரை நேர்பு - புலி வரு காடு

20. நிரை நிரை நிரைபு - புலி வரு பொருப்பு

21. நிரை நேர்பு நேர் - புலி போகு கான்

22. நிரை நேர்பு நிரை - புலி போகு நெறி

23. நிரை நேர்பு நேர்பு - புலி போகு காடு

24. நிரை நேர்பு நிரைபு - புலி போகு பொருப்பு

25. நிரை நிரைபு நேர் - புலி வழங்கு கான்

26. நிரை நிரைபு நிரை - புலி வழங்கு நெறி

27. நிரை நிரைபு நேர்பு - புலி வழங்கு காடு

28. நிரை நிரைபு நிரைபு - புலி வழங்கு பொருப்பு

(3)

29. நேர்பு நேர் நேர் - பாம்பு வாழ் கான்

30. நேர்பு நேர் நிரை - பாம்பு வாழ் நெறி

31. நேர்பு நேர் நேர்பு - பாம்பு வாழ் காடு

32. நேர்பு நேர் நிரைபு - பாம்பு வாழ் பொருப்பு

33. நேர்பு நிரை நேர் - பாம்பு வரு கான்

34. நேர்பு நிரை நிரை - பாம்பு வரு நெறி

35. நேர்பு நிரை நேர்பு - பாம்பு வரு காடு

36. நேர்பு நிரை நிரைபு - பாம்பு வரு பொருப்பு

37. நேர்பு நேர்பு நேர் - பாம்பு போகு கான்

38. நேர்பு நேர்பு நிரை - பாம்பு போகு நெறி

39. நேர்பு நேர்புநேர்பு - பாம்பு போகு காடு

40. நேர்பு நேர்பு நிரைபு - பாம்பு போகு பொருப்பு

41. நேர்பு நிரைபு நேர் - பாம்பு வழங்கு கான்

42. நேர்பு நிரைபு நிரை - பாம்பு வழங்கு நெறி

43. நேர்பு நிரைபு நேர்பு - பாம்பு வழங்கு காடு

44. நேர்பு நிரைபு நிரைபு - பாம்பு வழங்கு பொருப்பு

(4)

45. நிரைபு நேர் நேர் - களிறு வாழ் கான்

46. நிரைபு நேர் நிரை - களிறு வாழ் நெறி

47. நிரைபு நேர் நேர்பு - களிறு வாழ் காடு

48. நிரைபு நேர் நிரைபு - களிறு வாழ் பொருப்பு

49. நிரைபு நிரை நேர் - களிறு வரு கான்

50. நிரைபு நிரை நிரை - களிறு வரு நெறி

51. நிரைபு நிரை நேர்பு - களிறு வரு காடு

52. நிரைபு நிரை நிரைபு - களிறு வருபொருப்பு

53. நிரைபு நேர்பு நேர் - களிறு போகு கான்

54. நிரைபு நேர்பு நிரை - களிறு போகு நெறி

55. நிரைபு நேர்புநேர்பு - களிறு போகு காடு

56. நிரைபு நேர்பு நிரைபு - களிறு போகு பொருப்பு

57. நிரைபு நிரைபு நேர் - களிறு வழங்கு கான்

58. நிரைபு நிரைபு நிரை - களிறு வழங்கு நெறி

59. நிரைபு நிரைபு நேர்பு - களிறு வழங்கு காடு

60. நிரைபு நிரைபு நிரைபு - களிறு வழங்கு பொருப்பு

ஆக அறுபதும் சீர்கள் ஆகும்

## வஞ்சிப்பாவிற்குரியதோர் மரபு:

**தன்பா அல்வழித் தான்நடை இன்றே.**

வஞ்சியுரிச்சீர் வஞ்சிபாவினுள் அல்லது வாராது.

**வஞ்சி மருங்கி னெஞ்சிய வுரிய.**

வஞ்சிப் பாவினுள் ஒழிந்த சிர்கள் வரப்பெறும்.

## வெண்பாவிற்குரியதோர் மரபு:

**வெண்பா உரிச்சீர் ஆசிரியை உரிச்சீர்**

**இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே**

வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து வெண்பாவினது நேரடிக்கண் ஒருங்கு நில்லாது.

## கலித்தளை மரபு:

**கலித்தளை மருங்கிற் கடியவும் பெறாஅ**

கலித்தளை வரும்வழி வெண்பாவுரிச்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆகிய இரு வகைச்சீரும் ஒருங்கு நிற்கவும் பெறும்.

**கலித்தளை யடிவயின் நேரீற் றியற்சீர்**

**நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே..**

கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்று இயற்சீர் நிற்றற்குரித்து அன்று.

## வஞ்சிப்பா மரபு:

**வஞ்சி மருங்கினும் இறுதி நில்லாது**

வஞ்சிக்குரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. நேரீற்று இயற்சீர் வஞ்சிப்பாவினும் அடியினீற்றில் நில்லாது. அடிமுதற்கண் நிற்கப் பெறும்.

## அசையும் சீராகும்:

**இசைநிலை நிறைய நிற்குவ தாயின**

**அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.**

ஓரசைச்சீராமாறு உணர்த்திற்று. இசை நிற்கின்றநிலை நிரம்பாது நிற்குமாயின் அசையும் சீராந்தன்மைபோல வரையார் ஆசிரியர்.

“நாள், மலர், காசு, பிறப்பு’’

## தளைவகை சிதையா தன்மை

**இயற்சீர் பாற்படுத் தியற்றினர் கொளலே**

**தளைவகை சிதையாத் தன்மை யான.**

ஓரசைச்சீரைத் தளைவகை சிதையாததன்மை வேண்டுமிடத்து இயற்சீர் போலக் கொள்ளல் வேண்டும்.

## தளைவழங்கும் திறன்:

**வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே.**

இதுவுந் தளைவழங்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று. வெண்சீ ரீற்றசை தளைவழங்குமிடத்து இயற்சீரசை நிரையீறு போல் அமையும்.

இயற்சீரென்பது அதிகாரத்தான் வந்தது.

## ஆசிரிய அடி மரபு:

**இன்சீ ரியைய வருகுவ தாயின்**

**வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.**

இனிய ஓசை பொருந்தி வருகுவதாயின் ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் ஆசிரியர்

## வஞ்சியுரிச்சீர் மரபு:

**அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்**

**ஒன்றுத லுடைய ஒரோவொரு வழியே.**

இன்சீர் இயைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி ஆசிரிய அடிக்கண் வரும்.

ஓரசைச்சீர் நான்கு, ஈரசைச்சீர் பதினாறு, மூவகைச்சீர் அறுபத்துநான்கு, ஆகச்சீர் எண்பத்துநான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும் அது தளைவழங்கும்வழி இயற்சீரொக்குமெனவும், ஈரசைச்சீர் பதினாறும் சிறப்புடைய இயற்சீர் நான்கும் சிறப்பிலியற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும், ஆசிரியவுரிச் சீர் ஆறு எனவும் மூவகைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் என்பது வெளிப்பட்டு நிற்கும்.

## பாக்களின் அடிவரையறை

**நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.**

நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடியென்று சொல்லப்படும்.

## தளையும் தொடையும்:

**அடியுள் எனவே தளையொடு தொடையே.**

தளையுந் தொடையும் அடியின்கண் வரும்

## அடி இறந்து வருதல் இல்

**அடிஇறந்து வருதல் இல்லென மொழிப.**

தளையுந் தொடையும் நான்குசீரடியின் வருதலன்றி அடியின் நீங்கிவருதலில்லை.

அடிவரையறை யில்லாதனவற்றிற் கொள்ளப்படாது என்பதாம்.

## பாட்டின் வரையறை:

**அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.**

அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப்படும். பாட்டென்னும் செய்யுட்கு அடி இன்றியமையாதென்று கொள்லாம். பாட்டாவன: - வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்பன ஆகும்.

## குறளடி

**நாலெழுத்து ஆதி ஆக ஆறெழுத்**

**தேறிய நிலத்தே குறளடி என்ப**

குறளடி என்பது நாலெழுத்து முதலாக ஆறெழுத்து ஈறாக ஏறிய மூன்று நிலத்தையுடைத்தாகும்.

எனவே, குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம்.

## சிந்தடி

**ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே**

**ஈரெழுத் தேற்றம் அல்வழி யான.**

ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினால் வருவது சிந்தடியாம்

## அளவடி:

**பத்தெழுத் தென்ப நேரடிக் களவே**

**ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே.**

அளவடி எனினும் நேரடி யெனினும் ஒக்கும். பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தளவும் அளவடியாம் எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம்பெறும்.

## நெடிலடி:

**மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே**

**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப**

பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழெழுத்தளவு நெடிலடியாம்.

எனவே பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்று நிலம் பெறும்.

## கழிநெடிலடி:

**மூவா றெழுத்தே கழிநெடிற் களவே**

**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.**

பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடியலடியாம்.

எனவே பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும்.

## எழுத்து வரையறை

**சீர்நிலைதானே ஐந்தெழுத் திறவாது**

**நேர்நிலை வஞ்சிக் காறும் ஆகும்.**

நேர் இறுதியாங் காலத்து சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது. நிரையீறாகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும். எனவே வஞ்சிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின் இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி யில்லை

## சீர்நிலை மரபு:

**எழுத்தள எஞ்சினுஞ் சீர்நிலை தானே**

**குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப**

இங்கு குறிக்கப்பட்ட அடிகள் பலதொடுக்கும் வழி ஓரடிக்கோரடி எழுத்தளவு குறைந்துவரினுஞ் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலும் இல்லை

## மெய்யெழுத்து எண்ணப்படாமை:

**உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ**

**உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான**

மெய்யெழுத்திற்கு இயக்கம் இல்லை என்பதனால் அது எண்ணப்படாது. உம்மை எச்சவும்மை ஆதலாற் குறுகிய உயிர்த்தாகிய குற்றியலிகரமும் முற்றியலுகரமும் எண்ணப்படா என்பதும் கொள்ளப்படும். எனவே எண்ணப்படுவன உயிரும் உயிர்மெய்யுமாகி ஒரு மாத்திரையிற் குறையாதன என்று கொள்ளப்படும்.

## பாக்களின் சீர் வரையறை:

**வஞ்சி அடியே இருசீர்த் தாகும்.**

வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டுசீரை உடையது ஆகும்.

## வஞ்சிப்பாவின் சிறுமை:

**தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே.**

வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப்படும்.

எனவே, மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் வஞ்சியுரிச்சீர் எழுத்தென்றவறாம்

வஞ்சியடி இருசீரடியானு முச்சீரடியானும் வரும்.

## சிறப்பு விதி:

**முச்சீ ரானும் வரும்இடன் உடைத்தே.**

வஞ்சியடி இருசீரடியானும் முச்சீரடியானும் வரும்

**தூங்குகையான் ஓங்குநடைய**

**உறழ்மணியான் உயர்மருப்பின"** (புறம்.22)

இதனுள் மூன்றெழுத்து முதலாக ஆறெழுத்துக் காறுஞ் சீர் வந்த வாறும் இருசீரடியாயினது.

## அசை கூன் ஆகும்

**அசைகூன் ஆகும் அவ்வயின் ஆன.**

மேற்சொல்லப்பட்ட வஞ்சியடிக்குரியதோர் மரபு உணர்த்திற்று,

மேற்சொல்லப்பட்ட இருவகையடியினும் அசைகூனாகி வரும்.

## சீர் கூன் ஆகுதல்:

**சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே.**

இதுவுங் கூனாகுமிடன் உணர்த்திற்று, சீர்முழுதுங் கூனாகி வருதல் அளவடிக் குரியதாம்.

நேரடி என்றதனான் வெண்பாவினும் ஆசிரியத்தினுங் கலியினுங் கொள்ளப் படும்.

**"கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை**

**வாடா வள்ளியங் காடிறந் தோரே"** (குறுந். 216)

**இது ஆசிரியத்திற் கூன்.**

**"உதுக்காண் சுரந்தானா வண்மைச் சுவர்னமாப் பூதன்**

**பரந்தானாப் பல்புகழ் பாடி - இரந்தான்மா**

**டின்மை அகல்வது போல இருள்நீங்க**

**மன்னும் அளிதேர் மழை."** (யாப்.வி. பக். 356 )

**இது வெண்பாவிற் கூன்.**

**"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்**

**புனைமாண் வரீஇய அம்பு தெரிதியே."** (கலித். 7)

இது கலிப்பாவிற் கூன்.

## அடிகளின் விரி அறுநூற்று இருபத்தைந்தாதல்:

ஐவகை அடியும் விரிக்குங் காலை

மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்

எழுபது வகையின் வழுவில வாகி

அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

நாற் சீரடியை எழுத்தளவுபற்றி வகுக்கப்பட்ட குறளடிமுதலாகிய ஐந்தடியினையும் விரித்துணர்த்துங் காலத்தில் நாலெழுத்து முதலாக இருபதெழுத்து ஈறாகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும் எழுபது வகைப்பட்ட உழற்சியின் வழுவுதலின்றி இரண்டுசீர் தம்முட் புணரும் புணர்ச்சி எழுபது வகையாகும்.

இயற்சீரான் வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரியவுரிச்சீரான் வருவதனை ஆசிரியவுரிச்சீரடி எனவும் இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி3 எனவும், நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசையீற்றான் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும், ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

அவற்றுள், இயற்சீரடி நேரீற் றியற்சீரடி எனவும் நிரையீற்றியற் சீரடி எனவும் இருவகைப்படும். நேரீற் றியற்சீ ரடியாவது நேரீறு நேர் முதலாகிய இயற்சீர் வருதலும் நேர்புமுத லாசிரியவுரிச்சீர் வருதலும் நேர்முதல் வெண்பா வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர்முதல் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்துவகைப்படும். நிரையீற்றியற்சீரும் இவ்வாறு நிரைமுதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

ஆசிரியவுரிச்சீரடியும் இருவகைப்படும் நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என. அவற்றுள், நேர்பீற்றுச் சீரை நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும். நிரைபீற்றுச்சீரும் அவ்வாறே நிரைபுநிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

இயற்சீர் வெள்ளடியும் நேரீறும் நிரையீறும் என இருவகைப்படும். அவற்றுள், நேரீறு நிரைபு நிரையும் முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகையாம். நிரையீறும் அவ்வாறே நேர்பும் நேரும் முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.

வெண்சீர் நேர்முதலோடு உறழ்தலும் நிரை முதலோடு உறழ்தலுமென இருவகைப்படும். அவற்றுள், நேர்பும் நேரும் முதலாகிய சீர்களொடு உறழ்தல் ஐந்து வகைப்படும். நிரைபும் நிரையும் முதலாகிய சீர்களொடு உறழ்தலும் ஐந்து வகைப்படும்

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ டொன்றுவனவும் ஒன்றாதனவும் என இருவகைப்படும். அவற்றுள், ஒன்றி வருவது நிரைபு நிரை முதலாகிய சீரொடு உறழ ஐந்து வகைப்படும். ஒன்றாதது நேர்பும் நேரும் முதலிய சீரொடு உறழ ஐவகைப்படும்.

உரியசையீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும்.

அசைச்சீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்துவகைப்படும்.

இவ்வகையால் தளை ஏழு பாகுபட்டன. இவை நேரொன் றாசிரியத்தளை, நிரையொன் றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழுவகையாம், அவ்வழி ஓரசைச்சீர் இயற்சீர்ப்பாற்படும் ஆசிரியவுரிச்சீரு மதுவேயாம் மூவசைச்சீருள் வெண்பாவுரிச்சீ ரொழிந்தனவெல்லாம் வஞ்சியுரிச்சீராம், அவ்வழி இயற்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையொடு நேராய் ஒன்றுவது நேரொன்று ஆசிரியத்தளையாம். நிரையாய் ஒன்றுவது நிரையொன்று ஆசிரியத்தளையாம். மாறுபட்டு வருவது இயற்சீர் வெண்டளையாம். வெண்சீர் நிற்ப வருஞ்சீர்

முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம். நிரையா யொன்றிற் கலித்தளையாம் .வஞ்சியுரிச்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம். ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளையாம் இவ்வகையால் தளை ஏழாயின

இனி அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு: அசைச்சீர் இயற்சீர் ஆசிரியவுரிச்சீர். வெண்சீர் வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி இவ்வைந்துசீரும் வருஞ்சீராகவுறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ்விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்துசீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும். அந்நூற்றிருபத்தைந்தின் கண்ணும் நான்காவது ஐந்துசீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம்.

## சிறப்பு விதி:

**ஆங்ஙனம், விரிப்பின் அளவிறந் தனவே**

**பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை.**

இங்கு உறழ்ந்த முறையானே ஐந்தடி முதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாகும். அதாவது அறுநூற்றிருபத்தைந்தினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத்தொருநூற்று இருபத்தைந்து விகற்பமாம். அதன் கண் ஆறாவது இவ்வகை யைந்துசீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத்தொரு நூற்றிருபத்தைந்து விகற்பமாம். இவ்வகையினா னுறழ வரம்பிலவாய்விரியும். அன்றியும், இச் சொல்லப்பட்ட அடியினை அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பில

## பாவும் பாவிற்குரிய அடியும்:

## ஆசிரியப்பாவிற்குரிய அடி

**ஐவகை அடியும் ஆசிரியக் குரிய.**

நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப்பாவிற் குரியவாம்.

ஐவகை யடியு முரியவென, அவற்றிற்கு முதலாகிய நாற்சீரடியும் உரித்தாயிற்று.

**“கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி”** (குறுந் 2)

**ஒன்பது எழுத்தான் வந்தது**

**காமம் செப்பாது கண்டது மொழிமோ”** (குறுந் 2)

**பத்து எழுத்தான் வந்தது.**

**விராஅய் வரினும் ஒரூஉ நிலை இலவே.**

மேற் சொல்லப்பட்ட ஐந்தடியுந் தனித்தனி ஆசிரியப்பாவிற் குரித்தாகி வருதலே யன்றி விரவி வரினும் நீக்கப்படாது.

**”செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த**
**செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்**
**கழறொடிச் சேய குன்றங்**
**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே."** (குறுந்.1)

பலவடியும் வந்தது

## தளைவகை:

**தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினும்**
**இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய**
**தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.**

இத்துணையும் அடியும் அடிக்குரிய எழுத்துக்களும் ஓதினார் இனி அவ்வடிக்கண் ஓசை வேறுபாடுந் தளையிலக்கணமும் உணர்த்துவார் அத் தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துவார் தொல்காப்பியர்

தத்தஞ் சீர்நிலை வகையானுந் தளைநிலை வகையானும் இனிய ஓசைவேறுபாட்டினையுடைய ஐந்தடிக்கு முரிய தன் சீருள்வழித் தளைவேறுபாடு கோடல் வேண்டா. எனவே சீர்தானே ஓசையைத் தரும் என்பதாம்.

உரிய தன்சீர் என்றது ஐந்தடியினும் ஏற்ற வழி நிலை பெறுந் தன் சீரென்று கொள்க. அ∴தாவதுகுறளடியாகிய ஐந்தெழுத்தினும் ஆறெழுத்தினும் ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவகைச்சீர் வாராமை. பிறவாசிரியர் கொண்ட நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளைஎன ஏழுவகையினும், வஞ்சித்தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராக வருஞ்சீர்க்கு முதலசையோடு ஒன்றியது ஒன்றிய வஞ்சித்தளை எனவும் ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளை எனவும் வழங்குபவாதலின் அவ்விருவாற்றானும் தளையாற் பயனின்றி நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர் தானே ஓசையுணர்த்துதலின், வஞ்சித்தளை கோடல் வேண்டாராயினார். இனி வெண்சீர் வெண்டளையும் வெணசீர் நிற்ப வருஞ்சீர் வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை "வெண்சீரீற்றசை நிரையசையியற்றே" (செய்யு-28) என ஓதுதலின், அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் நேர்முத லியற்சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம்.

அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் "தன் சீருள்வழித் தளைவகை வேண்டா" என்பதனான் அடங்கும்.அதனான் இருவாற்றானும் வெண்சீர் வெண்டளை கொள்ளாராயினார்.இனி ஒழிந்த நான்குதளையும் கூறுகின்றாராயின் ஆசிரியத்தளையுங் கூறல் வேண்டா.அதுவும் இயற்சீரான் வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர்வெண்டளை கூறவேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டுமென்க.

## ஆசிரியத் தளை:

**சீரியல் மருங்கின் ஓரசை யொப்பின**
**ஆசிரியத் தளையென்று அறியல் வேண்டும்.**

சீர்கள் தம்முள் பொருந்தும்வழி நிலைமொழியாகிய இயற்சீரினீறும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத் தளையாம். நிரையாய் ஒன்றின் நிரையொன்றாசிரியத்தளையாம்

இரண்டடையும் ஆசிரியத்தளை என வேண்டுதலின் பொதுப்படக் கூறினார்.அவ்வழி வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்று.

**குறளடி முதலா அளவடி காறும்**
**உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.**

குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச் சீர் வந்து உறழும் நிலையில் இவ்வடிகள் இயற்சீரும் ஆசிரியவுரிச் சீருமாய் அமையும்.

எனவே பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினுங் கழிநெடிலடியினு மெய்யுறழப் பெறுவது தென்றவாறாம்.

## வெண்பாவிற்கு உரிய தளை:

**அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய**
**தளைவகை ஒன்றாத் தன்மை யான.**

அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் என்றவாறாம்.

இச்சூத்திரத்தால் வெண்பாவிற்கு உரியதோர் தளை உணர்த்தினார் தொல்காப்பியர். சிந்தடி என்பது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்து ஈறாகிய அடி. அளவடி என்பது பத்தெழுத்து முதலாகப் பதினான்கு எழுத்து ஈறாகிய அடி. தளைவகை ஒன்றாமையாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயறீர் நேராயொன்றுவதும் நிரையாயொன்றுவதுமன்றி மாறுபடவருவது.அவ்வழி நிரையீற்றியற் சீர் நிற்ப நேர்வரினும் நேரீற்றியற்சீர் நிற்ப நிரைவரினும் இயற்சீர் வெண்டளையாம். இனி ஒன்றுந் தன்மையாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்டளையாம். இவ்விரண்டும் வெண்பாவிற்குத் தளையாகும். .

**"மட்டுதா னுண்டு மணஞ்சேர்ந்து விடுக்**
**களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்**
**யாரோ வெதிர்நிற் பவர்."** (யாப். வி. பக். 463)

**இது ஏழெழுத்தான் வந்த அடி**

## கலிப்பா:

**அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி**
**இருநெடில் அடியுங் கலியிற் குரிய.**

அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியுங் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின் காறும் வரும் அடி கலிப்பாவிற்கு அடியாம்.

**"மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க."** (கலித். 13)

**இதுபதின் மூன்றெழுத்தான் வந்தது.**

## கலித்தளை

**நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்**

**வரைநிலை இன்றே அவ்வடிக் கென்ப.**

மேற்சொல்லப்பட்ட அடி கலித்தளை தட்ட வழியே கொள்ளப்படுவது என உணர்த்தியவாறாம். வெண்பா உரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து அதன்கண் நிரையாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலையில்லை.

நிரைதட்டல் என்றதனால் பிறிதாகிவருஞ் சீர் முதலாகிய நிரையோடு தளைப்பினும் கலித்தளையாம் எனக்கொள்க.

விராஅய தளையு மொரூஉநிலை யிலவே

கலிப்பாவில் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவி வரும். சிறுபான்மை வஞ்சித்தளையும் வரும்.

**“இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்**
**உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக**
**ஐயிரு தலையின் அரக்கர் கோமான்.** (கலித்38)

ஆசிரியப்பாவிற்குரிய சிறப்பு விதி:

இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்

நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே.

இயற்சீர் வெண்டளையாள் ஆகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபினால் நிற்கவும் பெறும்

வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்

ஐஞ்சீர் அடியும் உளனெ மொழிப.

இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரித்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின் கண் வருவன உள.

அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு

நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.

நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் அறுசீரடி ஆசிரியத்தளையொடு பொருந்தி நடைபெற்று வரும்.

**“சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே**

**பெரியகட் பெறினே யாம்படத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே.”** (புறம். 235)

முதலடி நாற்சீரான் வந்தது. இரண்டாமடி ஆசிரியத்தளையொடு பொருந்தி யறுசீரடியாகி வந்தது.

எழுசீ ரடியே முடுகியல் நடக்கும்.

எழுசீரான் வரும் முடுகியலடி என்பதாகும்.

முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும்.

மேற்சொல்லப்பட்ட ஐஞ் சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியல் நீக்கப்படாது.

ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்

**மூவகை யடியு முன்னுதல் இலவே.**

முடுகியலாகி வரும் மூவகை அடியும் ஆசிரியப்பாவினும் நிற்றல் இல்லை.

எனவே கலிப்பாவினுள் நிற்கப்பெறும்.

“நாற்சீர் கொண்டதடி” எனவோதிப் பின்னும் இருசீரடி வஞ்சிக் கண் உரித்தென ஓதி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் எழுசீரடியும் உள என ஓதினமையான். அடியாவது இரண்டு முதலாக வருமெனவும் அவற்றுள் இருசீரடி குறளடி எனவும் முச்சீரடி சிந்தடி எனவும் நாற்சீரடி அளவடி எனவும் ஐஞ்சீரடி நெடிலடி எனவும் அறுசீர் முதலாக வரும் அடியெல்லாங் கழிநெடிலடியா மெனவும் பிறநூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்றுகொள்க. அறுசீர் முதலான அடிகளுள் எழுசீர் எண்சீர் சிறப்புடையன எனவும் எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் அவ்வாசிரியருரைப்ப இவ்வாசிரியரும் அடிக்குச் சீர் வரையறையின்மை ஆங்கனம் விரிப்ப வளவிறந் தனவே. பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை (செய்யுளியல்-49) என்றதனான் உணர்த்தினார் என்று கொள்க. ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் அவ்வடியினால் வருதலின் என்று கொள்க.

**ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கில்**

**தோற்ற முச்சீர்த் தாகு மென்ப.**

ஆசிரிப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீர்த்தாகவும் பெறும்.

**“முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே**

**மலையன ஒள்வேற் கண்ணி**

**முலையும் வாரா முதுக்குறைந் தனளே.”**

**இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.**

**இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே**

மேற்சொல்லப்பட்ட முச்சீரடி ஆசிரியப்பாவினுள் இடையும் வரப்பெறும்..

**“நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்**

**சாரச் சார்ந்து தீரத் தீருஞ்**

**சாரல் நாடன் கேண்மை**

**சாரச் சாரச் சார்ந்து**

**தீரத் தீரத் தீர்பொல் லாவே.”**

**இதனுள் மூன்றாமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தது.**

**முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.**

ஈற்றயலடி முச்சீரெனவோதப்பட்டது. கலிப்பாவின் கண் நாற்சீர் ஆகியும் வரும் என்பதாகும்.

**"அரிமான் இடித்தன்ன" என்னும் பாலைக்கலியுள் (சுரிதகம்)**

**"முளைநிரை முறுவல் ஆயத்துள் எடுத்தாய்ந்த**

**இளமையுந் தருவதோ இறந்த பின்னே."** (கலித். 15)

**ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.**

## வஞ்சித் தூக்கு:

**வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே.**

வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல்பிற்று.

தூக்கெனினும் இறுதியெனினும் ஒக்கும். செந்தூக்கெனினும் ஆசிரிய வீறு எனினும் ஒக்கும். செந்தூக் கியற்று என்றமையால் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலுங் கொள்க.

**"தொடியுடைய தோள்மணந்தனன்" என்னும் பாட்டுள்.**

**"இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ**

**படுவழிப் படுகவிப் புக்வெய்யோன் தலையே."** (புறம். 239)

**ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.**

**"பூந்தாமரைப் போதலமர" என்னும் பாட்டுள்.**

**"மகிழு மகிழ்தூங் கூரன்**

**புகழ்த் லானாப் பெருவண் மையனே"**(யாப்.வி.மேற்)

**ஈற்றயலடி முச்சீரான் வந்தது**

**வெண்பா ஈற்றடி முச்சீர்த் தாகும்**

**அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான.**

வெண்பாவிற்கு இறுதியடியும் இறுதிச்சீறும் உணர்த்துதல் நுதலிற்று.

வெண்பாவினீற்றடி மூன்றுசீரையுடைத்தாகும். அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான் வரும்.

**"வானொடு தேன்கலந் தற்றே பணிமொழி**

**வாலெயி லூறிய நீர்"**

நேரீற் றியற்சீர் நிரையும்

சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப.

வெண்பாவினிறுதிச்சீரின் அயற்சீர் நேரீற்றியற் சீராயின் நிரையசையும் நிரைபு அசையுஞ் சீராந்தன்மையும் பெற்று முடியும். இயற்கையையுடையதாகும்.

**“கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**

**தாளை வணங்காத் தலை.”** (குறள். 9)

நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்

வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

வெண்பாவின் ஈற்றயற்சீர் நிரையீற்று இயற்சீராயின் நேரசையும் நேர்பசையும் முடிபாம்.

***”பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி***
***வாலெயி றூறிய நீர் "*** (குறள் 1021)
***“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல***
***தன்றே மறப்பது நன்று"*** (குறள் 108)

என வரும்.

***“வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே”*** (**செய்யுளியல்**.28)

ஈற்றயற்சீர் முதலசையான் வரினும் நேரும் நேர்பும் முடிபாகக் கொள்ளப்படும்.

***“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவ னடிசேரா தார்"*** (குறள்.10)
***“இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்***
***பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"*** (குறள் 5)
என வரும்.

கலிப்பா

எழுசீர் இறுதி யாசிரியங் கலியே.

கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான் வரும் ஆசிரிய முடிபாகும்.

***“தொடங்கற்கட்டோன்றிய” என்னுங் கலியுள்*** (சுரிதகம்.)

***“தொல்கவின் தொலைதல் அஞ்சியென்***

***சொல்வரைத் தங்கினர் காத லோரே”*** (கலித்2)

**ஈற்றயலடி நாற்சீரான் வந்தது**

**வெண்பா இயலினும் பண்புற முடியும்**

கலிப்பா வெண்பாச் சுரிதகமாக முடியும்

**“அறனின்றி அயல்தூற்றும்” என்னும் கலியுள்** (சுரிதகம்)

**“யாநிற் கூறவும் எம்கொள்ளாய் ஆயினை**
**ஆனா திவள்போல் அருள்வந் தவைகாட்டி**
**மேனின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லுங்**
**கானந் தகைப்ப செலவு”** (கலித்.3)

**வெண்பாவினியலான் இற்றது**

## யாப்பு

எழுத்து முதலா ஈண்டிய அடியிற்

குறித்த பொருளை முடிய நாட்டல்

யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

செய்யுளியலில் ஆறாவது உறுப்பாகச் சுட்டப்பெறுவது யாப்பு என்பதாகும். எழுத்து முதலாக அசை, சீர், அடி, என ஈண்டு ஓதப்பட்ட அடியினாற்றான் குறித்த பொருளை இறுதியடியளவு முற்றுப்பெற நிறுத்தல் யாப்பு என்று சொல்லுவர் புலவர்.

யாதானும் ஒருபொருட்கண் பல சொற்றொடுத்து வழங்குங்கால் குறித்த பொருளை முடிக்கவேண்டும் சொல்லே சேர்த்துக் கூறல் வேண்டும் எனவும் அது மிகாமற் குறையாமற் கூறல் வேண்டும் எனவும் இலக்கணங் கூறல் வேண்டும் என தொல்காப்பியர் விளக்குவார்.

## யாப்பு வகைகள்:

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்.

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்

நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்

யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

பாட்டு முதலாக முதுசொல் ஈறாகச் சொல்லப்பட்ட எழுநிலத்தினும், வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழ்நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி யாப்பாவது.

எனவே யாப்பாவது பாட்டுயாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு அங்கத யாப்பு, பழமொழியாப்பு என ஏழுவகைப்படும்.

"குறித்த பொருளை முடிய நாட்டல்"

என்றமையானும் இச்சூத்திரத்துள்

"நாற்பேரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது"

என்று ஓதினமையானும் குறித்த பொருள் முடியுமாறு சொற் றொடுத்தல் என்று கொள்ளப்படும்.

மரபு

**மரபே தானும்**

**நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று.**

மரபு என்பது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழிப்பட்டது என்ற நூற்பா விளக்கும்.

குறித்த ஒரு பொருளை முடியச் சொல் தொடுக்குங்கால் இயற்சொல்லாகிய பெயர் வினை இடை உரியானும் ஏனைத் திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும், எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது மரபாம்.

திரிசொல் மரபாவது தமிழ் நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு.

திசைசொல் மரபாவது செந்தமிழ்சூழ்ந்து பன்னிருநிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொல் மரபாவது திரிந்தவகையாகிய சொல்மரபு

**பாக்களின் ஓசை :**

தூக்கு எனினும் ஓசை எனினும் ஒக்கும்.

**ஆசிரியப்பாவின் ஓசை:**

**அகவ லென்ப தாசிரி யம்மே.**

அகவல் என்னும் ஓசை ஆசிரியத்திற்கு உரியதாம்.

அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி.

**"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த**

**செங்கோல் அம்பின் செங்கோட் டியானை**

**கழல்தொடிச் சேஎய் குன்றங்**

**குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"** (குறுந். 1)

எழுத்தளவு மிகாமல் குறையாமல உச்சரிக்க அவ்வழி நின்ற ஓசையால் ஆசிரியம் வந்தது.

**வெண்பாவின் ஓசை:**

**அ.்.தன் றென்ப வெண்பா யாப்பே**

வெண்பாவிற்கு அகவல் இல்லாத ஓசையாம். இதனைப் பிற நூலாசிரியர் செப்பலோசை என்பர். அகவுதல் என்பது ஒரு தொழில். அத்தொழில் இதன் கண் இல்லாமையின் 'அ.்.தன்று' பொருள்.

**"பொன்னார மாற்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்**

**உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கன்னோ**

**மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்**

**புனல்நாடன் பேரே வரும்"** (முத்தொள். 104)

செப்புதலாகிய ஓசைத்தாகி வந்தது

**கலிப்பாவின் ஓசை:**

**துள்ளல் ஓசை கலியென மொழிப**

துள்ளலோசை கலிப்பாவிற்காம். துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல். கன்று துள்ளினால் போல வரும்

**"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்**

**பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**

**புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்**

**பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்**

**வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி"** (கலித்.11)

ஓசை துள்ளி வந்தமையால் துள்ளலோசை ஆயிற்று

**வஞ்சிப்பாவின் ஓசை:**

**தூங்கல் ஓசை வஞ்சி யாகும்**

தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வரும். இது வஞ்சிப்பாவிற்கு உரியதாம்.

**"சுறமறிவன துறையெல்லாம்**

**இறவீன்பன இல்லெல்லாம்**

**மீன் திரிவன கிடங்கெல்லாந்**

**தேன்தாழ்வன பொழிலெல்லாம் எனத்**

**தண்பணை தழீஇய இருக்கை**

**மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே.”** (யாப்.வி.பக்.63)

**தூங்கல் ஓசை வந்தது**

## மருட்பாவின் ஓசை

**மருட்பா ஏனை இருசார் அல்லது**

**தானிது என்னுந் தன்மை யின்றே**

மருட்பாவிற்கு ஓசை இதுவென்னுந் தன்மை இல்லை அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக வருதலின் இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசை ஆகும்.

**“திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்**

**இருநிலனுஞ் சேவடி யெய்தும் அரிபரந்த**

**போகிதழ் உண்கண் இமைக்கும்**

**ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே.”** (பு.வெ. கைக்கிளை.3)

## பாக்களுக்குரிய மரபு

**அவ்வியல் பல்லது பாட்டாங்குக் கிளவார்.**

மேற் சொல்லப்பட்ட ஓசை வகையா னல்லது பாட்டாங்குக் கூறார்.

பாட்டாங்குக் கூறுதலாவது ஓசை ஒழித்துச் சீருந்தளையும் அடியும்படக் கூறுதல். அவ்வாறு படக் கூறுதலால் பாட்டாங்கு ஆகாதென்பதும் அடியுந்தொடையும் பெறவந்ததாயினும் நூலின்பாற்படுதல் உரையின் பாற்படுதல் என்பதும் கூறியவாறாம்.

**“ஐவகை அடியும் விரிக்குங் காலை**
**மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்**
**எழுபது வகையின் வழுவில வாகி**
**அறுநூற் றிருபத் தைந்தா கும்மே"** (செய்யுளியல்48)
என்பது ஆசிரியப் பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின் மையான் ஆசிரியம் எனப்படாது நூலெனப்படும்.

## தூக்கு

**தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.**
மேல் அதிகாரப்பட்ட தூக்கியலும் வகை சொல்லப்பட்ட நாலுமே ஆகும்

## தொடை:

**மோனை எதுகை முரணே இயைபென**

**நால்நெறி மரபின தொடைவகை என்ப.**

மோனை, எதுகை, முரண், இயைபு நான்கு நெறிப்பட்ட மரபினையுடைய தொடையினது பாகுபாடு ஆகும். இதனை இந் நூற்பா உணர்த்தும்.

## அளபெடைத்தொடை

**அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்.**

அளபெடைத் தொடையோடே கூட ஐந்தென்று சொல்லவும் பெறும்.

## தொடையின் பிறவகைகள்

**பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்**

**அமைந்தவை தெரியின் அவையுமா ருளவே.**

பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை என்பவும் தொடைப் பாகுபாடாம் .

நிரல்நிறை:

**நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்**

**மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.**

நிரலே நிறுத்தியமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும்

நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேரநிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்துதல்.

**காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்**
**வார்புருவத்தால் இடையால் வாய்த்தளிரால் -நேர்தொலைந்த**
**கொல்லி வடிநெடுவேல் கோங்கு அரும்பு வில்கரும்பு**
**வல்லி கவிர்மென் மலர்**

மகளிருடைய மென்மையான சொல்லாலும் கண்ணாலும் ஒளி வீசும் முலையாலும் நீண்ட புருவத்தாலும் இடையாலும் வாயாகிய தளிராலும் முறையே கொல்லி என்னும் பண்ணும் கூர்மை பொருந்திய நீண்ட வேலும் கோங்கினது அரும்பும் மன்மதனது கரும்பு வில்லும் பூங்கொடியும் மென்மையான முருக்க மலரும் அழகு இழந்தன என்று பொருள் கொள்ளுமாறு நிரலே தொடுத்திருப்பது நிரல் நிறைத் தொடையாம்.

## இரட்டைத்தொடை:

இரட்டைத்தொடையாவது ஓரடிமுழுவதும் ஒரு சொல்லேவருதல்.

**“ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்**

**விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்**

**குளக்கொட்டிப் பூவின் நிறம்.”** (யாப்.வி.பக்.180)

இனி,இரட்டைத் தொடை இணைமோனை,கூழைமோனை,மேற்கதுவாய்மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்றுமோனை முதலாயினவும் அந்தாதித் தொடையுங் கூறாதது என்னையெனின். **“தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்”** என வருகின்ற சூத்திரங் கூறுகின்றாராதலின், அச்சூத்திரத்தின்காறும் பாட்டிற் இன்றியமையாத தொடையுணர்த்தினாரென்று கொள்க என்பார் இளம்பூரணர்,

## மோனைத்தொடை

**அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை.**

அடிதோறும் தலையெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத்தொடை

எனப்படும்.

**“மாவும் புள்ளும் வதிவயின் படர**

**மாநீர் விரிந்த பூவுங் கூம்ப**

**மாலை தொடுத்த கோதையுங் கமழ**

**மாலை வந்த வாடையும்**

**மாயோய் நின்வயின் புறத்திறுத் தற்றே”**

## எதுகைத்தொடை:

**அ.்.தொழித் தொன்றின் எதுகை ஆகும்.**

அடிதொறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்து ஒன்றின் எதுகை யாகும்.

**“அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்**

**கடியவே கனங்குழா அய் காடென்றார் அக்காட்டுள்**

**துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்**

**பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே.”**

## சிறப்பு விதி

**ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.**

மோனைத் தொடைக்கும் எதுகைத் தொடைக்கும் எடுத்த எழுத்தே வருதலன்றி வருக்கவெழுத்தும் உரியதாகும்.

**“பகலே, பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்**

**பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய**

**பின்னுப்பிணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்**

**பீரங்கப் பெய்து தேம்படக் கருதி”** (யாப். வி. ப. 135)

வருக்கமோனை.

**“ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து**

**தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்**

**கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி**

**மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேள்இனி”** (கலி- கடவுள் வாழ்த்து)

வருக்கவெதுகை

முரண்தொடை

**மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.**

அடிதொறும் வந்த சொல்லினாலோ பொருளினானாலோ முரண்படத்தொடுப்பது அடி முரண் தொடையாம்.

சொல்முரணாவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை பொருள்முரணாவது மாறுபாடுடைய பொருளைச் சொல்வது.

**“இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை**

**பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்.”** (யாப்.வி.ப.146)

இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருள்முரண் ஆயிற்று.

**“சிறுகுடிப் பரதவர் மடமகள்**

**பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே.”** (யாப்.வி.ப.146)

என்றவழிக் குடியுங் கண்ணு மாகாது சிறுமைபெருமை என்னும் சொல்லே மாறுகோடலிற் சொன்முரணாயிற்று.

## இயைபுத்தொடை

**இறுவாய் ஒப்பின.ஃ. தியைபென மொழிப.**

அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அ.ஃ.து இயைபுத்தொடை ஆகும்.

**“இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே**

**நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே**

**ஆடமைத் தோளி கூடலும் அணங்கே**

**அரிமதர் மழைக்கணும் அணங்கே**

**தருநுதற் பொறித்த திலதமும் அணங்கே.”** (யாப்.வி.ப.153)

அசை சீரென வரையாது கூறினமையான் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாம்.

## அளபெடைத் தொடை

**அளபெழின் அவையே அளபெடைத் தொடையே.**

அடிதொறும் அளபெழுத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம்.

**“ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்**

**தாஅம் இதற்பட்டது.”** (குறள்.1176)

## பொழிப்பு:

**ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்**

**பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே.**

ஒரு சீரிடை யிட்டு எதுகையிற் பொழிப்புத் தொடையாம்

எதுகையென ஓதினார் ஆயினும் ‘வந்தது கொண்டு வாராதது முடித்தல்’ என்பதனான் மோனை இயைபு முரண் அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் என்று கொள்ளப்படும்.

**“அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி”** (யாப்.வி.ப.130)

பொழிப்பு மோனை.

**“பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி.”** (யாப்.வி.ப.134)

பொழிப்பெதுகை.

**“சுருங்கிய நுசுப்பிற் 3பெருகுவடந் தாங்கி.”** (யாப்.வி.ப.147)

பொழிப்பு முரண்.

**“கடலே, கானலங் கழியே கைதையந் துறையே.”**

பொழிப்பியைபு.

**“பூஉங்குவளைப் போஒ தருந்தி.”** (யாப்.வி.ப.158)

பொழிப்பளபெடை.

**ஒரூஉ:**

**இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப.**

இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடை எனப்படும்.

**அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி.”** (யாப்.வி.ப.130)

ஒரூஉ மோனை.

**“மின்னிவர் ஒளிவடந் தாங்கி மன்னிய.”** (யாப்.வி.ப.134)

ஒரூஉ வெதுகை.

**“குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து.”** (யாப்.வி.ப.147)

ஒரூஉ முரண்.

**“நிழலே இனியதன் அயலது கடலே.“** (யாப்.வி.ப.153)

ஒரூஉ வியைபு

**“காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்.”** (யாப்.வி.ப.158)

ஒரூஉ அளபெடை.

## செந்தொடை:

சொல்லிய தொடையொடு வேறுபட் டியலின்

சொல்லியற் புலவர்அது செந்தொடை என்

தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம்.

**பூத்த வேங்கை வியன்சினை ஏறி**

**மயிலினம் அகவும் நாடன்**

**நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.”** (யாப்.வி.ப.179)

## தொடைவிரி:

**மெய்பெறு மரபின் தொடைவகை தாமே**

**ஐயீ ராயிரத் தாறைந் நூற்றொடு**

**தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்**

**றொன்ப.ஃ. தென்ப உணர்ந்திசி னோரே**

தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்தறு நூற்றுத்தொண்ணூற்று ஒன்பது ஆகும்.

அவையாவன: மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு. இதன்கிளையெழுத்து ஒரோவொன்றிற்குப் பதினொன்றுளவாகலின் அவற்றை உறழ. நூற்று முப்பத்திரண்டாம். “கதநபம“ என்பவற்றை உயிர் பன்னிரண்டோடுறழ அறுபதாம் அவ்வறுபதையும் முதற்றொடையாக்கிக் கிளையெழுத்தோடுறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது அவற்றைக் கிளையெழுத்தோடுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலாகெழுத்து எட்டு அவற்றைக்

கிளையெழுத்தோடுறழ ஐத்பத்தாறாம். யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று கிளையெழுத்தில்லை. ஞகரத்தின் முதலாகெழுத்து மூன்று அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஆறாம். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்றுமூன்றுங் கிளையெழுத்துத் தொளாயிரத்திருபத்தாறும் ஆக மோனைத்தொடை ஆயிரத்தொருபத் தொன்பதாம்.

எதுகைத்தொடை: உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர் மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இரு நூற்றுநாலினையுங் கிளையெழுத்தினோடு உறழ இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டாம் இதனொடு ஒற்றுப் பத்தொன்பதுாங் குற்றுகரம் ஆறுங் கூட்ட எதுகைத்தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்துமூன்று பாகுபாடாம்.

முரண்தொடை: இது சொல் முரண், பொருள் முரண் என இரண்டாகும்.

இயைபுத்தொடை: உயிரெழுத்து மொழியீற்றின்கண் உயிர் மெய்யாகி வருதலின் அவையாகா உயிர்மெய் இருநூற்றொருபத்தாறில் இறுதிக்கண் வாராத ஙகரவுயிர்மெய் பன்னிரண்டும் அகரம் பதினேழும் இகரம் பதினாலும் உகரம் இரண்டும் எகரம் ஒன்றும் ஒகரம் ஒன்றும் இவை ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞணநமனயரலவழள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் குற்றுகரவீறு ஆறும் ஆக இயைபுத் தொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம்.

அளபெடைத்தொடை: மொழிமுதலாகு முயிரளபெடை ஏழு. கதநபம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து. சகர அளபெடை ஐந்து, வகர அளபெடைஐந்து, யகர அளபெடை இரண்டு, இவை ஐம்பத்துநான்கில் உயிரளபெடை தனிநிலையாம் , ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனவுறழ நூற்றுநாற்பத்தொன்றாம் . ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் மகரமும் ழுகரமும் ஒழித்து ஏனைய பதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம் . இவ்வகையினான் அளபெடைத் தொடை நூற்றைம்பத்தொன்பது வகையாம்.

இவ்வகையினோடு இத்தொடை மூவாயிரத் தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம்.

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது.

மோனைப்பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று, எதுகைப்பொழிப்பு இருநூற்றிருபத் தொன்பது முரண்பொழிப்பு இரண்டு, இயைபுப்பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்தெட்டு, இவையெல்லாங் கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்து நூலு வகையாம்.

ஒரூஉத்தொடையும் இவ்வகையினால் அறுநூற்றைம்பத்து நாலாம்.

இனிச் செந்தொடையாமாறு மொழிமுதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன்று. மற்றையடியினு மொத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனை யெழுத்துத் தொண்ணூற்றிரண்டோடும் உறழ எண்ணாயிரத்தைந் நூற்றைம்பத்தாறு வகையாம்.இவ்வகையினால் தொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம்.

## சிறப்பு விதி

**தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்**

மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும்

அவையாவன: மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப்புணரென வேறுபடுத் துறழ்ந்தும், எழுத்தந்தாதி அசையந்தாதி சீரந்தாதி, அடியந்தாதி எனவும், உயிர் மோனை உயிரெதுகை நெடில்மோனை நெடிலெதுகை வருக்கமோனை வருக்க எதுகை இனமோனை இனவெதுகை ஆசெதுகை எனவும், மூன்றாமெழுத்தொன்றெதுகை இடையிட்டெதுகை எனவும், இவ்வாறுவருவனவற்றை மேற்கூறிய வகையினான் எழுத்து வேறுபாட்டினால் உறழவும், நிரனிறையாகிய பொருள்கோள் வகையானும் ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும், வரம்பிலவாகி விரியும்

## தொடை மரபு

**தொடைநிலை வகையே யாங்கென மொழிப**

எழுத்தாலும் சொல்லாலும் பொருளாலும் வேறுப்படும்.

## நோக்கு.

**மாத்திரை முதலாஅடிநிலை காறும்**

**நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.**

மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும்.

காரணமெனினுங் கருவியெனினும் ஒக்கும்.

அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிதுநோக்காது அது தன்னையே நோக்கி நிற்கு நிலை. அடிநிலை காறும் என்றதனால் ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒருநோக்காக ஓடுதல், பல நோக்காக ஓடுதல், இடையிட்டு நோக்குதல் என மூன்றுவகைப்படும்.

**“அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**

**மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச**

**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்**

**றுண்டாக வைக்கற்பாற் றன்று.”** (நாலடி.1)

இஃது ஒருநோக்காக ஓடிற்று.

**பாவகை:**

**ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென**

**நாலியற் றென்ப பாவகை விரியே.**

பா என்பது ஆசிரியப்பா,வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என நான்கு இயல்பினையுடைத்தாகும்.

## பாவும் பாடுபொருளும்

**அந்நிலை மருங்கின் அறமுத லாகிய**

**மும்முதற் பொருட்கும் உரிய வென்ப.**

அப் பாக்கள் நான்கும் பொதுப்பட நின்றவழி அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று முதற் பொருட்கும் உரியவாகும்.

முதற்பொருள் என்றது பாகுபாடல்லாத பொதுமைகுறித்த பொருள். சில பொருள்களை எடுத்து விளக்குகின்றானாதலின் இவ்வாறு கூறப்பட்டது. அப்பொருட்கண் உரியவாகியவாறு என்பார் சான்றோர்

## தொகை வகை

**பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்**
**ஆசிரி யப்பா வெண்பா என்றாங்**
**காயிரு பாவினுள் அடங்கும் என்ப.**

மேற்சொல்லப்பட்ட நான்கு பாவும் ஆசிரியப்பா வெண்பா என இரண்டனுள் அடங்கும்.

## இயலுந் திறம்

**ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை**
**வெண்பா நடைத்தே கலியென மொழிப.**

ஆசிரியம் போன்ற நடையை உடையது வஞ்சி ஆகும். வெண்பாப் போன்ற நடையை உடையது கலிப்பா ஆகும்.
நடையென்றது அப் பாக்கள் இயலுந் திறம்.

## வாழ்த்தியல் வகை:

**வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே.**

வாழ்த்தியலின்வகை நான்குபாவிற்கும் உரித்தாகும்.

வகையென்றது தேவரை வாழ்த்தலும் முனிவரை வாழ்த்தலும் ஏனையோரை வாழ்த்தலும் ஆகும்.

புறநிலை வாழ்த்து:

**வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**

**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**

**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**

**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.**

வழிபடு தெய்வம் நின்னைப் புறங்காப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தொடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து, கலிப்பாவகையினும் வஞ்சிப்பா வகையினும் இது வராது.

எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் இவையிரண்டும் புணர்ந்த மருட்பாவினும் வரப்பெறும் என்பதாகும்

வாயுறை வாழ்த்து அவையடக் கியலே செவியறி வுறூஉ

வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே

செவியறி வுறூஉஎன அவையும் அன்ன

வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறுத்தற் பொருளுங் கலியிலும் வஞ்சியினும் வராது. எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் மருட்பாவினும் வரும்.

**வாயுறை வாழ்த்து:**

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்

வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்

தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று

ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

வாயுறை வாழ்த்தபாவது வேம்பினையுங் கடுவினையும் போல வெஞ்சொல் அடக்காது பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாவல் மொழியால் மெய்யறிவித்தல் ஆகும்.

**"இருங்கடல் உடுத்த இப் பெருங்கண் மாநிலம்**

**இன்னா வைகல் வாரா முன்னே**

**செய்ந்நீ முன்னிய வினையே**

**முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே." (புறம்.363)**

**அவையடக்கியல்**

அவையடக் கியலே அரில்தபத் தெரியின்

வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்

றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

அவையடக்கியல் என்பது அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல்வேண்டும் என எல்லா மாந்தர்க்குந் தாழ்ந்துகூறல் என்பதாகும்.

**செவியறிவுறூ :**

செவியுறை தானே,

பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்

அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே.

செவியுறையாவது பெரியோர் நடுவுள் வெருடலின்றித் தாழ்ந்தொழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்துதல் ஆகும்.

“அறிமினறநெறி...பெரியார்வாய்ச்சொல்.” (நாலடி,172)

இத்துயையும் பாக்கட்குரிய பொருளுணர்த்தியது.

### ஒத்தாழிசை, மண்டிலம் - அடிவரையறை:

**ஒத்தா ழிசையும் மண்டில யாப்புங்**

**குட்டமும் நேரடிக் கொட்டின வெண்ப.**

ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின் கண் நிலைமண்டிலம் அடிமறி மண்டலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின ஆகும்.

மேல் ஆசிரியப்பாவின் ஈற்றயலினும், இடையினும், முச்சீரும் இருசீரும் ஐஞ்சீரும் அறுசீரும் வரும் என்றதனானே, எல்லாவடியும் ஒத்து வருவனவும் உளவென மண்டிலம் கூறவேண்டியதாயிற்று.

கலிப்பாவிற்குச் சுரிதகம் ஈற்றடி முச்சீரானும் ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்றமையால், தாழிசையுந் தரவும் நாற்சீரானல்லது பிறவாற்றான்வாராவெனக் கூறல் வேண்டியதாயிற்று. குட்டமெனினும் தரவெனினும் ஒக்கும்.

இனிக்கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் முச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஒருசீரானும் வருதலானும் வேறு ஓதவேண்டிற்று.

### குட்டம்:

**குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்.**

தரவு ஈற்றயலடி முச்சீரான் வரவும்பெறும்.

எருத்தடி உடைத்தென்றதனானே ஈற்றயலடி முச்சீர் எனப் பொருள் படுமோ எனின். ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீரான்வருதல் பெரு வழக்காதலானும் இனிவருகின்ற சூத்திரம் தூக்கியலென ஓதுகையானும் இவ்வாறு பொருள்படுமென்று கொள்க.

இன்னும் குட்டம் என்பதனைத் தரவு கொச்சகமாகிய கொச்சக வொருபோகிற்குப் பெயராக வழங்கினும் அமையும். அவ்வழி ஒத்தாழிசை என்பதனை ஒத்தாழிசையெனத் தரவெனத் தரவையுங் கூட்டிப் பொருளுரைக்கப்படும்.

### மண்டிலம் குட்டம் ஓசை:

**மண்டிலங் குட்டம் என்றிவை இரண்டும்**

**செந்தூக் கியல என்மனார் புலவர்.**

மண்டிலமாகக் கூறப்படும் பாவும் குட்டமெனக் கூறப்படும் பாவும் அகவலோசை உடையன ஆகும்.

நான்கு பாவினும் வெண்பாவுங் கலிப்பாவும் முன்னெடுத் துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும் அவையிற்றிற்கு உதாரணம் ஈண்டே காட்டுதும். ஆசிரியப்பாவாவது பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய வுரிச்சீரானும் ஆசிரியத்

தளையானும் அகவ லோசையானும் நாற்சீரடியானும் சிறுபான்மை ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வரும்

**“அகவல் இசையன அகவல் மற்றவை**

**ஏ ஈஆ. என் ஐ என் றிறுமே”** (யாப்.வி.)

என்று வரைந்தோதினார் உளரால் எனின்

**“கோள்மா கொட்குமென் றஞ்சுவல் ஒன்னார்க்**

**கிருவிசும்பு கொடுக்கும் நெடுவேல் வழுதி**

**கூடல் அன்ன குறுந்தொடி அரிவை**

**ஆடமை மென்றோள் நசை நாடொறும்**

**வடியைமை எஃகம் வலவயின் ஏந்திக்**

**கைபோற் காந்தட் கடிமலர் கமழும்**

**மைதோய் வெற்பன் வைகிருள் வருமிடம்"** (யாப்.வி.மேற்.)

எனப் பிறவாற்றானும் வருதலின் ஈறு வரையறுக்கப்படாதென்று கொள்க இனி இவ்வாசிரியப் பாவினை அடிநிலையாற் பெயரிட்டு வழங்கப்படும்

### ஆசிரியப்பாவின் இலக்கணமும் வகைகளும்.

ஆசிரியப்பாவாவது பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும் வரும் நேரோன்றிய ஆசிரியத்தளையும் நிரையொன்றிய ஆசிரியத்தளையும் பயின்று வரும். அகவலோசை பெற்று வரும்.சிற்றெல்லை மூன்றடியாகவும் பேரேல்லை ஆயிரம் அடியாகவும் அமையும். குறளடி முதல் கழிநெடிலடி வரையிலான ஐவகை அடியும் பயின்று வரும். ஈற்றயலடி முச்சீராய் அமையும். இனி இவ் ஆசிரியப்பா அடிநிலையாற் பெயரிட்டு வழங்கப்படும்.

### நேரிசை ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசையாசிரியப்பா எனப்படும்.

**“முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே**
**மலையன் ஒள்வேற் கண்ணி**
**முலையும் வாரா முதுக்குறைந் தனளே"** (யாப்விமேற்122)

## இணைகுறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்கள் கொண்ட அளவடியாய் இருக்க இடையிடை முச்சீர் வரின் இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

**"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்**

**சாரச் சார்ந்து தீரத் தீரும்**

**சாரல் நாடன் கேண்மை**

**சாரச் சாரச் சார்ந்து**

**தீரத் தீரத் தீர்பொல் லாவே."** (யாப்.வி.ப.257)

## நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று எல்லா அடியும் ஒத்துவருவது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

**"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**

**சாரல் நாட செவ்வியை யாகுமதி**

**யார.்.தறிந்திசி னோரே சாரற்**

**சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**

**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."** (குறுந்.18)

## அடிமறிமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் மாறுபடாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்.

**"சூரல் பம்பிய சிறுகான் யாறே**

**சூரா மகளிர் ஆரணங் கினரே**

**வாரல் எனினே யானஞ் சுவலே**

**சாரல் நாட நீவர லாறே."** (யாப்.வி.ப.259)

இதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் மாறுபடாது வருதலின் அடிமறியாயிற்று.

இனி முச்சீரடி முதலாக அறுசீரடி யீறாக மயங்கிய ஆசிரியத்தினை அடிமயங்காசிரியம் எனவும் வெண்பாவடி மயங்கிய ஆசிரியத்தினை வெள்ளடிமயங்காசிரியம் எனவும், வஞ்சியடி மயங்கிய ஆசிரியத்தினை வஞ்சி அடிமயங்காசிரியம் எனவும் வழங்குவர்.

**"சிறியகட˙ பெறினே யெமக˙....தவப்பலவே." (புறம்.235)**

இப்பதினேழடியாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான் வந்தன. மூன்றாமடி முதலாக ஆறாமடி யீறாக நான்கடியும் பதினாலாமடியும் ஐஞ்சீராண் வந்தன. இரண்டாமடியும் பதினொன்றாமடியும் அறுசீரான் வந்தன. ஏனைய நாற்சீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியம்ஆயிற்று.

**"எறும்பி அளையிற் குறும்பல் சுனைய**

**உலைக்கல் லன்ன பாறை யேறிக**

**கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்**

**கவலைத் தென்ப அவர் தேர்சென்ற வாறே**

**அதுமற் றவலங் கொள்ளாது**

**நொதுமலர்க் கலிழுமிவ் அழுங்க லூரே."**(குறுந்.12)

இதனுள் முதலடி இயற்சீர் வெள்ளடியாதலின் வெள்ளடி விரவிய ஆசிரியம் எனப்படும்.

## வஞ்சிப்பாவின் இலக்கணமும் வகைகளும்

இனி வஞ்சிப்பா ஆவது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச்சீரானும் வரும். குறளடியானும் சிந்தடியானும் வரும். வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்து. பேரேல்லை ஆறெழுத்து. தூங்கலோசையால் வரும். தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறும் அசையே கூனாய் வரும். இப்பா இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இருவகைப்படும்.

**இருசீரடி வஞ்சிப்பா:**

**"பூந்தாமரை போதலமரத்**

**தேம்புனலிடை மீன்திரிதரும்**

**வளவயலிடைக் களவயின்மகிழ்**

**வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்**

**மனைச்சிலம்பிய மணமுரசமும்**

**வயற்கம்பலைக் கயலார்ப்பவும் , நாளும்**

**மகிழின் மகிழ்தூங் கூரன்**

**புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே".** (யாப்.வி.பக்.336)

இது குறளடியான் வந்து தனிச்சொல் பெற்று ஈற்றயலடி முச்சீரான் வந்தது. ஆசிரியச் சுரிதகத்தால் இயற்ற இருசீரடி வஞ்சிப்பா.

### முச்சீரடி வஞ்சிப்பா:

**"கொடிவாலன கருநிறத்தன குறுந்தாளன**

**வடிவாளெயிற் றழயலுளையன வள்ளுகிரன**

**பணையெருத்தின் இணையரிமான் அணையேறித்**

**துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி**

**எயில்நடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்**

**பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன் , புணையெனத்**

**திருவுறு திருந்தடி திசைதொழ**

**வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே.”** (யாப்.வி.பக்.337)

இது முச்சீரடி வஞ்சிப்பா.

## வெண்பாவின் இலக்கணமும் வகைகளும்

வெண்பா யாப்பாவது, வெண்சீரானும் இயற்சீரானும் வரும். ஏனைய சீர்கள் வாராது. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும். அளவடியால் அமையும். ஈற்றடி சிந்தடியாகவும் ஈற்றுச் சீர் ஓர் அசை சீராகவும் அமையும். நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான்அமையும். சிற்றெல்லை இரண்டடி. பேரெல்லை பன்னிரெண்டு அடி. செப்பலோசை பெற்று வரும்.

**நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே**

**கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ**

**டொத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.**

நெடுவெண்பாட்டு முதலாக அங்கதச்செய்யுள் ஈறாகச் சொல்லப்பட்டவையும். அளவொத்தவையும் எல்லாம் வெண்பாயாப்பினை யுடையன ஆகும். இவையெல்லாம் ஓசையான் ஒக்குமாயினும் அளவானுந் தொடையானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்திக் குறியிடுகின்றார் தொல்காப்பியர்.

### நெடுவெண்பாட்டு

நெடுவெண்பாட்டாவது அளவடியில் நெடிய பாட்டு. பன்னிரெண்டு அடி பேரல்லை உடையது.

### குறுவெண்பாட்டு

குறுவெண்பாட்டாவது அளவடியில் குறிய பாட்டு. குறுவெண்பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வரும்.

### கைக்கிளை - அங்கதம்

கைக்கிளை என்பதும் அங்கதம் என்பதும் பொருளால் ஆகிய பெயர்.

### பரிபாட்டு

பரிந்த பாட்டாம். அதாவது ஒருவெண்பாவாக வருதலின்றிப் பலவுறுப்புக்களோடு தொடர்ந்து ஒருபாட்டாகி முற்றுப்பெறுவது. “ஒத்தவை”என்பது அளவானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத சமநிலை வெண்பாக்களாம். அவையாவன நான்கடியான் வருவன.

தொல்காப்பியர் நான்கினை அளவென்றும் ஏறினவற்றை நெடிலென்றும் குறைந்தவற்றைக் குறள் சிந்து என்றும் வழங்குவார். ஆதலின் இவற்றுள் பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் சமநிலை வெண்பாட்டும் என மூவகையானும் வரும்.

## குறள் வெண்பா:

இரண்டடியும் ஒரு தொடையான் வருவது. இது குறள் வெண்பா, விகற்பக் குறள் வெண்பா என இரு திறப்படும்

**“அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**

**பொறுத்தானோ டூர்ந்தான் இடை,”** (குறள். 37)

இரண்டடியும் ஒரு தொடையான் வருதலின் குறள்வெண்பா.

**“உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்**

**கச்சாணி அன்னார் உடைத்து.”** (குறள். 667 )

விகற்பத்தொடையான் வருதலின் விகற்பக்குறள் வெண்பா.

## சிந்தியல் வெண்பா:

மூன்றடியான் வருவதனைச் சிந்தியல் வெண்பா எனவழங்கப்படும். இது இன்னிசைச் சிந்தியல் வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா என இரு திறப்படும்.

**“நறுநீல நெய்தலும் கொட ்டியுந் தீண்டப்**

**பிறர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி**

**பறநாட்டுப் பெண்டிர் அடி.”**

ஒத்து ஒருதொடையான் வந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பாவாம்.

**“சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய.**

**யானைக்கு நீத்துமுயற்கு நிலையென்ப**

**கானக நாடன் சுனை.**

வேறுபட்ட தொடையான் வருதலின் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

## நேரிசை வெண்பா

இனி நான்கடியான் வருவன சமநிலை வெண்பா எனப்படும். அவற்றுள் இரண்டாமடியின் இறுதிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வருவனவது நேரிசை வெண்பா எனப்படும்.

**“அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**

**மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்**

**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்**

**றுண்டாக வைக்கற்பாற் றன்று"** (நாலடி.)

இது நேரிசை வெண்பா)

## இன்னிசை வெண்பா

இரண்டாமடியின் இறுதிக்கண் ஒருஉத்தொடை பெறாது வருவனவற்றை இன்னிசை வென்பா என வழங்கப்படும். ஒரூஉத்தொடை வருக்க வெதுகை ஆகியும் வரும்.

**"கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை**

**எல்லுறு போழ்தின் இனிய பழங்கைக்கொண்**

**டொல்லொலை யோடு மலைநாடன் தன்கேண்மை**

**சொல்லச் சொரியும் வளை.** (கைந்நிலை)

இன்னிசை வெண்பா

**"வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை**

**அளந்தன போகம் அவரவர் ஆற்றான்**

**விளங்காய் திரட்டினார் இல்லை – களங்கனியைக்**

**காரெனச் செய்தாரும் இல்."**(நாலடி. 103)

நான்கடியாயும் மூன்றாமடிக்கண் தனிச்சொற் பெற்று வருதலின் நேரிசைப்பாற் படும்.

## ப.்.றொடை வெண்பா

ஐந்தடி முதற் பன்னிரண்டடிகாறும் வருவன ப.்.றொடை வெண்பா எனப்படும்.

## நேரிசைப் ப.்.றொடை

ஒரூஉத்தொடை பெற்று வருவனவது நேரிசைப் ப.்.றொடை எனப்படும்.

**"பன்மாடக்கூடல் மதுரை நெடுந்தெருவில்**

**என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்**

**பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக**

**கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை**

**யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்**

**திருத்தார்நன் றென்றேன் தியேன்."** (யாப். வி.பக். 237)

ஆறடியான் வந்து ஒரூஉத்தொடை பெறுதலின் நேரிசைப் ப.்.றொடை வெண்பா.

## இன்னிசைப் ப.்.றொடை

ஒரூஉத்தொடையின்றி வருவனவற்றை இன்னிசைப் ப.'.றொடை எனவும் வழங்கப்படும்.

**"சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேற்**

**கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்**

**தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்**

**வேற்றுமை இன்றியே யொத்தன மாவேடர்**

**ஆற்றுக்கா லாட்டியர் கண்"** (யாப். வி. பக். 236)

இது இன்னிசைப் ப.'.றொடை.

## கைக்கிளைவெண்பா

கைக்கிளை என்பது கைக்கிளைப் பொருண்மை. மேற்சொல்லப்பட்ட வெண்பாக்கள் இப்பொருள்மேல் வரிற் கைக்கிளைவெண்பா எனப்படும்.

**"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்**

**உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்- கன்னோ**

**மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்**

**புனல்நாடன் பேரேவரும"**. (யாப்.வி.பக்.62)

கைக்கிளை வெண்பாயாப்பினால் வரும் எனவே, ஆசிரியப் பாவினால் வரப்பெறா தென்பதும், வந்ததேயாயினும் பாடாண்பாட்டுக் கைக்கிளையாகும் எனவும் கொள்ளப்படும்.

## கைக்கிளை

**கைக்கிளை தானே வெண்பா வாகி**

**ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.**

கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினால் வருதலின்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வரும். இவ்வாறு வருவதனை மருட்பா என்பர்.

**"மருட்பா ஏனை இருசார் அல்லது**

**தானிது என்னுந் தன்மை இன்றே"**. (தொல். செய். 81)

**"உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன**

**கரவரு காமங் கனல இரவெதிர**

**முள்ளெயி றிலங்கு முகிணகை**

**வெள்வளை நல்காள் வீடுமென் உயிரே”.** (பு. வெ. கைக்கிளை.-9)

**பரிபாடல்:**

**பரிபா டல்லே தொகைநிலை வகையின்**

**இதுபா என்னும் இயனெறி இன்றிப்**

**பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.**

பரிபாடலாவது தொகைநிலைவகையால் பா இது என்று சொல்லப்படும். இலக்கணம் இன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரித்தென்று சொல்லுவர். பொதுவாய் நிற்றல் என்பது

**ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென**

என்றோதப்பட்ட எல்லாப் பாவின் உறுப்பும் உடைத்தாதல்.

**பரிபாடல் உறுப்புகள்:**

**கொச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்தொ**

**செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்**

**காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.**

மேற்சொல்லப்பட்ட பரிபாடல் பாட்டுப் பொதுவாய் நிற்றலேயன்றிக் கொச்சகமும் அராகமும் சுரிதகமும் எருத்தும் என்று சொல்லப்பட்ட நான்குந் தனக்குறுப்பாகக் காமங் கண்ணிய நிலைமையை உடைத்தாய் வரும்.

எனவே, அறத்தினும் பொருளினும் வாராதாம்.

**“வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே.** (தொல்.செய்.105)

எனச் சிறப்புவிதி ஓதினமையால் நான்கு பாவினும் பரிபாடல் வெண்பாயாப்பிற்றாதலிற்கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறும். கொச்சகமென்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும் ஆசிரியவடி. வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி, முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகை யடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி வியலாற் வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது. இதனுள்

**“சொற்சீரடியும் முடுகியல் அடியும்**

**அப்பா நிலைமைக் குரிய வாகும்.”** (செய்யுளியல்.118)

என வேறு ஓதுதலின், ஏனைநான்குங் கொச்சகப் பொருளாகக் கொள்ளப்படும்.

**“தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்**

**ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்**

**வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்**

**பாநிலை வகையே கொச்சகக் கலியென**

**நூல்நவில் புலவர் நுவன்றறைந்தனரே.** (செய்யுளியல்.148)

என்றாராகலின். இவ்விலக்கணத்தானே பரிபாடலுட் கொச்சகம் வரும்வழித் தரவுஞ் சுரிதகமும் இடையிடை வருதலுங்கொள்க ."வெண்பா வியலான் என்றதனால் தன்தளையானும் பிறதளையானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவெல்லாங் கொள்க.

அராகமென்பது ஈரடியானும் பலவடியானுங் குற்றெழுத்து நெருங்கி வரத் தொடுப்பது . பெருமைக்கெல்லை ஆறடி.

சுரிதகம் என்பது ஆசிரிய இயலானாதல் வெண்பா இயலானாதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்துநிற்பது.

எருத்தென்பது இரண்டடி இழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோ ருறுப்பு. பாட்டிற்று முகம் தரவாதலானுங் கால் சுரிதகமாதலானும் இடைநிலைப் பாட்டாகிய தாழிசையுங் கொச்சகமு மராகமுங் கொள்ளக் கிடத்தலின் எருத்தென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டுமாதலான் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க.

பரிபாடலில் மலையும் ஆறும் ஊரும் வருணிக்கப்படும்.

**"அதுதான், மலையே யாறே யூரென் றிவற்றின்**

**நிலைபெறு மரபி னீங்கா தாகும்."**

என்றாராகலின், இனிச் சுரிதகமின்றியும் பரிபாடல் முற்றுப்பெறும்.

## பரிபாடலுக்கு உரிய அடி:

**சொற்சீ ரடியும் முடுகிய லடியும்**

**அப்பா நிலைமைக் குரிய வாகும்.**

சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்கு உரியவாகும். முடுகியலாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானுங் குற்றெழுத்துப் பயிலத்தொடுப்பது.

## கட்டுரை

**கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து**

**முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்**

**ஒழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்.**

**சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.**

கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்பட்டு வருவது. எண்ணென்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற் பலவாகியும் வருதல். பலவருதலின் எண்ணென்றார்.

முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும் என்பது நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் வருதல்.

"ஒழியசையாகியும்" என்றது ஒழிந்த அசையினை யுடைத்தாகியும் என்றவாறு.

எனவே இறுதிச்சீர் ஒன்றும் இரண்டும் அசை குறையப்பெறும் என்றவாறாம்.

வழியசை புணர்த்தலாவது ஒரு சீரின்கண்ணே பிறிதொருசீர் வரத் தொடாது ஓரசைவரத் தொடுப்பது.

சொற்சீர்த்திறுதல் என்பது சொற்றானே சீராந்தன்மையைப் பெற்று நிற்றல்.

சொற்சீர்க்கியல்பே என்றது இப்பெற்றியை யுடைத்துச் சொற் சீரின தியல்பு என்றவாறு.

இவ்விலக்கணம் பரிபாடற் செய்யுட்கண் வருமாறு

"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலைத்''

எனத்தொடங்கும்பாடல் ஆகும்

## அங்கதத்தின் இரு வகை:

**அங்கதந் தானே அரில்தபத் தெரியிற்**

**செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.**

அங்கதப்பாட்டு பன்னிரெண்டடி அடி பேரெல்லையாகக் கொண்டது,

அங்கதமாவது குற்றமற ஆராயிற் செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என்று இருவகைப்படும்.

## செம்பொருள் அங்கதம்:

**செம்பொரு ளாயின வசையெனப் படுமே.**

செம்பொருளங்கதம் வசையெனப் பெயர்பெறும்

## பழிகரப்பு அங்கதம்:

**மொழிகரந்து மொழியின் அது பழிகரப் பாகும்.**

தான்மொழியும் மொழியை மறைத்து மொழியின் அது பழிகரப்பெனப் பெயர்பெறும்.

## செய்யுள்

**செய்யுள் தாமே இரண்டென மொழிப.**

செய்யுள் இருவகைப்படும்.

## செவியுறைச் செய்யுள்

**புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்**

**செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்..**

புகழொடும் பொருளொடும் புணரவரின் அதைச் செவியுறைச் செய்யுள் என்று சொல்லுவர்.

## அங்கதச் செய்யுள்

**வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்**

**அங்கதச் செய்யுள் எண்மனார் புலவர்.**

வசையொடும் நசையொடும் புணர்ந்த செய்யுள் அங்கதச  செய்யுள் எனப்பெயர் பெறும்.

## கலிப்பாவின் வகைகள்:

**ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே**

**கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே.**

கலிப்பா ஒத்தாழிசைக் கலி, கலிவெண்பாடடு, கொச்சகக்கலிப்பா, உறழ்கலியும் என நான்கு வகைப்படும்.

## ஒத்தாழிசைக் கலிப்பாவின் வகை:

**அவற்றுள்,**

**ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும்.**

ஒத்தாழிசைக்கலி இரண்டு வகைப்படும்.

**இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென**

**நடைநவின் றொழுகும் ஒன்றென மொழிப.**

தாழிசையும் தரவும் சுரிதகமும் அடைநிலைக் கிளவியும் என நான்கு உறுப்பினை யுடைத்து ஒத்தாழிசைக் கலி என்பதாம்..

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனக் கிடக்கை முறையாற் கூறாது தாழிசை முற்கூறிய வகையான் இப்பாவிற்கும் ஒத்தாழிசை கிறந்ததாதலின்  முற்கூறினார். முற்கூறுகின்றவழியும் இடை நிலைப்பாட்டு எனக் கூறுதலின் முந்துற்றது தரவு என்றவாறாகும். இடைநிலைப் பாட்டு எனினும் தாழிசை எனினும் ஒக்கும். போக்கெனினும் சுரிதகம் எனினும் வாரம் எனினும் அடக்கியல் எனினும் ஒக்கும். அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும். தனிச்சொல்லைப் பின் எண்ணிய அதனான் தாழிசை தோறும் தனிச்சொல் வரவும் பெறும்.

### தரவு அடியெல்லை

**தரவே தானம் நாலடி யிழிபாய்**

**ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.**

தரவு நாலடி இழிபாகப் பன்னிரண்டடி உயர்பாக, இடைவரும் அடி எல்லாவற்றானும் வரப்பெறும்.

## தாழிசை அடியெல்லை

**இடைநிலைப் பாட்டே,**

**தரவகப் பட்ட மரபின என்ப.**

தாழிசைகள் தரவிற் சுருங்கிவரும்.

“தரவகப்பட்ட மரபின” என்றதனால் தரவிற்கு ஓதப்பட்ட நான்கடியின் மிகாதென்பதும், மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதும் கொள்ளப்படும். வருகின்ற சூத்திரத்துள் ஒத்து மூன்றாகும் ஒத்தா ழிசையே (செய்யு 137) எனக்கூறுதலானும் இப்பாவினை ஒத்தாழிசைக்கலி எனக் கூறுதலானும் தாழிசை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வரும் என்பது பெறப்படும்.

## தனிச்சொல்

**அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்**

**நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப.**

இடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல் தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனச் சொல்லுவர்.

ஆங்கு அசை, தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனவே, தாழிசைக்கு முன்னர்வருதலும் சிறுபான்மை உள

## சுரிதகம் அடியெல்லை:

**போக்கியல் வகையே வைப்பெனப் படுமே**

**தரவியல் ஒத்தும் அதனகப் படுமே**

**புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.**

சுரிதகம் என்பது வைப்பு எனவும் படும் . அது தரவோடு ஒத்த அளவிற்றாகியும் அதனிற்குறைந்த அளவிற்றாகியும் குற்றந் தீர்ந்த பாட்டினிறுதி நிலையை உரைத்தவாறு வரும்.

தரவியலொத்தலாவது சிறுமை நான்கடி யாகியும் பெருமை பன்னிரண்டடியாகியும் வருதல் . அதனகப்படுதலாவது சிறுமை மூன்றடியானும் இரண்டடியானும் வருதல். மேல்துள்ளலோசைத் தாகியும் . நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கும். சுரிதகம் ஆசிரியத்தானாதல் வெண்பாவானாதல் வரும்.

**“செயபொருட் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன**

**தேய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி**

**வறனோடின் வயத்து வான்றரும் கற்பினாள்**

**நிறனோடிப் பசப்பூர்த லுண்டெனா**

**அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே”.** (கலி. 19)

இது சுரிதகம்.

இது நான்கடித்தரவும் நான்கடியான் மூன்று தாழிசையுந் தனிச் சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் வந்த ஒத்தாழிசைக் கலிப்பா. இது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

**“உள்ளில் உள்ளம் உள்ளுள் உவந்தே.”** (கலி. 118)

இது சுரிதகம்.

இது தாழிசைதோறுந் தனிச்சொற் பெற்றுவந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா .

**“வயக்குறு மண்டிலம்”** என்னும் (கலி. 25) கலிப்பாவில் தரவு பன்னிரண்டடியான் வந்தது.

**“இலங்கொளி மருப்பிற் கைம்மா”** என்னுங் (கலி . 23) கலிப்பாவினுள் இரண்டடியால் தாழிசை வந்தன.

**“உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனும்”** என்னுங் (கலி 22) கலிப்பாவில் தாழிசை மூன்றடியான் வந்தன.

**“ஆற்றியந்தணர்”** என்னும் கடவுட்பாட்டினுள் மூன்றடிச் சுரிதகம் வந்தது.

## சொல்லாதொழிந்த ஒத்தாழிசைக்கலிப்பா

**ஏனை யொன்றே,**

**தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.**

சொல்லாதொழிந்த ஒத்தாழிசைக்கலிப்பா

ஒத்தாழிசைக்கலிப்பா முன்னிலையிடத்துத் தேவரைப்பராவும் பொருண்மை உடைத்தாம்

## தேவர் பராய ஒத்தாழிசைக் கலிப்பா வகை

**அதுவே,**

**வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே.**

தேவர் பராஅய ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, ஒருபோகு ஒத்தாலிசைக்கலிப்பா என இரு வகைப்படும்.

## வண்ணக கலிப்பா

**வண்ணகம் தானே,**

**தரவே தாழிசை எண்ணே வாரமென்**

**றந்நால் வகையில் தோன்று மென்ப.**

வண்ணக ஒத்தாழிசையாவது தரவும் தாழிசையும் எண்ணும் சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பினையும் உடைத்து.

## தரவு அடிவரையறை

**தரவே தானும்**

**நான்கும் ஆறும் எட்டும் என்ற**

**நேரடி பற்றிய நிலைமைத் தாகும்**

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தரவு நான்கும் ஆறும் எட்டுமாகிய அளவடியினாலே வரும்

## தாழிசை அடிவரையறை

**ஒத்துமூன் றாகும் ஒத்தா ழிசையே**

**தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.**

இச் சூத்திரம் தாழிசைக்கு அடிவரையறை உணர்த்திற்று.

தாழிசையுந் தம்முள் அளவும் ஒத்து மூன்றாகிவரும், அவை தரவிற் சுருங்கித் தோன்றும்.

## அடக்கியல்

**அடக்கியல் வாரம் தரவோ டொக்கும்.**

அடக்கியலாகிய சுரிதகம் தரவோடொத்த இலக்கணத்தை உடையதாகும்.

## அம்போதரங்கம்

**முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே**

முதற்றொடுத்த உறுப்புப் பெருகிப் பின்றொடுக்கும் உறுப்புச் சுருங்கிவரும்.

அதனை இரண்டடியான் வருவன இரண்டும் ஓரடியான் வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறையிலவாம்.

**எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே**

**சின்னம் அல்லாக் காலை யான.**

தனிச்சொல் இல்லாத வழி மேற் சொல்லப்பட்ட எண் ஒரோவொன்று இடையொழிந்து வருதல் குற்றமாகாது.

எனவே, சொல்லப்பட்ட உறுப்புக்கள் தனிச்சொல் வருவழி இடையொழியாமல் வருதல் வேண்டுமென்றவாறு .தனிச்சொல் உளப்பட ஐந்துறுப்புடைத்தாயிற்று.

இனித் தனிச்சொல்லின்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகெனப் பெயர்பெறும்.

## ஒருபோகு கலிப்பா

**ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும்.**

இனித் தனிச்சொல்லின்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகெனப் பெயர்பெறும்.

**கொச்சக ஒருபோ கம்போ தரங்கமென்**

**றொப்ப நாடி உணர்தல் வேண்டும்.**

ஒரு போகு என்னும் கலி இரண்டுவகைப்படும். அது முறையே கொச்சகவொருபோகு, அம்போதரங்கவொருபோகு என்பதாம்.

## கொச்சக ஒருபோகு

கொச்சக ஒருபோகு தரவின் றாகித் தாழிசை பெற்றும் தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும் எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும் அடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது. கொச்சக வொருபோ காகும் என்ப.

தரவு முதலாயின உறுப்புக்களுள், தரவின்றித் தாழிசை முதலியவுறுப்புக்கள் பெற்றும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும், தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும் எண்ணின்கண் இடையெண் சிற்றெண் என்பன குறையினும் சுரிதகமின்றித் தரவுதானே நிமிர்ந்தொழுகி முடியினும் சுரிதகமின்றித் தரவுதானே நிமிர்ந்தொழுகி முடியினும் ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும் சொல்லப்பட்டன கொச்சக வொருபோகெனக. குறிக்கப்பெறும். எனவே ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றும்

இரண்டும் குறைந்து வருவன கொச்சக வொருபோகெனப் பெயர் பெறும்.அவற்றுள் தரவின்றாகித் தாழிசைபெற்று வந்ததற்குச் செய்யுள்:-

"நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்

என்னும் பாடல்

## கொச்சக ஒருபோகு அடியெல்லை

**ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே**

மேற் சொல்லப்பட்ட கொச்சகவொருபோகு பத்தடிச் சிறுமையாகவும் இருபதடிப் பெருமையாகவும் வரும்.

## அம்போதரங்கவொரு போகு

**அம்போத ரங்கம் அறுபதிற் றடித்தே**

**செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.**

அம்போதரங்க ஒருபோகு அறுபதடி பெருமைக் கெல்லையாம். நடுவாகிய நிலை சிறுமைக்கெல்லையாம் .

செம்பால் வாரம் என்பது செம்பாதி எனவுமாம் . முப்பதடிச் சிறுமை ஆகும்.

**எருத்தே கொச்சகம் அராகஞ் சிற்றெண்**

**அடக்கியல் வாரமொடு அந்நிலைக் குரித்தே.**

ஈண்டு எருத்து என்பது தரவு. கொச்சகமும் அராகமும் மேற்சொல்லப்பட்டன. எண்ணினுட் பேரெண்ணிற் சிற்றெண் வரப்பெறுமாயினும் இனிச்சொல்லப்பட்ட உறுப்பு முறையான் வருதலும் மயங்கிவருதலுங் கொள்க.

பரிபாடற்கும் இவைதாமே உறுப்பாயின் அதனோடிதனிடை வேறுபாடு என்னையெனின் அறுபதிற்றடியிற் குறைந்துவரின் முறை பிறழ்ந்து வருமெனவும் ஒத்துவரின் அறுபதின் மிக்கு வருமெனவுங் கொள்ளப்படும்.

**“கண்ணகன் இருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற**

**துண்நறும் பிடவமுந் தவழ்கொடித் தவளமும்**

**வண்ணவண் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்**

**அன்னவை பிறவும் பன்மலர் துதையத்**

எனும் பாடல் சான்றாகும்.

யாப்பினும் பொருளினும் வேறுபட்ட கொச்சகவொருபோகை அதன்பினோதினமையால் இதற்குங் காமப் பொருளே பெறப்பட்டது.

## கலிவெண்பாட்டே:

**ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்**

**திரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே**

ஈற்றடியளவும் ஒருபொருளைக் குறித்து வெள்ளடியியலால் திரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம்.

கலிவெண்பா எனினும் வெண்கலிப்பா எனினும் ஒக்கும், வெள்ளடியியலான் என்றமையான் வெண்டளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும் பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான வருவனவுங் கொள்க என்பார் இளம்பூரணர்,

**“மரையா மரல்கவர மாரி வறப்ப**

**வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்**

**சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்**

**உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்**

**தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங**

**கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்**

**என்னீர் அறியாதீர் போல இவைகூறின்**

**நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்**

**அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு**

**துன்பந் துணையாக நாடின் அதுவல்ல**

**தின்பமும் உண்டோ எமக்கு”**

இது வெண்டளையான் வந்த வெண்கலிப்பா.

அ.ஃ.தேல் இது நெடுவெண்பாட்டிற்கு ஓதிய இலக்கணத்தான் வருதலிற ஃப.ஃ.றொடைவெண்பாவாம். வெண்கலிப்பா என்றதென்னை எனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவுங் கைக்கிளை பெருந்திணை யெனவுஞ் சொல்லப்பட்ட பொருளேழனுள்ளும் யாதானு மொருபொருளைக் குறித்து ஏனைக்கலிப்பாக்கள் போலத் தரவுந் தாழிசையுந் தனித்தனி பொருளாக்கிச் சுரிதகத்தாற் றொகுத்துவருநிலைமைத் தன்றித் திரிபின்றி முடிவதனைக் கலிவெண்பா வெனவும், புறப்பொருட்கண் வரும் வெண்பாக்களைப் ப.ஃ.றொடை வெண்பா வெனவும், பரிபாடற்கு உறுப்பாய் வரும்.ப.ஃ.றொடை வெண்பாக்களைப் பரிபாடலெனவும், கொச்சகக் கலிப்பாவிற் குறுப்பாய் வரும் ப.ஃ.றொடைவெண்பாவைக் கொச்சகக் கலிப்பாவெனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க. அன்னதாதல் 'நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே' (செய்யுளியல் 114) என யாப்பினாலே வேறுபடுத்தாராகிக் "கைக்கிளை பரிபாட்டங்கதச் செய்யுள் எனப் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்தோதினமையானுங் கொள்க என்பார் இளம்பூரணர்.

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாம்…

நோயுங் களைகுவை மன"

என்னும் முல்லைக்கலி அயல் தளையால் வந்த கலிவெண்பா.

## கொச்சகக் கலிப்பா

**தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்**

**ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்**

**வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்**

**பாநிலை வகையே கொச்சகக் கலியென**

**நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே.**

தரவாகிய உறுப்புஞ் சுரிதகமாகிய உறுப்பு முதலும் முடிவும் வருதலின்றி இடையிடைவந்து தோன்றியும் ஐஞ்சீரடி பலவந்தும் தரவு தாழிசை தனிச்சொல் சரிதகஞ் சொற்சீரடி முடுகியலடியென்னும் ஆறுறுப்பினையும் பெற்றும் மேற்சொல்லப்பட்ட உறுப்புக்களை உடைத்தாகியும் இலதாகியும் வெண்பாவினியல்பினாற் புலப்படத்தோன்றும் பாநிலைவகையும் புலப்படத் தோன்றுதலாவது ஏனையுறுப்புக்களில் வெண்பாமிகுதல் இன்னும் அதனானே பிற பாவடிகளும் வந்து வெண்பாவியலான் முடிதலுங் கொச்சகக் கலிப்பா வென்று இலக்கணமறிந்த புலவர் கூறினர். ஆறுமெய்பெற்றும் என்பதற்குஅராகமென்னும் உறுப்பைக்கூட்டி முடுகியலென்னும் உறுப்பைக் கழித்து உரைப்பதும் ஒன்று ஆகும்.

## உறழ்கலி

**கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்**
**போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே.**

இஃது உறழ்கலி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உறழ்கலிப்பாவிற்கு இலக்கணங் கூற்று மாற்றமும் விரவி வந்து சுரிதகமின்றி முடியும். இதனைக் கொச்சகக் கலியின்பின் வைத்தமையான் அக் கொச்சக வுறுப்பினொப்பன இதற்கு உறுப்பாகக் கொள்ளப்படும்.

***“யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்***
***ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை***
***வாரல்நீ வந்தாங்கே மாறு”***

*இது தலைமகள் கூற்று.*

## ஆசிரியப்பாவின் எல்லை:

ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை

ஆயிர மாகும் இழிபுமூன் றடியே.

ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லையாவது சுருங்கினது மூன்றடி பெருமை ஆயிரமடியாக இடைப்பட்டன எல்லாவடியானும் வரப்பெறும்.

## வெண்பாவின் அடிவரையறை

நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே

குறுவெண் பாட்டிற் களவேழ் சீரே.

வெண்பாவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

நெடுவெண்பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி. குறுவெண்பாட்டிற்கு அடி அளவடியுஞ் சிந்தடியும் இரண்டடியும் ஆகும்.

## அங்கதப்பாட்டின் அளவு

அங்கதப் பாட்டள வவற்றோ டொக்கும்.

அங்கதப் பாட்டாகிய வெண்பாவிற்கு எல்லை சிறுமை இரண்டடி, பெருமை பன்னிரண்டடி ஆகும்.

## அடி வரையறையில்லாத செய்யுள்:

கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்

செவியறி வாயுறை புறநிலை என்றிவை

தொகைநிலை மரபின் அடியில என்ப.

அடியளவு வரையறையில்லாத செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று

கலிவெண்பாட்டும். கைக்கிளைப்பொருளைப் பற்றிய பாவும். செவியுறை வாழ்த்து. வாயுறைவாழ்த்து. புறநிலை வாழ்த்து என்றபொருண்மைக்கண் வரும் வெண்பாக்களும் அடியளவு வரையறையில்லாத செய்யுள் ஆகும். பொருள்முடியுங்காறும் வேண்டிய அடிவரப்பெறும்.

## மருட்பா வேறுபாடுணர்தல்

புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்

திறநிலை மூன்றுந் திண்ணிதில் தெரியின்

**வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்**

**பண்புற முடியும் பாவின என்ப.**

புறநிலை வாழ்த்தும் வாயுறைவாழ்த்துஞ் செவியறிவுறூஉவும் மருட்பாவினால் வரப்பெறும். எனவே மருட்பா நான்கு பொருளினல்லது வரப்பெறாது என்பதும் பெறப்படும்.

**பரிபாடல் அடிவரையறை**

**பரிபாடலே**

**நாலீ ரைம்ப துயர்படி யாக**

**ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.**

பரிபாடற் செய்யுள் நானூறடி உயர்பாக இருபத்தைந்தடி இழிபாக வரும்.

எனவே இடையெல்லா அடியானும் வரப்பெறும்.

கலிப்பாவிலுள் ஒத்தாழிசைக்கு அளவு மேற்கூறப்பட்டது.

கலிவெண்பாட்டுக்கு வரையறை யில்லை யெனப்பட்டது.

கொச்சகக்கலிக்கு வரையறை கூறாமையாற் பொருண் முடியுங்காறும் வரப்பெறும் என்று கொள்க. அவ்வழிப் பலவுறுப்பாகி வருதலின் அதற்குறுப்பாகிய செய்யுள் விற்றாதல் வேண்டும்.

உறழ்கலியுங் சொச்சகக் கலிப்பாற்படும்.

## அளவியல்

பாக்களின் அடிவரையறை உணர்த்தல் அளவியல் எனப்படும்.

**அளவியல் வகையே அனைவகைப் படுமே.**

இவ்வதிகாரத்துள் ஈண்டு அதிகரிக்கப்பட்ட அளவியல் ஈண்டுச் சொன்ன வகைபெறும்.

.

## அடிவரையில்லாதன

**எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்**

**அடிவரை யில்லன ஆறென மொழிப.**

பாட்டு, உரை, நூல். வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. அவற்றுட் பாட்டு நீங்கலாகிய ஆறும் அடிவரையில.

## வேறு பெயர்கள்

**அவைதாம்**

**நூலி னான உரையி னான**

**நொடியொடு புணர்ந்த பிசியி னான**

**ஏது நுதலிய முதுமொழி யான**

**மறைமொழி கிளந்த மந்திரத் தான**

**கூற்றிடை வைத்த குறிப்பி னான.**

மேற்சொல்லப்பட்ட அறுவகையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வாய்மொழியெனினும் மந்திரமெனினும் ஒக்கும். அங்கதமாவது 'செம்பொருள் கரந்ததென விருவகைத்தே' (செய்யுளியல் - 120) என்றதனாற் கரந்த ஆங்கதமெனினும் சொற்குறிப்பெனினும் ஒக்கும்.

**நூல்:**

**அவற்றுள்,**

**நூலெனப் படுவது நுவலுங் காலை**

**முதலும் முடியும் மாறுகோ ளின்றித்**

**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**

**உண்ணி றகன்ற உரையொடு புணர்ந்து**

**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.**

நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக்கொண்ட பொருளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமல் கருதிய பொருளைத் தொகையானும் வகையானும் காட்டி அதன் அகத்து நின்றும் விரிந்த உரையோடு பொருத்த உடைத்தாகி நுண்ணியதாகி விளக்குவது நூற்கு இயல்பு.

**நூல் வகை**

**அதுவே தானும் ஒருநால் வகைத்தே.**

மேற்சொல்லப்பட்ட நூல் நான்கு வகையையுடைத்து.

**ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்**

**இனமொழி கிளந்த ஓத்தி னானும்**

**பொதுமொழி கிளந்த படலத் தானும்**

**மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்என்று**

**ஆங்கனை மரபின் இயலும் என்ப.**

ஒருபொருள் நுதலிய சூத்திரத்தான் : ஆசிரியன் யாதானு மொருபொருளைக் குறித்துக்கூறுஞ் சூத்திரம்.

இனமொழி கிளந்த ஒத்து: இனமாகிய பொருள்கள் சொல்லப்படும் ஒத்து.

பொதுமொழி கிளந்த படலம்: மேற்சொல்லப்பட்ட இனங்கள் பலவற்றையுங் கூறப்படும் படலம்.

மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம்: - இம்மூன்றனையும் உறுப்பாக அடக்கிய

பிண்டம்.

ஆங்கனை மரபின் இயலும் - அம்மரபினான் இயலும் நூல்.

## சூத்திரம்:

**அவற்றுள்,**

**சூத்திரம் தானே**

**ஆடி நிழலின் அறியத் தோன்றி**

**நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க**

**யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.**

சூத்திரமாவது கண்ணாடியில் நிழற்போல விளங்கத் தோன்றி ஆராயாமற் பொருள் நனி விளங்குமாறு யாப்பின் கண்ணே தோன்றும்.

ஆடி நிழலின் அறியத் தோன்றுவது: சூத்திரம் படித்த வளவிலே அதனாற் சொல்லப்படுகின்ற பொருள் ஒருங்கு தோற்றல்

நாடுதலின்றிப் பொருணனி விளங்க யாத்தல்: அதன் கண் யாக்கப்பட்ட சொற்குப் பொருள் ஆராயாமற் புலப்படத்தோன்றுமாறு யாத்தல்.

**“வேற்றுமை தாமே ஏழென மொழிப**

**விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.”** (தொல். வேற்றுமையியல்)

## ஓத்து

**நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு**

**ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது**

**ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.**

ஒத்த இனத்ததாகிய மணியை ஒருங்கே கோவைப்பட வைத்தாற்போல ஓரினமாக வரும்பொருளை ஓரிடத்தே சேரவைத்தல் ஓத்தென்று பெயராம்.

எனவே அவ்வினமாகிச் சேர்ந்தநிலைக்கு ஓத்தென்று பெயராயிற்று.

## படலம்:

**ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்**

**பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும்.**

ஓரினமாகிய நெறியின்றிப் பலநெறியான் வருவன பொருளானே பொதுமொழியால் தொடர்வுபடின் அது படலமெனப் பெயராம்.

அது கிளவியாக்க முதலாக எச்சவியல் ஈறாகக் கிடந்த ஒன்பதோத்தினும் வேறுபாடுடையவாயினும், சொல்லிலக்கணம் உணர்த்தினமையாற்சொல்லதிகாரம் எனப் பெயர் பெறுதல்.

அதிகாரம் எனினும் படலமெனினும் ஒக்கும்.

**பிண்டம்:**

**மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்**

**தோன்றுமொழிப் புலவர்அது பிண்டம் என்ப.**

மூன்று உறுப்பினையும் அடக்கின தன்மைத்தாயின் அதனைப் பிண்டமென்று சொல்லுவர்

மூன்றுறுப்பு அடக்குதலாவது: சூத்திரம் பலவுண்டாகி ஓத்தும் படலமும் இன்றாகி வரினும், ஓத்துப் பலவுண்டாகிப் படலம் இன்றிவரினும், படலம் பலவாகி வரினும், அதற்குப் பிண்டமென்று பெயராம்.

**உரைநடை வகை**

**பாட்டிடை வைத்த குறிப்பி னானும்**

**பாவின் றெழுந்த கிளவி யானும்**

**பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்**

**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்என்று**

**உரைவகை நடையே நான்கென மொழிப.**

பாட்டிடைவைத்த குறிப்பு: பாட்டினிடை வைக்கப்பட்ட பொருட்குறிப்பினானும் உரை.

பலசொல் தொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசைதழீ இயவற்றைப்

பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுட் தன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது.

**"ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்"** என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

**"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து"**(கலித். 56)

என்றது உரைக்குறிப்பு.

பாவின்றெழுந்த கிளவி: பாக்களை ஒழியத் தோற்றிய சொல்வகையானும் உரையாம்.

அஃதாவது, வழக்கின்கண் ஒரு பொருளைக் குறித்து வினவுவாருஞ் செப்புவாருங் கூறுங் கூற்று.

அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப்படுதலானுஞ் செய்யுளாம்.

பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி: பொருளியல்பில்லாப் பொய்மொழியானும் உரைவரும்

பொருளொடு புணர்ந்த நகைமொழி: பொருளைப் பொருந்திய நகைவழிமொழியாய் வருவது.

நகைமொழியாவது: மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாதென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருளுணர்த்தும் உரை பிறக்குமாதலின் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் உரைவருமென்றார். இவ்வாறு உரைவகை நடையே நான்கென மொழிவர்.

**உரை வகை**

**அதுவே தானும் இருவகைத் தாகும்.**

மேற்சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப்படும்

அது மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவுமாம்.

**ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே**

**ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.**

மகளிர்க்கு உரைக்குமுரை செவிலிக்குரித்து. மைந்தர்க்கு உரைக்குமுரை எல்லார்க்கும் உரித்து.

செவிலி இலக்கணத்தின் உரைக்கின்றவுரையும். பாட்டிலுரைக்கின்றவுரையும் கூறுவளோவெனின். அவ்விடங்களில் வரும் உரை பொருள்பற்றி வருதலின் அப்பொருள் கூறுவாள்.

பிசி:

**ஒப்பொடு புணர்ந்த உவமத் தானுந்**

**தோன்றுவது கிளந்த துணிவி னானும்**

**என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே.**

ஒப்போடே புணர்ந்த உவமை நிலையானும் பிசியாம் தோன்றுவதனைச் சொன்ன துணிவினானும் பிசியாம்

**“அச்சுப்போலே பூப்பூக்கும். அமலேயென்னக் காய்காய்க்கும்”**

என்பது பிசி.- இது உவமைபற்றி வந்தது.

முதுமொழி

**நுண்மையுஞ் சுருக்கமும் ஒளியு முடைமையும்**

**மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**

**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**

**ஏது நுதலிய முதுமொழி யென்ப**

நுண்மை விளங்கம் சுருக்கம் விளங்கவும் ஒளியுடைமை விளங்கவும் மென்மை விளங்கவுமென்று இன்னோரன்ன விளங்கவும் தோன்றிக் கருதினபொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன முதுமொழியென்று சொல்லுவர்.

## மந்திரம்

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்**

**மறைமொழி தானே மந்திரம் என்ப.**

நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரமாகும்..

## குறிப்பு மொழி

**எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்**

**பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே.**

எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிச் சொல்லினால் உணரப்படும்

பொருளின் புறத்ததுவே குறிப்புமொழி என்பதாம்..

மேல் அங்கதமென்று சொல்லி ஈண்டுக் குறிப்புமொழி யென்றதனான் இச்சொல் வசைகுறித்து வருமென்று அறிக.

புகழ்குறித்து வந்தாற் குற்றமென்னையெனில். அதனை, வெளிப்படக் கூறக் கேட்டார்க்குந் தனக்கும் இன்பம் பயத்தலிற் குறிப்பினாற் கூறல் வேண்டுவது வசையென்று கொள்ளப்படும்.

## பண்ணத்தி:

**பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்**

**பாட்டின் இயல பண்ணத் திய்யே.**

மேல் இத்துணையும் பாவும் பாவின்றி வழங்குவனவும் எடுத்தோதினார். இனிப் பிறநூலாசிரியர் விரித்துக் கூறின இசை நூலின் பாவினமாமாறு உணர்த்துதலின் இது.,

பாட்டிடைக் கலந்த பொருள்: பாட்டின்கட் கலந்த பொருளையுடைத்தாகி என்பதாம்

பாட்டினியல பண்ணத்தி: பாட்டுக்களின் இயல்பையுடையவாம் பண்ணைத் தோற்றுவிக்குஞ் செய்யுட்கள்.

பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தியென்றார்.

அவையாவன சிற்றிசையும் பேரிசையு முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன.

**அதுவே தானும் பிசியொடு மானும்.**

மேற்சொல்லப்பட்ட பண்ணத்தி பிசியோடு ஒத்த அளவிற்று ஆகும்

பிசியென்பது இரண்டடி அளவின்கண்ணே வருவதாதலின் இதுவும் இரண்டடியான் வருமென்று கொள்ளப்படும்

**“கொன்றை வேய்ந்த செல்வன் அடியை**

**என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே”.**

இது பிசியோடு ஒத்தவளவிற்றாகிப் பாலையாழென்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையிற் பண்ணத்தியாயிற்று.

## பண்ணத்தி பாகுபாடு

**அடிநிமிர் கிளவி ஈரா றாகும்**

**அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.**

பண்ணத்தி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. பண்ணத்தியெனினும் பாவினமெனினு மொக்கும்.

“நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே” (செய்யுளியல் - 41) யென்றமையான் அடியென்பது நாற்சீரான் வருவதென்று கொள்க.

நாற்சீரடியின் மிக்குவரும் பாட்டுப் பன்னிரண்டும் அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவுங் கொள்ளப்படும்.

இதனாற் சொல்லியது இருசீரடி முதலிய எல்லாவடிகளானும் மூன்றடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்பதாம்

பன்னிரண்டாவன ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடுந் தாழிசை துறை விருத்தமென்னு மூன்றினத்தையும் உறழப் பன்னிரண்டாம்.

அவற்றுள், தாழிசையாவது: ஆசிரியத்தாழிசை, வஞ்சித்தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என நான்காம்.

துறையாவது : ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என நான்காம்.

விருத்தமாவது:- ஆசிரியவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என நான்காம்.

அவற்றுள் ஆசிரியத் தாழிசையாவது மூன்றடி ஒத்துவருவது.

**”நீடற்க வினையென்று நெஞ்சின் உள்ளி**
**நிறைமலர்சாந் தொடுபுகையும் நீரு மேந்தி**
**வீடற்குந் தன்மையின் விரைந்து சென்று**
**விண்ணோடு மண்ணிடை நண்ணும் பெற்றி**
**பாடற்கும் பணிதற்குந் தக்க தொல்சீர்ப்**
**பகவன்ற னடியிரண்டும் பணிதும் நாமே"** (யாப்.வி.மேற்)
என வரும்.

அவ்வழி ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடைத்தென ஒரு சாரார் பாடல்:
**“கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்**

**இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்**
**கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ**

**பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்**
**ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்**
**ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ**

**கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்**
**எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்**
**முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ."** (சிலப்ஆய்ச்சி)
மூன்றடியான் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை.

வஞ்சித்தாழிசையாவது குறளடி நான்கினால் ஒருபொருள் மேன் மூன்றடுக்கி வரும்.

**"மடப்பிடியை மதவேழந்**
**தடக்கையால் வெயில் மறைக்கும்**
**இடைச்சுரம் இறந்தார்க்கே**
**நடக்குமென் மனனேகாண்**

**இரும்பிடியை இகல்வேழம்**
**பெருங்கையால் வெயில்மறைக்கும்**
**அருஞ்சுரம் இறந்தார்க்கே**
**விரும்புமென் மனனேகாண்**

**பேடையை இரும்போத்துத்**
**தோகையால் வெயில்மறைக்கும்**
**காடகம் இறந்தார்க்கே**
**ஓடுமென் மனனேகாண்"** (யாப்.வி.மேற்.)
என வரும்.
இனி, வெண்டாழிசையாவது மூன்றடியான் வந்து வெண்பாப் போல இறும். அது
**"நண்பி தென்று தீய சொல்லார்**

**முன்பு நின்று முனிவு செய்யார்**

**அன்பு வேண்டு பவர்."** (யாப். வி.ப.244 என வரும்.

சிந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவதனை வெள்ளொத் தாழிசை யென்ப அது

**"அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட் சென்னி**
**ஒன்னார் உடைபுறம் போல நலங்கவர்ந்து**

**துன்னான் துறந்து விடல்**

**ஏடி அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி**
**கூடார் உடைபுறம் போல நலங்கவர்ந்து**
**நீடான் துறந்து விடல்**

**பாவாய் அறங்கொல் நலங்கிளர் சேட் சென்னி**
**மேவார் உடைபுறம் போல நலங்கவர்ந்து**
**காவான் துறந்து விடல்"** (யாப்.வி.மேற்) என வரும்.

கலித்தாழிசையாவது அடிவரையின்றி ஒத்துவந்து ஈற்றடி சிலசீர்மிக்குங் குறைந்தும் வருவது. அது
**"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்**

**கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்திங்காள்**

**கேள்வரும் போழ்தின் எழாதாய்க் குறா அலியரோ**

**நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்திங்காள்"** (யாப்.வி.ப.330) என வரும்.

இத்தாழிசை ஈற்றடி மிக்கு வருதலான் ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவரினுங் கொச்சக வொருபோ கெனப்படா கலித்தாழிசை யெனப்படும் ஈற்றடி மிக்கு வருதலான்.ஆசிரியத்துறையாவது நான்கடியாய் இடையிடை சீர் குறைந்து வரும். அது

**"கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம˙உள்ளி வருதிராயின்"**- எனும் பாடல்

வஞ்சித்துறையாவது குறளடி நான்கினால் தனித்துவரும் அது

**"முல்லைவாய் முறுவலித்தன"**- எனும் பாடல்

இனி வெண்டுறையாவது மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமையாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்துவரும்.

**"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய"** - எனும் பாடல்

கலித்துறையாவது நெடிலடி நான்கினான் வருவது.

அ˙.தாவது, ஐஞ்சீரான் வருவதும், பதினாறும் பதினேழும் எழுத்துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம்.

**"யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்"** - எனும் பாடல்

இனி, ஆசிரிய விருத்தமாவது அறுசீரடி முதலாகிய மிக்க அடியினான் நான்கடியு மொத்துவரும். அது

**"இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள் எனப்பெயர் இனவண்டு புடைசூழ** - எனும் பாடல்

இனி வஞ்சிவிருத்தமாவது முச்சீரடி நான்காகிவரும். அது

**“இருது வேற்றுமை இன்மையால்”** - என்பதாம்

வெளிவிருத்தமாவது நான்கடியானாயினும் மூன்றடியானாயினும் அடிதொறுந் தனிச் சொற் பெற்றுவரும்.

**“ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார்”** – ஒருசாரார் எனும் பாடல்

கலிவிருத்தமாவது நாற்சீரடி நான்கினால் வரும்.

**“தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா”** - எனும் பாடல்.

**கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்**

**அளவியல் வகையே அனைவகைப் படுமே.**

இதனாற் சொல்லியது செய்யுளாவது அடிவரையுள்ளனவும் அடி வரையில்லனவுமென இருவகைப்படுமென்பதூஉம் அடிவரையுள்ளன ஆசிரியம். வஞ்சி. வெண்பா, கலி எனவும் தாழிசை, துறை, விருத்தமெனவும் அடிவரையில்லன, நூல், உரை, பிசி, முதுமொழிமந்திரம், குறிப்புமொழி என அறுவகைப் படுமென்பதூஉம் உணர்த்தியவாறு.

## திணை

**கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்**

**முற்கிளந் தனவே முறையி னான.**

திணையாவது கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை என்பன ஆகும்

முறைமையினாற் சொல்லுதலாவது. பாடாண் பாட்டினைக் கைக் கிளைப்புறமெனவும். வஞ்சியை முல்லைப் புறமெனவும், வெட்சியைக் குறிஞ்சிப் புறமெனவும், வாகையைப் பாலைப் புறமெனவும். உழிஞையை மருதப் புறமெனவும், தும்பையை நெய்தற் புறமெனவும், காஞ்சியைப் பெருந்திணைப் புறமெனவும், ஓதிய நெறிகொள்ளப்படும். இவ்வாறு கொள்ளவே பதினான்கு திணையும் ஏழாகியடங்கும்.

## கைகோள்

**காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்**

**பாங்கொடு தழா அலுந் தோழியிற் புணர்வுமென்**

**றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு**

**மறையென மொழிதல் மறையோர் ஆறே.**

இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும் பாங்கற்கூட்டமும் தோழியிற் கூட்டமுமென்று சொல்லப்பட்ட நான்குவகையானும் அவற்றைச் சார்ந்துவருகின்ற கிளவியானும் வருவன களவென்று கூறுதல் வேதமறிவோர் நெறி.

## கற்பாகிய கைகோள்:

மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்

இவைமுத லாகிய இயனெறி திரியாது

மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்

பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே

களவொழுக்கம் வெளிப்படுதலுங் களவொழுக்கமின்றித் தமரானே பெறுதலுமென்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது மகிழ்தலும் புலத்தலும் ஊடலும் ஊடல் தீர்தலும் பிரிதலுமென்று சொல்லப்பட்ட இவற்றொடு கூடிவருவது கற்பென்று சொல்லப்படுவது.

## கைகோள் வகை

மெய்பெறும் அவையே கைகோள் வகையே.

பொருள்பெற வந்த மேற்சொல்லப்பட்ட களவு கற்பென்னும் இருவகையே கைகோள் வகையாகும்.

## களவில் கூற்றுக்குரியோர்

பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி

சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு

அளவியல் மரபின் அறுவகை யோருங்

களவினிற் கிளவிக் குரியர் என்ப.

பார்ப்பார் முதலாகச் சொல்லப்படட கலந்தொழுகு மரபினையுடைய அறுவகையோரும் களவொழுக்கக் கிளவி கூறுதற்குரியவர் ஆவர்.

*பார்ப்பான் உயர்குலத்தானாகிய தோழன்.*

*பாங்கன் ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானுமாகிய தோழன்*

## கற்பில் கூற்றுக்குரியோர்

பாணன் கூத்தன் விறலி பரத்தை

யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்

பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா

முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்

தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

பாணன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவரும் மேற்சொல்லப்பட்ட பார்ப்பார் முதலிய அறுவருங்கூடப் பன்னிருவருங் கற்பின்கட் கூறுதற்குரியர்.

தொன்னெறி மரபிற் கற்பு என்றதனான் அவர் குலந்தோறும் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடைத்தாம்.

### இருவகைக் கைகோளிற்கும் உரிய மரபு

**ஊரும் அயலுஞ் சேரி யோரும்**

**நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்**

**கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது**

**கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்.**

ஊரிலுள்ளாருஞ் சேரியிலுள்ளாரும். அயன் மனையுள்ளாரும் நோய்ப்பக்கங் குறிப்பினால் அறிவாருந் தந்தையும் தமையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனை உட்கொண்டு பிறிதொன்றை எடுத்துமொழியின் அல்லது பட்டாங்குக் கூறுதலின்மை வலியுறுத்தத் தோன்றும்.

**"எந்தையும்,**

**நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப**

**எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்."** (அகம்.12)

இது தந்தை உட்கொண்டு கூறியது.

### நற்றாய்க்குரிய மரபு

**கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்**

**நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது.**

தலைவனொடுந் தலைவியொடும் நற்றாய்கூற்று நிரம்பத் தோன்றாது.

### கண்டோர் மரபு

**ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு**

**கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.**

கண்டோர்க்குரியதோர் மரபு உணர்த்திற்று.

ஒண்டொடி மாதராவார் நற்றாயுந் தோழியுஞ் செவிலியும். இவரொடுந் தலைவனொடுந் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப்பட்டது

### தலைவற் குரியதோர் மரபு.

**இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு**

**வழக்கியல் ஆணையிற் கிளத்தற்கும் உரியன்.**

தலைவியை உடன்கொண்டுபோம் இடைச்சுரத்தின்கண் தலைவியைத் தலைவன் வழக்குநெறியாணையானே கூறுதற்குரியன் தலைவனும் தலைவியும் அல்லாதார்க்கு உரியதோர் மரபு

## ஏனையோர் மரபு

**ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு**

**மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே.**

தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத்தலைவனொடுந் தலைவியொடுஞ் சொல்லிப்போந்த மரபினாற் சொல்லப்பெறுவர்ளு இடமுங் காலமுங் குறித்தது.

**மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியும்**

**நினையுங் காலைக் கேட்குநர் அவரே.**

தலைவியுந் தலைவனுங் கூறக் கேட்போர் மேற்சொல்லப்பட்ட பதின்மரும் ஆவர்.

## கேட்போர்

**பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி**

**யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.**

பார்ப்பார் அறிவரென்று சொல்லப்பட்ட இருவர் கூற்றும் எல்லாருங் கேட்கப்பெறுவர்.அறிவர் எனப்படுவார். மூன்றுகாலமும் தோன்ற நன்குணர்ந்தோரும், புலன்நன்குணர்ந்த புலமையோரும் ஆதலானும் இனி பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும் அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனாதலானும் என்பது பேராசிரியர் உரையாகும்.

## ஒருசார் கூற்றிற்குரிய மரபு

**பரத்தை வாயில் எனவிரு வீற்றுங்**

**கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.**

பரத்தையென்று சொல்லப்படும் வேறுபாட்டினும் வாயிலென்று சொல்லப்படும் வேறுபாட்டினுந் தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை.

## வாயில்கட்குரியதோர் மரபு

**வாயில் உசாவே தம்மு ளுரிய**

வாயில்கள் உசாவுமிடத்துக் கிழத்தியைச் சுட்டாது தம்முள் உசாவுதலுரித்து

## கேட்டல் பொருளின் மரபு:

**ஞாயிறு திங்கள் அறிவே நாணே**

**கடலே கானல் விலங்கே மரனே**

**புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே**

**அவையல பிறவு நுதலிய நெறியாற்**

**சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்**

**சோல்லியாங் கமையும் என்மனார் புலவர்.**

ஞாயிறு முதலாக நெஞ்ச ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருள்கள் தாங்கருதிய நெறியினானே சொல்லுவனபோலவுங் கேட்குநபோலவுஞ் சொல்லியமையப்பெறும்.

**“மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்**

**காதலை வாழி மதி”** (குறள்.1118)

**“நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்**

**ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே**

**பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே**

**ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே.”**(சிலப்.காணல்)

இதனுட் கடலுங் கானலும் புள்ளு மரனுங் கூறப்பட்டது.

**இடம்**

**ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியுங்**

**கரும நிகழ்ச்சி இடமென மொழிப.**

ஒருவழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினை நிகழ்ச்சி இடமென்று சொல்லுவர்.

நிகழ்ச்சி, நிகழ்ந்தவிடம்.

ஒருநெறிப் படுதல் - அகமாயினும் புறமாயினும் ஒரு பொருண்மேல் வருதல்.

ஓரியல் முடிதல் - அகத்தின்கட் களவென்றானும் கற்பென்றானும் அவற்றின் விரிவகையில் ஒன்றானும்பற்றி வருதல். புறத்தின்கண் நிரைகோடலானும் மீட்டலானு மேற் செலவானும் எயில் வளைத்தலானும் யாதானு மோரியல்புபற்றி வருதல்.

கருமநிகழ்தல் - அப்பொருளைப்பற்றி யாதானு மொரு வினை நிகழுமிடம்.

இன்னுங் கருமநிகழ்ச்சி என்றதனால் தன்மை முன்னிலை படர்க்கையென்பனவுங் கொள்ளப்படும்.

**“செல்லாமை உண்டேல் எணக்குரை மற்றுநின்**

**வல்வரவு வாழ்வார்க் குரை.”** (குறள்.1151)

என்றவழிப் பிரிவுப் பொருண்மை நிகழும் இடமாயிற்று .

காலம்:

இறப்பே நிகழ்வே எதிர தென்னுந்

திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்

பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்.

இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமெனக் கூறப்பட்டியலும் பக்கத்தின் ஆராய்ந்து நோக்குமாறு பொருணிகழ்ச்சியைக் கூறுமது காலமாகும்.

**“முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே**
**மலையன் ஒள்வேற் கண்ணி**
**முலையும் வாரா முதுக்குறைந் தனனே."**

இஃது இறந்தகாலத்தின்கட் புணர்ச்சியுண்மை தோன்ற வந்தது.

**“அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்**

**பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த**

**நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்**

**நீத்த லோம்புமதி பூக்கேழ் ஊர.”** (நற்றிணை.10)

நிகழ்காலம் இளமைப் பருவமென்பது தோன்ற வந்தது.

பயன்

இதுநனி பயக்கும் இதன்மா றென்னுந்

தொகுநிலைக் கிளவி பயனெனப் படுமே.

யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி இதன் பின்பு இதனைப்பயக்குமென விரித்துக்கூறாது முற்கூறிய சொல்லினானே தொகுத்துக்கூறுதல் பயனெனப்படும்.

“சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரல் வரினே யானஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே.”

இதனாற் பயன் வரைந்து கோடல் வேண்டும்.

“ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்

பின்சாரப் பொய்யாமை நன்று.” (குறள்.323)

இதனாற் பயன் நன்மை வேண்டுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமெனல்.

## மெய்ப்பாடு

**உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**

**மெய்ப்பட முடித்து மெய்ப்பா டாகும்.**

யாதானும் ஒன்றைக் கூறியவழி இதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்.

***"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே***
***அணைத்தனன் கொளினே அகன்மார்பெடுக்க வல்லேன்***
***என்போற் பெருவிதுப் புறுக நின்னை***
***இன்னா துற்ற அறனில் கூற்றே***
***நிரைவளை முன்கை பற்றி***
***வரைநிழற் சேர்கம் நடத்திசிற் சிறிதே."*** (புறம்.255)

இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தது

செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டுமென்பது கருத்து.

**எண்வகை இயனெறி பிழையா தாகி**

**முன்னுறக் கிளந்த முடிவின ததுவே**

அது நகை முதலாகிய எட்டுமெய்ப்பாட்டு நெறியையும் பிழையாதாகி மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தையுடைத்து

## எச்சம்

**சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை**

**புல்லிய கிளவி எச்சம் ஆகும்.**

பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சமாகும்

எனவே சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகையாயின. அது எச்சவியலுட் 'பிரிநிலை வினை' யென்னுஞ் சூத்திரத்துள் (தொல், சொல். எச்ச .34) பிரிநிலை யென்பது முதலாகச் சொல்லப்பட்ட எண்வகையானும் வருவன சொல்லெச்சமாம் குறிப்பென்றோதப்பட்டது

## முன்னம்

**இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவனென்று**

**அவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.**

இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத்தகுமெனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியையுரைப்பது முன்னமாம். இடமுங் காலமுமுணர்ந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலுஞ் செய்யுளுறுப்பாம்.

## பொருள்வகை

**இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**

**ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி**

**இதுவா கித்திணைக் குரிப்பொருள் என்னாது**

**பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.**

இன்பமும் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமும் என்று சொல்லப்பட்டவை வழுவுநெறியின்றி இத்திணைக்குரிய பொருள் இப்பொருள் என்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகையாம்.

## துறை:

**அவ்வவ் மாக்களும் விலங்கும் அன்றிப்**

**பிறவவண் வரினுந் திறவதின் நாடித்**

**தத்தம் இயலான் மரபொடு முடியின்**

**அத்திறந் தானே துறையெனப் படுமே.**

அகப்பொருளாகிய ஏழு பெருந்திணைக்கும் புறப்பொருளாகியஏழுபெருந்திணைக்கும் உரிய மாந்தரும் பரந்து பட்ட மாவும் புள்ளும் மரமுதலாயினவும், நிலம் நீர் தீ வளி முதலாயினவும் செய்யுட்கண் வருமிடத்துத் திறப்பாடுடைத்தாக ஆராய்ந்து தத்தமக்கேற்ற பண்போடும் பொருந்திய மரபோடும் முடியின், அவ்வாறு திறப்பாடுடைத்தாய் வருவது துறையென்று கூறப்படும்.

## மாட்டேறு

**அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும**

**இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்**

**மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.**

மாட்டு என்பது தனித்து நிற்பதனைக் கொணர்ந்து சேர்த்து முடித்தல் என்று பொருள் படும்.செய்யுளிடத்துக் கூறப்படுகின்ற பொருள் சேய்மைக்கண் கிடப்பினும் அண்மைக்கண் கிடப்பினும் ஒரு தொடர்பு பட அமைத்து பொருள் முடியும் படிக் கொண்டு வந்து கிடைப்பதுணர்த்தல் மாட்டுஎன்று அழைக்கப்படும்.

**மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி**

**உடனிலை மொழியினுந் தொடைநிலை பெறுமே.**

**வண்ணம்**

**வண்ணந் தாமே நாலைந் தென்ப.**

பாவின்கண் நிகழும் ஓசை வேறுபாடு வண்ணம் எனப்படும். இது

பாவண்ணம் முதல் முடுகு வண்ணம் முடிய இருபது வகைப்படும் என்பார் தொல்காப்பியர்.

## இருபது வண்ணம்

**அவைதாம்**

**பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**

**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**

**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**

**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**

**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**

**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**

**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**

**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**

**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**

**உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று**

**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே.**

## பாஅ வண்ணம்

**அவற்றுட்**

**பாஅ வண்ணம்**

**சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.**

பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலின்கட் பயின்றுவரும்.

**“கொல்லே ஐயம் எல்லே இயக்கம்.”** (தொல்,சொல்,இடை.20)

## தாஅ வண்ணம்

**தாஅ வண்ணம்**

**இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.**

தாஅ வண்ணமாவது இடையிட்டெதுகையான் வரும்.

“தோடார் எல்வளை நெகிழ நாளும்

நெய்தல் உன்கண் பைதல் கலுழ”

**வல்லிசை வண்ணம்**

வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.

வல்லெழுத்து மிக்குவருவது வல்லிசை வண்ணமாம்.

“வட்டொட்டி யன்ன வனமுடப் புன்னைக்கீழ்க்

கட்டிட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழைப்பூத்”

**மெல்லிசை வண்ணம்**

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

.மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாம்

“பொன்னின் அன்ன புன்னை நுண்தாது

மணியின் அன்ன நெய்தலங் கழனி”

**இயைபு வண்ணம்**

இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

இடையெழுத்துமிக்கு வருவது இயைபுவண்ணமாம் எனப்படும்.

“வால்வெள் ளருவி வரைமிசை இழியவும்

கோள்வல் உழுவை விடரிடை இயம்பவும்”

**அளபெடை வண்ணம்**

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

அளபெடைபயின்று வருவது அளபெடை வண்ணமாம் எனப்படும்.

“தாஅட் டாஅ மரைமலர் உழக்கி

பூஉக் குவளைப் போஒ தருந்திக்”

**நெடுஞ்சீர் வண்ணம்**

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

நெட்டெழுத்துப் பயின்றுவருவது நெடுஞ்சீர் வண்ணம் எனப்படும்

“நீரூர் பானா யாறே காடே”

## குறுஞ்சீர் வண்ணம்:

**குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.**

குற்றெழுத்துப் பயின்றுவருவது குறுஞ்சீர் வண்ணம் என்று அழைக்கப்படும்.

**"உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்"**

## சித்திர வண்ணம்

**சித்திர வண்ணம்**

**நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே.**

சித்திரவண்ணமாவது நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் சார்ந்துவரும்.

**"ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்**

**சேரி வரினும் ஆர முயங்கார்."** (குறுந். 231)

## நலிபு வண்ணம்

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.**

ஆய்தம் பயின்றுவருவது நலிபுவண்ணமாம் என்றாகும்.

**"அ.்.காமை செல்வத்துக் கியாதெனின் வெ.்.காமை**

**வேண்டும் பிறன்கைப் பொருள்."** (குறள். 178)

## அகப்பாட்டு வண்ணம்

**அகப்பாட்டு வண்ணம்**

**முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.**

அகப்பாட்டு வண்ணமாவது முடியாத்தன்மையான் முடிந்ததன் மேலதாய் வரும்.

**"பன்மீன் உணங்கற் படுபுள் ளோப்பியும் --**

**ஓடுகலம் எண்ணும் துறைவன் தோழி."** (யாப். வி. ப. 385)

## புறப்பாட்டு வண்ணம்

**புறப்பாட்டு வண்ணம்**

**முடிந்தது போன்று முடியா தாகும்.**

புறப்பாட்டு வண்ணமாவது முடிந்தது போன்று முடியாதாகிவரும்.

**"நிலவுமண லகன்துறை வலவ னேவலின் ---**

**சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே.”** (யா.வி.ப. 385)

### ஒழுகு வண்ணம்

**ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்.**

ஓசையான் ஒழுகிக்கிடப்பது ஒழுகுவண்ணமாம்.

**“அம்ம வாழி தோழி காதலர் –**

**பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே.”** (யா.வி.ப. 386)

### ஒரூஉ வண்ணம்

**ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்.**

ஒரூஉ வண்ணமாவது நீங்கின தொடையாகித் தொடுப்பது ஆகும். அது செந்தொடையாம்.

**“தொடி நெகிழ ்ந் தனவே கண்பசந் தனவே -**

**மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே.”** (யாப்.வி.ப.389)

### எண்ணு வண்ணம்

**எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.**

எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணமாம் எனப்படும்.

**“நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின்**

**அளப்பரியையே**

**நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்**

**ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை.”** (பதிற்றுப். 14)

### அகைப்பு வண்ணம்

**அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.**

அறுத்தறுத்தியலுவது அகைப்பு வண்ணம் ஆகும்.

**“தொடுத்த வேம்பின ்மிசைத் துதைந்த போந்தையிடை-** எனும் பாடல்

### தூங்கல் வண்ணம்

**தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.**

தூங்கல் வண்ணமாவது வஞ்சியுரிச்சீர் பயின்று வரும்.

**“வசையில்புகழ் வயங்குவெண்மீன்**

**திசைதிரிந்து தெற்கேகினும்.”** (பட்டினப்.1)

## ஏந்தல் வண்ணம்

**ஏந்தல் வண்ணம்**

**சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.**

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்கவரும் என்றவாறு.

**“கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா**

**கூடலுட் கூடலே கூடலுங் கூடல்”**

## உருட்டு வண்ணம்

**உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்.**

உருட்டு வண்ணமாவது அராகந் தொடுக்கும் என்பதாம்

**“தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை**

**தழலென விரிவன பொழில்.”** (யாப்.வி.ப.299)

## முடுகு வண்ணம்

**முடுகு வண்ண முடிவறி யாமல்**

**அடியிறந் தொழுகி அதனோர் அற்றே.**

முடுகு வண்ணமாவது நாற்சீரடியின் மிக்கோடி அராகத்தோடு ஒக்கும்.

**“நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ”**

**வண்ணந் தாமே அவையென மொழிப.**

வண்ணம் எல்லாம் தொகுத்தக் கூறப்பட்டது

## அம்மை:

**சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்**

**அம்மை தானே அடிநிமிர் வின்றே.**

சிலவாய் மெல்லியவாகிய மொழியினானே தொடுக்கப்பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம்.

**“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதினோய்**

**தன்னோய்போற் போற்றாக் கடை.”** (குறள். 315)

### அழகு

**செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்**

**அவ்வகை தானே அழகெனப் படுமே.**

செய்யுட்குரிய சொல்லினாற் சீரைப்புணர்த்துத் தொடுப்பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகு எனப்படும்.

**“துணியிரும் பரப்பகங் குறைய வாங்கி -**

**வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே.”** (யாப்.வி.ப.377)

### தொன்மை

**தொன்மை தானே சொல்லுங் காலை**

**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.**

தொன்மையாவது உரையொடு பொருந்திப் வந்த பழமைத்தாகிய பொருண்மேல் வருவன. அவை இராமசரிதமும். பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்மேல் வருஞ் செய்யுள்

### தோல்.

**இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்**

**பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினுந்**

**தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.**

இழுமென் மொழியால் விழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியினால்

அடி நிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னுஞ் செய்யுளாம்.

**“பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்**

**அறிவோர் யார.ஃ.திறுவழி இறுகென”**

இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது.

**“திருமழை தலைஇய இருள்நிற விசும்பு.”** (மலைபடுகடாம்-1)

பரந்தமொழியான் அடிநிமிர்ந்து வந்தது.

### விருந்து

**விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.**

விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய்ப் புதிதாகச் சொன்னயாப்பின் மேலது ஆகும்.

புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல். இது பெரும்பான்மையும் ஆசிரியப்பாவைக் குறித்தது.

இயைபு

**ஞகார முதலா னகார ஈற்றுப்**

**புள்ளி இறுதி இயை பெனப் படுமே.**

ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாகவருஞ் செய்யுள் இயைபென்னுஞ் செய்யுளாம்.

**புலன்**

**தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து**

**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்**

**புலனென மொழிப புலனுணர்ந் தோரே.**

வழக்கச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம்.

**“பாற்கடல் முகந்த பருவக் கொண்மூ -**

**பெருங்காடு மடுத்த காமர் களிறே.”** (யாப்.வி.ப.379)

**இழைபு**

**ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது**

**குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து**

**ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்**

**இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.**

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது ஆசிரியப்பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம்.

**பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து -**

**தொருநீ மறைப்ப ஒழிகுவ தன்றே”**

**யாப்பு புறனடை**

**செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி**

**இழைத்த இலக்கணம் பிழைத்தன போல**

**வருவனஉ‌ளவெனும் வந்தவற் றியலால்**

**திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.**

இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

பயிற்சி வினாக்கள்:

1.சீர்களின் வகைகளை விரித்து எழுதுக.

2.பாவிற்குரிய அடிகள் குறித்து விளக்குக.

3.பாக்களின் ஓசை குறித்து தொகுத்துரை.

4.ஆசிரியப்பாவின் வகைகளை விவரி

5.அடிவரையறை இல்லாதன குறித்து விவரி.

6.பயன் என்றால் என்ன?

7.முன்னம் என்பதனை விளக்குக

8.மாட்டேறு என்பதனைச் சுட்டியுரைக்க.

9.வண்ணம் குறித்து விவரி.

10.அடிநிமிர்வில்லாச் செய்யுள் வகை குறித்து கட்டுரைக்க.

# மரபியல்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதி இயல் மரபியல் என்பதாகும். தமிழில் இந்தச் சொற்கள் இந்தப் பொருளைத் தரும் என்று முன்னோர்கள் வகுத்துக் கூறினர். இவ்வாறு முன்னைக் காலம் தொட்டு வழங்கி வரும் முறைமையே மரபு எனப்படும். இவ்வியலில் பெயர்ச்சொற்களை இளமைப்பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் எனப் பிரித்துரைப்பார் தொல்காப்பியர். மேலும் உலகத்து உயிர்களை அவற்றின் அறிவின் அடிப்படையிலும் பிரித்துரைப்பார். இயலின் இறுதிப்பகுதி நூலின் இலக்கணம், நூலின் வகைகள், உத்திகள் போன்றவற்றையும் விரித்துரைப்பதாய் அமையும்.

## இளமைப் பெயர்கள்:

**மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்**

**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**

**கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்**

**றொன்பதும் குழவியொ டிளமைப் பெயரே .**

பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவியொடு இவ்வொன்பதும் இளமைப் பெயராகும்.

## ஆண்பாற்பெயர்கள்:

**எருதும் ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்**

**சேவும் சேவலும் இரலையும் கலையும்**

**மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்**

**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**

**யாத்த ஆண்பாற் பெயரென மொழிப.**

ஆண்பாற்பெயர் உணர்த்திற்று. ஆண்பாற் பெயர் இவ்வெண்பட்ட பதினைந்தும் பிறவுமாகும்.

பிறவும் என்றதனான் ஆன் என்றும் விடை என்றும் வருவன

## பெண்பாற் பெயர்கள்:

**பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**

**மூடும் நாகுங் கடமையும் அளகும்**

**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**

**அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.**

பெண்பாற்பெயர் உணர்த்திற்று. இக்கூறப்பட்ட பதின்மூன்றும் பெண்பாற் பெயராம்.

## இளமைப் பெயர்கள்:

**அவற்றுள்,**

**பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை**

மேற் சொல்லப்பட்டவற்றுட் பார்ப்பு, பிள்ளை என்னும் இரண்டும் பறவையின் இளமைப் பெயர்கள் ஆகும்.

**தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.**

ஊர்வனவற்றிற்கு மேற் சொல்லப்பட்ட இருவகை இளமைப் பெயரும் ஆகும்

## குட்டி:

**மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு**

**ஆங்கவை நான்குங் குட்டிக் குரிய.**

இவை நான்குங் குட்டி என்று சொல்லப்படும். மூங்கா என்பது கீரி.

## பறழ்:

**பறழெனப் படினும் உறழாண் டில்லை.**

மேற்சொல்லப்பட்ட நால்வகை உயிர்க்கும் இளமைப்பெயர் பறழ் எனினும் உறழ்ச்சியில்லை.

## குருளை:

**நாயே பன்றி புலிமுயல் நான்கும்**

**ஆயுங் காலைக் குருளை என்ப.**

நாய், பன்றி, புலி, முயல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கின் இளமைப்பெயர் குருளை என்று வழங்கப்பெறும்.

**நரியும் அற்றே நாடினர் கொளினே.**

நரியின் இளமைப் பெயரும் ஆராயுங் காலத்துக் குருளை எனப்படும்.

**குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்**

மேற் சொல்லப்பட்ட ஐவகையுயிர்க்குங் குட்டி பறழ் என்பனவும் ஆகும்.

## பிள்ளை:

**பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை**

**கொள்ளுங் காலை நாயலங் கடையே.**

மேற்கூறியவற்றுள் நாயன்றி ஒழிந்தவை பிள்ளை என்னும் இளமைப்பெயர்க்கு உரியன ஆகும் பன்றிக்குருளை பன்றிக்குட்டி பன்றிப்பறழ் பன்றிப்பிள்ளை எனவுமாம்.

மறி:

**யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்**

**ஓடும் புல்வாய் உளப்பட மறியே.**

ஆடு, குதிரை, நவ்வி, உழை, புல்வாய் முதலாகச் சொல்லப்பட்ட ஐந்துயிரும் மறி என்னும் இளமைப்பெயர் பெறும்.

குட்டி:

**கோடுவாழ் குரங்கு குட்டியுங் கூறுப.**

கோடுவாழ் குரங்கென்பது ஊகவும் முசுவுங் கொள்ளப்படும்.

**மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**

**அவையும் அன்ன அப்பா லான.**

இதுவுங் குரங்குக் குரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

மகவு முதலாகிய நான்குங் குரங்குச்சாதி இளமைப் பெயராம்.

குரங்குக்குட்டி, குரங்குமகவு, குரங்குப்பிள்ளை, குரங்குப்பறழ், குரங்குப்பார்ப்பு.

**கன்று:**

**யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்**

**மானோ டைந்துங் கன்றெனற் குரிய.**

யானை, குதிரை, கழுதை, கடமை, மான் என்னும் ஐந்தினது இளமைப் பெயர் கன்று என்று வரும்.

**எருமையும் மரையும் வரையார் ஆண்டே.**

கன்றெனக் கூறும் இளமைப்பெயர் எருமைக்கும் மரைக்கும் உரித்து.

**கவரியும் கராகமும் நிகரவற் றுள்ளே.**

கவரி என்று சொல்லப்படுவதும் கராகமென்று சொல்லப்படுவதும் கன்றென்னும் பெயர் பெறும் கராகமென்பது கரடி ஆகும்.

**ஒட்டகம் அவற்றோ டொருவழி நிலையும்**

ஒட்டகமென்று சொல்லப்படுவதுங் கன்றென்னும் பெயர் பெறும்.

குழவி:

**குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.**

குழவியென்னும் இளமைப் பெயர் யானை பெறும்.

**ஆவும் எருமையும் அதுசொலப் படுமே.**

ஆவும் எருமையும் குழவிப்பெயர் பெறும்.

**கடமையும் மரையு முதனிலை ஒன்றும்.**

கடமாவும் மரையுங் குழவி எனப் பொருந்தும்

**குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்**

**நிரம்ப நாடின், அப்பெயர்க் குரிய.**

குரங்கு முதலிய மூன்றும் ஆராயுங் காலத்துக் குழவிப்பெயர்க்குரியதாகும்.

**குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை**

**கிழவ அல்ல மக்கட் கண்ணே.**

குழவி மகவென்று சொல்லப்பட்ட இரண்டு இளமைப்பெயரும் அல்லாத ஏனையவை மக்கட்குரியனவல்ல.

**பிள்ளை குழவி கன்றே போத்தெனக்**

**கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே**

ஓரறிவுயிராகிய புல்லும் மரனும் இளமைப்பெயர் பிள்ளை முதலாகச் சொல்லப்பட்ட நான்குங் கொள்ளவும் அமையும்.

**நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே**

மேற்கூறப்பட்ட நான்கின் இளமைப் பெயரும் நெல்லும் புல்லும் என வரும் ஓரறிவுயிர்க்கு கொள்ளார்.

உம்மை எதிர்மறையாதலின் மேற்சொல்லப்பட்ட இளமைப்பெயர் கூறப்பெறார் என்பதாம்

**சொல்லிய மரபின் இளமை தானே**

**சொல்லுங் காலை அவையல திலவே.**

இளமைப்பெயரை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

சொல்லிப்போந்த மரபுடையனவன்றிச் சொல்ல வேண்டு மரபுடையனவற்றிற்கும் சொல்லுமிடத்து இவை தாமே இளமைப்பெயர் ஆகும்.

**“பறவைதம் பார்ப்புள்ள” (கலித்.119)**

**“வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே."**

**“யாமைப் பார்ப்பின் அன்ன."** (குறுந்152)

**“தன்பார்ப்புத் தின்னும் பண்பின் முதலை”** (ஐங்குறு.41)

பார்ப்பு, பிள்ளை பிறவும் பறப்பன ஊர்வனவெல்லாம் இவ்வகையினாற் கூறுப. நடப்பனவற்றுள், மூங்காக்குட்டி, மூங்காப்பறழ், வெருகுக்குட்டி, வெருகுப்பறழ், எலிக்குட்டி, எலிப்பறழ் அணிற்குட்டி, அணிற்பறழ், நாய்க்குட்டி, நாய்க்குருளை, நரிக்குட்டி, நரிக்குருளைஞ நரிப்பறழ், நரிப்பிள்ளை, பன்றிக்குட்டி, பன்றிக்குருளை பன்றிப்பறழ், பன்றிப்பிள்ளைபுலிக்குட்டி, புலிக்குருளைஞ புலிப்பறழ், புலிப்பிள்ளைஞ குரங்குக்குட்டி, குரக்குமக குரக்குப்பிள்ளை, குரக்குப் பார்ப்பு குரக்குப்பறழ் குதிரைமறி,குதிரைக்கன்று நவ்விமறி உழைமறி புல்வாய்மறி, யானைக்கன்று குரக்குக் குழவி, ஊக முசுவென்பனவும் இவ்வாறே கொள்க. யாட்டுமறி, யானைக்குழவி, கழுதைக்கன்று கடமைக்கன்று, கடமைக்குழவி ஆன்கன்று, ஆன்குழவி எருமைக்கன்று எருமைக்குழவி, மரைக்கன்று, மரைக்குழவி, கவரிக்கன்று, கராகக்கன்று ஒட்டகக்கன்று மக்கட்குழவி, மக்கண்மக தெங்கம்பிள்ளை கமுகங்கன்று கருப்பபோத்து, ஓரறிவுயிர்க்கட் குழவியென்பது வந்தவழிக் கண்டுகொள்ளலாம்

இனி அவையல்லது பிறவில்லை யென்றமையின். ஒன்றற்குரிய வற்றை ஒன்றற்குரித்தாக்கி வழங்குவனவுஞ் சிறுபான்மை கொள்ளப்படும். கழுதை மறியென்பனவும் (“பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி குறுந்7) என்றாற் போலவும் சான்றோர் செய்யுளகத்து வருவன கடியப்படா வென்றவாறு எடுத்தோதாதன பெரும்பான்மை இனி எடுத்தோதாதன: சிங்கம் புலிப்பாற்படும் உடும்பு ஓந்தி,பல்லி, அணிற் பாற்படும் நாவியென்பது மூங்காவின் பாற்படும்.

**உயிர்களின் பகுப்பு:**

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**

**இரண்டறி வதுவே அதனொடு நாவே**

**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**

**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**

**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**

**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.**

உலகத்துப் பல்லுயிரையும் அறியும் வகையாற் கூறப்படுதலை உணர்த்துதல் நுதலிற்று.

ஓரறிவுயிராவது உடம்பினானறிவது. அதாவது உடம்பினால் வெப்பம் தட்பம் வன்மை மென்மை அறிவது. ஈரறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் அறிவது அதாவது நாவினாற் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் என்பன அறியும் மூவறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் அறிவது மூக்கினால் நன்னாற்றம் தீயநாற்றம் அறியும்.

நாலறிவுயிராவது உடம்பினானும், வாயினாலும், மூக்கினானும், கண்ணினானும் அறிவது, அதாவது கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பன அறியும் ஐயறிவாவது உடம்பினானும், வாயினானும், மூக்கினானும், கண்ணினானும், செவியினானும் அறிவது அதாவது செவியினால் ஓசை வேறுபாடும், சொற்படும் பொருளும் அறியும். ஆறறிவுயிராவது உடம்பினானும், வாயினானும், மூக்கினானும்,கண்ணினானும், செவியினானும், மனத்தினானும் அறிவது அதாவது இது செயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித்தல். அனுமானமாவது புகை கண்டவழி நெருப்புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல் இவ்வகையினான் உயிர் ஆறுவகையினான் ஆயின.

இவ்வகையினான் உலகிலுள்ளவெல்லாம் மக்கட்கு அறிதலாயின. இனி அவற்றை அறியும் உயிர்களை வருகின்ற சூத்திரங்களாற் கூறுதும்.

## ஓரறி உயிர்கள்:

**புல்லும் மரனும் ஓரறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

ஓரறிவுயிராமாறு புல்லும் மரனும் என்று சொல்லப்பட்ட இருவகை உடம்பினாலறியும் அக்கிளைப்பிறப்பு பிறவும் உள என்றவாறு.

பிற ஆவன கொட்டியுந் தாமரையுங் கழுநீரும் என்பன.

புல்லென்பது புறவயிர்ப்பு உடையனளூ மரமென்பது அகவயிர்ப்புடையன, அவையாமாறு முன்னர்க் கூறப்படும்

## ஈரறிவு பெயர்கள்:

**நந்தும் முரளும் ஈரறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

ஈரறிவுயிர் உணர்த்துதல் நுதலிற்று.

ஈரறிவுயிராவன நந்தும், முரளுமென்று சொல்லுவர். பிறவுமுள ஈரறிவுயிராம்.

நந்து என்றதனால் சங்கு, நத்தை, அலகு, நொள்ளை என்பன கொள்க. முரள் என்றதனால் இப்பி, கிளஞ்சில், ஏரல் என்பனவும் கொள்க

## மூவறிவு உயிர்கள்:

**சிதலும் எறும்பும் மூவறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

மூவறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

சிதலும், எறும்பும், மூவறிவின அக்கிளைப் பிறப்பு பிறவும் உள என்பதாம்.

பிற ஆவன அட்டை முதலாயின.

## நாலறிவு உயிர்கள்:

**நண்டுந் தும்பியும் நான்கறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

நாலறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நண்டும், தும்பியுமென நாலறிவையுடைய அக்கிளைப் பிறப்பு பிறவும் உள.

பிறவு மென்றதனான் ஞிமிறு, சுரும்பென்பன கொள்க.

## ஐந்தறிவு உயிர்கள்:

**மாவும் புள்ளும் ஐயறி வினவே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

ஐயறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நாற்கால் விலங்கும் புள்ளும் ஐயறிவுடைய ஞஅக்கிளைப் பிறப்பு பிறவும் உள

பிற ஆவன தவழ்வனவற்றுள் பாம்பு முதலாயினவும் நீருள் வாழ்வனவற்றுள் மீனும் முதலையும் ஆமையும் முதலாயினவுங் கொள்ளப்படும்.

## ஆறறிவு உயிர்கள்:

**மக்கள் தாமே ஆறறி வுயிரே**

**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.**

ஆறறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

மக்கள் ஆறறிவுயிரெனப்படுவர் அக்கிளைப் பிறப்பு பிறவுமுள.

பிறவாவது தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர்.

**ஒருசார் விலங்கும் உளவென மொழிப.**

விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராம். அவையாவன கிளியுங் குரங்கும் யானையும் முதலாயின.

மேல் ஓரறிவுயிர் முதலாகத் தோற்றுவித்தார் அதனானே இச்சூத்திரங்கள் ஈண்டுக் கூறப்பட்டன.

## ஆண்பாற்பெயர்:

## களிறு:

**வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.**

**களிறென்று விதந்துகூறுதல் யானைக்குரித்து.**

களிறென்று விதந்து கூறுதல் யானைக்குரியது

**கேழற் கண்ணுங் கடிவரை இன்றே.**

பன்றியின் கண்ணும் ஆண்பாலைக் களிறென்றல் கடியப்படாது.

## ஒருத்தல்:

**புல்வாய் புலிஉழை மரையே கவரி**

**சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்.**

புல்வாய்,புலி,உழை,மரை,கவரி என்ற அறுவகை உயிரும் ஒருத்தல் என்னும் ஆண்பெயரோடு ஒன்றும்.

**வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன**

யானையும் பன்றியும் ஒருத்தல் எனப்படும்..

**ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்.**

எருமையினும் ஆணினை ஒருத்தல் என்று கூறப்படும்.

## ஏறு:

**பன்றி புல்வாய் உழையே கவரி**

**என்றிவை நான்கும் ஏறெனற்குரிய.**

பன்றி முதலாகிய நான்கும் ஆணினை ஏறென்று கூறலாம்.

## பெற்றம்:

**எருமையும் மரையும் பெற்றமும் அன்ன.**

எருமையும் மரையும் பெற்றம் எனப்படும்.

## ஏறு:

**கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே.**

கடல்வாழ் சுறாவின் ஆணினையும் ஏறெனப்படும்

## போத்து:

**பெற்றம் எருமை புலிமரை புல்வாய்**

**மற்றிவை எல்லாம் போத்தெனப் படுமே.**

பெற்றம்,எருமை,புலி, மரை, புல்வாய் முதலாகிய ஐந்துள் ஆணினையும் போத்தெனலாகும்.

**நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய**

நீருள் வாழும் முதலை முதலாயினவற்றுள் ஆண்பால் போத்தெனக் கூறுதற்குரியதாம்.

**மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும்.**

மயிலுள்ளும் எழாலுள்ளும் ஆணினைப் போத்தென்றல் பெரும்பான்மையாகும்.

**புல்வாயில்**

**இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய**

இரலை என்னும் பெயரும் கலை என்னும் பெயரும் புல்வாயில் ஆண்பாற்குரியது.

**கலை:**

**கலையென் காட்சி உழைக்கும் உரித்தே**

**நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.**

கலை என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரித்தாம்.

**ஆடு**

**மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்**

**யாத்த என்ப யாட்டின் கண்ணே.**

மோத்தை, தகர்,உதள்,அப்பர் முதலாகின ஆட்டில் ஆணிற்குரியவாம்.

**சேவல்:**

**சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்**

**மாயிருந் தூவி மயிலலங் கடையே.**

மயிலல்லாத பறவைகளின் ஆண்பாற்பெயர் சேவலென்று கூறப்படும்.

சிறகு என்றது ஆகுபெயர்

**ஏறு**

**ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்**

**ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.**

ஆற்றலுடைத்தாகிய ஆண்பாற் கெல்லாம் ஏற்றையென்னும் பெயர் உரித்தாகும்.

.

**ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய**

**பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய**

**காண்பவை அவையவை அப்பா லான.**

ஆண்பால் உயிரெல்லாம் ஆண் என்னும் பெயர் பெறும். பெண்பால் உயிரெல்லாம் பெண் என்னும் பெயர் பெறும்.

வேழக்குரித்து என்னும் சூத்திர முதலாக இத்துணையும் ஆண் பெயர் கூறினார். இனிப் பெண் பெயர் கூறுகின்றரார். அதிகாரப்பட்ட பொருள் சே, கடுவன், கண்டி என்பன சிறப்புச் சூத்திரத்தாகலின் அவற்றிற்குரியவெனக் கூறிற்றிலராலெனின் அவற்றுள் கடுவனும் சுண்டியும் முன்னரெடுத்தோதப்படும். சே என்பது ஆவினுள் ஆணையே குறித்து வழங்கலின் ஓதாராயினார். ஈண்டு ஓதப்பட்டன பல பொருள் ஒரு சொல்லும் ஒரு பொருட் பல சொல் லும் என்று கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டது வேழத்துள் ஆண் களிறு, ஒருததல், ஏற்றை எனப்படும் பன்றியுள் ஆண் ஒருத்தல், ஏற்றை எனப்படும் புல்வாயுள் ஆண் ஒருத்தல், ஏறு, ஏற்றை, போத்து, இரலை, கலை எனப்படும் புலியுள் ஆண் ஒருத்தல், போத்து, ஏற்றை எனப் படும் உழையுள் ஆண் ஒருத்தல், ஏறு, கலை ஏற்றை எனப்படும் மரையுள் ஆண் ஒருத்தல், ஏறு, போத்து, ஏற்றை எனப்படும் சுவரியுள் ஆண் ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும் கராத்துள் ஆண் ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும் எருமையுள் ஆண் ஒருத்தல், போத்து, ஏற்றை, கண்டி எனப்படும் சுறவில் ஆண் ஏற்றை எனப்படும் பெற்றத்துள் ஆண் போத்து, ஏறு, ஏற்றை எனப்படும் “எருது காலுறா திளையர் கொன்ற” என வருதலின் எருதும் ஆம் அதிகாரப் புறனடையாற் கொள்க. நீர்வாழ் சாதியுள் ஆண் வராற் போத்து, வாளைப்போத்து என வரும். முசுவில் ஆண் சுலை எனப்படும். குரங்கும் ஊகமும் இவ்வாறே கொள்ளப்படும் கடுவன் எனவும் வரும். ஆட்டினுள் ஆண் மோத்தை, தகர், உதள், அப்பர் என வரும் புள்ளினுள் மயிலாண் எழால் சேவல் போத்து, ஏற்றை எனப்படும். புள்ளினுள் ஆணெல்லாவற்றினும் மயிலல்லாதனவெல்லாம் சேவல் ஏற்றை எனப்படும். ஓரறிவுயிருள் ஆண் பெண் என வேறுபடுத்தலாவன ஏற்றைப்பனை, ஆண்பனை என வரும்.

## பெண்பாற்பெயர்:

### பிடி:

பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இனிப் பெண் பெயர் உணர்த்துகின்றார்.

பிடி என்னும் பெண்பெயர் ஆனையின் மேலதாகும்.

### பெட்டை:

ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை

பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

பெட்டை என்னும் பெயர் ஒட்டக முதலாகச் சொல்லப்பட்ட நான்குக்கும் பெண்பாற்குப் பெயராம்..

**புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.**

பெட்டை என்னும் பெயருக்குப் புள்ளிற் பெண்பாலும் உரியதாகும்.

**பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்.**

பேடை என்னும் சொல்லும் பெடை என்னும் சொல்லும் ஆராயுமிடத்துப் பெட்டை என்பதனோடு ஒன்றும்.

### அளகு:

**கோழி கூகை ஆயிரண் டல்லவை**

**சூழுங் காலை அளகெனல் அமையா.**

கோழியுங் கூகையும் அளகெனப்படும்.

**பெண்பா லான**

**அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.**

அளகென்னும் பெண்பாற் பெயர் மயிலுக்கும் பெண்பாற்கும் உரித்து.

### பிணை:

**புல்வாய் நவ்வி உழையே கவரி**

**சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.**

புல்வாய், நவ்வி, உழை, கவரி முதலாகிய நான்கிற்கும் பிணை என்னும் பெண்மைப்பெயர் வழங்குதற்குரித்தாகும்.

இது புள்ளின் வைத்தமையாற் புள்ளின்பின் வருதல் பெரும்பான்மை.

### பிணவு:

**பன்றி புல்வாய் நாயென மூன்றும்**

**ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை.**

பன்றி முதலாகிய மூன்றிற்கும் பெண்பாற்குப் பிணவு என்னும் பெயர் பொருந்திற்று

**பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.**

பிணவல் என்று சொல்லினும் மேற் சொல்லப்பட்டவற்றின் மேல என்றவாறு.

### ஆ:

**பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.**

ஆ என்னும் பெண்பெயர் பெற்றம் முதலாகிய மூன்றிற்கு முரித்து.

## பெண் - பிணவு:

**பெண்ணும் பிணவு மக்கட் குரிய.**

பெண்ணென்னும் பெயரும் பிணவு என்னும் பெயரும் மக்களிற் பெண்பாற் குரித்து.

## நாகு:

**எருமையும் மரையும் பெற்றமும் நாகே.**

எருமை முதலாகச் சொல்லப்பட்ட மூன்றற்கும் நாகு என்னும் பெண்பெயர் உரித்து.

**நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.**

நீர்வாழ்வனவற்றுள் நந்தென்பதூஉம் நாகு என்னும் பெண்பெயர் பெறும்

## மூடு – கடமை:

**மூடுங் கடமையும் யாடல பெறாஅ.**

மூடும் கடமையும் ஆட்டின் பெண்பாலதாகும்.

## பாட்டி:

**பாட்டி என்ப பன்றியும் நாயும்.**

பாட்டி என்னும் பெயர் பன்றியினதும் நாயினதும் பெண்பெயர்க்குரிய..

**நரியும் அற்றே நாடினர் கொளினே.**

நரியும் பெண்பாற்குப் பாட்டி என்னும் பெயர் பெறும்.

## முசு - மந்தி:

**குரங்கு முசுவும் ஊகமும் மந்தி.**

குரங்கு, முசு, ஊகம் முதலாயின மூன்றும் பெண்பால் மந்தி என்னும் பெயர்பெறும். பெண்பாற் பெயர்கள்: யானையுள் பெண் பிடி ஒட்டகம் - பெட்டை குதிரை - பெட்டை கழுதை - பெட்டை மரை - பெட்டை, நாகு. ஆ: புள்ளு - பெட்டை, பேடை, பெடை கோழி - அளகு கூகை மயில் - அளகு புல்வாய் - பிணை, பிணா, பிணவு, பிணவல், நவ்வி - பிணை: உழை கவரி - பிணை பன்றி - பிணவு, பிணவல், பாட்டி நாய் - பிணவு, பிணவல், பாட்டி பெற்றம் - ஆ நாகு எருமை - ஆ, நாகு மக்கள் - பெண் பிணவு நந்து - நாகு ஆடு - மூடு, கடமை நரி - பாட்டி குரங்கு - முசு ஊகம், மந்தி எனவரும்.

## மேலும் ஒரு சிறப்பு விதி:

**குரங்கினுள் ஏற்றைக் கடுவன் என்றலும்**

**மரம்பியல் கூகையைக் கோட்டான் என்றலும்**

**செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்**

**வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்**

**குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்**

**இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்**

**எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்**

**முடிய வந்த வழக்கின் உண்மையிற்**

**கடிய லாகா கடன்றிந் தோர்க்கே.**

குரங்கு முதலாகச் சொல்லப்பட்டவற்றை இப்பெயரான் உலகத்தார் வழங்குதலின் ஈண்டோதிய இலக்கணத்தின் மாறுபட்டு வருவன வழக்கினுஞ் செய்யுளினும் அடிப்பட்டுவரின் வழுவென்று கடியப்படாது.

**பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.**

பெண்ணும். ஆணும், பிள்ளையும் பற்றவருஞ் சொல் மேலெடுத்தோதினவை என்றவாறு.

இனிச் சிறப்புவிதியுடைய அந்தணர்க் குரியன கூறப்படுகின்றது.

## அந்தணர்க்குரிய மரபு:

**நூலே கரகம் முக்கோல் மணையே**

**ஆயுங் காலை அந்தணர்க் குரிய.**

நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங் காலத்து அந்தணர்க்கு உரியதாகும்.

## அரசர்க்குரிய மரபு:

**படையுங் கொடியுங் குடையும் முரசும்**

**நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்**

**தாரும் முடியும் நேர்வன பிறவும்**

**தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.**

படை - கருவி, படை முதலான ஒன்பதும் செங்கோலும் பிறவுமென்றதனான். ஆரமுங் கழலு மெல்லாம் அரசர்க்குரியதாம்.

## அரசர்க்கும் அந்தணர்க்கும் பொதுவாகிய மரபு:

**அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு**

**ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.**

அவை நாலு தொழில ஈதல் வேட்டல் வேட்பித்தல் ஓதல்

**பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழப்பெயர்**

**நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்**

**பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.**

இப்பொருண்மையும் அரசர்க்கு உரித்து அந்தணர்க்கு உரித்தாம்.

## ஊரும் - பெயரும்

**ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்**

**யாரும் சார்த்தி அவையவை பெறுமே.**

ஊரும் இயற்பெயரும் சிறப்புப்பெயரும் தத்தந் தொழிற்கேற்ற கருவியும் எல்லாரையும் சார்த்தி அவையவை வருதல் பெறும். தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்

## தலைமைக் குணம்

**நிலைமைக் கேற்ப நிகழ்த்துப என்ப.**

தலைமைக் குணமுடையராகக் கூறுதலும் தத்தமக்கேற்ற நிலைமைக்குப் பொருந்துமாறு நிகழ்த்துப என்பதாம்.

எனவே இறப்பவுயர்தல் இறப்ப விழிதல் ஆகாதென்றவாறாம்.

## அரசர், வணிகர் அல்லாதோர் மரபு:

**இடையிரு வகையோர் அல்லது நாடிற்**

**படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.**

அரசரும் வணிகரும் அல்லாதோர்க்குப் படைக் கலவகை கூறப்பெறார்.

## வைசிகர் மரபு:

**வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.**

வைசிகன் வாணிகத்தான் வாழும் வாழ்க்கையைப் பெறும்.

**மெய்தெரி வகையின் எண்வகை உணவின்**

**செய்தியும் வரையார் அப்பா லான.**

எண்வகை உணவாவன, நெல்லு, காணம் வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதும்பை.

இவையிற்றை உண்டாக்குகின்ற உழவு தொழிலும் வாணிகர்க்கு வரையாது.

**கண்ணியுந் தாரும் எண்ணினர் ஆண்டே.**

வைசிகருக்கும் கண்ணியுந் தாரும் சொல்லப் பெறும்

## வேளாண் மாந்தர் மரபு:

**வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது**

**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.**

வேளாண் மாந்தர்க்குத் தொழில் உழவே என்பதாம்.

**வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்**

**வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.**

எய்தியதன்மேற் சிறப்பு விதி.

வேந்தரால் ஏவப்பட்ட தொழிலினானே படையுங் கண்ணியும் வேளாண்மாந்தர்க்கும் உளதாகும்.

## அந்தணாளர்

**அந்த ணாளர்க் கரசுவரை வின்றே**

அமாத்திய நிலையும் சேனாபதி நிலையும் பெற்ற அந்தணாளர்க்கு அரசர் தன்மையும் வரைவில ஆகும்.

அ∴தாவது மந்திரி புரோகிதனாகியவழிக் கொடியும் குடையும் கவரியும் தாரு முதலாயின அரசராற்பெற்று அவரோடு ஒருதன்மையராகியிருத்தல்.

## வைசிகருக்கும் வேளாண் மாந்தருக்குமான பொது மரபு:

**வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்**

**தாரும் ஆரமுந் தேரு மாவும்**

**மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய.**

வில்லு முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் மன்னனாற்பெற்ற மரபினால் வைசிகர்க்கும் வேளாளர்க்குமுரியதாம்.

**அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.**

அன்னர்தாம் இழிந்தோராயினும் மேற்சொல்லப்பட்ட மன்னனால் வில்லு முதலாயின பெற்ற மரபினராயினும் நான்கு குலத்திலும் இழிந்த மாந்தர்க்கு அவை உளவாகக் கூறப்படாது. எனவே அவரவர்க்குரியவாற்றாற் கூறப்பெறும்.

## புறக்காழ்:

**புறக்கா ழனவே புல்லெனப்படுமே.**

ஓரறிவுடையன. புறவயிர்ப் புடையனவற்றைப் புல் என்று சொல்லுவர்.

அவையாவன: தெங்கு, பனை, கமுகு, மூங்கில் முதலாயின.

## அகக்காழ்:

**அகக்கா ழனவே மரமெனப் படுமே.**

உள்வயிர்ப் புடையனவற்றை மரமெனப்படும்.

## புல்லாகிய உறுப்பில் வருவன:

**தோடே மடலே ஓலை என்றா**

**ஏடே இதழே பாளை என்றா**

**ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்**

**புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.**

தோடு முதலாகச் சொல்லப்பட்ட உறுப்பின் பெயரெல்லாம் புல்லாகிய உறுப்பின் கண்ணே வரும்.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்புமில்லாதனவற்றுள் ஒருசாரன இவ்வகைப்பட்ட உறுப்புப் பெயருடையனவாகி இவையும் புல்லெனப்படும்.

அவையாவன: வாழை ஈந்து தாமரை கழுநீர் என்றித் தொடக்கத்தன.

## மரத்தின் உறுப்புகள்:

**இலையே முறியே தளிரே தோடே**

**சினையே குழையே பூவே அரும்பே**

**நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்**

**மரனொடு வரூஉங் கிளவி என்ப.**

இலை முதலாகச் சொல்லப்பட்ட உறுப்புப்பெயர் மரத்துக்கு அங்கமாம்

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்பும் இல்லாதனவற்றுள் ஒரு சாரன இவ்வுறுப்புப்பெயர் உடையன மரமெனப்படுமென்று கொள்க.

அவையாவன: முருக்கு தணக்கு முதலாயின.

**காயே பழமே தோலே செதிளே**

**வீழோ டென்றாங் கவையும் அன்ன.**

இச்சூத்திரம் அவ்விருவகைக்கும் பிற்கூறலிற் காய் முதலாகச் சொல்லப்பட்ட அவ்வுறுப்புப்பெயர் அவ்விரு வகைக்கும் பொதுவெனப்படும்.

தாழை பூவுடைத் தாகலானும் கோடுடைத் தாகலானும் புறவயர்ப்பின்மையானும் மரமெனப்படுமாயினும் புல் என்றல் பெரும்பான்மை.

## ஐம்பூத மயக்கம் உலகம்:

**நிலம்தீ நீர்வளி விசும்பொ டைந்துங்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்**

**இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்**

**திரிவில் சொல்லொடு தழா அல் வேண்டும்.**

இதுவுமோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

உலகு நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங் கலந்த மயக்கமாதலான் மேற்சொல்லப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழாமல் திரிபுபடாத சொல்லோடே தழுவுதல்வேண்டும்.

கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல்.

மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றாதல் போறல்.

உலகமென்றது உலகினையும் உலகினுட் பொருளையும், உலகமாவது முத்தும் மணியுங் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவிநிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி யொன்றானாற்போல வேற்றுமைப்படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடைத்தாகலிற் கலந்த மயக்கமென்றார்.

இப்பொருள் எல்லா வுலகத்தையும் விட்டுநீங்காமையின் இவற்றை ஒருமுகத்தான் நோக்க வேறுபாடில்லா மாதலான் மேற்கூறிப்போந்த முறையினான் வேறுபடுத்து இருதிணையாகவும் ஐம்பாலாகவும் இயன்ற நெறி வழுவாமைத் திரிபுபடாத சொல்லோடே புணர்க்க என்றவாறாம்.

சாத்தன் சோற்றை உண்டான் என்பது. இது உண்டற் குரியானெனக் கூறுதலின் மரபாயிற்று. அஃதேல் வழாமை தழால்வேண்டுமெனக் கருதியபொருள் முடியும். திரிவில்சொல் என்றது மிகையெனின். ஒக்கும் குழவி என்பது உயர்திணைக்கண்வரின் அதற்குரிய பாலாற் கூறாது அஃறிணைக்குரிய பாலாற் கூறப்படுதலின் அவ்வகை யான் வருவன வழுவாயினும் திரிவில்சொல் என்றதனால் இதுவும் அடக்கிக்கூறினார்.

### செய்யுள் மரபு:

**மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை**

**மரபு வழிப்பட்ட சொல்லி னான.**

செய்யுட் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

ஈண்டுச் சொல்லப்பட்ட மரபுநிலையிற் றிரிதல் செய்யுட்கில்லை மரபு வழிப்பட்ட சொல்லினாற் செய்யவேண்டுதலின் என்றவாறு.

எனவே யாதானும் ஒரு செய்யுளும் ஈண்டோதிய மரபினாற் செய்ய வேண்டும்.

செய்யுட்கில்லை எனவே வழக்கினுட் சில திரியவும் பெறும். அவை சூதுரையுள் ஆணினைப்

போத்தென்றல் போல்வன.

### வழு

**மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.**

மரபுநிலை திரிந்துவரிற் பொருள் வேறுவேறாகும்.

எனவே வழுவென்றவாறாம்.

### வழக்கு:

**வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**

**நிகழ்ச்சி அவர்கட் டாக லான.**

ஐயமறுத்தலை நுதலிற்று.

வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் மேலது நூலின் நிகழ்ச்சி அவர்மாட்டாதலான் என்றவாறு.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லையெனவும் அதனானே வழக்கிற் சிறுபான்மை வருமெனவும் செய்யுள்மரபு ஒழியவரின் அது வழுவாமெனவும் கூறினாராயிற் பாயிரத்துள் "வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலினெழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி" என்றதனோடு மாறுகொள்ளுமோவென ஐயுற்றார்க்கு ஆண்டு வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் வழக்கினை எனவும் இழிந்தோர் வழக்கு வழக்கெனப்படா தெனவும் கூறியவாறு.

## நூல் மரபு:

**மரபுநிலை திரியா மாட்சிய வாகி**

**உரைபடு நூல்தாம் இருவகை நிலைய**

**முதலும் வழியுமென நுதலிய நெறியின.**

மேற் செய்யுளியலுள் தோற்றுவாய் செய்தநூலை இலக்கணவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

மரபாவது நூற்கு இன்றியமையாத இயல்பு. அவ்வியல்பு திரியாத மரபுடைத்தாகி உரைக்கப்படும் நூல்தாம் இருவகைய முதனூல் எனவும் வழிநூல் எனவும் என்றவாறு.

உரைக்கவென்பது விகாரத்தால் தொக்கது. அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

சார்புநூல் என்பதும் ஒன்றுண்டாலெனின் , அஃது இருவர் ஆசிரியர் கூறியவதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங்கும்எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் ஒரு முனைவனாற் செய்யப்படின் முதனூலாம் பிறர் செய்யின் வழங்காது.

## முதல் நூல்:

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின**

**முனைவன் கண்டது முதனூ லாகும்.**

நிறுத்த முறையானே முதனூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வினையின் நீங்கி விளங்கிய அறிவை உடைய தன்மையோரால் செய்யப்படுது முதல் நூல் ஆகும்.

## வழிநூல்:

**வழியெனப் படுவ ததன்வழித் தாகும்.**

வழிநூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வழிநூல் எனப்படுவது முதல்வன் கண்ட நூல்வழியே செய்வதாகும்.

அஃதேல், இதனாற் பயன் என்னையெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும்.

## வழிநூலின் வகை:

**வழியின் நெறியே நால்வகைத் தாகும்.**

வழிநூல் எனப்படுவது நான்கு வகைப்படும்.

**தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து**

**அதர்ப்பட யாத்தலோடு அனைமர பினவே.**

வழிநூல் வகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

முதனூலாசிரியன் விரித்துச் செய்ததனைத் தொகுத்துச் செய்தலும், தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும், அவ்விருவகையினையும் தொகைவிரியாகச் சொல்லுதலும், வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தலும் என்பனவாகும்.

இது வழிநூலா னாயபயன்.

## நூலின் இலக்கண மரபு:

**ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை**

**மெய்ப்படக் கிளந்த வகைய தாகி**

**ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்**

**முப்பத் திருவகை உத்தியொடு புணரின்**

**நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.**

நூற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இனி, ஒத்த சூத்திரத்தானும் காண்டிகையானும் பொருண்மேற் கூறிய வகையுடைத்தாகிப் பத்துக்குற்றமும் இன்றி நுண்ணிதாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திரவுத்தியோடு புணருமாயின் நூலெனச் சொல்லுவர் புலவர்.

உரைப்பின் என்பதனை முன்னே கூட்டி நூலுரைப்பின் எனப் பொருளுரைக்க, அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

**உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்**

**புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்**

**விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு**

**புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே.**

இதுவுமது.

சூத்திரத்தின் முன்னர் உரையை விரித்துரைக்கும் இடத்தும் சூத்திரப்பொருள் விளங்கக் காண்டிகை புணர்க்கும் இடத்தும் ஆசிரியனஇப்பொருள் இவ்வாறு கூறல்வேண்டுமென விதித்தலும்

இப்பொருள் இவ்வாறு கூறப்பெறாதென விலக்கலுமாகிய இருவகையோடே கூடப் பொருந்தினவவை ஆராய்ந்து புணர்க்கவும் பெறும்.

இதனாற் சொல்லியது ஆசிரியன் சொன்ன சூத்திரத்தினைக்குறைபடக் கூறினானென்றல் அமையாமையானும் அவன் கூறுகின்ற பொருளினை நிலைபெறுத்தற்குப் பிறிதொன்றை விரித்தோதிய நெறியை விலக்கியும் பொருள் உரைத்துக் கொள்ளப்படுமென்றவாறு

செய்யுளியலுள்

**"நூலெனப் படுவது நுவலுங் காலை**

**முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்**

**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**

**உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி**

**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே."** (செய்யுளியல்.159)

என்று கூறுதலின் இதுவும் இலக்கணமாகக் கொள்க.

**சூத்திரத்தின் இலக்கணம் :**

**மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு**

**சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்**

**சொல்லுங் காலை உரையகத் தடக்கி**

**நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்**

**துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி**

**அளக்கல் ஆகா அரும்பொருட் டாகிப்**

**பல்வகை யானும் பயன்தெரி புடையது**

**சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.**

நூற்கு அங்கமாகிய சூத்திரத்திலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

மேல் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் என நால்வகையினும் சொல்லப்பட்ட பொருளோடு, சில எழுத்தினால் இயன்ற செய்யுட்டாகி, உரைக்குங்காலத்து அவ் உரையிற் பொருளெல்லாம் தன்னகத்தடக்கி, நுண்ணிய பொருண்மையொடு பொருந்திய விளக்கமுடைத்தாகி, கெடுக்கலாகாத துணைச் சூத்திரங்களையுடைத்தாகி வரையறுக்கப்படாத அரிய பொருளையுடைத்தாகிப் பலவாற்றானும் பயனையாராய்தல் உடையது சூத்திரம் எனக் கூறினார் புலவர் என்றவாறு.

அளக்கலாகா அரும்பொருளாவது பலமுகத்தானும் பொருள் கொள்ளக்கிடத்தல்.

செய்யுளியலுள்

**“சூத்திரந் தானே**

**ஆடி நிழலின் அறியத் தோன்றி**

**நாடுத லின்றிப் பொருள்நனி விளங்கி**

**யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே."** (செய்யுளியல்162)

என்பதாஉம் இதற்கிலக்கணம்.

**காண்டிகை:**

**பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்**

**கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் .**

காண்டிகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று குற்றமில்லாத சூத்திரஞ்சொன்ன இயல்பினான் மறைவின்றி விளக்குவது காண்டிகையாம்.

**காண்டிகை - சிறப்பு விதி:**

**விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்**

**சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா**

**ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்**

**மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.**

சூத்திரத்திற்படுஞ் சொற்பொருளை விட்டுநீங்குதலின்றி விரிவோடே பொருந்திக் குறித்த சூத்திர முடித்தற்காக ஏது நெறியானும் எடுத்துக் காட்டினானும் பொருந்தியாங்கமையும் பொருணெறியை யுடைத்துக் காண்டிகை யென்றவாறு.

விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தலாவது மிக அகலாமை. இம்மனை நெருப்புடைத் தென்றது சூத்திரப்பொருள்ளூ புகையுடைத்தாதலானென்பது ஏதுஅடுக்களைபோலவென்பது எடுத்துக்காட்டு, இவ்வகையினாற் சூத்திரப் பொருளுரைக்க வென்றவாறு.

**உரை:**

**சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற**

**இன்றி யமையா தியைபவை எல்லாம்**

**ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே.**

உரையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

சூத்திரத்துட் பொருளொழியவும் அந்நூலகத்தில் யாப்பிற்கும் பொருந்த இன்றியமையாதன வெல்லாங் கொணர்ந்து பொருந்த உரைப்பது உரையாகும்.

**உரையின் இயல்பு:**

**மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்**

தன்னூ லானும் முடிந்தநூ லானும்

ஐயமு மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்

தெற்றென ஒருபொருள் ற்றுமை கொளீஇத்

துணிவொடு நிற்றல் என ் மனார் புலவர்.

உரையாவது, 'மறுதலைக்கடாஅ மாற்றமுமுடைத்தாக' ஐயப்பட்டு நிற்றலு மருண்டு நிற்றலு நீக்கி, தன்னூலானாதல் அப்பொருண்முடிவுறக் கூறின நூலானாதல் தெளியவொரு பொருளை யொற்றுமைபடுத்து. இதுவே பொருளெனத் துணிதல் உரையிற் கியல்பென்பதாம்.

## முதல்நூல் - சிறப்பு விதி:

சொல்லப் பட்டன எல்லா மாண்பும்

மறுதலை யாயின் மற்றது சிதைவே.

மேலவற்றிற் கோதலான நூற்குரியதோர்மரபு முதனூலாயிற் சிதைவில்லை யென்பதாம்.

என்னை ஆவன கூறியது? விரியகலாதன சிதைவது வழிநூ லென்றவாறாம்.

## வழிநூற்கு உரியதோர் மரபு:

சிதைவில என்ப முதல்வன் கண்ணே.

முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்

வல்லோன் புனையா வாரம் போன்றே.

வழிநூற் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

முதனூலின் வழிச்செய்யினும் அந்நூல் யாப்பினுட் சிதையும். வல்லவன் புனையாத வாரம்போல வென்றவாறு.

## ஈரைங்குற்றம்:

சிதைவெனப் படுபவை வசையற நாடிற்

கூறியது கூறல் மாறுகொளக் கூறல்

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்

பொருளில கூறல் மயங்கக் கூறல்

கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்

பழித்த மொழியான் இழுக்கக் கூறல்

தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்

**என்ன வகையினும் மனங்கோள் இன்மை**

**அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.**

மேலதிகாரப்பட்ட ஈரைங் குற்றமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கூறியது கூறல்: ஒருகாற் கூறியதனைப் பின்னுங்கூறல்.

கொள மாறுபடக் கூறல்: ஒருகாற் கூறியபொருளோடு மாறுகொள்ளுமாறு பின்கூறல்.

அஃதாவது தவம்நன்று என்றவன்றான் தவந் தீதென்று கூறல்.

குன்றக் கூறல்: தானதிகரித்த பொருள்களுட் சிலவற்றைக் கூறாதொழிதல்.

மிகைபடக் கூறல்: அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளுங் கூறுதல். அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக்கொண்டான் வடமொழியிலக்கணமும் கூறல்.

பொருளில கூறல்: முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக் கொப்பின்றிப் பயனில்லாதன கூறல்.

மயங்கக் கூறல்: கேட்டார்க்குப் பொருள் விளங்குமாறின்றிக் கூறல்.

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதலென்பது பொருள் யாக்கப்பட்ட சூத்திரஞ் சந்தவின்பமின்றி யிருத்தல்.

பழித்தமொழியான் இழுக்கக் கூறல்: தானொரு பொருளை யொருவாய்பாட்டாற்குறித்துப் பிறிதொரு வாய்பாட்டாற் கூறுதல்ளூ அக்குறிப்பு உலகவழக்கின்மையாற் பிறர்க்குப் புலப்படாதாம்ளூ அதனால் அதுவுங் குற்றமாயிற்று.

என்ன வகையினும் மனங்கோள் இன்மை: எழுத்தினாலுஞ் சொல்லினானும் பொருளினானு மனங்கொள்ளுமாறு கூறாமை.

## நூல் குற்றம்

**எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே.**

இதுவுமது. நூற்குற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

எதிர்மறுத்து உணர்வராயின், அத்திறத்தவும் குற்றமாகும்.

பாவஞ் செய்தான்

நிரையம்புகு மெனக் கருதிக் கூறுவான் தவஞ்செய்வான் சுவர்க்கம்

புகுமென்றல். இவ்வாறு கூறிச் சுவர்க்கம் பெறுமென்னும்

பொருள்.நிரையம்புகுமென்ற பொருள் தோன்றாமையிற் குற்றமாயிற்று.

## உத்தி வகை:

**ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்**

**நுதலிய தறிதல் அதிகார முறையே**

தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்
மொழியா ததனை முட்டின்றி முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழியே
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல் எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்
பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகம் கூறல்
உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூரிய நூலே.

தந்திரவுத்தி யாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொழிப்பு: நுதலிய தறிதல் முதலாகச் சொல்லப்பட்டனவும் அத்தன்மையபிறவுந் தந்திர உத்தியாம் என்றவாறு.

தந்திரமெனினும் நூலெனினும் ஒக்கும். உத்தியென்பது வடமொழிச் சிதைவு. அது சூத்திரத்தின்பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது.

ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பு: நூற்குப் பொருந்திய காட்சியினானுரைக்கும் உத்திவகையை விரிக்குங்காலத் தென்றவாறு.

நுதலியதறிதல்: - சூத்திரத்திற் சொற்பொருளுணர்த்தலன்றி.இதன் கருத்திதுவென உணர்த்தல்.

அ.·.தாவது எழுத்தெனப்படும் (நூன்மரபு1) என்னுஞ் சூத்திரத்துள் எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று என்றல்.

அதிகார முறை- முன்னம் பலபொருளை அதிகரித்த வழிப் பின்னும் அம்முறையினானே விரித்துணர்த்துதல்.

தொகுத்துக் கூறல்: - வகைபெறக் கூறல் வேண்டுமாயினும் அதனைத் தொகுத்துக் கூறல்.

எழுத்தெனப் படுப அகரமுத னகர விறுவாய் முப்ப.·.தென்ப"(நூன்மரபு.1) என்றாற் போல்வன.

வகுத்து மெய்ந் நிறுத்தல்: - தொகைபடக் கூறிய பொருளை வகைபடக் கூறல்.

அது அ, இ, உ, எ, ஒ (நூன்மரபு-3) என்னுஞ் சூத்திரத்தம் போன்று அமையும். இனனும் தனானே தொகைபடச் சூத்திரஞ்செய்தவழி அவற்றுள் ஒரோவொன்று பொதுவிலக்கணத்தான் முடியாதவழிப் பெரும்பான்மை சிறுபான்மைக் கொண்டு வகுத்துப் பொருளுரைத்தலுமாம். இன்னுமதனானே தொகைபடக் கூறியவதனை வகுத்துப் பொருளுரைத்தலுமாம்.

மொழிந்த பொருளோடொன்ற வைத்தல் - சூத்திரத்துட்பொருள் பலபடத்தோன்றுமாயின் முற்பட்ட சூத்திரத்திற் கொக்கும் பொருளுரைத்தல்.

அன்றியும் முற்பட்ட சூத்திரத்தினான் ஒருபொருளோதியவழிப் பிற்பட்ட சூத்திரமும் பொருளோடொன்ற வைத்தலுமாம்.

மொழியாததனை முட்டின்றி முடித்தல்: எடுத்தோதாத பொருளை முட்டுப்படாமல் உரையினான் முடித்தல்.

வாராததனான் வந்தது முடித்தல்: ஒருங்கு எண்ணப்பட்ட பொருள் ஒன்றனைப் பகுத்துக்கூறியவழி ஆங்கு வாராததற்கு சொல்லப்பட்ட இலக்கணத்தை இதன்கண்ணும் வருவித்து உணர்த்துதல்.

வந்ததுகொண்டு வாராதது முடித்தல்: ஒருங்கு எண்ணப்பட்டவற்றுள் ஒன்றைப் பகுத்து இலக்கணங் கூறியவழி வாராதன மேலும் இவ்விலக்கணத்தைக்கூட்டி முடித்தல்.

முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றம்: முற்பட அதிகரித்தபொருளை அவ்வகையினால் கூறாது முறைபிறழக்கூறுதல். இவ்வாறு கூறுங்கால் ஒருபயனோக்கிக் கூறல் வேண்டும்.

ஒப்பக்கூறல்: ஒரு பொருளெடுத்து இலக்கணங் கூறியவழி அது போல்வனவற்றையு மிலக்கணத்தான் முடித்தல்.

ஒருதலைமொழி: ஏகாக்கரமென்னும் வடமொழிப் பொருண்மை. அஃதாவது, சூத்திரத்திற்குப் பொருள் கவர்த்துத் தோன்றின் அதனு ளொன்றனைத் துணிந்து கூறல்.

தன்கோட் கூறல்: பிறநூலாசிரியர் கூறியவாறு கூறாது தன் கோட்பாட்டால் கூறுதல். அது வேற்றுமை எட்டென்றல்.

உடம்பொடு புணர்த்தல்: இலக்கணவகையான் ஓதுதலன்றி யாசிரியனுக்கின்றிச் சூத்திரத்தின் கண்ணே யொரு சொல்லை வைப்பனாயின் அவ்வைப்பினை இலக்கணமாகக் கோடல்.

பிறன் உடம்பட்டது தான் உடன்படுதல்: பிறநூலாசிரியன் உடம்பட்ட பொருட்குத் தானுடம்படுதல்.

அஃதாவது இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருட்கண் வருமெனப் பாணினியார் ஓதினார் அது இவர்க்கும் உடம்பாடு.

இறந்தது காத்தல் மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப்படாத பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தானமைத்தல்.

எதிரது போற்றல்: முன் கூறப்பட்ட சூத்திரத்தானே வருகின்ற சூத்திரத்திற் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

மொழிவாமென்றல்: சில பொருளைக் கூறி அவற்றுளொன்றனை யின்னவிடத்துக் கூறுவாமென வுரைத்தல்.

புணரிய நிலையிடைக் குறுகலும் என்பது.

கூறிற்றென்றல்: பலபொருளா யதிகரித்தவற்றுட் சில பொருளை மேற்சொல்லபட்டனவென்றல்.

“மாத்திரை வகையும் எழுத்தியல்வகையு மேற்கிளந்தன்ன”(செய்யுளியல்.2) என்றதனாற் கொள்க.

தான் குறியிடுதல்: உலகின்கண் வழக்கின்றி ஒரு பொருட்கு ஆசிரியன் தான் குறியிடல்.

அஃது உயர்திணை யஃறிணையென்பன.

ஒருதலையன்மை முடிந்தது காட்டல்: ஒரு பொருளை யோதியவழிச் சொல்லுதற்கே யுரித்தன்றிப் பிறபொருட்கும். பொதுவாக முடித்தமை காட்டல்.

ஆணை கூறல்: ஒருபொருளைக் கூறும்வழி ஏதுவினாற் கூறலன்றித் தன்னாணையாற் கூறல்.

பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்: ஒருசூத்திரம் பலபொருட் கேற்குமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கோடல்.

தொகுத்தமொழியான் வகுத்தனர் கோடல்: தொகுத்துக் கூறியசொல் தன்னானே பிறிதுமொருபொருள் வகுத்துக்காட்டல்.

சொல்லின் முடிபின் அப்பொருண்முடித்த லென்பதும் அதுவாகும்.

மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்: பிற நூலாசிரியன் கூறின் பொருண்மையைக் கெடுத்துத் தன்றுணிவு கூறுதல்.

அஃதாவது நெட்டெழுத்தேழ் அளபெடை யென்பன குற்றெழுத்தின் விகாரமென்பாரை மறுத்து வேறோரெழுத்தாக வோதுதல்.

பிறன்கோட் கூறல்: பிறநூலாசிரியன் கொண்ட கோட்பாட்டைக் கூறுதல்.

அறியாதுடம் படல்: தானறியாத பொருளைப் பிறர் கூறியவாற்றான் உடம்படுதல்.

அது ஏழாம்நரகம் இத்தன்மைத் தென வொருவன் கூறியவழி அது புலனாகாதாதலின் அவன் சொன்னதற் குடம்படுதல். இது வழிநூலாசிரியர்க் குரித்து.

பொருளிடை இடுதல் - ஒருபொருளை ஓதியவழியதற்கினமாகிய பொருளைச் சேரக்கூறாது இடையீடுபடக் கூறுதல்.

எதிர்பொருள் உணர்த்தல் - இனிக் கூறவேண்டுவதிதுவென வுணர்த்தல்.

சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்: பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக்கொண்டு ஆங்குச் சொல்லியவாற்றால் பொருள் கோடல்.

தந்துபுணர்ந்துரைத்தல்: முன்னாயினும் பின்னாயினும் நின்ற சூத்திரத்திற் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினுங் கொணர்ந்து புணர்த்துரைத்தல்.

ஞாபகங்கூறல்: இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள்கோடல்.

உய்த்துக் கொண்டுணர்தல்: ஒரு சூத்திரத்தான் ஓரிலக்கணம் ஓதிய வழிஅதற்குப் பொருந்தாமை உளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல் என்பன போன்றன ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1. குற்றம் குறித்துக் கட்டுரைக்க
2. உத்தி வகைளை விவரிக்க
3. அசை – கட்டுரைக்க
4. கலிப்பா வகைகளை விளக்குக
5. குற்றியலுகரம் விளக்குக

# அலகு 3

தொல்காப்பியம் செய்யுளியலிலிருந்து யாப்பருங்கலக்காரிகை வேறுபடும் இடங்கள்

தொல்காப்பியர் செய்யுள் இலக்கணமெல்லாவற்றையும் ஓரினப் பொருள்கள் என்று கருதி ஓரினப் பொருள்களை ஒரு வழி வைப்பதற்கு இடம் ஓத்து என்னும் இயலாதலால் அவற்றைச் செய்யுளியல் என்ற ஒன்றிலேயே கூறியுள்ளார் .

பிற்காலத்தாரெல்லாம் யாப்பு என்று பெயரிட்டுத் தனி அதிகாரமாக்கியும் தனி நூலாக்கியும் செய்யுள் இலக்கணத்தைக் கூறியுள்ளனர்.

மிகப் பிற்பட்டவராகிய இலக்கண விளக்க ஆசிரியர் மட்டும் தம் இலக்கண விளக்க நூலுள் தொல்காப்பியரைப் போலவே பொருளதிகாரத்தே செய்யுளியலில் தாம் கருதிய செய்யுளிலக் கணங்களைக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் மாத்திரை முதலாக வண்ணம் ஈறான இருபத்தாறினை யாப்பியல் உறுப்பென்று கூறி அவற்றுடன் அம்மை முதலான எட்டினைக் கூட்டி இம்முப்பத்து நான்கும் செய்யுள் உறுப்பென்றார்.

யாப்பருங்கல ஆசிரியர் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கென்னும் ஏழொடு நடப்பது யாப்பென்று கூறி அவற்றுள் எழுத்து முதல் தொடை. ஈறான ஆறும் உறுப்பென்று பெயர்பெறும் என்றார். மற்றவர் சிறிது சிறிது வேறுபட உ.ரைத்துள்ளனர் .

தொல்காப்பியர் மாத்திரையை முதல் உறுப்பாகக் கூறினர். யாப்பருங்கல ஆசிரியர் மாத்திரையை நீக்கிவிட்டு எழுத்தினையே முதல் உறுப்பாகக் கூறினர் . தொல்காப்பியர் எழுத்தினை இரண்டாவது உறுப்பாகக் கூறி மாத்திரையும் எழுத்தும் மேற்கிளந்தன்ன என்று மாட்டெறிந்தார் .

பிற்காலத்தார் எழுத்து பதினைந்து வகையென்றும் பதின் மூன்று வகையென்றும் விகற்பித்துக் கூறி இவையெல்லாம் அசைக்குறுப்பாம் என்றனர்.

அசை மூன்றாவது உறுப்பு. தொல்காப்பியர் நேர், நிரை என அசைகள் இரண்டாகி அவையே இருவகை உகரம் அடுத்து நேர்பு, நிரைபு என மற்றொரு இரண்டாகி வரும் என்றும் இவை முறையே இயலசை உரியசை எனப் பெயர்பெறுமென்றும் கூறியுள்ளார் . யாப்பருங்கலக்காரிகை நேர் நிரை என அசை இரண்டே யாம் என்கின்றது. .

சீர் நான்காவது உறுப்பு.

தொல்காப்பியர் நான்கு அசைகளை ஈரசையாகவும் மூவசையாகவும் மயக்கி ஈரசைச்சீர் பதினாறு மூவசைச்சீர் அறுபத்து நான்கெனக் கொண்டு ஈரசைச்சீர் பதினாறுள் பத்தினை இயற்சீர் என்றும் ஆறினை ஆசிரிய வுரிச்சீர் என்றும் மூவசைச்சீர் அறுபத்து நான்குள் நான்கினை வெண்பாவுரிச்சீர் என்றும் அறுபதை வஞ்சியுரிச்சீர் என்றும் பகுத்துக் கொண்டார். அவர் சீர் அதிகாரத்தே இசை நிலை நிறைந்து நின்றால் அசையும் சீராகும் என்றனர். ஈரசைச்சீர் பதினாறு மூவசைச் சீர் அறுபத்து நான்கு ஓரசைச்சீர் நான்கு என எண்பத்து நான்கு சீர்களை அவர் கொண்டுள்ளனர்.

யாப்பருங்கலக்காரிகை ஈரசை, மூவசை, நான்கசையென மூன்று மயக்கம் கொண்டு ஈரசைச்சீர் நான்கு மூவசைச்சீர் எட்டு நான்கசைச்சீர் பதினாறு எனக்கொண்டு அவற்றுடன் ஓரசைச் சீர் இரண்டனையும் கூட்டி முப்பது சீர் கொண்டுள்ளது . அவற்றுள் ஈரசைச்சீர் நான்கினை இயற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் என்றும் மூவசைச் சீருள் நேர் இற்றதை வெண்பா வுரிச்சீர் என்றும் நிரை இற்றதை வஞ்சியுரிச்சீர் என்றும் நாலசைச் சீரைப் பொதுச்சீர் என்றும் வழங்குகின்றது.

தொல்காப்பியர் சீர்க்குப் பின் தளை என்றொரு உறுப்பைக் கூறவில்லை . கூறாவிடினும் தளை என்பது நாற்சீரடியில் மட்டும் வரும் என்றனர் (செய். 32). அவர் ஓசையை அவ்வப் பாக்களுக்குரிய தன் சீரும் தன்சீர் நில்லாத பொழுது தளை வகையும் உண்டாக்கும் என்றனர் (செய்.52).

காரிகை இருசீரடி முதலான எல்லாச் சீர்க்கும் தளை கரு கொண்டது. தன்சீரால் ஓசை பெறுதற்கும் தளையை வகுத்துக் கொண்டது.

தொல்காப்பியர் அடியை ஐந்தாம் உறுப்பாகக் கொண்டார். சீர்களைக் கொண்டது அடி என்பது பொதுக்கருத்தாயினும் அவர் இருசீர் கொண்டது குறள் முச்சீர் கொண்டது சிந்து நாற்சீர் கொண்டது அளவு ஐஞ்சீர் கொண்டது நெடில் அறுசீர் முதலானவற்றைக் கொண்டது கொண்டது கழிநெடில் என்று கூறாமையால் சீர்களைக் கொண்டு குறளடி முதலானவற்றைக் கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்று தெரிகிறது .

அவர் அடிகளைப்பற்றிக் கூறத் தொடங்கும் முதல் நூற்பா வினை “நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே” என்று கூறித் தொடங்கி அந்நாற்சீரடியினையே எழுத்துக் கணக்கினால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடியென ஐவகை அடியாக வகுத்துக் கொண்டனர்.

காரிகை தளை அடுத்து நடத்தலின் அடியே என்று அடிக்குப் பொது இலக்கணம் கூறினாலும் தளையைக் கொண்டு அடிக்குச் சிறப்பிலக்கணம் கூறாமல் இருசீர் குறள்,

முச்சீர் சிந்து, நாற்சீர் அளவு அல்லது நேர், ஐஞ்சீர் நெடில் அறுசீர் முதலியன கழிநெடில் எனச் சீரைக் கொண்டே அடியிலக்கணம் வகுத்தது.

யாப்பு என்பது தொல்காப்பியர்க்கு ஆறாவது உறுப்பாகும் . இவ்வுறுப்பு எழுத்து, அசை, சீர், அடி என்னும் உறுப்புக்களைக் கூறிய பின் கூறப்பெறுவதால் எழுத்து முதலா ஈண்டிய அடியில் (செய்.74) என்று தொடங்கப்பட்டு குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற அடியினால் நிறுத்துதலே யாப்பாகும் என்று கூறப்பட்டுள்ளது (இளம்பூரணர் கருத்து) காரிகை யாப்பினைத் தொல்காப்பியர் ஓதியவாறு உறுப்பாகக் கொண்டிலது. அதனைச் செய்யுளாகிய உறுப்பு என்றே கொண்டு "எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு இழுக்கா நடையது யாப்பெனப் படுமே"

( யா.க. 1 ) என்றனர் .

அகராதி எழுதியவரும் யாப்பு என்பது செய்யுள் உறுப்பு என்பதை எழுத மறந்து விட்டு அதனைச் செய்யுள் என்றே எழுதிவிட்டனர். குறித்த பொருளை அடியில் நாட்டும் யாப்பானது பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என எழு வகைப்பட்டு வரும் என்பர் தொல்காப்பியர்.

தூக்கு என்பது எட்டாவது உறுப்பு . தூக்கென்றாலும் பாக்களுக்குரிய ஓசை என்றாலும் ஒக்கும். அஃது ஆசிரியப்பா அகவலோசையையும் வெண்பா அகவுதலில்லாத ஓசையையும் கலிப்பா துள்ளலோசையையும் வஞ்சிப்பா தூங்கலோசையையும் பெற்று வரும் என்று கூறப்பட்டுள்ளது . காரிகை தூக்கினைத் தனி உறுப்பாகக் கொண்டு கூறில என்றாலும் பாக்களை உணர்த்தப் புகும்பொழுது இத் தூக்கினை ஒலி என்று கூறி வெண்பா முதலிய நான்கு பாக்களும் செப்பல் முதலிய ஓசையைப் பெற்று வரும் என்பதை "திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல் சென்றோங்கு துள்ளல் நண்பா வமைந்த நலமிகு தூங்கல் " (காரிகை. 21) என்ற காரிகையில் கூறியுள்ளனர் .

தொடைவகை என்பது ஒன்பதாம் உறுப்பு. நாற்சீர் கொண்ட அடியிலன்றி இரண்டு முதலான சீர்களைக் கொண்டு வரும் அடிகளில் தொடைவாராதென்பர் தொல்காப்பியர் . அவர் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, , செந்தொடை, நிரனிறை, இரட்டையாப்பு எனப் பத்துத் தொடைகளை முதற்கண் எடுத்தோதி முதல் எட்டிற்கும் சிறப்பிலக்கண விதி கூறி நிரனிறையும் இரட்டை யாப்பும் சொல்லதிகார எச்சவியலில் மொழிந்த சிறப்பிலக்கணத்தால் வரும் என்ற கருத்தால் "மொழிந்தவற் றியலான் முற்றும் (செய்.87)என்றனர். உரையாசிரியர் மூவரும் "மொழிந்தவற்றியலான் முற்றும்" என்பதற்கு நிரனிறையும் இரட்டை யாப்பும் மேல் மொழிந்த மோனை முதலானவற்றின் இலக்கணத்தால் அவற்றுள் அடங்கி முடியவும் பெறும் என்று கூறி நிரனிறையையும் இரட்டைத் தொடையையும் நீக்கிவிட்டுத் தொடையை

எட்டாகக்கொண்டு அவ்வெட்டுடன் தொல்காப்பியர் கூறாத வேறு பல தொடைகளையும் கூட்டித் தொடைத்தொகை கொண்டுள்ளனர். தொடைவகை கூறும் இப்பகுதி உரையாசிரியர் தம் வெவ் வேறு கூற்றால் குழம்பியுள்ளது. தெளிவுரை வேண்டும். காரிகை மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் ஐந்தும் அடி இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்னும் எட்டொடு கூடியும் அந்தாதி, இரட்டை, செந்தொடை என்னும் மூன்றினைப் பெற்றும் தொடைவிரி நாற்பத்து மூன்றாய் வரும் என்பர்.

பா என்பது பதினொன்றாம் உறுப்பு. அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருளையும் பாவி வருதலால் பா எனக் காரணக்குறி பெற்ற தென்பது தொல்காப்பியர் கருத்து. இப் பா ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என நான்காய் வரும் என்றனர். இந்நான்கில் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இவ்வாறு வரும் என்று கூறும் சிறப்பிலக்கண நூற்பாக்கள் செய்யுளியலில் இல்லையாதலால் இளம்பூரணர் மண்டிலம் குட்டம் (செய்.113) என்னும் நூற்பாவுரையில் இனி நான்கு பாவினும் வெண்பாவும் கலிப்பாவும் முன்னெடுத் தோதுகின்றாராதலானும் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இத்துணையும் இலக்கணத்தான் முடித்தலானும் அவையிற்றிற்கு உதாரணம் ஈண்டே காட்டுதும் என்று எழுதித் தற்காலத்தில் ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் வழங்கி வந்துள்ளனவற்றையே உதாரணமாகக் காட்டியுள்ளார் . ஓதிய வெண்பாவும் கலிப்பாவும் இத்துணையும் ஓதிய பொது விலக்கணத்தானன்றி முன்னெடுத்தோதும் சிறப்பிலக்கணத் தான் முடித்தலான் அச்சிறப்பிலக்கண விதிப்படி வெண்பா தொல்காப்பியர் காலத்தில் நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு, கைக்கிளை, பரிபாடல், அங்கதம், செய்யுள் ஆறுவகையாக வழங்கிற்று.

கலிப்பாவும் அச்சிறப்பிலக்கண விதிப்படி ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, உறழ்கலி என நான்காக வழங்கியிருந்தது.

காரிகை இப் பா என்னும் உறுப்பைப் பாவும் இனமும் என்று இரண்டாக வகுத்துக்கொண்டு அவற்றுள் பா என்பது வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி மருட்பாவென ஐந்தாய் வருமென்றும் மருட்பா ஒழிந்தவற்றின் இனம் தாழிசை, துறை, விருத்தம் என மும்மூன்றாய் வரும் என்றும் கூறியுள்ளது. மருட்பாவிற்கு இனம் இல்லை என்றது. அவர் இவற்றையெல்லாம் செய்யுளியல் என்ற பெயருடைய இயல் வகுத்து அதனுள் ஓதுகின்றார். பரிபாடலையும் உறழ்கலியையும் இன்னும் சிலவற்றையும் கூறாது விட்டனர். கொச்சக ஒருபோகினையும் கொச்சகத்தையும் ஒன்றாகக் கொண்டனர். இவ்வாறு பல மாற்றத்தைப் பெற்றுள்ளன பிற்காலத்தாருடைய பாவியல்.

பிற்கால யாப்பிலக்கண நூல்களைக் கருத்திற்கொண்டு "குறுவெண் பாட்டாவது இரண் டடியானும் மூன்றடியானும் வரும் என்றும் சமனிலை வெண்பா நான்கடியால் வரும்

என்றும் பஃறொடை வெண்பா ஐந்தடி முதற் பன்னிரண்டடி காறும் வரும் என்றும் கூறிப் பன்னிரண்டடிக்குமேல் வரும் செய்யுள் வெண்பாட்டைக் கொள்ளாது விட்டனர். இவற்றுள் சிந்தியல் வெண்பா, சமனிலை வெண்பா என்பனவற்றைத் தொல்காப்பியர் பிரித்துணர்த்தவில்லை. இவையெல்லாம் தொல்காப்பியர்க்கு நெடுவெண்பாட்டுள் அடங்கும். உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபடுவதால் நூலாசிரியர் கருத்து உணர முடியாமற் போகின்றது. தொல்காப்பியர் பாக்களின் ஈற்றுறுப்பைப் பொதுவாகச் செய்யுளியல் 65 ஆம் நூற்பாவிலிருந்து 73 ஆம் நூற்பாவரை கூறியுள்ளனர். பின் பரிபாடல் சுரிதகத்தையும் (செய்.117) முதனிலை ஒத்தாழிசைக்கலியும் அதன் இழிபாகிய கொச்சகக் கலியும் போக்கியல் வைப்பையும் (செய்.132,148) தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பரவும் வண்ணகமும் கொச்சக போகும் அம்போதரங்க ஒருபோகும் அடக்கியல் வாரத்தையும் ஈற்றுறுப்பாகப் பெற்று வரும் என்று (செய். 138,143,146) சிறப்பிலக்கணமாக ஆசிரியர் பிரித்துப் பிரித்துக் கூறியிருக்கவும் பிற்கால இலக்கண விதியை மனத்திற்கொண்ட இளம்பூரணர் முதலான உரையாசிரியரெல்லோரும் சுரிதகமும் போக்கியல் வைப்பும் அடக்கியல் வாரமும் ஒன்றென்றே கருதிவிட்டனர். மேற்கூறியவற்றைப் போலப் பல குழப்பங்கள் செய்யுளியல் உரையில் உள்ளன. இக் குழப்பங்களையெல்லாம் களைந்து விட்டுத் தொல்காப்பியரின் கருத்தை மட்டும் உணர்ந்து கொண்டால் அவ்வுணர்ச்சி தொல்காப்பியர் காலத்து யாப்பு எப்படி இருந்ததென்பதைப் புலப்படுத்தி அவர் வாழ்ந்த காலத்தை உணர்வதற்கும் வழி செய்யும் .

## செய்யுள் உறுப்பு

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களின் எண்ணிக்கையை முப்பத்து நான்கு என்று கூறுவர். மாத்திரை முதல் வண்ணம் ஈறாகக் கூறப்பட்ட ஆறுதலையிட்ட அந்நாலைந்தும் அம்மை முதலா இழைபு ஈறாகப் பொருந்தக் கூறிய எட்டொடும் கூடி இவ்வுறுப்புக்கள் முப்பத்து நான்காம்.

1. செய்யுள் உறுப்புகள் = 26
2. வனப்புகள் = 08

மொத்தம் = 34

என்னும் இருபெரும் பிரிவுகளாக செய்யுள் உறுப்புக்களை அடக்கலாம்.

‘ஆறு தலையிட்ட அந்நால் ஐந்தும்’ (தொல்-செய்யுளியல் : நூற்பா 310)

4 x 5 = 20 + 6 = 26 செய்யுள் உறுப்புகள் = 26 வனப்பு = 8

1 மாத்திரை

“மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ

யாத்த சீரே அடி யாப்பு எனாஅ

மரபே தூக்கே தொடைவகை எனாஅ

திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ

கேட்போர் களனே காலவகை எனாஅ

பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ

முன்னம் பொருளே துறைவகை எனாஅ

மாட்டே வண்ணமோடு யாப்பியல் வகையின்

ஆறுதலை இட்ட அந்நால் ஐந்தும்

அம்மை அழகு தொன்மை தோலே

விருந்தே இயைபே புலனே அழைபு எனாஅப்

பொருந்தக் கூறிய எட்டொடும் தொகைஇ

நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பு என

வல்லிதின் கூறி வகுத்து உரைத்தனரே” (தொல் - செய்யுள் - நூற்பா 310)

யாப்பியல் வகை 26
மாத்திரை
எழுத்து-இயல்
அசைவகை
யாத்த சீர்
அடி
யாப்பு
மரபு
தூக்கு
தொடை
நோக்கு
பா அளவு- இயல்

திணை

கைகோள்

கூற்று

கேட்போர்

களன்

காலவகை

பயன்

மெய்ப்பாடு

எச்சம்

முன்னம்

பொருள்

துறை

மாட்டு

வண்ணம்

வனப்பு

### அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள்

தமிழ் எழுத்துகள் எல்லாமும் உயிர் மெய் ஆய்தம் உயிர்மெய் என்னும் நான்கு வகைக்குள் அடங்கும். யாப்பு இலக்கணப்படி ஓசையூட்டி அசை காண்பதற்குக் குறில், நெடில், ஒற்று (மெய்) என்ற பகுப்புத் தேவைப்படுகின்றது.

காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் வரும் வெண்பாவின் இறுதிச்சீர் குற்றியலுகர எழுத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

குற்றியலிகரம் குற்றியலுகரம் முதலியன இவ்விடத்து அலகு பெறும் இவ்விடத்து அலகு பெறா என்று எடுத்தோதுவதற்குச் 'சிறிய இ உஅளபு' (ஒழிபு -1) (அதாவது குற்றியலுகரம், குற்றியலிகரம்) என்னும் பகுப்புத் தேவை. இவ்வாறே வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்றனோடும் தூங்கிசை முதலிய ஐந்தும் உறழ்ந்து பல வண்ணங்கள் உருவாகும் என்று சொல்லும்போது மெய் என்று கூறுவது மட்டும் போதாது.

இவையும் இவைபோன்ற காரணங்கள் பிறவும் மனத்தில் கொண்டு "அசை" என்னும் செய்யுள் உறுப்புக்குரிய எழுத்துகளை யாப்பிலக்கண நூலார் பதினாறு வகை, பதினைந்து வகை, பதின்மூன்று வகையென வேண்டியவாறு கொண்டுள்ளனர்.

தொல்காப்பியர் பதினைந்து வகைகளைக் கொண்டார். இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் பதினாறு வகைகளைக் கொண்டார். அமிதசாகரர் தாமியற்றிய "யாப்பருங்கலம்" என்ற நூலில் பதினைந்து வகைகளைக் கொண்டார். இவரே தமது "யாப்பருங்கலக்காரிகையில் பதின்மூன்று வகையெனக் கொண்டுள்ளார். அவை

குறில்
நெடில்
உயிர்
குற்றியலுகரம்
குற்றியலிகரம்
ஐகாரக்குறுக்கம்
ஆய்தம்
மெய்
வல்லினமெய்
மெல்லினமெய்
இடையினமெய்
உயிர்மெய்
அளபெடை

என்பனவாம்.
தமக்குரிய இயல்பான மாத்திரையில் ஒலிப்பன (இயல்பு வகை) மெய்யும் உயிருமாகிய கூட்டில் ஒலிப்பது (கூட்டவகை)

தமக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிப்பன (குறுக்கம்)

தமக்குரிய மாத்திரையின் நீண்டொலிப்பன (அளபெடை) 2.2.1 தமக்குரிய இயல்பான மாத்திரையில் ஒளிப்பன

செய்யுள் அடியில் தமக்குரிய மாத்திரையில் ஒலிக்கப் பெறும் எழுத்துகள் எழு ஆகும்.

சார்பெழுத்துகளாகக் கொண்டார். தொல்காப்பியருக்குப் பின் வந்தவர்கள் சார்பெழுத்தின் வகையும் அவற்றின் விரியுமாகத் தத்தமக்கு வேண்டியவாறே கொண்டுள்ளனர். முதலெழுத்து முப்பது என்பது உயிரும் மெய்யுமாக வகைப்படும். உயிர், மெய் ஆகியவை சேரும்போது பிறப்பது உயிர்மெய் எனப்படும். "உயிர்மெய்" யையும் சார்பெழுத்து என்றனர் பின்னோர். மொழியிலக்கணத்தார் புணர்ச்சியைப் பற்றிச் சொல்லவரும்போது

எழுத்துகளை உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நான்கு கணங்களாகப் பகுத்துக் கொள்வர்.

மொத்தத்தில் தமிழில் உள்ள எழுத்துகள் எல்லாமும் உயிர், மெய், ஆய்தம், உயிர்மெய் என்னும் நான்கு வகைக்குள் அடங்குவனவேயாம்.

எழுத்து - ஆய்தம்

தொல்காப்பியர் ஆய்த எழுத்தைச் சார்பெழுத்துகள் மூன்றனுள் ஒன்றாகக் கொண்டார். ஆய்தம், உயிர் எழுத்தா? மெய்யெழுத்தா? அல்லது இரண்டுமேயா? என்ற வினா எழுவது இயல்பு. ஆய்தம்இ உயிரா? மெய்யா? இரண்டுமா? இதனை அசைகளைப் பற்றிப் படித்த பிறகு அலகிட்டுக் காணும்போது தெளியலாம்.

ஆய்த எழுத்து, ஒரு சமயம் “மெய்” ஒரு சமயம் உயிர். எனவே இதனைத் “தனிநிலை" என்ற பெயராலும் சுட்டினர்.

“தனிநிலை” என்ற பெயர் பெற்றமைக்கு வேறு ஒரு காரணமும் சொல்வதுண்டு. அதனையும் காண்போம்.

க் மெய்யெழுத்து இது தன்மேல் உயிர் ஏற இடங்கொடுக்கும். உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்பது விதி. இதன்படி க்+அ-க் இதனை மெய்யென்று கொள்வோம். இது உயிர் ஏற இடங்கொடுக்குமா? ஃ+அ-? மெய்யாயின் உயிரேற இடங்கொடுத்து உயிர்மெய் எழுத்தை உண்டாக்க வேண்டுமல்லவா? எனவே ஆய்தம், “மெய்“ அன்று

ஃ- உயிராயின் மெய்யெழுத்துகளை ஊர்ந்து வரல் வேண்டும். க்+ஃ (உயிர்) - ? எனவே உயிரும் அன்று. ஆதலினால் தான் நம் இலக்கணப் புலவர்கள் நெடுங்கணக்கில் பன்னிரண்டு உயிர்க்கும் பதினெட்டு மெய்க்கும் இடையில் வைத்தனர் போலும்.

ஆய்தத்தின் வேறு பெயர்கள் அஃகேனம், புள்ளி, தனிநிலை, அலி, எழுத்து என்பனவாம். தொல்காப்பியர் ஆய்த எழுத்தைச் சார்பெழுத்துகள் மூன்றனுள் ஒன்றாகக் கொண்டார்.

1.குறில்
2. நெடில்
3. உயிர
4.மெய்
5.வல்லினம்

6. மெல்லினம்
7. இடையினம்

**குறில்**

இங்குக் "குறில்'' என்றது உயிர்க்குறிலை ஆகும். அவையாவன: அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தாம். இவற்றுக்குத் தனித்தனி மாத்திரை ஒன்று ஆகும். இப்பாடத்தின் இறுதியில் எந்த எந்த எழுத்திற்கு எவ்வளவு எவ்வளவு மாத்திரை என்று படிக்க இருக்கின்றோம்.

**நெடில்**

இங்கு "நெடில்" என்றது உயிர்நெடிலை ஆகும். அவையாவன ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழாம். இவற்றுக்குத் தனித்தனி மாத்திரை இரண்டு ஆகும். உயிர்க்குறில் தன்னினும் மிக்க ஓசை வேண்டின் நெடில் அதனை நிறைவு செய்யும் என்பது பற்றி உயிர்க்குறில் அளவு எடாது நெடிலே அளபெடுக்கும்.

**உயிர்**

இங்கு "உயிர்" என்றது உயிர்க்குறிலும் (5) உயிர்நெடிலும் (7) ஆகிய பன்னிரண்டு எழுத்தை ஆகும். அவையாவன. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ உயிரெழுத்துகளையே குறில் என்றும் நெடில் என்றும் உயிரென்றும் பகுத்துக் கொண்டதன் அவசியத்தை (இன்றியமையாமையை) முன்னர்ப் பார்த்தோம். எண்ணிப் பாருங்கள். உயிர்நெடில்களுக்குத் தனித்தனியே மாத்திரை இரண்டு என்பதும் குறில்களுக்கு மாத்திரை தனித்தனியே ஒன்று என்பதும் முன்னர் மொழியப்பட்டதால் பொதுப்படச் சொன்ன உயிர்க்காம் மாத்திரை தெளிவாம்.

**மெய்**

''க்'' என்னும் எழுத்து முதலாக "ன்" என்னும் எழுத்து ஈறாகத் தமிழ் நெடுங்கணக்கில் அமைந்துள்ள பதினெட்டு எழுத்துகளும் மெய்யெழுத்துகள். இவற்றுக்குத் தனித்தனியே மாத்திரை அளவு அரை ஆகும். மெய்க்கு உடம்பு, புள்ளி, ஒற்று, முதலிய பிற பெயர்களும் உண்டு.

கைக்குழந்தைக்காரி ஒருத்தி பேருந்தில் பயணித்தால் அவளுக்கே கட்டணம் குழந்தைக்குக் கட்டணம் இல்லை. இரட்டைக் குழந்தையைப் பெற்றவள் ஒருத்தி அந்த இரண்டு குழந்தைகளுடன் பயணித்தாலும் அவளுக்கே கட்டணம். அவ்விரு

குழந்தைகளுக்கும் இல்லை. அதுபோலச் செய்யுள் எனும் பேருந்தில் குறிலை அல்லது நெடிலைத் தொடர்ந்து வரும் ஒரு மெய்க்கும் அலகு கொள்ளப்படுவதில்லை இருமெய்க்கும் அலகு கொள்ளப்படுவதில்லை. ஆனால் அலகிடுவதில் பெரும்பங்கு வகிக்கின்றது.

பக்/கம் - தனிக்குறில் ஒற்று
தனிக்குறில் ஒற்று நேர்நேர்

பாக்/கம் - தனி நெடில் ஒற்று.

தனிக்குறில் ஒற்று நேர்நேர்
பீர்க்/கு - நெடில் ஒற்று ஒற்று
(தனிநெடில் ஈரொற்று) நேர்

ஒற்று கணக்கில் கொள்ளப்படாமையும் கொள்ளப்படாமையும் அசைப் பிரிப்புக்குப் பயன்படுவதையும் காண்கின்றோம். ஒற்று (மெய்) அளபெடுக்கும் போது ஒரு மாத்திரையாகின்றது. அப்போது ஓரலகாகக் கொள்ளப்படுகின்றது.

**வல்லினம், மெல்லினம், இடையினம்**

மேற்கூறிய உயிர், மெய் ஆகிய எழுத்துகளைப் பொதுவாகப் பிறப்பிடம், முயற்சி, மாத்திரை, அளவு, பொருள், வடிவம் ஆகியவற்றுள் ஒன்றையோ பலவற்றையோ அளவாகக் கொண்டு இலக்கண ஆசிரியர்கள் இனம் காண்கின்றனர் அல்லது இளம் பிரிக்கின்றனர்.

இவ்வகையில் பதினெட்டு மெய்யெழுத்துகளையும் அவை ஒலிக்கப்படும் அளவு,பிறக்கும் இடம் மேற்கொள்ளப்படும் முயற்சி போன்றவைகளை அளவாகக் கொண்டு வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூவகையாகப் பகுத்துள்ளனர்.

வல்லின எழுத்துகள் க், ச், ட், த், ப், ற்
மெல்லின எழுத்துகள் ங், ஞ், ண், ந், ம், ன்
இடையின எழுத்துகள் ய், ர், ல், வ், ழ், ள்

**ஆய்தம்**

முன்பே ஆய்த எழுத்து உயிரெழுத்தா? மெய்யெழுத்தா? இவை இரண்டுமேயா? என்று பார்த்தோம். யாப்பிலக்கணத்தார் சில போது உயிரென்றும் சிலபோது மெய்யென்றும்

கருதியுள்ளனர். இப்போது இத்தலைப்பின்கீழ் ஆய்தம் இருவகைப்படும் என்பதனையும் அதன் விரியையும் பார்க்க இருக்கின்றோம்.

அரைமாத்திரை அளவில் ஒலிப்பது முற்றாய்தம் என்றும் அரையளபினின்றும் குறுகிக் கால்மாத்திரை அளவில் ஒலிப்பது ஆய்தக் குறுக்கம் என்று வழங்கப் பெறுகின்றது.

முற்றாய்தம் எட்டு என்பது நன்னூலார் முடிபு.

குற்றெழுத்தை அடுத்தும் உயிரெழுத்தோடுகூடிய வல்லின உயிர்மெய்களுக்கு முன்னும் வரும் ஆய்தம் ஆறு ஆகும்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி புணர்ந்தவல் ஆறன் மிசைத்தே

(நன்னூல்இ80)

காட்டு எஃகு, கஃசு, கஃடு, கஃபு, கஃது, பஃறி

(பஃறி = படகு)

அவ்+கடிய = அஃகடிய் இவ் + கடிய = இக்கடிய எனத் திரிதல் என்னும் புணர்ச்சி விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்று.

“செய்வது” என்பது “செய்வந்து” என விரித்தல் என்னும் செய்யுள் விகாரத்தால் வருவது ஒன்று: (6+1+1+≈ 8) ஆக எட்டு ஆய்தக் குறுக்கமாவது ல, ள ஈற்று நிலைமொழியின் முன் தகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட வருமொழி வந்து புணரும் போது

அல் + திணை அஃறிணை
எனவும்
முள் + தீது = முஃடீது எனவும் திரிய வரும் ஆய்தமாகும். இதனை நன்னூலார்

ல, ள ஈற்று இயைபினாம் ஆய்தம் அஃகும் என்னும் நூற்பாவால் (97) குறிப்பார்.

**மெய் உயிர் ஆகிய கூட்டில் ஒலிப்பது**

உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும்.

“க” என்பது “க்” என்னும் மெய்யெழுத்தும் “அ” என்னும் உயிரெழுத்தும் கூடிப்பிறந்த ’ உயிர் மெய்யெழுத்து ஆகும். “க்” என்ற ஒரு மெய்யுடன் அகரம் முதல் ஔகாரம் ஈறான

பன்னிரண்டு உயிர்களும் கூட க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ எனப் பன்னிரண்டு எழுத்துகள் உண்டாகும் அல்லவா? பதினெட்டு மெய்யெழுத்துகளோடும் பன்னிரண்டு உயிரெழுத்துகளும் கூட இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துகள் உளவாகின்றன (18×12-216).

பதினெட்டு மெய்யுடன் அ, இ, உ, எ  என்னும் ஐந்து உயிர்க்குறில்கள் கூடுவதனால் (18x5) தொண்ணூறு உயிர்மெய்க் குறில்களும் பதினெட்டு மெய்யுடன் ஆ, ஈ, ஊ, எ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு உயிர்நெடில்கள் கூடுவதனால் (18×x7-126) நூற்று இருபத்தாறு உயிர்மெய் நெடில்களும் பிறக்கும்

மெய்க்கு மாத்திரை அரை உயிர்க்குறிலுக்கும் உயிர்நெடிலுக்கும் மாத்திரைகள் முறையே ஒன்றும் இரண்டுமாகும். ஆதலால் உயிர்மெய்க் குறிலுக்கு ஒன்றரை மாத்திரை ஆகல் வேண்டும்.

க் - மெய் மாத்திரை 0.5

அ-உயிர்க்குறில் மாத்திரை 1

க் + அ = க. உயிர்மெய்க்குறிலின் மாத்திரை 1.5

என்று ஆகல் வேண்டும். ஆனால் ஆவதில்லை. ஒரு மாத்திரையாகவே நிலைக்கின்றது. மெய் தன் வடிவத்தைக் கொள்கின்றது. மாத்திரையை விட்டுக் கொடுக்கின்றது. உயிர் தனது வடிவை விட்டுக் கொடுக்கின்றது தனக்குரிய மாத்திரையை நாட்டுகின்றது. ஒருவர் பொறை இருவர் நட்பு!

இவ்வாறே உயிர்மெய் நெடிலுக்கும் உயிர்நெடிலின் அளவே அளவு அஃதாவது இரண்டு மாத்திரை.

**தமக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிப்பன்**

உயிர் எழுத்துகளுள் இ, உ, ஐ, ஔ என்பனவும் உயிரும் மெய்யுமாக கொள்ளப்பெறும் ஆய்தமும் மெய்களுள் “ம்” என்னும் எழுத்தும் தமக்குரிய மாத்திரையினின்றும் குறைந்து ஒலிப்பனவாம். இவை இடம், சார்பு, பற்றுக்கோடு ஆகியவைகளை உடையன சொல்லிடைப் படுங்கால் இவற்றை முறையே குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம், மகரக் குறுக்கம் என்பார்கள்.

யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம் ஆகிய மூன்றனையே கொள்கின்றார். ஔகாரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகிய மூன்றனைக் கொள்ளவில்லை.

குற்றியலுகரம்“குற்றியலுகரம்” என்ற பெயரே இதன் இலக்கணத்தைச் சொல்வதாய் அமைந்துள்ளது. குறைந்து இயல்கின்ற அல்லது நடக்கின்ற உகரம் என்ற பொருளைத் தருகின்றதல்லவா? குறுமை + இயல் + உகரம் என்றவாறு பிரித்துப் பாருங்கள் விளங்கும். “உ என்பது உயிர்க்குறில். இது உயிர்க்குறில் எழுத்துகள் ஐந்தனுள் ஒன்று. இதன் மாத்திரை ஒன்று. இதனை “உ” என்று தனித்தோ “உலகு” என்று மொழி முதல் படுத்தியோ ஒலித்துப் பாருங்கள். இதன் ஒலிக்கப்படும் கால அளவு ஒன்று என்பது விளங்கும்.

“உலகு” என்பதை மீண்டும் ஒருமுறை ஒலியுங்கள். முதலில் நின்ற “உ”வை ஒலித்த அளவிலா மொழியின் இறுதியில் நின்ற கு வை ஒலித்தீர்கள்? இல்லை. அதற்குரிய ஒரு மாத்திரையினின்றும் குறைந்தே ஒலித்ததை உணர்வீர்கள்.

- நாகு
- எஃகு
- வரகு
- கொக்கு
- குரங்கு
- தெள்கு

என்னும் இவற்றைப் படியுங்கள். ஈரெழுத்து ஒரு மொழியின் இறுதிக் கண்ணும் ஆய்தம், உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய ஐவகைத் தொடர் மொழி இறுதிக் கண்ணும் நின்ற (“க்“ஐ ஊர்ந்த) உகரம் குறைந்து ஒலிக்கப் பெறுவதை உணர்வீர்கள்.

க்ச்ட்திப்ற்என்னும் வல்லின மெய்யை ஊர்ந்து வரும் உகரம் வன்மை ஊர் உகரம் எனப் பெறும். அவை: குசுடுதுபுறு. இவ்வன்மை ஊர் உகரங்கள் மேற்கூறிய ஆறுவகை மொழியின் இறுதிக் கண் வரும்போது தமது மாத்திரையினின்றும் குறைந்து ஒலிக்கப் பெறுகின்றன. ஆகவே இவற்றைக் குற்றியலுகரங்கள் என்றனர். எனவே குசுடுதுபுறு என்ற ஆறும் குற்றியலுகர எழுத்துகள்.

குசுடுதுபுறு-என்னும் குற்றியலுகரங்கள் என்றவை கூடச் சிலபோது முற்ற ஒலிப்பது உண்டு.

பசு-அசு -இது - கடு என்னும் இவற்றை ஒலித்துப் பாருங்கள். தம் மாத்திரை முழுதும் ஒலிக்கப் பெறுவதை உணர்வீர்கள். இதனின்றும் குறிலைத் தொடர்ந்து வரும் போது குசு இது புறு என்பன குறுகி ஒலிப்பதில்லை என்பது புரியும். இவை முற்றியலுகரங்கள் எனவும் உணர்வீர்கள்.

'மொழியிலக்கண நூலார் குற்றியலுகர எழுத்துகள் ஆறு அவை நெடில், ஆய்தம், உயிர், வல்லின, மெல்லின, இடையின எழுத்துகள் ஆகியவற்றைத் தொடர்ந்து மொழியின் (சொல்லின்) இறுதிக்கண் வரும் நெடிலைத் தொடர்ந்து குற்றியலுகர எழுத்துகள்ஆறும் ''நாகு''காசு' 'சூடு" "காது" "காபு" "சோறு" என்றவாறு இறுதியில் வருவது போல ஏனைய ஐந்தனொடும் தொடரும்இ இறுதியிலும் வரும். தொடர 6x 6=36 என குற்றியலுகரம் ஆகும்: என்ற இவற்றையெல்லாம் கருதியவர்களாய்க் குற்றியலுகரம்

1.நெடில் தொடர்க் குற்றியலுகரம் 2 ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் 4.வன்தொடர்க் குற்றியலுகரம்

5.மென்தொடர்க் குற்றியலுகரம் 6. குற்றியலுகரம்

என ஆறு வகைப்படும் என்றும் இதன் விரி முப்பத்தாறு என்றும் சொல்லி வைத்தன

யாப்பிலக்கணக்காரர்கள் அசை உண்டாகும் வகையை அடிப்படையாகக் கொள்கின்றவர்.நேரசை உண்டாகும் வகை நான்கு. அவை குறில், குறில் ஒற்று, நெடில், நெடிலொற்று என்பன. நிரையசை உண்டாகும் வகை நான்கு அவை இணைக்குறில், இணைக்குறில் ஒற்று, குறில் நெடில், குறில் நெடில் ஒற்று இவற்றுடன் குறில் தவிரப் பிறவற்றுடன் வரும் வன்மை யார் உகரமே குற்றியலுகரங்களாகும். அவை (7x6= 42) ஆகும்.

குற்றியலிகரம்

உயிர்க்குறில் எழுத்துகளுள் ஒன்றான இகரத்தைத் தனித்தும் சொல்லின் முதலில் வைத்தும் சொல்லின் இறுதியில் வைத்தும் ஒலித்துப் பார்ப்போம்.

இ - ஒரு மாத்திரை (தனித்து) இலை-ஒரு மாத்திரை (மொழிமுதல்)

கதலி - ஒரு மாத்திரை (மொழியிறுதி) இவற்றுள் இசுரம் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கிறது. முன்னிலை அசைச்சொல்லான மியா என்பதிலும் ஒரு மாத்திரையே ஒலிக்கிறது.

ஆனால் “மியா“ என்னும் அசைச்சொல் தனியே வாராது ஏவல் வினையை அடுத்தே வரும். செல், கேள் என்னும் ஏவல் வினைகளோடு சேர்ந்து சென்மியா, கேண்மியா எனவரும். இவற்றில் மகரத்தை ஊர்ந்துவரும் இசுரம் (மி) தனக்குரிய ஒரு மாத்திரையினின்றும் குறுகி அரைமாத்திரை அளவாகக் குறுகி ஒலிப்பதை உணர்வீர்கள். இது ஒருமொழி அல்லது தனிமொழிக் குற்றியலிகரம் எனப்படும். யகர வருமொழி ஏற்படுத்துகிற குற்றியலிகரத்திற்கு எடுத்துக்காட்டு வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க் கியாண்டும் இடும்பை இல

சேர்ந்தார்க் - நிலைமொழி (இறுதி - குற்றியலுகர எழுத்து)
யாண்டும் - வருமொழி (யா- முதல் எழுத்து)
சேர்ந்தார்க்கி யாண்டும் (கி - குற்றியலிகரம்)

யாப்பிலக்கணத்தில் அசைகளின் கீழ்வரும் குற்றியலுகரம் 42 என்றதனால் யகர வருமொழி ஏற்படுத்துகிற குற்றியலிகரமும் 42 என்றனர். அத்துடன் தனிமொழிக் குற்றியலிகரத்தையும் சேர்த்து 43 என்பர்.

**ஐகாரக்குறுக்கம்**

“ஐ“ என்னும் எழுத்து உயிர்நெடில்கள் எழனுள் ஒன்று நெடில் எனவே இதற்குரிய மாத்திரை இரண்டு என்பதனை அறிவீர்கள். இரண்டு மாத்திரை என்றாலும் மொழியின் (சொல்லின்) முதல், இடை, கடை ஆகிய எல்லா இடங்களிலும் இது. இரண்டு மாத்திரை அளவிளதாய் ஒலிக்கும் என்று கூறிவிட முடியாது. “ஐ’’ - (ஒலித்துப் பாருங்கள். இரண்டு மாத்திரைக்கால அளவு ஒலிக்கப் பெறுவதை உணர்வீர்கள். இங்குத் தன்னையே சுட்டி வருகின்றது)

ஐப்பசி- (இங்கு மொழியில் முதலிடத்து வருகின்றது. ஓசை குறைகின்றது. ஒலித்துத்தான்

உணர வேண்டும்) இடையன் - (இங்கு மொழியின் இடையில் குறைகின்றது.) வருகின்றது. இங்கும் தனக்குரிய ஒலியில் ’ குவளை- (இங்கு மொழியின் இறுதியில் வருகின்றது. இங்கும் தனக்குரிய இருமாத்திரையினின்றும் குறைந்தே ஒலிக்கின்றது)

அதனால் எழுத்திலக்கணத்தார். ஐ என்ற எழுத்துத் தன்னைச் சுட்டிவரும் போதும் அளபெடுக்கும் போதும் மட்டும்தாம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் ஒலிக்கும் (ஏனைய மூவிடமாகிய) மொழியின் முதல், இடை, கடைகளில் ஒரு மாத்திரையளவில் ஒலிக்கும் என்றனர்.மொழியில் ஐகாரம் வருமிடத்தை நினைக்க ஐகாரக்குறுக்கம் மூன்றாகின்றது. மூன்றே ஔகாள் ஒன்றே’’ என்கின்றார் நன்னூலார்.

தமக்குரிய மாத்திரையில் நீண்டொலிப்பன

“ஐகான் செய்யுளில் இசை நிரப்புவதற்காக உயிர் நெட்டெழுத்தும் மெய்யும் (ஒற்று) அளபெடுக்கும். உயிர்எழுத்து அளபெடுத்தால் உயிரளபெடை என்றும் ஒற்று அளபெடுத்தால் ஒற்றளபெடை (மெய்யளபெடை) எனக் கூறப்படும். எந்த எழுத்து அளபெடுத்ததோ அதற்கு இனமாகிய குற்றெழுத்தை அருகில் எழுதிக்காட்டல் மரபு.

**உயிரளபெடை**

நெடில் அளபெடுக்கும் என்பதை அறிவீர்களல்லவா?

நெடில் எழு. அவை: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ இவற்றுள் “ஆ”வுக்கு “அ” இனம். இவ்வாறே ஈகார ஊகார ஏகார ஓகாரங்கட்கு இனக்குறில் முறையே இகர உகர எகர ஒகரங்கள் ஆகும். ஐக்கு இ. ஔக்கு உஇனக்குறில்களாம்.

உயிர்நெடில் ஏழும் அளபெடுக்கும்போது எத்தனை மாத்திரை எடுத்தது என்பதைக் காட்ட அவ்வவற்றின் இனக்குற்றெழுத்தை அத்தனை மாத்திரைக்கேற்ப அருகில் இட்டு எழுதுவது வழக்கம்

மூ காட்டு:

தொழாஅர் எனின் (ஒரு மாத்திரை மிகுதி என்பதைக் காட்ட “அ“ எனும் எழுத்தை (இனக்குறிலை) ஒரு தடவையே எழுதப்பட்டுள்ளது)

செறாஅஅய் வாழிய (இரண்டு தடவை இட்டு எழுதப்பட்டுள்ளது)

சில இடங்களில் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு அளபெடுப்பதையும் காண முடிகின்றது. மகடு - மகடூ - மகடூஉ எழு நெட்டெழுத்துகளும் தனித்து நின்றும் அளபெடுக்கும். சொல்லின் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் நின்றும் அளபெடுக்கும். அவ்வாறு எழு எழுத்துகளும் மேற்சொன்ன நான்கு இடங்களிலும் அளபெடுக்க உயிரளபெடை இருபத்தெட்டாம். -தனிநிலையில் அளபெடுத்தல்

காட்டு ஆஅ, ஈஇ

ஆஅரிடம்இ ஈஇரிலை - சொல்லின் முதலில் அளபெடுத்தல் படாஅலைக, வளைஇய சொல்லின் இடையில் அளபெடுத்தல்

குரீஇ. கடாஅ - சொல்லின் இறுதியில் அளபெடுத்தல்

**ஒற்றளபெடை**

ஒற்றளபெடை என்றாலும் மெய்யளபெடை என்றாலும் ஒன்றே மெய்கள் பதினெட்டு. இவற்றுள். வல்லின மெய்யாகிய கசடதபற என்னும் ஆறு எழுத்துகளுடன் இடையின எழுத்துகள் ர, ழ என்ற இரண்டும் ஆக எட்டு எழுத்துகளும் அளபெடுக்கா. இவையெட்டும் நீட்டி ஒலிக்க முடியாதவை என்பர்.

மேற்சொன்ன எட்டு எழுத்துகள் ஒழிந்த ஏனைய பத்து மெய்களும் அளபெடுக்கும். ஆய்தமும் அளபெடுக்கும்.

**மெல்லினமெய் :**

ஙஞணநமன வயலள 4

1 - 6

இடையினமெய் (ர, ழ - தவிர்ந்தவை)

ஆய்தம்இவை அளபெடுக்கும் போது தமக்குரிய அரை மாத்திரையினின்றும் மிக்கு ஒரு மாத்திரை அளவாக ஒலிக்கும். அளபெடுத்தமைக்கு அடையாளமாக அதே மெய்யெழுத்தை மீண்டும் ஒரு முறை அதனை அடுத்து எழுதிக்காட்டுவர்

ஒற்றுஎழுத்து (சொல்லில்) குறில் அடுத்தும். குறிலிணையை அடுத்தும் அளபு எடுக்கும்.

காட்டு: மங்ங்கலம்

- (“ங்’ குறிலை அடுத்து அளபெடுத்தது) அரங்ங்கம் - (“ங்“ குறிலிணையை அடுத்து அளபெடுத்தது)

அளபெடுக்கும் ஒற்றெழுத்துப் பதினொன்று, ஒற்று அளபெடுக்கும் இடம் குறில் அடுத்து (குறில்கீழ்) , குறிலிணையை அடுத்து (குறிலிணைக்கீழ்) என இரண்டும். எழுத்தும் இடமும் உறழ (11 எழுத்து 2 இடம்) ஒற்றளபெடை மொத்தம் இருபத்திரண்டு ஆகும்.இலக்கண ஆசிரியர் யாதேனும் ஒரு காரணம் பற்றித் தாமியற்றும் நூற்பாவில் எடுத்துமொழியும் சொற்களை ஆளுவார். அச்சொற்கள். எதுகை முதலிய நோக்கம் பற்றிப் பாடலை நிறைக்க வருஞ்சொற்கள் அல்ல. ஆசிரியன் சொல்ல எண்ணும் செய்தியை வாசகனோ உரையாசிரியனோ கருதிக் கொள்ளவேண்டும். அஃதாவது உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தில் பெய்வனவாகும். இவ்விதப்புக் கிளவிகள் நாம் வேண்டியனவற்றைப் பயக்கும் ஆற்றலை உடடையனவாம். அசைக்கு உறுப்பாம்

எழுத்துகளைச் சொல்லவரும் அமிதசாகரர் மறுவறு மூவினம், மைதீர் உயிர்மெய், அறிஞர் உரைத்த அளபு என மூன்று விதப்புக் கிளவிகளை ஆண்டுள்ளார். ஆதலால் அவை தரும் செய்திகளையும் காண்பது நமது கடமையாகும்.

**மறுவறு மூவினம்**

மெய்யெழுத்து வல்லினம் மெல்லினம் இடையினம் என மூவகைப்படும் இவையும் அசைக்குறுப்பாவனவாம் என்னும் செய்தியைச் சொல்ல “மூவினம்” என்றாலே போதும் அதனை “மறுவறு” என்று அடைகொடுத்துச் சிறப்பிக்கின்றார். இங்ஙனம் விதந்து - எடுத்து - சிறப்பித்து மொழிவதன் நோக்கம் என்ன? அது. இம்மூவின மெய்யும் உயிர்மெய்யாகிய காலத்தும் வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய், இடையின உயிர்மெய் என்று மெய்யின் பெயராலேயே வழங்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்பதே நோக்கமாம்.

**மைதீர் உயிர்மெய்**

“உயிர்மெய்” என்று சொல்வதே போதும். “மைதீர்” என்னும் அடையைச் சேர்த்துள்ளார். இது, இங்கு, விதப்புக்கிளவி. இவ்விதப்புக் கிளவியைக் கொண்டு காரிகை ஆசிரியர் உணர்த்த விரும்புவது ஏறிய உயிரின் மாத்திரையே உயிர்மெய்க்கும் அளவு என்பதைச் சொல்ல வேண்டும் என்பதேயாகும்.

க்-மெய்-அரைமாத்திரை அ-உயிர் - ஒரு மாத்திரை

க்+அ - மெய் + உயிர் - அரை + ஒன்று - ஒன்றரை மாத்திரையென்று கருதி விடுவோம் அல்லவா? அவ்வாறு கருதக்கூடாது உயிர்மெய்யின் மாத்திரை, மெய்யேறிய உயிரின் மாத்திரையே என்று நினைதல் வேண்டும்.

அறிஞர் உரைத்த அளபு

துணியை அளக்க மீட்டர்” என்ற அளவையும் எண்ணெயை முகக்க “லிட்டர்” என்ற அளவையும் நிறுத்தளக்கக் “கிலோ” என்ற அளவையும் கொள்கின்றோம். அதுபோல நம் முன்னோர் எழுத்தொன்று ஒலிக்கப்படுவதற்கு ஆகும் கால அளவையும் கணக்கிட முயன்றார். முயன்று “மாத்திரை” என்ற அளவைக் கண்டனர். அவர்களுடைய கொள்கைப்படி இயல்பாகக் கண்ணை இமைப்பதற்காகும் கால அளவும் இயல்பாக விரலை நொடிப்பதற்காகும் கால அளவும் மாத்திரையாகும். “இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை” என்றார் நன்னூலார் (100). உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் - ஒருமாத்திரை’ உயிர்நெடில், உயிர்மெய்நெடில் - இரண்டுமாத்திரை உயிரளபெடை -

மூன்று மாத்திரை என்பது சிறுபான்மை நான்கு மாத்திரையுமாம் ஒற்றளபெடை - ஒரு மாத்திரை ஒற்று அரைமாத்திரை ஆய்தம் - அரைமாத்திரைகுற்றியலிகரம் – அரைமாத்திரை குற்றியலுகரம் – அரைமாத்திரை ஐகாரக்குறுக்கம் - சொல்லின் முதலில் ஒன்றரை மாத்திரை,சொல்லின் இடையிலும் இறுதியிலும் ஒருமாத்திரை (ஔகாரக்குறுக்கம் - சொல்லின் முதலில் ஒன்றரை மாத்திரை, காரிகையாசிரியர் கொள்ளவில்லை) ஆய்தக்குறுக்கம் - கால்மாத்திரை மகரக்குறுக்கம் - கால்மாத்திரை

மாத்திரை என்றால் என்ன? ஒவ்வொரு வகை எழுத்துக்கும் தனித்தனி எவ்வளவு மாத்திரை? என்பன பற்றிக் காரிகையாசிரியர் பேசவில்லை. எனினும் இவை குறித்து முன்னையோர் கூறிய இலக்கணத்தையே தழுவிக் கொள்கின்றார். தழுவிக் கொள்வதற்காக விதந்து சொன்ன கிளவியே அறிஞர் உரைத்த அளபும்" என்னும் விதப்புச்சொல்.

## அசை

ஒரு செய்யுளை யாத்தலுக்கு அதாவது கட்டி உருவாக்குதலுக்கு எழுத்து, அசை, சீர்,அடி, தொடை ,தளை போன்ற உறுப்புகள் தேவையாக உள்ளன.

எழுத்துகள் சேர்ந்து அசையாக வருகின்றன. எழுத்துக்களின் குறிப்பிட்ட வரையறைக்க உட்பட்ட பகுப்பு அசை எனப்படும்.

ஓசை விட்டு விட்டு சேர்வதனால் அதனை அசை என்பர். அசைகள் சேர்ந்து சீர் உருவாகிறது.
அசையானது நேரசை, நிரையசை என இரண்டு வகைப்படும் என்பது யாப்பருங்கலக் காரிகை குறிப்பிடும் அசைகளாகும்.

ஆனால் தொல்காப்பியத்தில் நேரசை, நிரையசை, நேர்பு, நிரைபு என்று நான்கு அசைகள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

### நேரசை

1. நேரசை நான்கு நிலைகளில் வரும். குறில் எழுத்து மட்டும் தனித்துவரும்.
   க - குறில் எழுத்து

2.குறில் எழுத்தோடு ஒற்றும் இணைந்து வரும்.

கல் _ குறில் + ஒற்று

3. நெடில் எழுத்து மட்டும் தனித்து வரும்.

கா _ நெடில் எழுத்து

4 . நெடில் எழுத்தோடு ஒற்றும் இணைந்து வரும்

கால் _ நெடில் ௲ ஒற்று

நிரையசை

நிரையசை நான்கு நிலைகளில் வரும்.

1 .இரண்டு குறில் எழுத்துகள் மட்டும் தனித்து வரும்.

கிளி _ இரண்டு குறில் எழுத்துகள்

2. இரண்டு குறில் எழுத்துகளோடு ஒற்றும் இணைந்து வரும்.

மயில் - இரண்டு குறில் ஒற்று

3. குறில் எழுத்தோடு நெடில் எழுத்தும் சேர்ந்து வரும்.

புறா - குறில் நெடில் எழுத்துகள்.

4. குறில் நெடில் எழுத்துகளோடு ஒற்றும் இணைந்து வரும்.

இறால் - குறில் நெடில் ஒற்று

யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் அமுத சாகரர்

**“குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே**
**நெறியே வரினும்நிறைந்து ஒற்று அடுப்பினும் நேர்நிரையென்**
**அறிவேய் புரையும் மென்றோளி உதாரணம் ஆழி வெள்வேல்**
**வெறியே சுறாநிறம் விண்தோய் விளாம் என்றுவேண்டுவரே ! "**

என்கிறார்.

(யாப்பருங்கலக்காரிகை : 5)

தொல்காப்பியம்

**“குறிலே நெடிலே குறிலிணை குறில் நெடில்**

**ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**

**நேரும் நிரையும் என்றிசின் பெயரே "**

(தொல்காப்பியம் பொருளதிகாரம் :312)

என்று கூறுகிறது.

அதன் பின்னர் நேர்பு, நிரைபு பற்றிக்கூறும்போது நேர், நிரை அசைகள் குற்றியலுகரம், முற்றுயலுகரம் என்பனவற்றுள் ஒன்றை இறுதியில் பெற்று ஒரே சொல்லின்தன்மையைக் கொண்டிருக்குமானால் அவை நேர்பு, நிரைபு என்னும் இருவகை அசைகளாகும் என்கிறார் தொல்காப்பியர்.ஆனால் தனிக் குற்றெழுத்துகள் கொண்ட நேரசையின் பின் இங்ஙனம் இருவகை உகரமும் வந்து நேர்பு அசை என்று கூறப்படலாகாது

**“இருவகை உகரமொ டயைந்தவை வரினே**

**நேர்பும் நிரைபும் ஆகும் என்ப**

**குறிலிணை உகரம் அல்வழியான"**

என்கிறது தொல்காப்பியம் பொருளதிகாரம் :313 வது நூற்பா.

இதில் நேரசை நிரையசை இரண்டும் இயலசை எனப்படும். நேர்பு நிரைபு இரண்டும் உரியசை எனப்படும்.

**“இயலசை முதலிரண் டேனவை உரியசை "**

தொல்காப்பியம் பொருளதிகாரம் :314

மொத்தத்தில் அசையானது நேரசை நிரையசை என இரண்டு வகைப்படும். நேர்பு நிரைபு ஆகிய அசைகள் ஓரசைக்கு உரியவை. அவை பெரும்பான்மையாக அடியின் இறுதியில் வரும் அசையாக இருக்கும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்க. ஒரு செய்யுளை அலகிட்டுப் பார்த்தால் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும்.

”கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக "

| | | | |
|---|---|---|---|
| கற்க | | கற்/ க | |
| கற். குறில் ஒற்றுடன் | - | நேரசை | |
| க | - | தனிக்குறில் | - நேரசை |
| கசடற | | கச/ டற | |
| கச | - | குறிலிணை | - நிரையசை |
| டற | - | குறிலிணை | - நிரையசை |
| கற்பவை | | கற்/ பவை | |
| கற் | - | குறில் ஒற்றுடன் | - நேரசை |
| பவை | - | குறில் நெடில் | - நிரையசை |
| கற்றபின் | | கற்/ றபின் | |
| கற் | - | குறில் ஒற்றுடன் | - நேரசை |
| றபின் | - | குறிலிணை ஒற்றுடன் | - நிரையசை |
| நிற்க | | நிற் / க | |
| நிற் | - | குறில் ஒற்றுடன் | - நேரசை |
| க | - | குறில் தனித்து | - நேரசை |
| அதற்குத் | | அதற்/ கு | |
| அதற் | - | குறிலிணை ஒற்றுடன் | - நிரையசை |
| குத் | - | குறில் ஒற்றுடன் | - நேரசை |
| தக | | தக/ | |
| தக | - | குறிலிணை | - நிரையசை |

நினைவிற் கொள்க .

1. ஒற்றெழுத்தைத் தனியாக பிரிக்கக்கூடாது ஒற்றெழுத்தை அதற்கு முந்தைய எழுத்தோடு சேர்த்து அசை பிரிக்கப்படும்.

2. இரண்டு குறில் எழுத்துகள் சேர்ந்து அதாவது குறிலிணை தனிஅசையாக பிரிக்கப்படும். ஆனால்இரண்டு நெடில் எழுத்துகளைச் சேர்த்து அசை பிரித்தல் கூடாது. அதாவது இரண்டு நெடில் எழுத்துகள் சேர்ந்து வருமானால் அவை தனித்தனி அசைகளாக பிரிக்கப்பட வேண்டும்.

3. குறில் நெடில் என்று அசை பிரிக்கப்படும். நெடில் குறில் என்று அசை வராது.நெடில் குறில் என்று வரும் போது அவை தனித்தனி அசைகளாக பிரிக்கப்பட வேண்டும்

வெவ்வேறு எண்ணிக்கையான சீர்களைக் கொண்டு அமைந்த அடிகள் வெவ்வேறு பெயர்களினால் குறிப்பிடப்படுகின்றன. செய்யுள் அல்லது பாக்கள் யாவும் அடிகளைக் கொண்டு விளங்குபவையே. பாடலைச் சொல்லும் போது வரிகள் அல்லது சொற்கள் என்று கூறாமல் அடிகள் சீர்கள் என்றே விளிக்க வேண்டும். பொதுவாக பாவினங்களில் அடிகள் ஐந்து வகைப்படும்

குறளடி - இரண்டு சீர்கள் கொண்டது.

சிந்தடி மூன்று சீர்கள் கொண்டது. அளவடி - நான்கு சீர்கள் கொண்டது.

நெடிலடி ஐந்து சீர்கள் கொண்டது

கழி நெடிலடி ஆறு ஏழு அல்லது எட்டு சீர்களைக் கொண்டது.
இடையாகு கழி நெடிலடி ஒன்பது அல்லது பத்து சீர்களைக் கொண்டது. கடையாகு கழி நெடிலடி - 11 முதல் 16 வரையான எண்ணிக்கைகளில் சீர்களைக் கொண்டது.

## சீர்

யாப்பில் நிரைச்சீருக்குக் கூவிளம் கருவிளமென்று பெயர்களுண்டு. இவற்றின் அடையாளந் தெரியாது பலரும் வாய்ப்பாடு சொல்வர். வடக்கே விளையும் கூவிளமும் தெற்கே விளையும் கருவிளமும் இனிய கனிகள். அதிக இனிப்பிற்கு வெல்லஞ்சேர்த்துக் குடிப்பதுமுண்டு. பல்வேறு மருத்துவ குணங்களை இரண்டிற்குஞ் சொல்வர். (இங்கு விரிக்கின் அவை பெருகும்.) 2 பழங்களுக்கும் பசுமை தோய்ந்த மஞ்சள்நிற ஓடுகளுண்டு. உடையும் பழங்களாதலால் இவை விளவம் பழங்களாயின. (விளவல் = உடைதல்.) கூம்பிய விளம் கூவிளமாயிற்று. (கூவிள இலை கூர்வேலாகும்.) விளா மரப்பட்டை

கருநிறமெனவே உருண்டை விளம் கருவிளமாயிற்று. முள்ளுள்ள 2 மரங்களும் வறள் நிலத்தில் வளரக்கூடியவை பழத்தின்பெயரே அந்தந்த மரங்களுக்குப் பெயர்களாயின. மாம்பழப் பெயர் மரத்திற்கு ஆகவில்லையா? அதுபோல இவற்றைக் கொள்ளலாம்.
தேமா புளிமா போல் கூவிளம் கருவிளம் என்ற வாய்ப்பாடுகள் நெடுகவும் பழகியவையல்ல. இவற்றோடு பாதிரி கணவிரி என்ற வாய்ப்பாடுகளும் புழங்கியதாய் நச்சினார்க்கினியர் சொல்வார். வாய்ப்பாடு என்பது பட்டவத்தைக் (pattern) குறிக்கும் சொல்.யாப்பருங்கலத்தின் தாக்கம் பிற்காலத்தில் கூடியமையால் முன்னையத் தொல்காப்பிய விளக்கங்கள் இப்போது குறைந்துபோயின. தொல்காப்பியம் நேரசை நிரையசையோடு நேர்பு அசை நிரைபு அசை என இன்னும் 2 அசைகளைச் சொல்லும். இன்றும் வெண்பாவின் ஈற்றசைகளாய் நாள் மலர் காசு பிறப்பு என்ற வாய்ப்பாடாக இவை புழங்கும். காசு பிறப்பின் வழியாக இன்றும் நேர்பு நிரைபு போன்றவற்றைப் புழங்குகிறோம். யாப்பருங்கலம் கூட நேர்பு நிரைபு குறிக்காது இந்த வாய்ப்பாடுகளை மட்டும் புழங்கும்.

ஈரசைச் சீர்களையே (தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்) யாப்பருங்கலம் சுட்டும். தொல்காப்பியமோ 16 ஈரசைச் சீர்களைக் காட்டும். இளம்பூரணர்

நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை = தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் நேர்நேர்பு, நிரைநேர்பு, நிரைநிரைபு, நேர்நிரைபு - மாங்காடு, களங்காடு, கடிகுரங்கு, பாய்குரங்கு

நேர்புநேர், நிரைபுநேர், நிரைபுநிரை, நேர்புநிரை - ஆற்றுக்கால், குளத்துக்கால், குளத்துமடை, ஆற்றுமடை

நேர்புநேர்பு, நிரைபுநேர்பு, நிரைபுநிரைபு, நேர்புநிரைபு – ஆற்றுநோக்கு, வரகுசோறு, வரகுதவிடு, ஆற்றுவரவு

என்று இவற்றின் வாய்ப்பாடுகளைத் தருவார். நச்சினார்க்கினியரும் இதைப் பின்பற்றுவார். மூவசைச்சீர் என்பது தொல்காப்பியத்தின் படி 64 வகை

மா வாழ் கான், மா வாழ் நெறி, மா வாழ் காடு, மா வாழ் பொருப்பு, மா வரு கான், மா வரு நெறி, மா வரு காடு, மா வரு பொருப்பு, மா போகு கான், மா போகு நெறி, மா போகு காடு, மா போகு பொருப்பு, மா வழங்கு கான், மா வழங்கு நெறி, மா வழங்கு காடு, மா வழங்கு பொருப்பு

புலி வாழ் கான், புலி வாழ் நெறி, புலி வாழ் காடு, புலி வாழ் பொருப்பு, புலி வரு கான், புலி வரு நெறி, புலி வரு காடு, புலி வரு பொருப்பு, புலி போகு கான், புலி போகு நெறி,

புலி போகு காடு, புலி போகு பொருப்பு, புலி வழங்கு கான், புலி வழங்கு நெறி, புலி வழங்கு காடு, புலி வழங்கு பொருப்பு

களிறு வாழ் கான், களிறு வாழ் நெறி, களிறு வாழ் காடு, களிறு வாழ் பொருப்பு, களிறு வரு கான், களிறு வரு நெறி, களிறு வரு காடு, களிறு வரு பொருப்பு, களிறு போகு கான், களிறு போகு நெறி, களிறு போகு காடு, களிறு போகு பொருப்பு, களிறு வழங்கு கான், களிறு வழங்கு நெறி, களிறு வழங்கு காடு, களிறு வழங்கு பொருப்பு

பாம்பு வாழ் கான், பாம்பு வாழ் நெறி, பாம்பு வாழ் காடு, பாம்பு வாழ் பொருப்பு, பாம்பு வரு கான், பாம்பு வரு நெறி, பாம்பு வரு காடு, பாம்பு வரு பொருப்பு, பாம்பு போகு கான், பாம்பு போகு நெறி, பாம்பு போகு காடு, பாம்பு போகு பொருப்பு, பாம்பு வழங்கு கான், பாம்பு வழங்கு நெறி, பாம்பு வழங்கு காடு, பாம்பு வழங்கு பொருப்பு

என்று இந்த வகைகள் அமையும்.

யாப்பருங்கலமோ நேர்பசையையும் நிரைபசையையும் ஏற்காக் காரணத்தால் மூவசைச்சீரை 8 ஆய்ச் சொல்லும்

தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய், தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்று வாய்ப்பாடுகள் அதிலமையும். சங்கப்பாடல்கள் அனைத்தையும் தொல்காப்பிய நெறிமுறையாலும் அலகுபிரிக்க முடியும். (இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அப்படித்தான் சொல்கிறார்.) ஆனால் பிற்காலத்தில் வந்தோர் யாப்பருங்கலம் பின்பற்றி தொல்காப்பிய யாப்பியலைப் பின்பற்றாது போனார். தொல்காப்பியம் 4 அசைச் சொற்கள் பற்றிக் கூறாது.

யாப்பருங்கலம் நாலசை பேசும்

தேமாந் தண்பூ, தேமாந் தண்நிழல், தேமா நறும்பூ, தேமா நறுநிழல், புளிமாந் தண்பூ, புளிமாந் தண்நிழல், புளிமா நறும்பூ, புளிமா நறுநிழல், கருவிளந் தண்பூ, கருவிளந் தண்நிழல்எ கருவிள நறும்பூ, கருவிள நறுநிழல், கூவிளந் தண்பூ, கூவிளந் தண்நிழல், கூவிள நறும்பூ, கூவிள நறுநிழல் என்று 16 நாலசை வாய்ப்பாடு பேசும். இருவேறு போக்குகளையும் ஒப்பிட்டு சங்க இலக்கியத்தை அலசியவர் நானறிய யாருமில்லை. ஏனோ தெரியவில்லை. தொல்காப்பிய யாப்பியல் இன்று பயன்படாது போய்விட்டது. மரப்புப்பா சார்ந்த எல்லோரும் யாப்பருங்கலமே பயன்படுத்துகிறார் (யாப்பருங்கலம் விலங்குகளை வாய்ப்பாட்டில் பயன்படுத்தாது. தொல்காப்பியம் பயன்படுத்தும். யாப்பருங்கலம் அதிலுங் கூச்சப்பட்டு முற்றிலும் நிலத்திணைக்கு வந்துவிடும்.)

புதுக்கவிதையாளர் அதையும் துறந்துவிட்டார். ஏராளம் வழுக்களுடன் “யாப்புச் சுதந்திரம்” பேசி இன்று கவிதை நடைபோடுகிறது. பா செத்துவிட்டது.

பாட்டுக்குரிய அடிகளை அவர் ஐந்து வகைகளாகக் கொள்கிறார். அவையாவன: குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்பனவாம்.

நான்கிலிருந்து ஆறு எழுத்துகளைக் கொண்டது குறளடி எனப்படும்.

ஏழிலிருந்து ஒன்பது எழுத்துகளைக் கொண்டது சிந்தடி எனப்படும்.

பத்திலிருந்து பதினான்கு எழுத்துகளை உடையது அளவடி எனப்படும்.

பதினைந்திலிருந்து பதினேழு எழுத்துகளை உடையது நெடிலடி எனப்படும்.

பதினெட்டிலிருந்து இருபது எழுத்துகளை உடையது கழிநெடிலடி எனப்படும் (தொல். 1293 - 97).

இவ்விதிகளுக்குப் பொருந்திய அடிகளே சிறப்பான அடிகள் என்பதும் இவ்வடிகளால் ஆனவையே பாட்டு என்பதும் தொல்காப்பியருடைய கருத்தாகும்.

## அடி

அடி என்பது செய்யுள் உறுப்புகள் ஆறனுள் ஒன்று: செய்யுள் உறுப்புகளின் வரிசையில் ஐந்தாவதாக வைத்து எண்ணப்பெறுவது. பல அடிகள் சேர்ந்து ஒரு செய்யுளாக வரும். அடிகளே செய்யுளை வகைப்படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கின்றன. வரும்சீரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடிகள் பல வகைப்படும். “எழுந்து அடியில் அசை சீர் பந்தம் அடி தொடை“ என்று அமிதசாகரரால் வைப்பு முறை சொல்லப்படுகின்றது. தமிழ்ப் பாக்களின் இலக்கணத்தைக் கூறும் யாப்பியல் நூல்கள் பாக்களின் உறுப்புக்களாக எழுத்து அசை சீர் அடி என்பவற்றைக் குறிப்பிடுகின்றன. எழுத்துக்கள் சேர்ந்து அசையும் அசைகள் சேர்ந்து சீரும் சீர்கள் சேர்ந்து அடியும் உருவாகின்றன.

மனிதன் விலங்கு முதலியன அடிகளால் நடக்கின்றன. நடக்கத் துணையாகும் அடியைப் “பாதம்“ என்கின்றோம் பாட்டும் அடியால் நடத்தல் ஒப்புமை பற்றிப் பாடலடியையும் அமிதசாகரர் "பாதம்" என்கின்றார்.

அத்தளை அடுத்து நடத்தலின் அடியே அடி இரண்டு

தொடுத்துமன் சேறலின் தொடையே

என்னும் நூற்பா "அடி" என்றதன் பெயர்க்காரணத்துடன் அதன் விளக்கத்தையும் ஒருங்கே அறிவிப்பதாக அமைகிறது சீர்களின் தொடர் இயக்கத்தால் உண்டாகும் ஒலி ஒழுக்கை அல்லது ஒலிநடையைத் (Rhythm) தளை என்றால் சீர்கள் தொடர்ந்து இயங்கும் வடிவியக்கம் (concatenated on chain movement) அடி என்று சொல்லலாம் எனவும் அடிக்கு விளக்கம் தருகின்றனர். சுருக்கமாகச் "சீர்கள் தம்முள் தொடர்ந்து இயங்கும் செய்யுளியக்க அலகு அடி" என்று சொல்லி வைக்கலாம்

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"
என்பது குறள் வெண்பா. இது இரண்டு வரிகளால் ஆகியது என்று கூறக்கூடாது. இரண்டு அடிகளால் வந்தது என்றே கூறுதல் வேண்டும். இங்கு அடி என்பது பாவின்அடி 'கற்றதனா லாய் என்பதில் இரண்டு சீர்களே பாவின் ஓரடியாகி நிரம்புவதும் உண்டு. சீர்கள் உள்ளன. இவை ஒரு உண்டாக்குகின்றன. ஒரு தளையை உண்டாக்குகின்றன
சான்று

"திரைத்த சாலிகை
நிரைத்த போல்நிறைந்(து)
இரைப்ப ன்களே
விரைக்கொள் மாலையாய்"

இவ்வாறு வருவனவற்றைச் "சீர்அடி" என்பர் சீர்கள் இரண்டினால் ஓரடி நிரம்பினால் அதைக் குறளடி என்றனர். சீர்கள் மூன்றனால் நிரம்பினால் அது சிந்தடி. சீர்கள் நான்கனால் நிரம்பினால் அளவடி அல்லது நேரடி ஐந்தனால் நிரம்பினால் நெடிலடி ஆறு ஏழு எட்டு என ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் நிரம்பினால் கழிநெடிலடி என்றனர் யாப்பிலக்கண நூலார். இவற்றையே சொல்லும்முறை மாற்றி இரண்டு சீர்களால் இயங்குவது குறளடி மூன்று சீர்களால் இயங்குவது சிந்தடி நான்கு சீர்களால் இயங்குவது அளவடி ஐந்து பிற்கால யாப்பிலக்கண நூல்களைக் கருத்திற்கொண்டு "குறுவெண் பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வரும் என்றும் சமனிலை வெண்பா நான்கடியால் வரும் என்றும் பஃறொடை வெண்பா ஐந்தடி முதற் பன்னிரண்டடி காறும் வரும் என்றும் கூறிப் பன்னிரண்டடிக்குமேல் வரும் செய்யுள் வெண்பாட்டைக் கொள்ளாது விட்டனர். இவற்றுள் சிந்தியல் வெண்பா சமனிலை வெண்பா என் பனவற்றைத் தொல்காப்பியர் பிரித்துணர்த்தவில்லை. இவையெல்லாம் தொல்காப்பியர்க்கு நெடுவெண்பாட்டுள் அடங்கும். உரையாசிரியர்கள் இவ்வாறு வேறுபடுவதால் நூலாசிரியர் கருத்து உணர முடியாமற் போகின்றது. தொல்காப்பியர் பாக்களின் ஈற்றுறுப்பைப் பொதுவாகச் செய்யுளியல் 65 ஆம் நூற்பாவிலிருந்து 73 ஆம் நூற்பாவரை கூறியுள்ளனர். பின் பரிபாடல் சுரிதகத்தையும் (செய். 117) முதனிலை

ஒத்தாழிசைக்கலியும் அதன் இழிபாகிய கொச்சகக் கலியும் போக்கியல் வைப்பையும் (செய்.132,148) தெய்வத்தை முன்னிலைப்படுத்திப் பரவும் வண்ணகமும் கொச்சக போகும் அம்போதரங்க ஒருபோகும் அடக்கியல் வாரத்தையும் ஈற்றுறுப்பாகப் பெற்று வரும் என்று (செய்.138,143,146) சிறப்பிலக்கணமாக ஆசிரியர் பிரித்துப் பிரித்துக் கூறியிருக்கவும் பிற்கால இலக்கண விதியை மனத்திற்கொண்ட இளம்பூரணர் முதலான உரையாசிரியரெல்லோரும் சுரிதகமும் போக்கியல் வைப்பும் அடக்கியல் வாரமும் ஒன்றென்றே கருதிவிட்டனர். மேற்கூறியவற்றைப் போலப் பல குழப்பங்கள் செய்யுளியல் உரையில் உள்ளன . இக்குழப்பங்களையெல்லாம் களைந்து விட்டுத் தொல்காப்பியரின் கருத்தை மட்டும் உணர்ந்து கொண் டால் அவ்வுணர்ச்சி தொல்காப்பியர் காலத்து யாப்பு எப்படி இருந்ததென்பதைப் புலப்படுத்தி அவர் வாழ்ந்த காலத்தை உணர்வதற்கும் வழி செய்யும் .

ஐந்து சீர்களால் இயங்கும் அடி நெடிலடி ஆறு மேற்பட்டசீர்களால் இயங்கும் அடி கழிநெடிலடி என்றும் கூறுவர். மேலும் யாப்பிலக்கண நூலார் சிலர் ஒருதளையான் வந்த அடி “குறளடி” இருதளையான் வந்த அடி “சிந்தடி” மூன்று தளையான் வந்த அடி “அளவடி” நான்கு தளையான் வந்த அடி. “நெடிலடி” நான்கு தளையின் மிக்கு ஐந்து தளையானும் ஆறு தளையானும் ஏழு தளையானும் வரும் அடி கழிநெடிலடி என்றும் சொல்வதும் உண்டு. குறள்ஒரு பந்தம் இருதளை சிந்தாம் முத்தளை அளவடி நால்தளை நெடிலடி ஐந்தளை முதலா எழுதளை காறும் வந்தவும் பிறவும் கழிநெடில் என்ப இவ்வகையில் “சீரடி” குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

**அடிகளின் உருவாக்கம்**

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

மேலேயுள்ள பாடலிலே ஒவ்வொரு வரியும் ஒரு அடியாகும். முதல் அடியானது 1. பாலும் 2 தெளிதேனும் 3 பாகும் 4 பருப்புமிவை என நான்கு பகுதிகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் சீர் என அழைக்கப்படுகின்றது. இப்பாடலிலே முதல் மூன்று அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர்களைக் கொண்டு அமைந்துள்ளன. நான்காவது அடி மூன்று சீர்களால் அமைந்துள்ளது. பொதுவாக பாடல்களின் அடிகளில் இரண்டு சீர்கள் முதல் பதினாறு சீர்கள் வரை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு வெவ்வேறு எண்ணிக்கையான சீர்களைக் கொண்டு அமைந்த அடிகள் வெவ்வேறு பெயர்களினால் குறிப்பிடப்படுகின்றன. செய்யுள் அல்லது பாக்கள் யாவும் அடிகளைக் கொண்டு விளங்குபவையே. பாடலைச் சொல்லும் போது வரிகள் அல்லது சொற்கள்

என்று கூறாமல் அடிகள் சீர்கள் என்றே விளிக்க வேண்டும். பொதுவாக பாவினங்களில் அடிகள் ஐந்து வகைப்படும்
குறளடி - இரண்டு சீர்கள் கொண்டது.

சிந்தடி மூன்று சீர்கள் கொண்டது.

அளவடி - நான்கு சீர்கள் கொண்டது.

நெடிலடி ஐந்து சீர்கள் கொண்டது

கழி நெடிலடி ஆறு ஏழு அல்லது எட்டு சீர்களைக் கொண்டது.

தொல்காப்பியர் அடியை ஐந்தாம் உறுப்பாகக் கொண் டார் . சீர்களைக் கொண்டது அடி என்பது பொதுக்கருத் தாயினும் அவர் இருசீர் கொண்டது குறள் முச்சீர் கொண்டது சிந்து நாற்சீர் கொண்டது. அளவு ஐஞ்சீர் கொண்டது. நெடில் அறுசீர் முதலானவற்றைக் கொண்டது கழிநெடில் என்று கூறாமையால் சீர்களைக் கொண்டு குறளடி முதலானவற்றைக் கூறும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்று தெரிகிறது. அவர் அடிகளைப்பற்றிக் கூறத் தொடங்கும் முதல் நூற்பா வினை "நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" என்று கூறித் தொடங்கி அந்நாற்சீரடியினையே எழுத்துக் கணக்கினால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடியென ஐவகை அடியாக வகுத்துக் கொண்டனர். பிற்காலத்தார் தளை அடுத்து நடத்தலின் அடியே என்று அடிக்குப் பொது இலக்கணம் கூறினாலும் தளையைக் கொண்டு அடிக்குச் சிறப்பிலக்கணம் கூறாமல் இருசீர் குறள், முச்சீர் சிந்து, நாற்சீர் அளவு அல்லது நேர், ஐஞ்சீர் நெடில், அறுசீர் முதலியன கழிநெடில் எனச் சீரைக் கொண்டே அடியிலக்கணம் வகுத்தனர்

## தொடை

தொடுக்கப்படுவது தொடை எனப்படும். இரண்டு அடிகள் தொடர்ந்து வரும்போது அவற்றில் முதல் எழுத்து இரண்டாம் எழுத்து முதலியவை ஒத்து வரும்படி இருப்பது தொடை என்று கூறப்படும். முதல் எழுத்து ஒத்து வருவது மோனை எனப்படும். இரண்டாம் எழுத்து ஒத்து வருவது எதுகை எனப்படும்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை (திருக்குறள் 411)

இந்தச் செய்யுளில் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் முதல் எழுத்து செ என்றே வந்துள்ளது. இதுவே மோனைத் தொடை எனப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக (திருக்குறள்-391)இந்தச் செய்யுளில் இரண்டு அடிகளிலும் இரண்டாம் எழுத்தாக ற் என்ற மெய் எழுத்து வந்துள்ளது. இதுவே எதுகை எனப்படும். இவைபோலவே வேறுபல தொடைகளும் உள்ளன. தொடை என்பது யாப்பிலக்கணத்தில் செய்யுள் உறுப்புக்கள் வகையைச் சேர்ந்தது. செய்யுள்களின் சீர்களும் அடிகளும் தொடுத்துச் செல்லுகின்ற முறையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் தொடை என வழங்கப்படுகின்றது. அவற்றின் இனிமைக்கும் செய்யுள்களின் இசை தொடைகள் நயத்துக்கும் முக்கியமானவை.

**தொல்காப்பிய விளக்கம்**

தொடைகள் 13708 வகைப்படும். எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**தொடை வகைகள்**

தொடைகள் பலவகைப்படுகின்றன. இவை

1. மோனைத் தொடை
2. இயைபுத் தொடை
3. எதுகைத் தொடை
4. முரண் தொடை
5. அளபெடைத் தொடை
6. அந்தாதித் தொட
7. இரட்டைத் தொடை
8. செந்தொடை

என்பனவாகும். இவற்றுள் மோனை எதுகை முரண் மற்றும் அளபெடைத் தொடைகள் செய்யுள் அடிகளின் முதற் சீருடன் சம்பந்தப்பட்டிருக்கஇ இயைபுத் தொடை அடிகளின் இறுதிச் சீர் தொடர்பாக அமைகின்றது.

**தொடை விகற்பங்கள்’**

மேலே கண்ட எட்டுத் தொடைகளிலே முதல் ஐந்து தொடை ஒவ்வொன்றுக்கும் அவை இடங்களைப் பொறுத்து எட்டு பாவிலே அமைந்து வருகின்ற வகையான வேறுபாடுகள் யாப்பிலக்கண நூல்களிலே சொல்லப்பட்டுள்ளன. யாப்பிலக்கணச் சொற் பயன்பாட்டு வழக்கில் விகற்பங்கள் எனப்படுகின்றன. மேற் கூறிய எட்டு விகற்பங்களும் வருமாறு.

இவை

1 அடி

2.இணை

3.பொழிப்பு

4.ஒரூஉ

5.கூழை

6.மேற்கதுவாய்

7.கீழ்க்கதுவாய்

8.முற்று

மோனை எதுகை, முரண், அளபெடை, இயைபு ஆகிய தொடைகளில் எட்டுவகையான விகற்பங்கள் ஏற்படும்போது மொத்தம் நாற்பது தொடை விகற்பங்கள் உண்டாகின்றன. இவற்றுடன் விகற்பங்கள் இல்லாத அந்தாதி இரட்டை மற்றும் செந்தொடைகளும் சேர்ந்து நாற்பத்து மூன்று ஆகின்றது.

தொல்காப்பியர் தொடை பற்றிக் குறிப்பிடும் இடத்து முதற்கண் நான்கு தொடைகள் நெறிப்பட நிற்பன என்று சிறப்பித்துக் கூறுகின்றார். மற்ற தொடைகளை அடுத்த நிலையில் வைத்து நூற்பா செய்துள்ளது இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. மேலும் தொல்காப்பியர் தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்று குறிப்பிடுவதும் (செய்யுளியல் 97) இதற்கு உரையாசிரியர்கள் கணக்கிடும் முறைகளும் பழந்தமிழகத்தில் செய்யுள் வல்லாரின் உரையாராய்ச்சியின் தன்மை நம்மை வியப்படையச் செய்கின்றது. செய்யுள் உறுப்புகளில் தொடை விரிவாக ஆராய்ந்து கணக்கிட்டு உரைக்கத் தகுந்த மிகப்பெரிய பிரிவாக உள்ளது. இன்றைய புதிய கணக்கீட்டு முறைகளின் துணைகொண்டு தொடையமைப்பு விரிவாக ஆராய்வதற்கு இடந்தருகின்றது. தொடையை முதற்தொடை எனவும் தொடை விகற்பம் எனவும் இரண்டாகப் பகுத்துப் பார்க்கலாம். ஓரடிக்கும் மற்றோர் அடிக்கும் இடையில் உள்ள பொருத்தத்தைக் காட்டுவது முதற்தொடை என்று அழைக்கப்படும்.

இவ்வாறு அல்லாமல் ஓரடியில் உள்ள சீர்களுக்கு இடையே உள்ள பொருத்தப்பாட்டினைத் தொடை விகற்பம் என்பர். பொதுவாகத் தொடையழகு இன்னோசைக்கும் செய்யுளைச் சிறப்பிக்கவும் இடம்பெறுகின்றது. புலமைநலம் வாய்த்த கவிஞர்களின் செய்யுள்களில் தொடைநயம் நிரம்பக் கிடந்து கற்போருக்கு இன்பம் நல்கும். சங்கச் செய்யுள்களிலும் பக்திப் பனுவல்களிலும் காப்பியங்களிலும் தொடையமைப்புகள் இலக்கியத்துறையின் படிக்கட்டுகளாக உள்ளன. செய்யுள்களைச் சிறக்கச் செய்த தொடை நயம் இன்றும் புகழ்பெற்ற பேச்சாளர்களின் நாவிலும் சிறக்கக் காண்கின்றோம். செய்யுள் சிறப்பிற்குத் தொடை முக்கியப் பங்காற்றுவதால் "தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்" என்ற பழமொழி மக்கள் வழக்கில் உண்டு. தொடை என்னும் உறுப்பைப் பற்றித் தொல்காப்பியர் பதினாறு நூற்பாக்களில் பேசியுள்ளதை அறிஞர் சோ.ந. கந்தசாமியார் எடுத்துக்காட்டுவார். (தொல்-பொருள்-இளம்.393-408). தொடையின் வகைகளைத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். ஆனால் தொடை என்றால் என்ன என்று தொல்காப்பியர் விளக்கவில்லை

நாற்சீர்கொண்ட அடிகளன்றி இரண்டு முதலான சீர்களைக் கொண்டு வரும் அடிகளில் தொடை வாராதென்பர் தொல்காப்பியர். தொல்காப்பியர் மோனை எதுகை முரண் இயைபு அளபெடை பொழிப்பு ஒரூஉ செந்தொடை நிரல்நிறை இரட்டையாப்பு எனப் பத்துத் தொடைகளை முதற்கண் குறிப்பிட்டு முதலில் உள்ள எட்டிற்கும் சிறப்பிலக்கணம் கூறி நிரல்நிறையும் இரட்டை யாப்பும் சொல்லதிகார எச்சவியலில் மொழிந்துள்ளார். இங்கு இரட்டை என்பது ஒரு சீர் அடி முழுவதும் வருவதாகும். எ.கா. "ஒக்குமே யக்குமே யக்குமே யக்கும்". உரையாசிரியர் மூவரும் "மொழிந்த வற்றியலான் முற்றும்" என்பதற்கு நிரல்நிறையும் இரட்டை யாப்பும் மேல்மொழிந்த மோனை முதலானவற்றின் இலக்கணத்தால் அவற்றுள் அடங்கி முடியவும் பெறும் என்று கூறி நிரல் நிறையையும் இரட்டைத் தொடையையும் நீக்கிவிட்டுத் தொடையை எட்டாகக் கொண்டு அந்த எட்டுடன் தொல்காப்பியர் கூறாத பல தொடைகளையும் கூட்டித் தொடைத்தொகை கொண்டுள்ளதாகப் பேராசிரியர் அடிகளாசிரியர் குறிப்பிடுவர்.

## பா வகைகள்

### வெண்பா

தமிழ் யாப்பிலக்கண நூல்கள் குறிப்பிடுகின்ற வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய ஐந்து வகையான பாவகைகளுள் முதலில் வைத்து எண்ணக் கூடிய பாவடிவமாக வெண்பாவானது திகழ்கின்றது. வெண்பாவினைப் பாடுதல் மிகக் கடினமாக இருக்கும் என்பதனை கருத்தில் கொண்ட ஔவை "புலவர்க்கும் வெண்பா புவி எனக் கூறுவதனை அறியமுடிகின்றது. அத்தகைய கடினமான வெண்பா வகையானது இருமுறை படித்தாலே இதயத்தில் பதிந்து விடும் என்பதனை உணர்ந்த ஔவை

பிராட்டியே "வெண்பா இருகாவிற் கல்லானை" எனும் பாடவின் மூலமாக தம் நெஞ்சில் பதித்து விடுகின்றார் என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

அத்தகையச் சிறப்பினைப் பெற்ற வெண்பாவானது குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, முடுகியல் வெண்பா, கலிவெண்பா எனப் பலவகையாகப் பாகுபடுத்தப்படுகின்றது.

குறள் வெண்பா

வெண்பாவின் பொது இலக்கணத்தினைப் பெற்று இரண்டடிகளைக் கொண்டதாகவும் முதலடி நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாகவும் இரண்டாம் அடி மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாகவும் அமைந்து பாடலின் இறுதிச் சீரானது நாள், மலர், காசு, பிறப்பு எனும் நான்கினுள் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு முடிவது குறள் வெண்பா என்றுக் கூறப்படுகின்றது. யாப்பருங்கலக்காகை

“ஈரடி வெண்பாக் குறள்” (Sivaprakasar 1944) மேலும் தொல்காப்பியர் குறள் வெண்பாவானது ஏழு சீர்களை மட்டுமேப் பெற்று வரும் என்பதனை

“குறுவெண்பாட்டிற்கு அளவேழ் சீரே" எனக் குறள் வெண்பாவிற்கு இலக்கணம் வகுக்கிறது.

இரண்டடிகள் வேறு எழுத்தினைப் பெற்ற எதுகையாகவும் கொண்ட இருவிகற்ப எதுகையாகவும் அமைவது நேரிசை வெண்பா என்று கூறப்படுகின்றது. தனிச்சொல்லானது அமையாத படி வருவது இன்னிசை வெண்பா ஆகும்.

இத்தகைய வெண்பா வகையே பெரும்பாலும் தமிழ் இலக்கிய நூல்களாகவுள்ள நீதி நூல்கள், சாத்திர நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள் முதலிய பல நூல்கள் நேரிசை வெண்பா யாப்பிலேப் பாடப்பெற்றுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். நேரிசை வெண்பாவிற்குரிய இலக்கணத்தை யாப்பருங்கலக் காரிகை

“குறட்பா இரண்டாய் இடைக்கண்
சீரியவான் தனிச்சொல் அடிமூய்ச் செப்பலோசை குன்றாது
ஓரிரண்டாயும் ஒருவிகற்பாயும் வருவது உண்டேல்
நேரிசை ஆகும்”

“நாலோர் அடியாய்த் தனியிரண்டு ஆவதன்
ஈறொரூஉ வாய்முற் றிருவிகற் பொன்றினும்”

நேரிசை வெண்பாவிற்கான இலக்கணத்தைச் சுட்டுகின்றது.

**ஆசிரியப்பா**

ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுள் தொல்காப்பியர் ஆசிரியப்பாவை முதலில் வைத்துக் கூறியுள்ளார் இதனை

“ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென

நாலியற் றென்ப பாவகை விரியே” (llampooranam.2012) என்ற நூற்பாவால் அறியலாம்.

ஆசிரியப்பா ஓசையடிப்படையில் அகவற்பா என்று அழைக்கப்படுகின்றது. இது நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டிய ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகையாகப் பகுக்கப்படுகின்றது.

**கலிப்பா**

தொல்காப்பியம் கலிப்பா ஒத்தாழிசைக் கலி, கொச்சகம், கலிவெண்பாட்டு, உறழ்கலி என்று நான்கு வகைப்படும் என்பதை

“ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே

கொச்சகம் உறழொடு கவிநால் வகைத்தே” (Ilampooranam.2012);

என்ற நூற்பாவால் சுட்டுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பிலக்கண நூல்களான யாப்பருங்கலக்காரிகை, தொல்காப்பியர் கூறிய உறழ்கலியை விடுத்து ஒத்தாழிசை, கொச்சகக் கலி, கலிவெண்பா ஆகிய மூன்று வகைகளை மட்டுமே குறிப்பிடுகின்றன.

இவற்றுள் ஒத்தாழிசைக் கலியை நேரிசை ஒத்தாழிசைக் கலி, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலி, வண்ணக ஒத்தாழிசைக் கலி என மூன்று வகையாகவும் கொச்சகக் கவிப்பாவைத் தரவு கொச்சக கலிப்பா, தரவிணைக் கொச்சக கலிப்பா, சிஃறாழிசை கொச்சக கலிப்பா, பஃறாழிசை கொச்சக கவிப்பா என்று ஐந்து வகைகளாகவும் தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பருங்கலக் காரிகை பாகுபடுத்தியுள்ளன.

இதற்கான இலக்கணத்தினை

“தரவே தரவினணை தாழிசை தாமும் சிலபலவாய்

மரபே யிவன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்

அரவே ரகவல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே”
என்று யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடுகின்றன.

கலிவெண்பா பதின்மூன்று அடிகள் முதல் பல அடிகளைப் பெற்றுப் பாடப்பெறும். இதனை நேரிசை கலிவெண்பா என்றும் இன்னிசைக் கலிவெண்பா என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இரண்டடிகள் ஓரெதுகையையும் தனிச்சொல்லையும் பெற்று வருவதை நேரிசை கலிவெண்பா என்றும் தனிச்சொல் பெறாமல் வருவதனை இன்னிசைக் கலிவெண்பா என்றும் வேறுபடுத்திக் காணலாம்.

மருட்பா

மருள் என்னும் சொல்லுக்குக் மயக்கம் அல்லது கலத்தல் என்பது பொருள். வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்த பாவடிவம் மருட்பா ஆகும். பாடலினுடைய முற்பகுதி வெண்பாவாகவும் பிற்பகுதியானது ஆசிரியப்பாவாகவும் அமைந்து வெண்பா அடிகளும் ஆசிரியப்பா அடிகளும் சமநிலையில் வந்தால் அதனை சமநிலை மருட்பா என்றும் வெண்பாவை விட ஆசிரியப்பா அடிகள் மிகுதியாக வந்தால் அதனை வியநிலை மருட்பா என்றும் வேறுபடுத்துவர்.

மருட்பா என்ற இவ்வகையானது புறநிலை வாழ்த்து,செவியறிவுறூஉ, கைக்கிளை, வாயுறை வாழ்த்து ஆகிய பொருண்மைகளில் பாடப்பட வேண்டும். இப்பாடவிற்காண இலக்கணத்தை யாப்பருங்கலக்காரிகை

“பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்து
ஒண்பாச் செவியறிவு என்றுஇப் பொருள்மிசை ஊனமில்லா
வெண்பா முதல்வந்து அகவல்பின்னாக விளையுமென்றால்
வண்பால் மொழிமட வாய் மருட்பா எனும் வையகமே”
என்று குறிப்பிடுகின்றது.

பயிற்சி வினாக்கள்

1. யாப்பு எழுத்துக் குறித்துக் கட்டுரைக்க
2. தொல்காப்பியத்திலிருந்து, யாப்பு அசை வேறுபடும் விதத்தினை விவரிக்க
3. தொல்காப்பியத்திலிருந்து, யாப்பு சீர் வேறுபடும் விதத்தினை விவரிக்க
4. பா வகைகளை கட்டுரைக்க
5. தொல்காப்பியத்திலிருந்து, யாப்பு தொடை வேறுபடும் விதத்தினை விவரிக்க

# அலகு 4

## வண்ணம்

வாய்மொழி மரபு செல்வாக்குடன் விளங்கிய காலகட்டத்தில் பாடல்கள் இசையுடன் பாடப் பெற்றன. பாணர் மரபில் பாணர்கள் யாழினை மீட்டிப் பாடல்கள் பாடிய நிகழ்வுகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. ஓலைச் சுவடிகளில் பாடல்கள் எழுதப்பெற்ற பின்னரும் செய்யுள்களை ஓசையுடன் பாடும் மரபு தொடர்ந்தது. புதிதாகச் செய்யுள் எழுதும்போது புலவரின் மனதில் தோன்றும் சந்தம் அல்லது ஓசை படைப்பாக்கத்தினுக்கு உதவியது. அகவல் பா இன்ன ஓசையுடன்தான் பாடப்பெற வேண்டும் என்ற விதி பாடலை மனனம் செய்வதற்கு அடிப்படையாக விளங்கியது. செய்யுளை ஓசையுடன் பாடும் மரபு அழிந்துவிட்ட இன்றைய சூழலில் தொல்காப்பியர் குறிப்பிடும் பல கலைச்சொற்களின் பொருள்களை முழுமையாக அறிய இயலவில்லை. செய்யுள் உறுப்பாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் வண்ணம் ஓசையுடன் தொடர்புடையது. எனினும் வண்ணம் என்ற சொல்லுக்கான நேர்பொருளை வரையறுப்பது சிரமமானது.

‘வண்ணந் தானே நாலைந் தென்ப’ எனச் செய்யுளியலில் குறிப்பிடும் தொல்காப்பியர் வண்ணம் என்றால் என்னவென விளக்கவில்லை. அவருடைய காலத்தில் வண்ணம் என்ற சொல் எல்லோராலும் எளிதில் விளங்கிக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்திய உரையாசிரியர்கள் வண்ணம் என்ற சொல்லுக்கு விளக்கம் அளித்துள்ளனர். பேராசிரியர் சந்த வேறுபாடு என்றும் நச்சினார்க்கினியர் பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம் என்றும் விளக்கியுள்ளனர். வண்ணங்களின் வகைகளை ஆராயும்போது எல்லா இடங்களிலும் வெவ்வேறு அளவுகோள்களைக் கொண்டவை என அறிய முடிகிறது.

### தொல்காப்பியர் சுட்டும் வண்ணங்கள்

தொல்காப்பியர் வகைப்படுத்தும் வண்ணங்கள் பின்வருமாறு:

**“பாஅ வண்ணம் தாஅ வண்ணம்**
**வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்**
**இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்**
**நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்**
**சித்திர வண்ணம் நலிபு வண்ணம்**
**அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்**
**ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்**
**எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்**

**தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்**
**உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று**
**ஆங்கென மொழிப அறிந்திசி னோரே"**

(தொல்காப்பியம் - செய்யுளியல். 205)

**பாஅ வண்ணம்**

**"பாஅ வண்ணம் சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.206)

சொற் சீரடிகளை உடையதாகி இலக்கண நூலில் பா வண்ணம் பயின்று வரும்.

எ-கா: அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு

**தாஅ வண்ணம்**

**"தாஅ வண்ணம் இடையிட்டு வந்த எதுகைத் தாகும்"**

(தொல்காப்பியம்,செய்யுளியல்.207)

தா வண்ணம் என்பது எதுகை இடையிட்டு அமையத் தொடுக்கப்படுவதாகும்.

எ-கா : உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை

(ஐங்குறுநூறு ப:456)

இன்னும் அதைப் பற்றியும் இதைப் பற்றியும் பேசிக் கொண்டு நின்றோம்

(என்பதாய் இருக்கிறது,ப.76)

**வல்லிசை வண்ணம்**

வல்லெழுத்து மிக்குப் பயின்று வருவது வல்லிசை வண்ணம் ஆகும்.

**"வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.208)

எ -கா: முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்

(பட்டினப்பாலை : 218)

கற்க கசடறக் கற்பவை கற்றபின

நிற்க அதற்குத் தக

(திருக்குறள்:391)

**மெல்லிசை வண்ணம்**

மெல்லிசை மிகுந்து வருவது மெல்லிசை வண்ணம் ஆகும்.

**“மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.209)

எ -கா: பஞ்சியளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்

செஞ்செவிய கஞ்சணிகர் சீறடி யளாகி

அஞ்சொலிள மஞ்ஞையென யன்னமென வந்தாள்

வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்

(கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சூர்ப்பனகைப்படலம் : 24)

நன்னுதல் ஞெகிழவுந் திருநுதல் பசப்பவும்

(ஐங்குறுநூறு:230)

**இயைபு வண்ணம்**

இடையெழுத்து மிகுந்து வருவது இயைபு வண்ணம் ஆகும்.

**“இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.210)

எ - கா: வழியினில் இருளில் ஒளியினுக் கேங்கும்

(சுட்டு விரல் ,ப.124)

**அளபெடை வண்ணம்**

அளபெடை பயின்று வருதலால் அளபெடை வண்ணம் எனப்பட்டது.

**“அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.211)

எ -கா: மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்

(அகநானூறு:99)

சட்டையுடன் பார்த்தால்

என்னடா என்பார்கள்

(இவர்கள் வாழ்ந்தது, ப.18)

**நெடுஞ்சீர் வண்ணம்**

நெட்டெழுத்துப் பயின்று வருதல் நெடுஞ்சீர் வண்ணம் எனப்படும்

**“நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல். 212)

எ-கா: மாவா ராதே மாவா ராதே

(புறநானூறு.273)

மானாட மழுவாட

மயிலாட மயிராட

(ஒரு முக்கிய அறிவிப்பு, ப.78 )

**குறுஞ்சீர் வண்ணம்**

குற்றெழுத்து மிகுந்து வருதல் குறுஞ்சீர் வண்ணம் ஆகும்.

**“குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல். 213)

எ.கா: குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி

(அகநானூறு: 4)

**சித்திர வண்ணம்**

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்ப விரவி வருவது சித்திர வண்ணம் ஆகும். பல வண்ணங்கள் கலந்துவரும் தன்மையுடையது.

**"நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.214)

எ-கா: ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்

சேரி வரினும் ஆர முயங்கார்

(குறுந்தொகை:231)

**நலிபு வண்ணம்**

நலிபு வண்ணத்தில் ஆய்தம் பயின்று வரும். ஆய்தம் நலிந்து கூறும் ஓசையாதலால் ஆய்தம் இடம் பெற்ற செய்யுள் நலிபு வண்ணத்திற்குச் சான்றானது.

**"நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.215)

எ - கா:

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை

வேண்டும் பிறன்கைப் பொருள்

(திருக்குறள்:178)

**அகப்பாட்டு வண்ணம்**

அகப்பாட்டு வண்ணம் என்பது பாட்டின் முடிபினை விளக்க வரும் ஈற்றசை ஏகாரத்தால் முடியாது, இடையடிகள் போன்று முடியாத தன்மையினால் முடிந்து நிற்பதாகும்.

**"அகப்பாட்டு வண்ணம் முடியாத்தன்மையின் முடிந்ததன் மேற்றே"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.216)

எ-கா: உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்

(ஐங்குறுநுறு:21)

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ

(அகநானூறு. 46)

புத்தனுக்காகப்

பொன்னிழல் விரிக்கும்

போதிகள் ஒரு பக்கம்

சித்தன் ஏசுவின்

செம்புனல் குடிக்கும்

சிலுவைகள் ஒருபுறம்

(சுட்டு விரல்,ப.125)

**புறப்பாட்டு வண்ணம்**

புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியாதாகி வரும். அதாவது பாட்டின் முடிபினை உணர்த்தும் இறுதியடி புறத்தே நிற்கவும் அதற்கு முன் உள்ள இடையடி முடிந்தது போன்று நிற்பதாகும்.

**"புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியா தாகும்"**

(தொல்காப்பியம் , செய்யுளியல்.217)

எ-கா: இன்னா வைகல் வாரா முன்னே

செய்ந்நீ முன்னிய வினையே

முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே

(புறநானூறு: 363)

எல்லா நாய்களுக்கும்

வாலாட்டத் தெரியும்

எல்லா நாய்களுக்கும்

குரைக்கவும் தெரியும்

(கூக்குரல்.ப.27)

இக்கவிதையில் முதலிரு அடிகள் முடிந்தது போன்று உள்ளன.

ஆனால் அடுத்த இரு அடிகளில் கவிதை மீண்டும் தொடர்கின்றது.

**ஒழுகு வண்ணம்**

ஓசையால் ஒழுகிக்கிடப்பது ஒழுகு வண்ணம் ஆகும்.

**“ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.218)

எ-கா: யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா

(புறநானூறு)

**ஒரூஉ வண்ணம்**

நீங்கின தொடையாகி அமைந்தது ஒரூஉ வண்ணம் ஆகும் ஆற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉ வண்ணம் எனப் பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

**“ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.219)

எ -கா: சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே

பெரியகட் பெறினே

(புறநானூறு.235)

யானே யீண்டை யேனே யென்னலனே

யானா நோயடு கான லஃதே

துறைவன் றம்மூ ரானே

மறையல ராகி மன்றத் தஃதே

(புறநானூறு.235)

**எண்ணு வண்ணம்**

எண்ணுப் பயின்று வருவது எண்ணு வண்ணமாகும். எண்ணுதற் பொருளில் வரும் ஓசைத்திறமாகும் என உரையாசிரியர் விளக்குகின்றனர். எண் என்னும் ணகர வீற்றுப் பெயர்இ உகரச் சாரியை பெற்று எண்ணு என வழங்கப்பெற்றது.

**"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.220)

எ-கா: நுதலுந் தோளும் திதலை அல்குலும்

(அகநானூறு:119)

நிலம்நீர் வளிவிசும் பென்ற நான்கின்

அளப்பரியையே

நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்

ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை

(பதிற்றுப்பத்து.14)

**அகைப்பு எண்ணம்**

அகைப்பு வண்ணமாவது விட்டுவிட்டுச் சொல்லும் ஓசையுடையது. ஒரு வழி நெடில் பயின்றும் ஒரு வழிக் குறில் பயின்றும் வரும்.

**"அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.221)

எ.கா. வாரா ராயினும் வரினு மவர்நமக்

கியாரா கியரோ தோழி

(குறுந்தொகை.110)

நரசிம்மர் இலை மேல் கொஞ்சம்

வராகர் மேல் கொஞ்சம்

இராமர் மேல் வாமனன் மேல்

வெண்புறா
பறந்திறங்கி.

(மீண்டும் அவர்கள்.ப.110)

**தூங்கல் வண்ணம்**

தூங்கல் வண்ணம் தூங்கலோசைத்தாகி வரும். இதில் வஞ்சிப்பாவிற்குரிய வஞ்சியுரிச்சீர் பயின்று வரும்.

"தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்"

(தொல்காப்பியம், செய்யுளியல்.222)

எ -கா : வசையில்புகழ் வயங்குவெண்மீன்

திசைதிரிந்து தெற்கேகினும்

(பட்டினப்பாலை.1)

**ஏந்தல் வண்ணம்**

ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லின் சொல்லினாலே சொல்லப்படும் பொருள் சிறப்பதாகும். ஏந்தல் என்பது மிகுதல் எனப் பொருள்படும். ஒரு சொல்லே அடுத்தடுத்து மிகுந்து அடுக்கி வருதலின் ஏந்தல் என்னும் பெயர் பெற்றது.

**"ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்"**

(தொல்காப்பியம், செய்யுளியல்.223)

எ-கா: நன்றி மறப்பது நன்றுஅன்று நன்றுஅல்லது

அன்றே மறப்பது நன்று

(திருக்குறள்.108)

**உருட்டு வண்ணம்**

உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகத் தொடுப்பது உருட்டு வண்ணமாகுமென விளக்கியுள்ளார் பேராசிரியர். நெகிழாது உருண்ட ஓசையாகலின் அது உருட்டு வண்ணம் எனப்பட்டது.

**“உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்”**

(தொல்காப்பியம், செய்யுளியல்.224)

எ -கா : உருமுரறு கருவிய பெருமழை தலைஇய

(அகநானூறு.158)

**முடுகு வண்ணம்**

நாற்சீரடியின்மிக்கு ஓடி உருட்டு வண்ணத்தை யத்து அராகந் தொடுத்து வருவது முடுகு வண்ணம் எனப்படும்.

**“முடுகு வண்ண முடிவறி யாமல்**

**அடியிறந் தொழுகி அதனோர் அற்றே”**

(தொல்காப்பியம்,  செய்யுளியல்.225)

எ-கா  நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ

செய்யுள் இயற்றும் புலவர்கள் பின்பற்றிய நடையியல் நெறிமுறைகள் குறித்த தொல்காப்பியரின் விளக்கங்கள் ஒருநிலையில் செய்யுளைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன.

# வனப்பு

தொல்காப்பியர், செய்யுளியலில் முதல் நூற்பாவில் செய்யுள் உறுப்புகளாக முப்பத்து நான்கு உறுப்புகளைப் பட்டியலிடுவார்.(செய்.313). இவற்றுள் எழுத்து, அசை, சீர் முதலான இருபத்தெட்டு உறுப்புகளைச் செய்யுள் அடிப்படை உறுப்புகள் என்றும் அம்மை முதலான எட்டினைச் செய்யுள் பொருள் புலப்பாட்டுக்கு உதவும் உறுப்புகள் என்றும் வகைபடுதற்கியலும்.

வனப்புக் கோட்பாட்டு

தொல்காப்பியர் அம்மை முதலிய எட்டினையும் செய்யுள் உறுப்புகளாகக் கூறுகின்றார். பின்னர் வந்த உரையாசிரியர்கள் அவ்வெட்டினையும் அலங்காரமாகக் கருதினர். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரின் உரைப்பாயிரவழி இதனை அறிகின்றோம்.

இதனுள் முற்கூறிய வனப்பென்பது(தொல்காப்பியம் சுட்டும் அம்மை முதலிய எட்டு) பெரும்பான்மையும் பலவுறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலில் பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலைச் செய்யுட்கு இவ்வெட்டும் அலங்காராமாயின.

தொல்காப்பியத்திற்கு பின்னர் எழுந்த அவிநயம், காக்கைப்பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம், நற்றத்தம், பல்காயம், மயேச்சுவரம் முதலான மறைந்து போன யாப்பிலக்கண நூல்களில் கிடைக்கப்பெற்ற நூற்பாக்களுள் வனப்பு பற்றிய குறிப்புகள் கிட்டில.

கி.பி பத்தாம் நூற்றாண்டினதாகக் கருதப்படுகின்ற அமிதசாகரனார் இயற்றிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரு நூல்களிலும் வனப்பு என்னும் சொல் ஆளப்பெறவில்லை. யாப்பருங்கல விருத்தியுரையில் செய்யுட்களின் வகைகளைக் குறிப்பிடும்,

**செய்யுட் டாமே மெய்பெற விரிப்பின்**
**பாவே பாவினம் எனவிரண் டாகும் (2)**

என்னும் நூற்பாவினுரையில்,அம்மை முதலான வனப்பு அலங்காரம் செய்யுட்களைச் சிறப்பிக்க வருவன என்று பொருளுரைப்பர். தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி எண்வகை வனப்புகளையும் யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் விளக்குகின்றார்.

குணசாகரரைத் தொடர்ந்து அம்மை முதலான எட்டு உறுப்புகளையும் வனப்பு என்னும் கலைச்சொல்லால் பேராசிரியர் அழைப்பர். இவரது உரையில்தான் 'வனப்பியல் தானே வகுக்குங் காலை' என்னும் அடிகள் அம்மையை விளக்கும் நூற்பாவுடன் இணைத்துக் கூறுகின்றார். இத்தொடர், இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியரின் உரைகளில் காணப்படவில்லை. இளம்பூரணர் அம்மை முதலான எட்டுவுறுப்புகளும் செய்யுளுறுப்பு என்னும் கருத்தினர். வனப்பு என்னும் சொல்லினைப் பேராசிரியரும்(நூ.எண். 227) அவரைத் தொடர்ந்து நச்சினார்க்கினியரும் எடுத்தாள்கின்றனர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களில் பேராசிரியர் வனப்பு என்ற சொல்லினை முதன்முதலில் ஆள்கின்றார். நச்சினார்க்கினியரும் இவரைத் தழுவி உரை எழுதிப் போந்தனர். அவரவர் காலங்களில் கிடைக்கப்பெற்ற மேற்கோள் பாடல்களை இருவரும் சிற்சில இடங்களில் சான்று காட்டியும் பெரும்பான்மை குணசாகரர் உரை மேற்கோளினை எடுத்தாண்டுள்ளனர் என்பதும் உரைவழி அறிய முடிகிறது. உரையாசிரியர்களின் காலத்திற்குப் பின்னர் எழுந்த வீரசோழியம், முத்துவீரியம் போன்ற யாப்பிலக்கணம் நுவலும் நூல்களும் பாட்டியல் நூல்களும் வனப்பு குறித்து யாதொன்றும் கூறிற்றில. வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கம் நூல் தொல்காப்பிய வனப்பிற்கு உரிய இலக்கண நூற்பாக்களைத் தொகுத்து ஒரே நூற்பாவாகவும் வரிகளில் சிற்சில சொற்மாற்றத்தோடும் உரைக்கின்றது.

**வனப்பு**

தமிழில் அழகைக் குறிக்க பலசொற்கள் உள. அவற்றுள் வனப்பு, சாயல், எழில் என்பன முழுமையைக் குறிப்பன. வனப்பு என்னும், சொல்லுக்குப் பொதுவாக அழகு என்பது பொருள். தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், செய்யுள் உறுப்புகளை இரு கூறாகக் கொண்டு எழுத்து, அசை, சீர் முதலான இருபத்து நான்கும் தனிநிலைச் செய்யுட்கு உரியது என்றும் அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு உரியது என்றும் 'வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' (தொல்.பொருள். நூ. 547 உரை) என்றும் அடியார்க்கு நல்லார் கருத்தினைத் தழுவி விளக்கம் தருவார். அதாவது, பல செய்யுட்கள் சேர்ந்து அமைந்த ஒரு பெரும் பிரிவு அல்லது நூலின் தன்மையைக் குறிப்பது வனப்பு ஆகும். செய்யுட்களில் அவற்றின் அமைப்பு, சொல்லப்படும் முறை, சொல்லும் பொருள் ஆகியவை காரணமாக வனப்பு அமையும் என்பர்.

**அம்மை வனப்பு**

**சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்**
**அம்மை தானே அடிநிமிர் வின்றே(தொல்.செய்.227)**

மென்மையான சில சொற்களைக் கொண்டு உயர்ந்த பொருள்களைக் கூறுவது; அடி எண்ணிக்கையில் குறைந்த செய்யுட்களைக் கொண்டது.

“விசும்பின் துளிவீழி னல்லால் மற்றாங்கே

பசும்புல் தலைகாண் பரிது” (குறள். 16)

எனும் குறட்பா சின்மென் மொழியால் சீர் புனைந்து, அடிகுறைந்துள்ளமையால் இது அம்மை என்ற வனப்பின்கீழ் அடக்கப்படும்.

அழகு வனப்பு

**செய்யுள் மொழியால் சீர்புனைந்தி யாப்பின்**
**அவ்வகை தானே அழகெனப் படுமே (தொல்.செய்.228)**

பல்வேறு செய்யுட்கள் தொகுக்கப்பட்ட தொகை நூல்களைஅழகு எனும் வனப்புக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். தொல்காப்பிய உரையாசிரியர் எட்டுத்தொகை நூல்களின் தன்மையை அழகு எனும் வனப்பாகக் கூறுகிறார்.

“துணியிரும் பௌவம் குறைய வாங்கி
அணிகிளர் அடுக்கல் முற்றிய எழிலி
காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
நெடுவரை மருங்கின் பாம்பென இழிதரும்
கடுவரல் கலுழி நீந்தி
வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே.” (யா. காரிகை, உரை மேற்கோள்,ப.-419 )

“படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும்நாளே” (புறம் : 188)
புறப்பாட்டு இதற்கு எடுத்துக்காட்டு
**தொன்மை வனப்பு**

**தொன்மை தானே சொல்லுங் காலை**
**உரையோடு புணர்ந்த பழமை மேற்றே (தொல்.செய்.229)**

தொன்மை – பழங்கதை நூல்.தொன்மை என்பது செய்யுளும் உரைநடையும் கலந்து வந்த பழைய கதை போன்றவற்றைக் குறிக்கும்.

**தோல் வனப்பு**

**இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்**
**பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினுஞ்**

**தோலென மொழிப தொன்னெறி புலவர்.** (தொல்.செய்.230)

சிறந்த ஓசை இனிமையுடைய மென்மையான சொற்களால் விழுமிய (உயர்வான) பொருளைச் சொல்வதும், எல்லாச் சொற்களும் கலந்து பல அடிகளும் மயங்கி வருவதும் தோல் எனப்படும்.

“மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே தேனே!
அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ?”
(சிலப். மனை. 73-79)

என்னும் சிலப்பதிகார அடிகள் ‘இழும்’ என்னும் ஒலியால் இன்பம் என்னும் விழுப்பொருள் தந்து, பரந்த மொழியால் அடிமிகுந்து ஒழுகுதலைக் காணமுடிகிறதல்லவா? இதையே ‘தோல்’ என மொழிந்தனர். தொன்மையும் தோலும் பழமை என்னும் பொருளைத் தருவன.

**விருந்து வனப்பு**

புதிவராக வீட்டுக்கு வருபவரை விருந்து என்போம்.அதுபோல மரபுவழிமேல்புதிதாக வரும் நூல்களை விருந்து என்னும்வனப்பு என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே(தொல்.செய்.231)**

விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள். ‘அவை இப்பொழுதுள்ளாரைப் பாடுவன’ என்கிறார் காரிகை உரையாசிரியர். ‘புதிதாகச் சொன்ன யாப்பு’ என்கிறார்

இளம்பூரணர். சொல்லும் முறையாலும், சொல்லும் பொருளாலும் புதுமையாக வருவது விருந்து எனலாம்.

**இயைபு வனப்பு**

**ஞகார முதலா னகார ஈற்றுப்**
**புள்ளி இறுதி இயைபெனப் படுமே(தொல்.செய்.227)**

ஞணநமன யரலவழள என்னும் பதினொரு மெய்யும் ஈறாக வந்த பாட்டை இயைபு என்பர். உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க என குணசாகரர், உரையாசிரியர் இருவரும் கூற, பேராசிரியர், இயைபென்றதானே பொருளும் இயைந்து, சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து என்று கூறி மணிமேகலையில் வரும் ‘மலர்வனம் புக்க காதை’ “மலர் கொய்யப் புகுந்தனள் மணிமேகலையென்” என ‘ன’கர ஈற்றில் முடிவது காண்க.

**புலன் வனப்பு**

**தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்**
**புலனென மொழிப புலனுணர்ந் தோரே. (தொல்.செய்.227)**

வழக்கில் உள்ள சொற்களால் அமைக்கப்பட்டு, முயன்று ஆராய வேண்டாமல் பொருளை எளிமையாகப் புலப்படுத்துவது புலன் என்னும் வனப்பு ஆகும்.

நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்

என்பதைச் சான்றாகக் கூறலாம்.

**இழைபு வனப்பு**

**ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது**
**குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து**
**ஓங்கிய மொழியான் ஆங்கவண் மொழியின்**
**இழைதான் இலக்கணம் இயைந்த தாகும்(தொல்.செய்.227)**

வல்லின மெய்கள் வராமல், தொல்காப்பியர் எழுத்து எண்ணிக்கை அடிப்படையில் வகுத்த குறளடி முதலாக ஐந்தடியும் உடையதாக, ஓங்கிய சொற்களால் வருவது இழைபு என்னும் வனப்பு.

பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து

தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து.....

தொருநீ மறைப்ப ஒழுகுவ தன்றே

என்ற பாடலை உரையாசிரியர் சான்றாகக் காட்டுவார்.

## நூல் வகைகள் , குற்றங்கள், உத்திகள்

பொருளதிகாரத்தின் எட்டாவது இயல் செய்யுளியல் ஆகும். இந்த செய்யுளியலில் ‘மாத்திரை’ முதல் ‘இழைபு’ வரையான 34 செய்யுள் உறுப்புகள் குறித்து பொருளதிகாரத்தின் 310ஆம் பாடல்(செய்யுளியல்-1) பேசுகிறது. அதன்பின் அவைகளுக்கான விளக்கம் அச்செய்யுளியல் முழுவதும் சொல்லப்பட்டுள்ளது. இந்த 34 உறுப்புகளில் ‘அளவியல்’ என்ற உறுப்பு பற்றிய விளக்கத்தில் ‘நூல்’ குறித்துப் பேசுகிறார் தொல்காப்பியர். நூல் குறித்த விளக்கத்தை பொருளதிகாரத்தின் 471ஆம் பாடல் தருகிறது.

**நூல்எனப் படுவது நுவலுங் காலை**

**முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்**

**தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி**

**உள்நின்று அகன்ற உரையோடு பொருந்தி**

**நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே** (செய்யுளியல்-162).

நூல் என்பதில் தொடக்கமும் முடிவும் மாறுபாடில்லாமல் தெளிவாக இருக்கும்; தொகுத்தும் வகுத்தும் பொருள் காட்டும்; தன்னுள் அடங்கிய தெளிவான, விரிவான உரையைப் பெற்றிருக்கும். இறுதியாக நூல் என்பது அந்நூலின் தன்மைக்கு ஏற்ப நுட்பமான பொருளை உணர்த்தும் பண்பைக்கொண்டது. இவை நூல் குறித்து தொல்காப்பியர் கூறுவதாகும். நூல், உரை, பிசி எனும் விடுகதை, பழமொழி எனும் முதுமொழி, மந்திரம், குறிப்பு மொழி ஆகிய ஆறு இலக்கிய வகைகளுக்கும் அடி வரையரை கிடையாது என்பதை அதற்கு முந்தைய பாடலில்(செய்யுளியல்-161) தொல்காப்பியர் கூறுகிறார்.

செய்யுளியலில் நூல் என்பது நான்கு வகையான பாகுபாடுகளைக் கொண்டது எனக்குறிப்பிட்ட தொல்காப்பியர், பொருளதிகாரத்தின் மரபியலில் முதல் நூல், வழிநூல் என இருவகையான நூல்கள் உண்டு என்கிறார். வினைகள் நீங்கிய அறிவு முதிர்ந்த முனைவனால் ஆக்கப்படுவது முதல்நூல் ஆகும். முதல் நூலை அடிப்படையாகக்கொண்டு அதனைப்பின்பற்றி ஆக்கப்படுவது வழி நூல் ஆகும். வழி நூல் தொகுத்து அமைத்தல், விரித்துக்கூறுதல், தொகுத்தும், விரித்தும் அமைத்தல், மொழிபெயர்த்தல் ஆகிய நான்கு

நிலைகளில் அமையும். பத்துவகைக் குற்றங்களும் இல்லாது, 32 வகை உத்திகளும் பெற்று, உண்மைப்பொருள் விளங்கக் கூறுவதே நூல் ஆகும். பொருளதிகாரத்தின் 643-649 வரையான பாடல்கள்(மரபியல்:95-99) இவை குறித்துப் பேசுகின்றன. இலக்கண நூலின் அமைப்பு, நூற்பாவின் இலக்கணம், காண்டிகை உரை, உரைநூல் ஆகியன குறித்துப் பொருளதிகாரத்தின் 648-654 வரையான 7 பாடல்கள்(மரபியல்:100-106) ஓரளவு விரிவாகப் பேசுகின்றன.

பொருளதிகாரத்தின் 658ஆம் பாடல்(மரபியல்-110), நூலில் ஏற்படும் பத்து வகையான குற்றங்கள் குறித்துப் பேசுகிறது. 1.கூறியது கூறல், 2.மாறுகொளக்கூறுதல், 3.குன்றக்கூறல், 4.மிகைபடக்கூறல், 5.பொருள் இல் மொழிதல், 6.பொருள் மயங்கக்கூறல், 7.கேட்போருக்கு இனிமை தராதவகையில் கூறல், 8.பழிமொழியால் இழுக்கு வருமாறு கூறல், 9.தொன்மையைவிட்டு விலகி தானே ஒன்றைக்கூறல், 10.படிப்போருக்கு விளங்காத வகையில் கூறல் ஆகியன அந்த பத்து வகையான குற்றங்கள் ஆகும். இந்தப்பத்து வகையான குற்றங்களும் இல்லாமல் படைக்கப்படும் படைப்புதான் நூல் என்ற தகுதியைப்பெறும் எனக்கூறுகிறார் தொல்காப்பியர்.

இலக்கிய வகைகளுள் ஒன்றான நூல் எனப்படுவது சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் ஆகிய நான்கு வகையான பாகுபாடுகளைக்கொண்டது. பொருள் எளிதில் அறியும் வகையில் யாப்பியல் நெறியில் அமைக்கப்படுவது சூத்திரம் ஆகும். ஒரே இனமாக வரும் பொருளை ஒருசேர வைத்துப் புனையப்படுவது ஓத்து(இயல்) ஆகும். ஒரு பொருள் நெறி என்றில்லாமல் பலவகைப்பட்டு விரவி வரும் பொருள்களை எல்லாம் தொகுத்துப் பொதுவாக அமைப்பது படலம் ஆகும். சூத்திரத்தின் ஒரு பொருளும், ஓத்தின் ஒரே இனப்பொருளும், படலத்தின் விரவிய பலபொருள்களும் சேர்த்துத் தொகுத்து அமைப்பது பிண்டம் ஆகும். இவை பொருளதிகாரத்தின் 472-477 வரையான 6 பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. ஆகவே நூல் என்பது சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் ஆகிய நான்கு வகையான பாகுபாடுகளையும் கொண்டதாக அமையும் எனலாம்.நூலை எழுதும்பொழுது கையாள வேண்டிய உத்திகள் என்பன 32 எனக்கூறுகிறார் தொல்காப்பியர். பொருளதிகாரத்தின் 660ஆம் பாடல்(மரபியல்-112), அந்த 32 உத்திகளையும் வரிசைப்படுத்திக்கூறுகிறது. அவை ‘நுதலியது அறிதல்’ முதல் ‘உய்த்துக்கொண்டு உணர்த்தல்’ வரை 32 உத்திகள் ஆகும். நுதலியது அறிதல் என்பது ‘சொல்லக்கூடிய கருத்தைப் பிறர் தெளிவாக விளங்கிக்கொள்ளுமாறு கூறுதல்’ ஆகும். அதுபோன்றே, உய்த்துக்கொண்டு உணர்த்தல் என்பது ‘தெளிவில்லாத கருத்தை உய்த்து உணர்ந்து பொருந்தும் வகையில் விளக்கிக்கூறுதல்’ ஆகும். இப்படியாக நூல் எழுதுவதற்கான 32 உத்திகளையும் தொல்காப்பியர் பட்டியலிட்டுள்ளார். இந்த 32 உத்திகளையும் பின்பற்றி, முன்பு கூறிய 10 குற்றங்களையும் நீக்கிப் படைக்கப்படும் படைப்பு மட்டுமே நூல் என்ற தகுதியைப் பெறும். இந்த விலக்கப்படவேண்டிய 10

குற்றங்களும், பின்பற்றப்பட வேண்டிய 32 உத்திகளும் தமது முன்னோர்கள் கூறியிருப்பவை என்பதையும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அதன் மூலம் இவை அனைத்தும் மூலச்சிறப்புள்ள தமிழ்ச் சிந்தனை மரபுக்கு உரியவை என ஆகிறது.

தொல்காப்பியரால் நூலுக்குரிய இலக்கணமாகக் காட்டப்படும் 32 உத்திகள், பத்துவகைக்குற்றங்கள், சூத்திரம், காண்டிகை உரை, உரைநூல் முதலியன தருக்கவியலுக்குரியன எனக்கூறுகிறார் முனைவர் க. நெடுஞ்செழியன். இந்த உத்திகள், குற்றங்கள் முதலியன குறித்து வடமொழியில் உள்ள சரக சம்கிதை என்ற மருத்துவ நூலும் பேசுகிறது. அவற்றை அது பேச்சுக்கலைக்குரியதாகக் கூறுகிறது. ஆனால் அந்த மருத்துவ நூலும் தமிழ் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வழிநூல்தான் ஆகும்(4).

**நூலின் வகைகள்:**

நினைவுக் குறிப்புகளையும் ஒவ்வொரு நாளின் நிகழ்ச்சி நிரல்களையும் எழுதுவது குறிப்பேட்டுப் புத்தகம். ஒரு துறையினருக்காக, அத்துறை நிகழ்ச்சிகள், அண்மைக்கால வளர்ச்சி நிலைகள், இடையூறுகள் எடுக்கப்படும் நடவடிக்கைகள், செயற்பாடுகள் பற்றிய செய்திகள் அடங்கிய விளக்கப் புத்தகம் செய்தி மடல்.

உள்நாடு மற்றும் உலகளாவிய பல்வேறுவகை செய்திகளையும் குறிப்புகளையும் அடிப்படையான புள்ளி விளத்தங்களுடன் தொகுத்து ஆண்டுதோறும் வெளியிடும் நூல் ‘ஆண்டு நூல்.’ சிற்றூர்கள், நகரங்கள், மாவட்டங்கள் முதலியவற்றைப் பட்டியலிட்டு அவ்வவ்விடங்களின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முதலிய பல்வேறு செய்திகளைத் தொகுத்து அரசு வெளியிடும் நூல் ‘அரசிதழ்.’

மாணவர்களுக்கான பாடநூல், வாய்பாடு, பயிற்சி நூல் போலும் பலதிறத்தன பள்ளி நூல்கள்.

சிறந்த ஆசிரியர்களால் இலக்கிய நூல்கள் எழுதப் படுகின்றன. இவை, உரைநடை, பா வடிவிலான படைப்பிலக்கியம் மற்றும் கட்டுரை, திறனாய்வு போன்ற இலக்கிய நூல்கள். சமயம் சார்ந்தவை வழிபாட்டு நூல், திருமறை நூல், திருப்பாடல் தொகுதி நூல்கள் போன்றவை.

நாட்டு வரலாறு, உலக வரலாறு, சமய வரலாறு, மொழி வரலாறு, இன வரலாறு, இலக்கிய வரலாறு போன்ற வரலாற்று நூல்கள். வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு போன்றவை மாந்த வரலாற்று நூல்கள்.

சிறுகதை, குறும் புதினம், புதினம், காதற் புதினம், அறிவியற் புதினம் போன்றவை ஒரே வகைமை நூல்கள் ஆகும்.

செயற்பாட்டு வழிகாட்டும் நூல்கள், குடும்ப அறிவு நூல்கள், ஊர்ச் செலவு வழிகாட்டு நூல்கள், சுற்றுச் செலவு கட்டுரை நூல்கள் போன்று நூல்கள் பல்வேறு வகையினவாகும்.

**நூலுக்குத் தொல்காப்பியம் தரும் விளக்கம் :**

நூல் என்று கூறப்பெறுவது –

1. தொடக்கமும் முடிவும் பொருள் முரண் இன்றி இருக்கவேண்டும்.

2. தொகுத்தும் வகுத்தும் பொருள் காட்ட வேண்டும்.

3. விரிய உரைக்கும் வகையிலாகப் பொருத்தம் உடையவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கவேண்டும்.

4. நுண்ணிதாகப் பொருளை விளக்க வேண்டும்.

**நூலுக்கு நன்னூல் கூறும் பெயர்க்காரணங்கள் இரண்டு :**

1.கைதேர்ந்த பெண் பஞ்சினால் நூல் நூற்றல் போல், புலவன் சொற்களால் நூலை இயற்றுகின்றான். பெண்ணின் கை போல புலவனின் வாயும் (எண்ணமும்) நூற்கும் கதிர் போல அறிவும் உதவுகின்றன.2.மரத்தின் வளைவை அறுத்து நேராக்க நூலைப் பயன் படுத்துவர். அதுபோல அறிவைப் பெருக்கித் தீமையை அழிக்க உதவும் நூல்களும் மக்களின் மனக்கோட்டத்தைத் தீர்த்துச் செவ்விதாக்கும்.

தொல்காப்பியம் கூறும் நூலின் வகைகள் :

மரபிலிருந்து திரியாது சிறப்பொடு கூடிய நூல்கள் முதல் நூல், வழிநூல் என்று இரண்டுவகையின.

செய்வினைப் பயனை அடையாத, தூய்மையான அறிவினை உடைய முன்னோரால் செய்யப்பட்டது முதல்நூல்.

முதல்நூல் வழியில் வருவது வழிநூல். வழிநூல் நான்கு வகைப்படும். தொகுத்து நூலாக்கல், விரித்து நூலாக்கல், தொகுத்தும் விரித்தும் நூலாக்கல், மொழிபெயர்த்தல் என நான்குவகை நூல்களும் வழக்கு வழிப்பட இயற்றல் வேண்டும்.

வழிநூல்கள் இலக்கணத்தில் மரபுகளில் மாறுபட்டால் சிதைந்த நூலாகும். தூய அறிவுடையோர் செய்த நூலில் சிதைவு இருக்காது.

**தொல்காப்பியம் கூறும் நூலின் குற்றங்கள் :**

1.முன்பு கூறியதையே பின்பு கூறல் 2. முன்பு கூறியதற்கு முரணாகப் பின்பு கூறல் 3. முழுவதுங்கூறாமல் குறைவாகக் கூறல் 4. தேவைக்கு அதிகமாக மிகுதிப்படுத்திக் கூறல் 5. பொருள் தராதவற்றைக் கூறல் 6. படிப்போர் பொருள் மயக்கமடையும்படி கூறல் 7. கேட்போர்க்கு இனிமை யில்லாத நிலையில் கூறல் 8. பெரியோர் பழித்த சொல்லைப் பயன் படுத்தி தாழ்ந்த நிலையில் கூறல் 9. நூலின் கருத்தைக் கூறாது தன் கருத்தை மனத்துட் கொண்டு கூறல் 10. கேட்போர், படிப்போர் மனம் கொள்ளாத நிலையில் கூறல் இவையும் இவை போன்றன பிறவும் நூலின் குற்றங்களாம். உத்தி :

உத்தியை எழுதும் திறன் என்றும் கூறலாம். நூலின் உத்தி என்பது, நூல் கூறும் வழக்கை உலக வழக்குடன் பொருத்திக் காட்டி, ஏற்ற இடமறிந்து, இந்த இடத்தில் இவ்வாறு கூற வேண்டுமென, தக்க முறையில் நிறைவுற எழுதி முடிக்கும் திறமையேயாகும்.

**தொல்காப்பியம் கூறும் நூலின் உத்தி வகைகள் :**

1. சொன்னதைத் தெளிவாக அறிதல் 2. அதிகாரங்களை முறையாக அமைத்தல் 3. இறுதியில் தொகுத்துக் கூறல் 4. கூறுபடுத்தி உண்மையை நிலைநாட்டல் 5. சொன்ன பொருளோடு ஒன்ற சொல்லாத பொருளை இடர்ப்பாடின்றி முடித்தல் 6. வராதனவற்றைக் கூறுவதால் ஏனைய வரும் என முடித்தல் 7. வந்ததைக் கொண்டு வராதனவற்றை உணர்த்தல் 8. முன்பு கூறியதைப் பினபு சிறிதுபிறழக் கூறுதல் 9. பொருந்தும் வண்ணம் கூறல் 10. ஒரு பக்கத்தே சொல்லுதல் 11. தன் கொள்கையைக் கூறுதல் 12. நூலில் வைத்துள்ள முறை பிறழாதிருத்தல் 13. பிறர் உடம்பட்டதைத் தானும் ஏற்றுக் கொள்ளுதல் 14. முற்கூறியவற்றைக் காத்தல் 15. பின்னர் வரும் நெறியைப் போற்றுதல் 16. தெளிவுபடுத்திக் கூறுவோம் என்றல் 17. கூறியுள்ளோம் என்றல் 18. தான் புதிதாகக் குறியிடுதல் 19. ஒரு சார்பு இன்மை 20. முன்னோர் முடிபைக் காட்டல் 21. அமைத்துக் கொள்க என்று கூறல் 22. பல பொருள்கள் இருந்தாலும் நல்ல பொருளைக் கொள்ளுதல் 23. தொகுத்த மொழியான் வகுத்துக் கூறல் 24. எதிர்ப்போர் கருத்தை மறுத்துத் தன்கருத்தை உரைத்தல் 25. பிறர் கொள்கைகளையும் சான்றாகக் கூறல் 26. பெரியோர் கருத்தை ஏற்றுக் கொண்டு தான் அதையே கூறல் 27. கருத்து விளக்கத்திற்கு வேறு பொருள்களையும் இடையே கூறுதல் 28. முரணான பொருள்களையும் உணர்த்தல் 29. சொல்லின் குறையை நிறைவு செய்து கூறுதல் 30. தேவைக்குத் தகத் தன் கருத்தைந் தந்து இணைத்து உரைத்தல் 31. நினைவு படுத்திக் கூறுதல் 32. கருத்தை உய்த்து உணரும்படி கூறல். – இவற்றுடன் பிற உத்திகளையும் சேர்த்துக் கொண்டு சுருக்கமாக ஆனால் விளக்கமாத் தெளிவு படுத்த வேண்டும்.

**நன்னூல் கூறும் நூலின் இயல்புகள் :**

1. பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் (இக்கால், முகவுரை அணிந்துரை எனலாம்) ஆகிய இருவகைப் பாயிரம் உடையதாக இருக்க வேண்டும்.

2. முதல் வழி சார்பு என்னும் மூன்று நூல்வகையுள் ஒன்றாக இருக்க வேண்டும்.

3. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்கள் அடையப் பயன்பட வேண்டும்.

4. ஏழு வகை எழுதும் கோட்பாடுகள் (மதம்) பெற்றிருக்க வேண்டும்.

5. பத்துவகைக் குற்றங்கள் இல்லாததாக இருக்க வேண்டும்.

6. பத்துவகை அழகு பொருந்தப் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

7. 32 உத்திகளும் கொண்டு திறம்பட எழுதியிருக்கவேண்டும்.

8. சூத்திரம் என்னும் மூலபாடமும் ஓத்து, படலம் (இயல், அதிகாரம்) என்னும் உறுப்புகளும் பெற்றிருக்க வேண்டும்.

**நன்னூல் கூறும் நூலின் வகைகள் :**

முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்று நூல்களை மூன்று வகையாகக் கூறுகிறது நன்னூல்.

முதல்நூல், செய்வினைப் பயனை அடையாத, தூய்மையான அறிவினை உடைய முன்னோர் படைப்பதாகும்.

முன்னோர் நூலின் முடிபுடன் முழுவதும் ஒத்து, முதனூல் இருக்கவும் வழிநூல் வேறே செய்வதற்குக் காரணமாகிற வேறுபாடுகளைக் கூறி, மரபு சிதையாமல் படைப்பது வழிநூலாகும்.

முதல்நூல் வழிநூல் இரண்டிற்கும் ஓரளவு ஒத்து, வேறுபட மாற்றிப் படைப்பது சார்புநூலாகும்.

வழிநூல்கள் முன்னோர் நூலில் வரும் சொற்களையும் கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றிக் கொள்ள வேண்டும். வேறு நூல் செய்தாலும் முதனூல் இருந்து சிலவற்றை – சில நூற்பாக்களை மேற்கோளாக அப்படியே எடுத்தாள வேண்டும்.

**நூலாசிரியன் பின்பற்ற வேண்டியனவாக நன்னூல் கூறும் ஏழு கோட்பாடுகள் :**

1.உடன்படல் 2. மறுத்தல் 3. பிறர் கோட்பாட்டை ஏற்குமளவு ஏற்று, மற்றவற்றை நீக்குதல் 4. தானொரு பொருளை எடுத்து நாட்டி அதனை வருமிடந்தோறும் இறுதிவரை நிலைநாட்டுதல். 5. இருவர் கருத்து வேறுபடுமிடத்து, ஒருபக்கம் துணிதல் 6.பிறர் நூல்களிலுள்ள குற்றங்களை எடுத்துக்காட்டுதல். 7. பிறர் கோட்பாட்டை ஏற்காது தன் கொள்கைப்படியே எழுதுதல். நன்னூல் கூறும் நூலின் குற்றங்கள் பத்து :

1.குன்றக் கூறல் 2. மிகைபடக் கூறல் 3. கூறியதுகூறல் 4. மாறுகொளக் கூறல் 5. வழுச்சொற் கூறல் 6. மயங்க வைத்தல் 7. வெற்றெனத் தொடுத்தல் 8. மற்றொன்று விரித்தல் 9.சென்று தேய்ந்து இரிதல் 10. நின்று பயன் இன்மை. நன்னூல் கூறும் நூலில் அமைய வேண்டிய பத்து வகை அழகு :

1. சுருங்கச் சொல்லல் 2. விளங்க வைத்தல் 3. படிப்போர்க்கு இனிமை 4. நல்ல சொற்களையே பயன்படுத்தல் 5. ஓசை இனிமை உடைமை 6. ஆழமுடைத்தாதல் 7. வைப்பு முறை 8. உலகம் மலைக்காதபடி (எளிமையாக) எழுதுதல். 9. விழுமிய வற்றையே விளைவாகத் தரும்படி எழுதுதல் 10. விளங்கும் வண்ணம் எடுத்துக்காட்டுகள் உடையதாதல்.

**நன்னூல் கூறும் 32 வகை உத்திகள் :**

1. (இதனைச் சொல்லுவேன் என்று முதலில்) சொல்லித் தொடங்குதல் 2. இயல்களை யாதாயினும் ஓர் ஏற்ற முறைப்படி வைத்தல் 3. பலவற்றையும் திரட்டிச் சொல்லுதல் 4. தொகுத்ததை வெவ்வேறாக விரித்துக் கூறல் 5.தன் கருத்தை முடித்துக் காட்டல் 6. முடியுமிடம் முன்பே கூறுதல் 7. தானாக ஒன்றை எடுத்து மொழிதல் 8. பிறர் கருத்தை மேற்கோள் காட்டல் 9. சொல்லின் பொருள் விளங்கும்படி விரித்தல் 10. ஒன்றுக் கொன்று தொடர்புடைய சொற்களை ஆளுதல் 11. இரட்டுற (இரு பொருள்பட) மொழிதல் 12. முன்பு காரணம் விளங்காததாகச் சொல்லப் பட்டதற்குக் காரணம் விளங்கக் காட்டி முடிவு செய்தல் 13.

பெறுதற்குரிய மற்றொன்றிற்கு மாட்டிச் சொல்லி நடத்தலாகிய மாட்டெறிந்து ஒழுகல் 15. வழக்கொழிந்ததை விலக்கல் 16. புதியனவற்றை ஏற்றல் 17. முன்னே ஓரிடத்தில் ஒன்றைச் சொல்லிப்பின் அதனை வேண்டுமிடந் தோறும் எடுத்தாளுதல் 18. பின்பு அதை நிறுவுதல் 19. முன்னதினின்றும் வேறுபட முடித்தல் 20. வேறுபடாது முன்னதின் படி முடித்தல் 21. பின்னே சொல்லப் போவதை, முன்னே ஒரு காரணத்திற்காகச் சொல்ல வேண்டின், சுருக்கிச் சொல்லி, இதனைப் பின்னே சொல்வோம் என்றல் 22. பின்னே சொல்லப் படுவதை முன்னே ஒரு காரணத்திற்காகச் சொல்லப் பட்டதை, பின்னே சொல்ல வேண்டிய இடத்து, முன்னரே சொன்னோம் என்றல் 23. ஐயம் வந்துழி ஒருபக்கம் துணிதல் 24. எடுத்துக் காட்டி நிறுவுதல் 25. தான் தொடங்கிய சொல்லின்படி முடிவெய்த வைத்தல்

26. ஐயப்படுகின்ற இடத்து, இன்னத் அன்று இது; இது வேறு என்று துணிந்து சொல்லுதல் 27. செல்லாது விடப் பட்டதையும் பொருந்த முடிவு பெறுமாறு சொல்லுதல் 28. பிறநூற் கருத்தைத் தானும் உடம்படுதல் 29.தான் புதுமையாகக் குறித்து வழங்குவதைப் பல இடங்களில் எடுத்துச் சொல்லுதல் 30. சொல்முடியுமிடத்தே பொருளும் முடியச் செய்தல் 31. இனமானவற்றை ஒருசேரக் கூறுதல் 32. மறைமுகமானவற்றை ஆராய்ந்தறியும்படி வைத்தல்.

**பயிற்சி வினாக்கள்:**

1. வண்ணம் குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றைக் கட்டுரைக்க
2. வனப்பு குறித்து விவரிக்க
3. தொல்காப்பியர் கூறும் குற்றம் வகைகளைக் கட்டுரைக்க
4. நன்னூலார் குறிப்பிடும் உத்தி குறித்து விவரிக்க
5. தொல்காப்பியர் மற்றும் நன்னூலார் கூறும் நூல் வகைகளைக் கட்டுரைக்க

# அலகு 5

## தொல்காப்பியம் எழுந்ததின் நோக்கம்

## (வரலாற்றுப் பின்னணியில் ஒரு ஆய்வு)

கு.மீனாட்சி

ஒரு மொழியில் இலக்கணம் தோன்றுவதற்குப் பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. பொதுவாக ஒரு மொழி பேசும் மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது அந்த இரு மொழிகளிலுமே மற்ற மொழியின் தாக்கமேற்படுகிறது. இத்தொடர்பு. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் நீடிக்குமேயானால் அந்த மொழிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டு நாளடைவில் அம்மொழிகள் வெவ்வேறு கிளை மொழிகளாகப் பிரிகின்றன. கிளைமொழிகள் பின்னர் ஒரு தனி மொழியாக உருவாவதும் உண்டு. ஒரு மொழி இவ்வாறு மாற்றமடையுந் தருணத்தில் அம்மொழியை விதிகளின் மூலம் தொகுக்க வேண்டிய (Codification) அவசியம் ஏற்படுகிறது. அச்சமயம் அம்மொழிக்கு ஒரு சிறந்த இலக்கணம் தோன்றுகிறது. அல்லது ஒரு மொழியில் சிறந்த இலக்கணம் உருவாகியிருப்பதைக் காணநேர்ந்தால் தங்கள் மொழிக்கும் அத்தகைய இலக்கணம் வகுக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் இலக்கணங்கள் உருவாகலாம். அல்லது இருவேறு இனத்தவர் மதம், வாணிகம் காரணமாக ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும்போது மற்றவருடைய மொழியைப் புரிந்து கொள்ள அம்மொழியைப் பயிலவேண்டிய அவசியம் நேர்கிறது. அப்போது. இருமொழிகளிலுமே தேர்ச்சி பெற்றவர்கள் மொழிகளுக்கு இலக்கணம் வகுத்து இந்தத் தேவையை நிறைவேற்றுகிறார்கள். மொழிகளின் இலக்கணத்தின் தோற்றத்திற்கு இவ்வாறாகப் பலவித நோக்கங்கள் பின்னணியாக அமைகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தின் பழமையான மொழிகளாகக் கருதப்படுவன ஸம்ஸ்கிருதமும் தமிழும். முதலில் ஸம்ஸ்கிருதத்தில் இலக்கணம் தோன்றியதின் நோக்கங்களை வரலாற்றுப் பின்னணியில் ஆய்ந்து பின்னர் தமிழில் இலக்கணம் தோன்றியதை அத்தோடு ஒப்பிட்டு ஆராய்வோம். ஒரு நாட்டின் வரலாற்றோடு. அந்நாட்டு மொழியின் வரலாறும் பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதை பல இடங்களில் காணலாம்.

ஹரப்பா, மெஹெஞ்ஜோதாரோ என்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளிலுள்ள மொழிதான் நம் நாட்டின் பழமை யான மொழியாகக்

கருதப்படுகிறது. இம்மொழி எந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததென்று. இன்னும் முடிவாகவில்லையென்ற போதிலும் இது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியாக இருக்க முடியாதென்றும் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியாக இருக்கக்கூடுமென்றும் பரவலான கருத்து நிலவுகிறது. (குராவ்: 1979 மகாதேவன்: 1979)

இந்திய ஆரியர்களின் வரலாற்றின் காலம் அவர்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குடியேறியதிலிருந்து தொடங்குகிறது. இது கி.மு. 1500ஆம் ஆண்டு. இந்தோ-ஆரியமொழியின் இலக்கிய வரலாறும் இதே காலத்தில்தான் தொடங்குகிறது. அவர்களுடைய முதல் இலக்கியம் இருக்குவேதம். இந்தோ-ஆரியமொழி. மொழியினடிப் படையில் பழைய இந்தோ ஆரியம் (Old Indo-Aryan) , இடைக்கால இந்தோ ஆரியம் (Middie Indo-Aryan), தற்கால இந்தோ ஆரியம் (Modern Indo - Aryan) என்று மூவகையாகப் பிரிக்கப்படுகிறது. பழைய இந்தோ ஆரியத்தைச் சேர்ந்த இருக்குவேதத்திலேயே ஆரியமல்லாத மொழிச் சொற்களின் கலப்பு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தியிருக் கிறார்கள் அம்மொழியமைப்பில் கூட வேற்று மொழியமைப்பின் தாக்கம் இருப்பதாகக் கூறுவர் (பர்ரோ: 1955). (எமனோ 1967: குயிப்பர்: 1967)

வேத காலத்தில் வேத மந்திரங்களை செவி வழியாகப் பரப்பினார்கள் (Oral Tradition). வேள்வியில் மந்திரங்களைச் சரியான முறையில் உச்சரித்தால்தான் அதற்குரிய பலன் கிட்டும். வேற்று மொழி சொற்கள் வேத மந்திரங்களோடு கலக்கும்போது அம்மந்திரங்களின் வடிவம் காலப்போக்கில் மாறுகிறது. அதனால் வேள்வியின் பயன் கிட்டாமல் போய்விடுமோவென்ற அச்சத்தில் அம்மொழியின் புனிதத் தன்மையைப் பாதுகாக்க பல முயற்சிகள் எடுத்துக்கொண்டனர். இம் முயற்சிகள்தான் ஆரியர்களின் முதன் முதலாகத் தோன்றிய இலக்கணச் சிந்தனைகள். இதன் விளைவாகப் பிராதி சாக்கியங்க ளென்றழைக்க பட்ட நூல்கள் தோன்றின. இந்நூல்கள் பெரும்பாலும் ஒலியியலையும் புணர்ச்சி மாற்றங்களையும் மட்டுமே ஆராய்கின்றன. இந்நூல்கள் ஒவ்வொரு வேதத்திற்கும் கிளைகளாக அமைந்துள்ளன. இதைத் தொடர்ந்து யாஸ்கரின் நிருக்தம் போன்ற நூல்கள் எழுந்தன. இந்நூல் சொற்பிறப்பைப் (etymology) பற்றி ஆராய்கிறது. சொல்லியல் பொருளியல் % பற்றிய ஆய்வு. முதல் முதலாகப் பாணினியின் இலக்கணத்தில்தான் காண்கிறோம்.

ஆரியர்கள் வடமேற்குப் பகுதியிலிருந்து கிழக்குத் திசையில் குடிபெயர்ந்தபோது அவர்களுடைய நாகரிகத்தின் நடுநாயகமாக விளங்கியது மகதம் என்ற நாடு. இங்கு குடிபெயர்ந்தபோது ஆரியர்களுக்கு வழியிலேயே வேறு இனத்தவர்களுடன் அதிகமான தொடர்பு ஏற்பட்டது. வேள்வியை முக்கியமாகக் கருதப்படும் பிராமணர் களுடைய

மதத்திற்கு எதிராகப் புத்தம், சமணம், ஆஜீவகம் என்ற பல புது மதக்கோட்பாடுகள் எழுந்தன. இக்காலத்தில் பழைய இந்தோன் ஆரிய மொழியிலும் பல மாற்றங்களேற்பட்டு பல கிளை மொழிகளாக அது பிரிந்து இருந்தது. பிராகிருதம் பாலி போன்ற கிளைமொழிகளைக் கொண்ட இடைக்கால இந்தோ-ஆரிய மொழிகள் ஏற்கெனவே உருப் பெற்று விட்டிருந்தன. இம்மொழிகள்தான் பெரும்பாலான மக்களின் பேச்சு மொழியாக இருந்தன. அதனால் புதிய மதத்தலைவர்கள் மக்களின் பேச்சுமொழியான பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளில் தங்கள் மதப் பிரச்சாரங்களைச் செய்யத் துவங்கினார்கள். அசோகன் போன்ற அன்றைய அரசர்களும் தங்களாணைகளை (Edict) இம்மொழிகளில்தான் பொறித்து வைத்தார்கள். மதத்தலைவர்கள், அரசர்கள் முதலியவர்களினாதரவினால் இம்மொழிகள் நன்கு வளர்ச்சியுற்றன. இது ஸம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கே ஒரு தடையாக நின்றது. தங்கள் மொழி வழக்கிழந்து விடுமோவென்ற அச்சம் அக்காலத்தில் எழுந்திருக்க வேண்டும். அதனால் தங்கள் மொழியைப் பாதுகாக்க வேண்டி யாகம் பண்ணும்போது வேறு மொழிக்கலப்பில்லாத வேத மந்திரங்களை உச்சரித்தால்தான் யாகத்தின் முழுமையான பலனும் கிட்டும் என்று அம்மொழிக்கு ஒரு உயர்ந்த நிலையைக் கொடுத்தார்கள். இக்காலத்தி லெழுந்த இலக்கணங்களின் அடிப்படையான நோக்கம் வேதமந்திரங்கள் புனிதத்தன்மை கெடாமலிருக்கவும் மற்ற மொழிகளோடு ஏற்பட்ட போட்டியில் தங்கள் மொழி வழக்கிழந்து விடாமலிருக்கவும் எடுத்துக் கொண்ட பாதுகாப்பு முறைகள்தான்.

மேனாட்டினரால் மிகச் சிறந்த இலக்கணமாகப் பாராட்டப் பட்ட அஷ்டாத்தியாயிதான் ஸம்ஸ்கிருத மொழியில் நமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பழமையான இலக்கண நூல் பாணினி இந்த இலக்கணம் எழுதியதின் நோக்கம் சரிவரத் தெளிவாகவில்லை. அவர் பேசும்மொழியை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதற்கு விதிகளமைத்து மற்றக் கிளைமொழிகளான வேதம், பிராம்மணம், கிழக்கே பேசும் மொழி முதலியவற்றோடு ஒப்பிட்டு அவைகள் மாறுபடுமிடங்களைக் குறிப்பிடுகிறார். அஷ்டாத்தியாயி ஒரு சிறந்த வண்ணனை இலக்கணம். மேற்கூறிய காரணங்களெதுவுமே அஷ்டாத்தியாபி. அச்சம் பாணினியின் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. அதன் உள்ளடக்கமும் இந்நோக்சுத்தில் அந்த இலக்கணம் எழுதியதை நிரூபிக்கவில்லை பாணினிக்குப் பின்னால் வந்த இலக்கண ஆசிரியர்கள் குறிப்பாகக் காத்யாயனர், பதஞ்சலி காலத்தில்தான் இவ்விதமான அச்சம் அம்மொழிக்கு ஏற்பட்டது என்பது வரலாற்றிலிருந்தும் அவர்களுடைய உரைகளிலிருந்தும் தெளிவாகிறது. பாணினிக்குப் பின்னால் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் அவர்கள் மொழி அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரு கட்டாயச் சூழ்நிலை எழுந்தது. அந்த நிலைக்கேற்ப வண்ணனை இலக்கணமாக இருந்த அஷ்டாத்தியாபியில் பாணினியின் காலத்திற்குப்பின் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் விதிகளை யமைத்து இணைத்து அதை ஒரு

நிலை இலக்கணமாக (Prescrigins grammar) உருவாக்கினார்கள். அப்போதுதான் இந்தோ-ஆரிய மொழி ஸம்ஸ்கிருதம் என்ற பெயர் பெற்றதாகத் தெரிகிறது. இவ்வாறு அந்த மொழி வரையளவுபடுத்தப்பட்டு (Standardization) இலக்கிய மொழியாக நின்றுவிட்டது. பாணினியின் காலத்திற்குப் பிற்பட்ட இலக்கிய ஆசிரியர்களும் பாணினியின் இலக்கணவிதிகளை அனுசரித்தே இலக்கியங்களைத் தோற்றுவித்தார்கள். அக்காலத்தில் மக்களின் பேச்சு மொழியாக இருந்த பிராகிருதம் பாலி போன்ற மொழிகளுக்கும் பாணினியின் இலக்கணத்தை முன்மாதிரியாகக் கொண்டுதான் இலக்கணங்களை எழுதினார்கள்.

வரலாற்றில் நிகழும் நிகழ்ச்சிகளால் ஒரு மொழியானது எவ்வாறு பாதிக்கப்படுகிறது அதனால் அம்மொழியில் ஏற்படும் மாற்றங்கள் அவைகளிலிருந்து தங்கள் மொழியைப் பாதுகாக்க அம்மொழி பேசும் மக்கள் மேற்கொண்ட முயற்சிகள் இவற்றின் விளைவாக எழுத்த இலக்கண மரபு - வடமொழி இலக்கண நூல்களின் வரலாற்றுக்குப் பின்னணி இவைகள்தான்.

மற்றொரு பழமையான மொழியான தமிழில் இலக்கணம் தோன்றியதின் நோக்கம் என்ன என்பதை இப்போது ஆராய்வோம் தமிழிலக்கண மரபு வேறுவிதமான வரலாற்றுப் பின்னணியில் அமைத்திருக்கின்றது. ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் தொடர்பிருந் தற்குச் சான்றுகள் அசோகன் காலத்துக் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கின்றன. ஆனால் இத்தொடர்பு எத்தகையது என்பது தெளிவாகத் தெரிய வில்லை. தமிழ்நாட்டில் சில பாகங்களின் குகைகளில் காணப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்து சமண, புத்தமதத்தைச் சார்ந்த துறவிகள் அந்தக் குகைகளில் வசித்து வந்ததாகத் தெரிகிறது. அந்தக் குகைகளில் பொறிக்கப்பட்ட தமிழ்தான் தமிழின் மிகப்பழமையான சான்றாகக் கருதப்படுகிறது. தமிழ் - பிராம்மி என்றழைக்கப்பட்ட இதனுடைய மொழி சங்ககால மொழியினின்று மிகப்பெரிய அளவில் மாறுபட வில்லையென்பது அறிஞர்களின் கருத்து. இக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு. இம்மொழியில் பல பிராகிருதச் சொற்கள் கலந்திருப்பதாகவும் இதைப் பொறித்தவர்கள் தமிழிலும் பிராகிருதம் பாலி மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற புத்த, சமண மதத்துறவிகள் என்றும் கருதுகின்றனர். (மகாதேவன்: 1968)

நமக்குக் கிடைத்துள்ள தமிழ்நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியந்தான். தொல்காப்பியத்திற்கு முன்பும் சிலதமிழ் நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவு. ஏனென்றால் இலக்கியம் காணாத ஒருமொழிக்கு இலக்கணம் வகுப்பதென்பது பண்டைய நாட்களில் காணப்படாத ஒன்று தொல்காப்பியம் போன்ற ஒரு சிறந்த இலக்கணம் தோன்ற வேண்டுமென்றால் அதற்கு முன்பு ஒரு இலக்கியப் பரம்பரை இருந்திருக்க வேண்டு . மேலும் தொல்காப்பிய நூற்பாக்களில் காணப்படும் "என்ப",

"என்மனார் புலவர்" என்ற சொற்கள் அதற்கு முன்பிருந்த இலக்கண நூல்களைத் தான் குறிக்கின்றன.

தொல்காப்பியத்தின் அகச் சான்றுகளிலிருந்து தொல்காப்பியம் பல அடுக்குகளைக் (Layers) கொண்டதாகவும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டதாகவும் கருதுகிறார்கள் (மீனாட்சி சுந்தரம்: 1965: 17) இதன் மையக்கரு கி.மு. 2-1ம் நூற்றாண்டுகளில் உருவாகியிருக்க வேண்டுமென்றும் கி.பி. 5ம் நூற்றாண்டுக்குள் இந்த நூல் முழுமையான வடிவம் பெற்றிருக்கலாமென்றும் சிலர் கருதுகிறார்கள் (சுவெலபில். 1973).

தொல்காப்பியம் எதற்காக எழுதப்பட்டதென்று தொல்காப் பியரோ அல்லது அவருக்குப் பின்னால் வந்த ஆசிரியர்களோ எதுவும் கூறவில்லை. ஏற்கெனவே கூறியபடி ஒரு மொழியில் இலக்கணம் தோன்றுவதற்கு (அ) அம்மொழி பேசும் மக்கள் வேறு மொழிபேசும் மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் (ஆ) வேற்று மொழியில் சிறந்த இலக்கணம் இருப்பதைக் கண்டு தங்கள் மொழிக்கும் அம்மாதிரியான இலக்கணம் உருவாக்க வேண்டுமென்ற ஆவல். (இ) வேறு மொழிபேசும் மக்களுக்குத் தங்கள் மொழியைக் கற்பிப்பதற்காக அம்மொழி இலக்கணத்தின் தேவை போன்றவைகள் நோக்கமாகக் கூறப்படுகின்றன

### அ) வேறு மொழிபேசும் இனத்தவருடன் தொடர்பு

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் மக்களுக்க இந்தோ ஆரிய மொழிபேசும் இனத்தவருடன் தொடர்பிருந்தது என்பதற்கு அசோகன் காலத்துக் கல்வெட்டுகள் சான்றாக அமைகின்றன. இத்தகைய தொடர்பினால் பல வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்திருந் தாலும் அம்மொழியில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அதனால் தங்கள் மொழி வழக்கிழந்து விடும் அல்லது புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மாற்றமடைந்து விடும் என்ற அச்சம் ஒருநாளும் ஏற்படவில்லை. வடமொழிக்கேற்பட்ட ஒருநிலை தமிழ் மொழிக்கு ஏற்படாததால் தமிழிலக்கணம் ஒரு பாதுகாப்பு மனப்பான்மையின் காரணமாகத் தோன்றியிருக்க முடியாது.

### ஆ வேறுமொழியிலுள்ள சிறந்த இலக்கணங்கள்

வேறு மொழியில் ஒரு சிறந்த இலக்கணமிருப்பதை அறிந்து அதைப்போன்ற ஒரு இலக்கணம் தங்கள் மொழிக்கும் வேண்டுமென்ற ஒரு ஆவலினால் மொழிகளின் இலக்கணங்கள் தோன்றலாம். வடமொழியில் சிறந்த இலக்கணங்கள் இருந்ததென்றும் அவைகளில் தொல்காப்பியர் தேர்ச்சியுற்றிருந்தாரென்றும் அவருடைய நூலிலிருந்தே நாமறியலாம். எழுத்துக்கள் பிறக்கும் முறையைப் பற்றிக் கூறும்போது வடமொழி இலக்கண ஆசிரியர்கள் கூறுவது தனக்கு உடன்பாடில்லையென்று அவர் கூறுகிறார்

(எழுத்து. 102-103). ஸம்ஸ்கிருத, பிராகிருதச் சொற்களைத் தமிழில் பயன்படுத்தும்போது அவைகளைத் தமிழில் மொழி ஒலியன்களுக்கேற்ப எவ்வாறு மாற்றவேண்டுமென்பதற்கு அவர் விதி அமைக்கிறார் (சொல். 401-402). மேலும் வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்கு நூல்களை மொழிபெயர்க்கும் போது பின்பற்ற வேண்டிய கொள்கைகளையும் குறிப்பிடுகிறார். அந்த மேற்கோள்களிலிருந்து தொல்காப்பியர் வடமொழி இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ச்சியுற்றிருந்தாரென்பது தெளிவு. ஆனால் இவைகளிலிருந்து தொல்காப்பியர் வடமொழியிலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு தொல்காப்பியத்தை ஆக்கினாரென்று கூறுவது பொருந்தாது. ஏனென்றால் அடிப்படைக் கொள்கைகளிலேயே பல இடங்களில் தொல்காப்பியர் வடமொழி இலக்கணங்களிலிருந்து மாறுபடுகிறார். சான்றாக வேற்றுமைகளைப் பற்றிக் கூறும்போது வடமொழி இலக்கணங்களில் காரகம், விபக்தியென்ற இருவகைப் பாகுபாடுகளைக் காண்கிறோம். ஆனால் தொல்காப்பியத்தில் அவ்வகையான பிரிவுகள் காணப்படவில்லை. தொகைகளிலும் அவர் வடமொழிச் சமாசரங்களை விவரித்திருக்கும் முறையிலிருந்து மாறுபடுகிறார். (மீனாட்சி: 1972)

புணர்ச்சி விதிகளைப் பற்றிப் பேசும்போது அவர் வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சியென்ற இருவகைப் புணர்ச்சிகளைப் பற்றி விளக்குகிறார். வடமொழியில் அகச்சந்தி (Internal sandhi) , புறச்சந்தி (extemal sandhi) என்ற இருவகைப் பாகுபாடு காணப்படுகிறது. சிற்சில இடங்களில் வடமொழி இலக்கணங்களின் தாக்கம். தொல்காப்பியத்தில் காணப்படலாம். ஆனால் அவர் அவைகளை முன்மாதிரியாகக் கொண்டு தொல்காப்பியத்தை உருவாக்கினார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

தொல்காப்பியர் காலத்திலும் அவருக்கு முற்பட்ட காலத்திலும் சில இலக்கண ஆசிரியர்கள் வடமொழி இலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு தமிழ் இலக்கணங்களை ஆக்கியிருந்திருப் பார்கள். தொல்காப்பியர் இவ்விரு மொழிகளிலுமே நன்கு தேர்ச்சியுற்றிருந்ததால் அவருக்கு இது உடன்பாடில்லை. தமிழின் தனித்தன்மை யைப் புரிந்து கொண்டு. அதற்கென ஒரு சிறந்த இலக்கணத்தைப் படைத்திருக்கிறார். சான்றாக (1) அவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்ற ஐவகையாகத் தமிழின் இலக்கணத்தை விளக்குகிறார். இது வடமொழி இலக்கணங்களில் காணப்படாதது. வடமொழி இலக்கணங் களிலெல்லாம். எழுத்தும் சொல்லுத்தான் பேசப்படுகின்றன. (2) வடமொழி இலக்கணங்களில் காரசுங்கள் ஆறு என்று கூறுகிறார்கள். விபக்தி (வேற்றுமையுருபுகள்) ஏழாகப் பிரிக்கப்படுகிறது. வேற்றுமையுருபுகள் எந்தெந்த இடங்களில் வருமென்று விவரிக்கும் போது ஸம்போதன மென்ற எட்டாவது வேற்றுமை விளிப்பொருளில் வருமென்று கூறுகிறார். எட்டாவது வேற்றுமைக்குத் தனியுருபுகள் கிடையாது. முதல் வேற்றுமை உருபுகள்தான் எட்டாவது வேற்றுமைக்கும் இணைக்கப்படுகின்றன. அதனால் எட்டாவது வேற்றுமையென்று

தனியாக ஒரு வேற்றுமை வடமொழியில் குறிப்பிடுவதில்லை. தொல் காப்பியர் வேற்றுமையைப் பற்றிப் பேசும்போது முதல் சூத்திரத்தில் "வேற்றுமை தானே யேழென மொழிப" என்று கூறி அதற்கடுத்த சூத்திரத்தில் ”விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" என்று எட்டாவது வேற்றுமையைத் தனியாகக் கூறுகிறார். அவர் முதல் சூத்திரத்திலேயே தமிழில் எட்டு வேற்றுமைகள் உள்ளனவென்று கூறியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் முதலில் எழு வேற்றுமையென்று கூறி விளியைச் சேர்த்து வேற்றுமைகள் எட்டு என்கிறார். மேலும் முதல் சூத்திரத்தில் "ஏழென மொழிப" என்பதிலிருந்து ஏழு வேற்றுமைகளென்பது அக்கால இலக்கண ஆசிரியர்களின் கருத்து என்பது தெளிவு. ஆனால் வடமொழியைப் போலல்லாமல் தமிழில் விளி வேற்றுமையில் பெயரினிறுதியில் பலமாற்றங்கள் ஏற்படுகின்றன. இதை நன்குணர்ந்த தொல்காப்பியர் விளி வேற்றுமையைத் தனியாக எட்டாவது வேற்றுறையென்று முன்னோர்களின் கருத்தைக் கூறிய பிறகு அவைகளுடனிணைத்து விட்டு அதற்குத் தனியாகவே ஒரு பிரிவு ஏற்படுத்தி விளி வேற்றுமையை மிகவிவரமாகக் கூறுகிறார். இவ்வாறு அவர் பல இடங்களில் தமிழின் தனிச்சிறப்பைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இவைகளிலிருந்து அவர் வேறுமொழி இலக்கணங்களை முன்மாதிரியாகக் கொண்டு தமிழில் இலக்கணங்கள் எழுதினால் தமிழின் சிறப்புத் தன்மையை வெளிக்கொணர முடியாது என்பதை உணர்த்தவேண்டும். அதே சமயம் அதற்கென ஒரு சிறந்த இலக்கணம் வேறுவிதமான அடிப்படையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கங்களில் தொல்காப்பியத்தை உருவாக்கியிருப்பாரென்பது தெளிவாகப் புலனாகிறது.

### இ. தமிழறியாதவர்களுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டிய அவசியம்

புத்த, சமண மதத்துறவிகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தென்னிந்தியாவில் வந்து குடியேறியதற்குக் கல்வெட்டுகளிலிருந்து சான்றுகள் கிடைக்கின்றன. தொல்காப்பியரே சமண மதத்தைச் சார்ந்தவரென்று கருதுவோரும் உண்டு. புத்த, சமண மதத்துறவிகள் தென்னிந்தியாவில் குடிபுகுந்ததின் முக்கிய நோக்கம் மதப்பிரச்சாரம். அதற்கு அந்த நாட்டு மக்களின் மொழியைப் பயிலவேண்டிய அவசியம் நேர்கிறது. மொழி பயில்வதற்கு அம்மொழியின் இலக்கணம் தேவை அந்த இருமொழிகளிலுமே தேர்ச்சிபெற்ற ஒருவர் அந்த நாட்டு மொழிக்கு இலக்கணம் வகுப்பது இயல்பு. தொல்காப்பியர் இவ்விரு மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்ததால் இத்தேவையை நன்குணர்ந்து கொண்டு தமிழிலக்கணத்தை அவர் ஆக்கியிருக்கிறார். எழுத்ததிகாரம் இதற்கு ஒரு நல்ல சான்று.

வேற்றுமொழி பேசும் மக்களுக்கு மொழியைக் கற்பிக்கும்போது பொதுவாக அம்மொழியின் எழுத்துக்கள் அவைகளை எழுதும் விதம். உச்சரிக்கும் முறை போன்றவற்றை நுணுக்கமாக விளக்குவது வழக்கம். எழுத்ததிகாரத்தை ஊன்றிப்

படிக்கும்போது இதே நோக்கத்துடன்தான் அவர் அதை எழுதியிருப்பாரென்ற உணர்வு ஏற்படுகிறது. தமிழ் எழுத்துக்களின் வகை அவைகளை உச்சரிக்கும்முறை அவைகள் நிற்குமிடம் அவைகளை எழுதும் முறை போன்றவற்றை வெகு நுட்பமாக ஆய்ந்து எழுதியிருக்கிறார்.

எழுதும் முறையைப் பற்றி தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் ஏழு நூற்பாக்களில் குறிப்பிடுகிறார். (2, 14, 15, 16, 17, 104, 105) தமிழ் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிக் கூறும்போது புள்ளி எந்த இடத்தில் நிற்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். மெய்யெழுத்துக்கள் புள்ளியோடுதான் வரும் (15) உயிர்மெய்யெழுத்திற்குப் புள்ளி கிடையாது. அதனால் அந்த எழுத்து “அ“வுடன் சேர்ந்து ஒலிக்கும் (17) மெய்யை ஈறாகக் கொண்டவைகள் புள்ளியோடு முடியும் (ஏகார, ஓகாரங்கள் புள்ளிபெற்று எகார, ஒகாரங்களாக மாறுகின்றன.(16)

பொதுவாக குற்றுயிரின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு அத்துடன் ஒரு கோடோ அல்லது வேறு குறியீடோ இணைத்து அவற்றின் நெடிலைப் பெறுவது வழக்கம். இந்தமுறை பண்டைய காலக் கல்வெட்டுக்களிலும் கடைபிடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். காட்டாக பண்டைய எழுத்தான பிராம்மி எழுத்துக்கள்

இம்முறையில்தான் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

H H

H H **L E**

அ ஆ உ ஊ

ஆனால் தொல்காப்பியர் நெட்டெழுத்தான ஏ, ஓ வின் வடிவத்தில் ஒரு புள்ளியிட்டு அவைகளின் குறிலைப் பெறலாமென்று கூறுகிறார்(16). இம்முறை பொதுவாகக் கடைபிடிக்கும் முறைக்கு முரணாகத் தோன்று கிறது. இவ்விதியை யமைப்பதற்கு ஆசிரியர்க்கு ஒரு உள்நோக்கம் இருந்திருக்கவேண்டும்.

மேலும் தமிழ் எழுத்துக்களின் வைப்பு முறையைப் பார்க்கும் போதும் சில மாறுபாடுகளைக் காணலாம். முதல் சூத்திரத்தில் தமிழ் எழுத்துக்கள் “அ“ வில் தொடங்கி “ன”வை ஈறாகக் கொண்டுள்ளன என்று கூறுகிறார் ஆசிரியர் உயிரெழுத்துக்களைக் குறிப்பிடும்போது. குறிலையடுத்து அவைகளின் நெடிலைக் கூறுகிறார். இது பொதுவாகக் கடைபிடிக்கும் முறை. ஆனால் மெய்யெழுத்துக்களில் அண்பல் மூக்கொலியான (alveolar nasal) “ன்“-க் கடைசியில் வைக்கிறார். பொதுவாக

எழுத்துக்களை பின் அண்ணஒலி (velar), அண்ணஒலி (palatal) , நாமடியன் (retroflex) , அண்பல் ஒலி (alveolar) , பல் அண்ண ஒலி (dental) , இதழொலி (labial) , அரை உயிர் (semi vowel) என்ற வரிசையில் கூறுவதுதான் வழக்கம்.

மேலும் மற்ற மொழிகளில் அரை உயிர்களான ய, ர, ல, வ என்ற எழுத்துக்களோடு அம்மொழிகளின் எழுத்துக்களின் வரிசை முடிவடைகின்றது. ஆனால் தமிழெழுத்துக்களில் அரை உயிரைத் தொடர்ந்து தமிழின் சிறப்பெழுத்துக்களான ழ, ள, ற, ன வைக்கப் பட்டிருக்கின்றன இங்கேயும் வழக்கத்திற்கு மாறுபட்ட ஒரு முறையைக் காண்கிறோம். இந்த முறைப்படி எழுத்துக்களை வைப்பதற்கும் ஒரு உள்நோக்கம் இருந்தேயாக வேண்டும். வேற்று மொழி பேசும் மக்களுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டிய அவசியமேற் பட்டபோது ஆசிரியர் பொதுவான முறையில் சில மாற்றங்களைப் புகுத்தி இம் மொழிக்கு இலக்கணத்தையமைக்கிறார். இவ்வாறு இலக்கணம் அமைவதால் அவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொள்வதோ அல்ல கற்பிப்பதோ எளிதென உணர்ந்து ஆசிரியர் செயல்பட்டிருக்கிறார். அக்காலத்தில் வேற்று மொழியான பிராகிருதம் பாலி மொழிகளைப் பேசும் சமண புத்தமதத்துறவிகள்தான் தமிழ் நாட்டிலிருந்தனர். அவர்களுடைய மொழியில் குற்றியல் “எ” யோ “ஒ”வோ இல்லை. ஆனால் அவர்களுடைய எழுத்தான பிராமியில் ஏகார ஓகாரங்களுக்கு ஒருவடிவம் இருந்தது. அந்த வடிவத்தோடு ஒரு குறியீடை இணைத்து அவைகளின் குறிலைப்பெற கற்றுக்கொடுத்தால் அந்த முறையில் அவர்கள் கற்றுக்கொள்வது எளிது. இம்முறையில் தற்காலத்தில் கூட புதுமொழியின் உச்சரிப்பைக் கற்றுக்கொள்வதற்கு ஆங்கில எழுத்துச் களின் உச்சரிப்பின் மூலம் கற்றுக் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் போது ஒரு எழுத்தின் வடிவத்திலிருந்து. அதற்குத் தொடர்புடைய எழுத்துக்களுக்கு வடிவம் அமைப்பது அசோகன் பிராம்மியில் காணலாம். அதில் “ஏ”, “ஓ” என்ற எழுத்துக்களின் வடிவங்களிலிருந்து “ஐ” , “ஔ” என்ற எழுத்துக்களின் வடிவம் பெறப்படுகின்றன.

எழுத்துக்களின் வைப்பு முறையிலும் இரண்டு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களை முதலில் கூறிவிட்டு அந்த மொழியிலில்லாத. தமிழின் சிறப்பெழுத்துக்களான ழ, ள, ற, ன இவைகளை இறுதியில் வைக்கிறார். இங்கேயும். ஆசிரியர் வழக்கிற்கு மாறான ஒரு முறையைக் கடைப்பிடித்திருக்கிறாரென்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். தமிழ் பிராம்மி எழுத்துக்களில் கூட இந்நாலு எழுத்துக்களின் வடிவமும் அசோகன் பிராம்மி எழுத்துக்களிலிருந்து தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ் “ழ” பிராம்மி டு(ன)விலிருந்தும் “வ” , “ல” ,விலிருந்தும் “ற” “ட”(1)விலிருந்தும் “ன”, “ந” விலிருந்தும் பெறப்பட்டிருக்கின்றன (மகாதேவன்: 1970).

வேற்றுமொழி பேசும் மக்களுடைய மொழியில் எந்தெந்த எழுத்துக்கள் இருக்கின்றனவோ அவைகளோடு உருவத்திலோ, உச்சரிபபிலோ ஒத்த புதியமொழியின் எழுத்துக்களை ஒப்பிட்டுக்காட்டி மொழியைப் பயிற்றுவித்தால் அம்மொழியைப் பயில்வது மற்றவர் களுக்கு எளிது. இதை நன்றாக உணர்ந்து கொண்ட தொல்காப்பியர் இம்முறையில் எழுத்ததிகாரத்தை உருவாக்கியிருக்கிறார். அதனால்தான் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது சில இடங்களில் முன் பாடிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் ஊன்றிப் பார்க்கும்போது அவருடைய நோக்கம் தெளிவாகிறது.

தமிழொலி, ஒலியன், உருபொலியன் இவைகளைத் தொல்காப்பியர். மிக நுட்பமாக ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். இத்துடன் வடமொழியிலுள்ள பிராதிசாக்கியங்கள் சிக்ஷா முதலிய நூல்களை ஒப்பிடலாம். அவைகளெல்லாம் மொழியின் புனிதத்தன்மையைக் காக்க வேண்டுமென்ற ஒருபாதுகாப்பு உணர்ச்சியில் எழுதப்பட்டன என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஆனால் வடமொழிக்கேற்பட்ட ஒரு சூழ்நிலை தமிழுக்கு எழவேயில்லை. மேலும் தமிழ் ஒரு மக்கள் பேசும் மொழியாகத்தானிருந்து வருகிறது. அதற்கு ஒரு புனிதத்தன்மை இருந்ததாக வரலாற்றில் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ஆகவே தொல்காப்பியம் எழ, பாதுகாப்பு உணர்ச்சி காரணமாக இருந்திருக்க முடியாது. வரலாற்றுப் பின்னணியில் இந்த நூலை ஆராயும்போது வேற்றுமொழியாளர்களுக்கு எளிதாகத் தமிழ் கற்பிக்கும் நோக்கத்துடன் தான இந்த இலக்கணத்தை எழுதியிருப்பார். எழுத்ததிகாரத்திலிருந்து பல மேற்கோள்கள். மேலே காட்டப்பட்டி ருக்கிறது. சொல்லதிகாரத்தைப் பார்க்கும்போது தமிழுக்கும் வடமொழிக்கும் ஒரேமாதிரியான அடிப்படையில் இலக்கணம் அமைக்க முடியாது என்று நிறுவி தமிழின் தனித்தன்மையை எடுத்துக்காட்டி ஒரு சிறந்த இலக்கணத்தை உருவாக்கி யிருக்கிறார். பல அறிஞர்களின் கருத்துப்படி. இந்த இரண்டு அதிகாரங்களும் இருவேறு தொல்காப்பியரால் எழுதப்பட்டிருக்கலாம். அதனால் தான் இவ்விரண்டின் நோக்கங்களும் வெவ்வேறாக இருக்கின்றன.

# தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியம்

கா. சிவத்தம்பி

தொல்காப்பியத்திற்குத் தமிழிலுள்ள முக்கியத்துவம் காரணமாகவே நாம் இந்த இலக்கண நூலினைப் போற்றுகின்றோம். அதனை நமது தளமாகக் கொள்ளுகிறோம். சமூகநிலைநின்று நோக்கும்பொழுது இது ஒரு பிரதானமான வினாவைக் கிளப்புகிறது. தொல்காப்பியத்திற்குத் தமிழிலுள்ள முக்கியத்துவம் யாது? இதற்கான விடை பல நிலைப்பட்டது.

முதலாவதாக இது தமிழ் பற்றிய கற்றலுக்கு அச்சாணியான ஒரு நூலாகக் கொள்ளப்படுவதாகும். இங்கு "நூல்" என்பது தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படும் நூல் எனும் வரைவிலக்கணத்திற்கு நூலெனப்படும் எழுத்து வகையின் இலக்கணத்திற்கியைய அமைவதாகும் (செய்யுளியல் 159).

தமிழிலக்கிய இலக்கணப் பயில்வுப் பாரம்பரியத்தில் தொல்காப்பியத்துக்கு ஒரு விதிமுறையான அதிகாரத்துவம் உண்டு என்று கொள்ளப்படுவது நமக்குத் தெரிந்ததே. தமிழ் இலக்கண இலக்கியங்களில் வரும் பயில்வுகளை ஏதேனும் ஒரு வழியால் தொல்காப்பியத்துடன் இணைத்தோ அல்லது அதன் வழியாக வருவதாகவோ பார்க்கும் முறைமை ஒன்று உண்டு. அதாவது மரபு அங்கீகாரம் பெறுவதற்குத் தொல்காப்பியம்வழி வருகின்ற ஒரு நியாயப்பாடு அத்தியாவசியமாகிறது.

இவை யாவற்றிற்கும் மேலாக இந்த நூல் தமிழிலக்கியம் பற்றிய எமது "நோக்குமுறையை"த் தீர்மானித்துள்ளது. குறிப்பாக சங்க இலக்கியம் பற்றிய எமது அறிவை, காரண அறிகையைத் தொல்காப்பியம் தீர்மானித்துள்ளது. சங்க இலக்கியத்திற்குத் தரப்படும் விளக்கங்கள், தொல்காப்பிய இலக்கண மரபுகளை நோக்கு மையமாகக் கொண்டுள்ளன என்பது நமக்குத் தெரிந்ததே. இவ்வுண்மையை இன்னொரு வகையில் எடுத்துக் கூறலாம். தற்செயலாக ஏதோவொரு காரணத்தினால் தொல்காப்பியம் எமக்குக் கிடைக்கப் பெறாதிருந்து சங்க இலக்கியம் மாத்திரமே கிடைக்கப்பெற்றிருப்பின் அந்த இலக்கியத் தொகுதி பற்றிய எங்களுடைய உய்த்தறிவும் விளக்கங்களும் இன்று அத்தொகுதி பற்றி இருக்கின்ற கருத்துக்களிலிருந்து நிச்சயமாக வேறுபடும். உதாரணமாக தொல்காப்பியம் இல்லாது சங்க இலக்கியப் பாடல்களை மாத்திரம் நாம் பெற்றிருந்திருப்போமேயானால் அகம் - புறம் பற்றிய இன்றைய நமது பிரிகோட்டு அழுத்தம் வந்திருக்க முடியாது. அகப்பாடல்களினுள் அரசியல் உவமைகள் கையாளப்படுவது அகத்திணையையும் புறத்திணையையும் ஒன்றுக்குள் ஒன்று இணைப்பது (நெடுநல்வாடை) , அகத்திணை உத்திகளைப் புறத்திணைப் புகழ்ச்சிக்காகப் பயன்படுத்துவது போன்றவை நமக்கு அகம் - புறம் பற்றிய நெகிழ்ச்சியான பார்வையைத்

தந்துள்ளன. சங்க இலக்கியத்தில் காணப்படும் இலக்கிய வடிவங்கள் பற்றிக்கூட நாம் வேறு பல நோக்குகளுக்குச் சென்றிருக்கலாம். பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை இலக்கியங்கள் ஆகும். தொல்காப்பியத்தில் பல்வேறு புறத்திணைத் துறைகளில் ஒன்றாகவே ஆற்றுப்படை கூறப்படுகிறது.

தொல்காப்பியத்தைத் தலையூற்றாகக் கொள்ளும் அம்முறைமை காரணமாக இதனை விளங்கிக் கொள்வதில் எப்பொழுதும் கருத்து வேறுபாடுகள் நிறையவே காணப்படுகின்றன. இங்கு நான் இன்று எடுத்துக் கூறப்படும் விளக்கங்களை மனத்திற்கொண்டு கூறவில்லை உரையாசிரியர்களின் கருத்து வேறுபாடுகளை மனங்கொண்டே கூறுகிறேன்.

தொல்காப்பியத்தைத் தமிழ் மரபின் தலையூற்றாகக் கொள்ளும் இந்நோக்குமுறைமை காரணமாக அதன் காலநிர்ணயத்தில் மிகுந்த அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இந்த நூலுக்குக் கொடுக்கப்படுகின்ற காலம் தமிழ்ப்பாரம்பரியத்தின் உருவாக்கத்திற்குக் கொடுக்கப்படுகின்ற காலமாகக் கொள்ளப்படுகின்றபடியால் இது பற்றிய கால நிர்ணய முயற்சிகள் மிகப்பெரிய உணர்ச்சி மோதல்களை ஏற்படுத்தி வந்துள்ளன. இந்த நிலை காரணமாகத் தொல்காப்பியத்திற்கான ஒரு வரலாற்று விமர்சனம் செய்வதென்பது (historical criticism) சிக்கல் நிறைந்த ஒன்றாக இருக்கிறது. அதற்கு இந்நூலில் காணப்படுவனவாகவுள்ள சில தரவுகள் கிளப்பும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க தொல்காப்பியக் காலநிர்ணயப் பிரச்சினை தமிழரின் தனித்துவ அடையாள நிர்ணயம் பற்றிய உணர்ச்சிபூர்வமான பிரச்சினையாகவே கொள்ளப்படுகிறது.

இந்த நூலின் முக்கியத்துவம் காரணமாக இந்நூலாசிரியர் பற்றிய பல புலமைப் பிரச்சினைகளுக்கிடையேயும் இவரை ஒரு பெரும் தனிமனிதனாகப் பெருநிலைப்படுத்தியுள்ளோம்

இப்பொழுது நம்மை எதிர்நோக்கும் தவிர்க்க முடியாக வினா என்னவெனில் தொல்காப்பியம் இந்த இடத்தினை எவ்வாது பெற்றுக் கொண்டுள்ளது என்பதாகும். இது ஒரு மிகமிக முக்கியமான வினாவாகும். இதனை மிகுந்த நிதானத்துடனும் கவனத்துடனும் 'அணுகல் வேண்டும். தொல்காப்பியத்திற்கு இத்தனை முக்கியத்துவம் தருவதற்குக் காரணம் தொல்காப்பியம் வழியாக எடுத்துரைக்கப்படும். (narate பண்ணப்படும்) விடயம் எதுவென நாம் நினைக்கிறோம்.

தொல்காப்பியம் தமிழை ஒரு மொழியாகவும் அதன் (அன்றைய இலக்கிய அமைப்பை ஒரு முறைமையாகவும் (system) விவரிக்கின்றது. (describes). தொல்காப்பிய உள்ளடக்கம் அமைந்துள்ள முறைமையினை நோக்கும்பொழுது அதில் தமிழின் சிறப்பம்சங்கள் என்று கொள்ளப்பகின்றவை கூறப்படுகின்றமையையும் விவரிக்கப்படுகின்றமையையும்

அவதானிக்கின்றோம். இதனைச் சற்று நுணுக்கமாகப் பார்க்கவேண்டும். தமிழைப் பிறமொழி இலக்கிய மரபுகளிலிருந்து பிரித்துக் காட்டும் அதன் சிறப்பம்சங்களைத் தொல்காப்பியம் எடுத்துக் கூறுகின்றது. தொல்காப்பியருக்கு வடமொழி தெரியும் என்பதும் வடமொழி மரபுகளில் கையாளப்படுவனவற்றிலிருந்து தமிழ் வேறுபடும் முறையையினை இவர் அழுத்திக் கூறுவதும் முக்கியமாகின்றன.

உண்மையில் இங்கு வடமொழி என்பது தனியே சமஸ்கிருதத்தை மட்டுமல்ல அது பாளி போன்ற பாகத மொழிகளையும் உள்ளடக்கும். பௌத்த செல்வாக்கு மரபு பிரதானமாகப் பாளி வழியாகத்தான் வருவது அது பின்னர் சமஸ்கிருதத்தைக் கையாளுகின்றபொழுதும் அது ஒரு கலப்புச் சமஸ்கிருதமாகவே இருந்தது. வடமொழியின் இருப்புப்பற்றிய பிரக்ஞை காரணமாகவே தமிழ் அதிலிருந்து வேறுபடும் தன்மையை அவர் காட்டுகிறார். இந்தச் சிறப்பம்சங்கள் நமக்கு தமிழ் உளப் பாங்கிற்கு (psyche) மிக முக்கியமானவையாகின்றன. ஏனெனில் இந்திய உபகண்டத்தில் எமது தனித்துவத்தை நாம் பேணிக்கொள்வதற்கு இந்தச் சிறப்பியல்புகள் பற்றிய பிரக்ஞை அவசியமாகிறது. (சங்க இலக்கியத்தின் உள்ளேயே மொழி, மொழியின் பரப்பு, அது வேறுபடுகின்ற நிலையைகள் பற்றிய ஒரு பிரக்ஞை உண்டு) இதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் தமிழை இந்தியப் பின்புலத்தில் பார்க்கும்பொழுது தமிழில் ஒன்றும் விசேடமாக இல்லை என்று சொல்கிற ஒரு செல்நெறி குறிப்பாக இடைக்காலத்தின் பின்னர் வளர்வதை நாம் காண்கிறோம். இத்தகைய ஒரு பின்புலத்தில் தொல்காப்பியத்திற் கூறப்படுவன அதற்கு ஓர் அசாதாரண பலத்தைத் தருகின்றன. தொல்காப்பியம் தமிழுக்கான கட்டுப்புள்ளியாகி (reference point) விடுகிறது. எனவேதான் இதன் காலம் பற்றிய ஆராய்ச்சிகள் முக்கியமாகின்றன.

ஆனால் இப்பிரச்சினையை இன்னொரு நோக்கிலிருந்து பார்த்தாக வேண்டும். அது அடிப்படையானது. ஒரு மொழியில் அந்த மொழி பற்றிய இலக்கணம் எவ்வெப்பொழுது தோன்றும்? இது ஒரு சமூகநிலைப் பிரச்சினை. இவ்வாறு இலக்கணங்கள் தோன்றுவதற்கான பல்வேறு சமூகக் காரணங்கள் உள்ளன. தளமானது அந்த மொழி யினுடைய வரலாற்று அநுபவமாகும்.

இவ்வாறு நோக்கும்பொழுது இலக்கணம் பற்றிய தேவை, அந்தத் தேவை பற்றிய ஒரு முனைப்பு ஏற்படுவதற்கு அந்த மொழியின் பயன்பாட்டில் ஒரு நெருக்கடி நிலை ஏற்படல் வேண்டும். அவ்வாறான ஒரு நெருக்கடிநிலை ஏற்படுகின்றபொழுது மரபுக்கு ஒரு மீள்வரை விலக்கணம் (redefine) செய்வது அவசியமாகும். தமிழ்நாட்டில் கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய ஒரு மொழிப்பிரயோக நெருக்கடி ஏற்பட்டது. அக்காலத்தில் நிலைபெற்றுவிட்ட சமஸ்கிருதச் செல்வாக்கு அதன் பயன்பாடு ஆகியன மிகைப்பட தமிழ் மொழியின் மரபு பற்றிய பிரச்சினை கிளம்பிற்று. மொழிநிலையில் வீரசோழியம் 11ஆம்

நூற்றாண்டில் தமிழிலக்கண அமைவு முறையைக் கைவிட்டு சமஸ்கிருத மாதிரியத்துக்குச் (model) செல்கிறது. அது துப்படலம் கிரியாபதப் படலம் எனவே கூறிச்செல்கிறது. யாப்பருங்கலம் செய்யுள் மரபில் ஏற்பட்டுவந்த மாற்றங்களை நுண்ணிதாகப் பதிவு செய்கிறது. அகவல் முதனிலை இழந்து வெண்பா முதனிலைக்கு வருகிறது. பாட்டியல் மரபிலும் புதிய சிந்தனைகள் ஏற்படுகின்றன (பன்னிரு பாட்டியல். மொழிப் பயன்பாட்டில் ஏற்பட்ட நோக்குமுறை மிக முக்கியமானதாகும். இந்தப் போக்கினை மறுதலித்த பவணந்தி 12.ஆம் நூற்றாண்டில் ஏற்கெனவே நிலவிய இலக்கண மரபினை நிலைகுலைக்காமல் ஆனால் புதிய விடயங்களைச் சாதுரியமாகவும் புகுத்தி (பதவியல்) ஒரு ‘நல்ல நூலினை’ எழுதுகிறார்.

(எதனோடு ஒப்பிடுகின்றபொழுது இது நல்ல நூலாக உள்ளது என்பது முக்கியமான கேள்வியாகும். முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரில் வருந்தமைக்கான காரணம் தமிழிலக்கண எடுத்துரைப்பு மரபினை மறுதலிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளைப் புறங்காணுவதற்காகும். அவ்வாறு செய்யப்பட்ட நன்னூல் விதிமுறையாக (prescriptive) இலக்கணமரபுகயை எடுத்துக் கூறுகிறது.) இந்நோக்கில் தொல்காப் பியந்தைப் பார்க்கும்பொழுது தொல்காப்பியம் மொழிப் பயன்பாட்டு நெருக்கடி வேளையில் தோன்றிய ஒன்றா என்ற கேள்வி எழுகிறது.

தொல்காப்பியத்தைப் பார்க்கின்றபொழுது தொல்காப்பிய எடுத்துரைப்பினுடைய முக்கிய இலக்காக அமைவது தமிழ்மொழியின் நியமங்களை - தமிழ் எழுதுமுறையின் நியமங்களை - தமிழிலக்கியத்தின் நியமங்களைக் கூறிச்செல்வதேயாகும். உண்மையில் தமிழைப் பயன்படுத்த விரும்பும் ஒருவரை நோக்கியதாகவே (user oriented) உள்ளது. அதாவது தமிழில் எவ்வாறு விடயங்களை எடுத்துக்கூறுவது என்பதனை எடுத்துச்சொல்கின்ற ஒரு வழிநடத்து நூலாக அதனைப் பார்க்க வேண்டும். விதிமுறையான விதிப்புக்களாகக் கூறாமல் இயங்குநிலை நியமங்களைக் கூறுவது என்ற முறைமையிலேயே கூறிச்செல்கிறது. நூல்மரபு, மொழிமரபு, கிளவியாக்கப்பண்பு, இலக்கிய அமைதி என்றே செல்லும்).

இவ்வாறு எடுத்துக் கூறுகின்ற பொழுது நூல் வழக்கையும் செய்யுளையும் மனதிற்கொண்டே செல்கின்றது. வழக்கும் செய்யுளும் இணைகின்ற முறைமை பற்றிய பிரக்ஞை எப்பொழுதும் உண்டு. வழக்கு என்பது எந்த மட்டத்து வழக்கு என்பது பற்றிய தெரிவு தொல்காப்பியருக்கு உண்டு. “வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட் ஆகலான்” அதாவது உயர்ந்தோர் கூறும் வழக்கால் மரபு தோன்றுகிறது. வழக்கை உருவாக்குவதும் செயல்படுத்துவதும் உயர்ந்தோரே. தொல்காப்பியருக்குச் செய்யுள்தான் முக்கியம். அவருக்கு எழுத்து மொழியான (பசயஅஅய) எழுதுநிலைப் பயில்வுதான் முக்கியம்

இவற்றைச் சொல்கின்றபொழுது அவர் மொழியின் ஒவ்வொரு கூறுகளையும் விவரித்துக்கொண்டே (describe) செல்வார். எழுத்து நிலையில் முதலில் அவர் நூல்மரபுதான் கூறுவார். இதனைத் தொடர்ந்து மொழி இயங்கு மரபைக் கூறுவார். தமிழின் ஒட்டுநிலைப் பண்பு காரணமாக (agglutinative character) புணரியல் முக்கியமாகிறது. அதனால் எழுத்தைப் பற்றிச் சொல்கிறபொழுதே எழுத்துக்கள் புணரும் மரபு பற்றிச் சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகிறது. சொல்லைப் பற்றித் தொடங்குகிறபொழுது பெயர், வினை என்று தொடங்காமல் சொற்கள் கிளத்தப்படும் முறைமையையே முதலிற் கூறுவார்.

சொல்லுருவாக்க நிலையில் கிளவிதான் (utterance) முக்கியம். அதனைச் சொன்னவுடனேயே தமிழின் முக்கியமான அம்சமான திணை, பால், எண், இடக்குறிப்பு பற்றிச் சொல்லிவிடுவார். தமிழில் உயர்திணை, அஃறிணைப் பாகுபாட்டின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். இது வடமொழி மரபிலிருந்து வேறுபட்டது. இப்படியே இவர் இலக்கியத்திற்கு வருகின்றபொழுது முதலில் தமிழிலக்கிய மரபின் சிறப்பியல்பான அகத்திணை, புறத்திணையைக் கூறுவார்.

இவ்வாறு சிறப்பியல்புகளையே இவர் எடுத்துக் கூறிக்கொண்டு செல்கிறார். சிறப்பியல்புகள் என்று கூறும்பொழுதே ஒரு தொகுநிலைக் கருத்து உள்ளது. எதனோடு ஒப்பு நோக்கும் பொழுது இவை சிறப்பியல்புகளாக மேற்கிளம்புகின்றன? இதற்கு விடை நிச்சயமாக வடமொழியுடன் ஒப்புநோக்கும் பொழுதே என்பதாகும். தொல்காப்பியர் வடமொழி அமைவு முறைமை பற்றிய பிரக்ஞையோடு தொழிற்பட்டுள்ளார் என்பது தொல்காப்பியத்தை ஆராய்ந்தோர் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிற ஒரு விடயமாகும். தமிழின் சில சிறப்பியல்புகளை வடமொழி எண்ணக் கருக்கள் கொண்டே விளக்க முனைகிறார் என்பதும் எல்லோருக்கும் ஒப்பமுடிந்த கருத்தாகும். களவைக்கூட காந்தருவத்தைக் கொண்டே விளக்க முனைகிறார். இவ்வாறு சிறப்பியல்புகளை எடுத்து விளக்கிச் செல்பவர். தமிழின் ஆக்கியல் மரபை நன்கு உணர்ந்தே சொல்கிறார். ஒவ்வொரு அம்சங்களையும் எடுத்து விவரித்துக்கொண்டு செல்லும் பொழுது வழுக்களையும் கூறி வழுவமைதிகளையும் கூறுவார். புறநடைகளைக் கூறுவார். தான் விவரித்துள்ள முறைமைகளுக்கு மேலாகவும் செல்லலாம் என்றும் கூறுவார்.

இதனைப்பற்றி மிக விரிவாக எடுத்துக் கூறாமல் ஒட்டு மொத்தமாகக் கூறும்பொழுது தொல்காப்பியரின் வாசகர் / கேட்குநர் தமிழை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்போகும் ஒருவராகவே அவரால் மனங்கொள்ளப்படுகிறார். அத்தகைய ஒருவருக்குத் தமிழின் அமைப்பு நெறிகள், நெளிவு சுழிவுகள், முக்கியப் புறநடைகள், சொல்மரபுகள் ஆகியனவற்றை எடுத்துக் கூறுவதாகவே தொல்காப்பியம் அமைகின்றது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இலக்கணங்கள் தோன்றுகின்ற காலங்களை மையப்படுத்தி நோக்கும்பொழுது தமிழ்நாட்டில் 17,18, 19ஆம் நூற்றாண்டுகளிலும் இத்தகைய ஒருநிலை தோன்றுவதை அவதானிக்காமலிருக்க முடியவில்லை. கி.பி.16ஆம் நூற்றாண்டிலிருந்து கிறித்தவமும் மேல்நாட்டு ஆட்சிமுறையும் தமிழ்நாட்டுக்கு வருகின்றபொழுது அவற்றோடு இங்கு வந்தவர்கள். தம்மைப்போன்று வரவிருப்பவர்களுக்குத் தத்தம் மொழிகளில் இலக்கணம் எழுதுவதை நாம் காண்கிறோம். பெஸ்கி. போப், ஆடன், கால்டுவெல் பைத்தான் வரை இப்பண்பினைக் காணலாம்.

ஆனால் தொல்காப்பியர் தமிழிலேயே எழுதுகிறார். தமிழை ஏற்கெனவே தெரிந்திருந்த ஒருவருக்குத் தமிழின் தனித்துவமான அம்சங்களை எடுத்துக்கூறுகின்ற ஒரு உயர்நிலை முயற்சியாகத் தொல்காப்பியம் அமைகிறது என்று கூறுவதில் தவறு இருக்க முடியாது.

இந்தக் கட்டத்தில்தான் மிக முக்கியமான வினா மேற்கிளம்பு கிறது. இத்தகைய ஒருநிலை தமிழர் வரலாற்றில் எப்பொழுது தோன்றியிருக்கும்? தொல்காப்பிய எடுத்துரைப்பு முறையினைப் பார்க்கிற பொழுது அது நிச்சயமாக வடமொழிப் பரிச்சயம் தமிழ்நாட்டுக்கு வந்தபொழுது தோன்றியிருக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாதவிடையாகிறது. இப்பொழுதுதான் துணைவினாவொன்று வலுவாக முனைப்புறுகிறது.

தொல்காப்பியம் எவரை நோக்கிய நூல்? இந்த வினாவினைத் தொல்காப்பியம் பொருளதிகாரக் கவிதைக் கோட்பாட்டுக் கருத்தரங்கின் போது நான் முனைப்புப்படுத்தியிருந்தேன். இதற்கு விடை வேண்டும்.

தொல்காப்பியம் எழுதப்பட்டது.
தமிழ் மாத்திரம் தெரிந்த ஒருவருக்கா?
வடமொழி தெரிந்த தமிழருக்கா?
தமிழ்தெரிந்த வடமொழி மரபினருக்கா?

தொல்காப்பியத்தின் சகல இயல்புகளையும் மனத்திற்கொண்டு இதற்கு நாம் பதிலளித்தல் வேண்டும். இந்த வினா முக்கியமான வினா. இதனோடு சேர்ந்து இன்னொரு துணைவினாவும் மேற்கிளம்புகிறது. தொல்காப்பியம் தமிழினை எண்ணக்கரு அடிப்படையிலும் அமைவு நிலை அடிப்படையிலும் இயங்குநிலை அடிப்படையிலும் நன்கு விளங்கிய ஒரு புலமைநிலையிலேயே தோன்றியிருத்தல் வேண்டும். இந்தப் புலமைநிலை வீரயுகப் பாடல் மரபுக்கு அப்பாலானதாய் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அறிவுநூற் பாரம்பரியத்தைத் தளமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது ஒழுங்குமுறைப்பட்ட கல்வி இருத்தல்வேண்டும். சங்க இலக்கியப் பண்பாட்டைப்

பார்க்கிறபொழுது இத்தகைய ஒருநிலை குறிஞ்சி, முல்லை, நெய்தலில் தோன்றக் கூடிய தல்ல. மருதநிலையின் ஒரு விசேட வளர்ச்சியாகவே இது அமைகிறது. இதற்குத் தளமாக உபரிச் செல்வமும் உடற்தொழிலிலிருந்து விடுபட்ட ஒரு புலமைக் குழுமமும் அவசியம்.

இந்த வினாக்கள் தொல்காப்பியத்தின் ஆசிரியர் யார் எனும் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன. ஆசிரியரைப் பற்றிய பிரச்சினைக்குள் இறங்குவதற்கு முன்னர் தொல்காப்பியம் எனக் கொள்ளப்படும் நூலில் பாடம் (text) பற்றிய பிரச்சினையைப் பார்க்க வேண்டும். மிகச் சுருக்கமாகவே இதனை நான் பார்க்க விரும்புகிறேன். தொல்காப் பியத்தின் நூற்பாத் தொகைபற்றி அவற்றின் பாடம் பற்றி உரையாசிரியர் களிடையே கருத்து வேறுபாடு உண்டு. இயல் அடைவில் மாறுபாடு இல்லை என்றாலும் சூத்திரத் தொகையில் மாறுபாடு உண்டு.

சூத்திர ஒழுங்கமைப்பில் சில பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாகச் சூத்திரப் பாடவேறுபாடுகள் உள்ளன. இவை பற்றிய விபரக்களைத் தொல்காப்பியம் மர்ரே பதிப்பில் காணலாம். அகத்திணையியல் சூத்திர ஒழுங்கு அமைப்புப் பற்றியும் சூத்திரங்கள் சில இல்லாமலிருந்திருக்குமோ என்பது பற்றியும் அறிஞர்கள் வினா எழுப்பியுள்ளனர். மேல்நாட்டு அறிஞர் ஒருவர் களவியல், கற்பியல் என்பனவற்றைப் பொருளதிகாரத்தில் சேர்க்கப்பட்டுள்ள நியாயப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குகிறார். இன்னொருநிலையில் காய்தல், உவத்தல் இன்றிப் பார்க்கின்றபொழுது சங்க இலக்கியத்திற்கு முற்பட்டனவாக இருக்க வேண்டிய குறிப்புகளும் பிற்பட்டனவாக இருக்க வேண்டிய குறிப்புகளும் இந்நூலினுள்ளே காணப்படுகின்றன. இது தொல்காப்பியத்தின் ஆசிரியர் பற்றிய பிரச்சினையைக் கூர்மையாக முனைப்புறுத்துகிறது. நாம் தொல்காப்பியரென்ற தனி ஒருவரையே நூலாசிரியராகக் கொள்ளும் மரபுக்குப் பழக்கப்பட்டுள்ளோம். பேராசிரியர் கணபதிப் பிள்ளை, சுமில் ஸ்வெலபில் போன்ற ஆராய்ச்சியாளர்கள் ஒருவருக்கு மேற்பட்ட தொகையினரால் இது எழுதப்பெற்றிருக்கலாமோ என்று ஐயுறுகின்றனர். தமிழ் ஆய்வியற் பள்ளி ஒன்றின் தொடர் முயற்சியாக அமைந்து தொல்காப்பியர் என்பவரால் தொடங்கப்பெற்றோ அல்லது இறுதிநிலைப்படுத்தி அளிக்கப்பெற்றோ இருக்கலாம் என்ற ஊகமும் உண்டு.

இதில் முக்கியம் என்னவென்றால் தொல்காப்பியத்தை நாம் இருநிலைப்பட்ட பகுப்பாய்வுக்கு உட்படுத்தல் வேண்டும். இன்று சமூகவியல்துறையில் கடைபிடிக்கப்படும் நுண்பகுப்பாய்வு, பருப்பகுப்பாய்வு (micro analysis; macro analysis) என்ற இரண்டு முறைமைகளையும் பின்பற்ற வேண்டும். ஒருநிலை ஆய்வு மூலமாக மாத்திரம் நாம் தொல்காப்பியம் பற்றிக் கிளப்பும் வினாக்களுக்கு விடைபெற முடியாது.

இவற்றுக்கு மேலாக இன்னொரு விடயமுமுண்டு. ஒரு மொழியின் இலக்கணம் என்பது அந்த மொழியின் தர்க்க அமைவு முறைமை பற்றியது என்பர். அதாவது அந்த

இலக்கணத்தினூடே ஒரு குறிப்பிட்ட சிந்தனைமுறைமை தொழிற்படுவதைக் காணலாம். இது ஒரு முக்கியமான வினாவைக் கிளப்புகிறது. தொல்காப்பியத்தினூடே காணப் பெறும் கருத்துநிலை அடிப்படை யாது சிந்தனை மரபு யாது என்பது பற்றிய தெளிவு நமக்கு உண்டா எனும் வினா முக்கியமானதாகும். மொழியின் இயங்குநிலை பற்றித் தொல்காப்பியம் சுட்டுகிற எண்ணக் கருத்துக்களுக்கும் சமஸ்கிருத இலக்கணச் சிந்தனை மரபுக்கு முள்ள வேறுபாடுகள் யாவை?

"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி" எனச் சிறப்புப் பாயிரத்தில் சொல்லப்படுவதன் உண்மையான கருத்து யாது? பாணினிய மரபிலிருந்து அது வேறுபடுகிறதா? அவ்வாறாயின் எவ்வாறு வேறுபடுகிறது? இத்தகைய வினாக்கள் கேட்கப்படும். பொழுது தான் தமிழ்ச்சிந்தனைமரபு பற்றிய வினாக்கள் தொடங்கும். இது ஒரு முக்கியமான விடயம். தொல்காப்பியம் மொழியை எவ்வாறு நோக்குகிறது. மொழியின் கூறுகளை அது பார்க்கின்ற முறைமூலம் மொழி பற்றிய அதன் எண்ணக்கருக்கள் தெரிய வருகின்றனவா? இது பற்றிச் சிந்திக்கப்படல் அவசியம்.

உதாரணமாக வினைபற்றித் தொல்காப்பியர் கூறுவதை நோக்கல் வேண்டும். அவர் அதில் செயலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திலும் பார்க்க. ஆகி நிற்கும் நிலை (act if becoming) என்பதற்கே அதிக அழுத்தம் கொடுப்பது போலத்தெரிகிறது. "வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலை காலமொடு தோன்றும்". இங்கு "வினை" எனப்படுவது எவ்வாறு கருக்கொள்ளப்படுகிறது என்பது முக்கியமாகும்.

இத்தகைய பிரச்சினைகளை ஆராய்ந்த அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளை நாம் மீளநோக்குதல் அவசியமாகும். பி.எஸ்.சுப்பிரமணிய சாஸ்திரிகள், தெ.பொ.மீ, மு.இராகவையங்கார் போன்றவர்கள் மிக முக்கியமானவர்கள். தொல்காப்பியப் பயிற்றலை நாம் இன்று இந்த முறையில் செய்கின்றோமா என்பது இன்னொரு கேள்வி. இக்கட்டத்தில் இன்னொன்றையும் கூறவேண்டும். தொல்காப்பியம் போன்ற நூல்கள் பற்றிய ஆய்வு தமிழாய்வில் பாண்டித்தியம் பெற்ற பிறநாட்டறிஞர்கள் பலரின் கருத்துக்கள் நமது உயர்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதாகவே தெரியவில்லை. இங்கிருக்கின்ற ஆய்வுச் செல்நெறி பற்றிய பூரணமான ஒரு பார்வை அந்த அறிஞர்களுக்கும் அதிகம் இல்லை. இந்த இடைவெளியை நிரப்ப வேண்டியது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களின் கடமையாகும்.

எம்மிடையே உள்ள மொழியியல் அறிஞர்களின் பணிகள் காரணமாக தொல்காப்பியம் போன்ற நூல்களின் முக்கியத்துவம் இப்பொழுது பெரிதும் உணரப்பட்டு வருகின்றது. இச்செல்நெறி மேலும் வளர வேண்டும்.

# தொல்காப்பியப் பொருளதிகாரம் காட்டும் மொழிப்பொருண்மை அமைப்பு

க. பாலசுப்பிரமணியன்

## 1. முன்னுரை

தொல்காப்பியம் முதற் பழந்தமிழ் இலக்கண நூல். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களில் பழந்தமிழ் இலக்கணத்தை ஆராய்கிறது. அவற்றுள் எழுத்ததிகாரம் மொழி என்னும் கட்டமைப்பின் முதல் அடிப்படை அலகாகிய (basic unit) எழுத்தின் தொகை, வகை (உயிர், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம்), வருகை (முதல், ஈறு, இடை, மயக்கம்) ஒலிப்பு (பிறப்பு), புணர்ச்சி இவற்றின் மூலம் மொழியமைப்பை விளக்குகிறது. எழுத்து பொருளற்ற அலகு. எழுத்து தனித்தோ தொடர்ந்தோ பொருள் தரும் அலகாகிய சொல்லை அடிப்படையாகக் கொண்டு மொழியமைப்பை விளக்குகிறது சொல்லதிகாரம். அன், அள், அர், அது, ஐ, ஒடு, கு போன்ற தனியாய் வராத கட்டுருபன்களும் (bound morphemes), மகனை, மகனொடு, மகற்கு, வந்தான், வருவான், வரும், வர, வந்த, வந்து, வருபு போன்ற உருபன்களின் சேர்க்கையால் பொருள் தரும் பெயர். வினைகளும் இவை இணைந்து வினைமுதல், செயப்படுபொருள், கருவி, வினைசெய்யிடம், காலம் போன்ற பொருள்களில் பெயர்களும் வினைகளும் தொடர்ந்து அமையும் வாக்கிய அமைப்பும். வேற்றுமையேற்ற பெயர், எண், பால், இடம், காலம் காட்டும் வினை ஆகியவற்றின் பகுதியாய் அவற்றை உருவாக்கவும் அவற்றுடன் இணைந்து பொருள் வேறுபடுத்தவும் பயன்படும் இடை, உரிச்சொற்களும் இருசொல் இணைந்து ஒரு சொல்லாய்ச் செயல்படும் தொகைகளும் மற்றும் வாக்கிய அமைப்பின் பல்வேறு கூறுகளும் இவ்வதிகாரத்தில் ஆராயப்படுகின்றன.

எழுத்ததிகாரச் சொல்லதிகார நூற்பாக்கள் கூறும் கருத்துக்களை விளக்குவதில் உரையாசிரியர். இன்றைய ஆய்வாளரிடையே சில கருத்து வேறுபாடுகள் இருப்பினும் அவை பேசும் செய்திகளின் அடிப்படைத் தன்மை என்ன என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஏனெனில் இலக்கணமரபு முழுவதிலும் பழைய உரோம கிரேக்கூ வடமொழி மரபு. இடைக்கால, தற்கால மேனாட்டு இலக்கண மரபு. இன்றைய உலக வளர்ந்து வரும் மொழியியல் மரபு அனைத்தும் இலக்கணம். grammar வியாகரணம் என்ற பெயர்களில் பல்வேறு வகையாக பல்வேறு மொழிக் கொள்கை அடிப்படையில் ஆராயும் செய்திகளே இவ்விரு அதிகாரங்க களில் தொல்காப்பியரால் ஆராயப்படுகின்றன. இன்றைய ஆய்வாளரிடையே இவ்வதிகாரங்களின் கொள்கை அடிப்படை (theoretical basis) கருத்து இலக்கண விளக்க முறை (descriptive lechnique) என்ன என்பதில் வேறுபாடு இருப்பினும்

இவ்வதிகாரங்களில் பேசப்படும் செய்தி என்ன என்பதில் பெரிய கருத்து வேறுபாடு இல்லை. தமிழின் இலக்கண அமைப்பைப் பேசுவனவாகவே கருதுகின்றனர். ஆனால் மூன்றாவதாகிய பொருளதிகாரத்தை ஆராயும் இன்றைய நம் நாட்டு, மேனாட்டு ஆய்வாளரிடையே அது பேசும் செய்திபற்றி மிகப்பெரிய அளவில் கருத்து வேறுபாடு உள்ளது. அதற்குக் காரணம் பொருளதிகாரம் பேசும் செய்திகள் தொல்காப்பியர் தவிர்த்த பண்டைய, இன்றைய மொழி ஆய்வாளரால் மொழியமைப்பிற்குரியனவாக ஆராயப்படாததே. அகமும், புறமும், கற்பும், களவும் மெய்ப்பாடுமாய் ஆராயப்படுவன பழந்தமிழர்தம் வாழ்வியற் செய்திகள், பொருளதிகாரம் பழந்தமிழர்தம் வாழ்வியலை ஆராயும் நூல் என்பது இன்றைய ஆய்வாளரில் ஒரு சாரார் கருத்து (Varadaraja lyer, 1987, XIl, வெள்ளைவாரணன், 1978, சிவலிங்கனார் 1994), பொருளதிகாரம் இலக்கிய இலக்கணம் கூறும் நூல் அகமும் புறமுமாய் அமைவது பழந்தமிழ் இலக்கியத்தின் பாடுபொருள் இலக்கியத்தில் வெளிப்படும் மெய்ப்பாடு அல்லது ரசங்கள். அவ்விலக்கி யத்திற்கு அழகூட்டும் அணியாகிய உவமை. அவ்விலக்கியத்தின் அமைப்பு (செய்யுளியல்). அவ்விலக்கிய மரபு இவற்றை ஆராய்வதே பொருளதிகாரம் என்பது பெரும்பாலான இன்றைய தமிழக - மேனாட்டு ஆய்வாளர்களின் முடிந்த முடிபு(ஒ.நோ. சுவலபில் 1974 பெரியகருப்பன். 1975, 1979, அகத்தியலிங்கம், 1998, Viii-x)

இம்முடிவுகளுக்குக் காரணம் தொல்காப்பிய ஆய்வின் அணுகுமுறைகளில் உள்ள குறைபாடுகளே. தொல்காப்பிய ஆய்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை என் "தொல்காப்பிய ஆய்வின் அணுகுமுறை" (பாலசுப்பிரமணியன், 2007) என்ற கட்டுரையில் விளக்கியுள்ளேன். அது இங்கு சுருக்கமாக விளக்கப்படும்.

## 2. தொல்காப்பிய ஆய்வின் அணுகுமுறை

2000 ஆண்டுகட்கு முற்பட்ட ஓர் அறிவியல் நூலை ஆராயும் பொழுது அவ்வறிவியலின் இன்றைய கொள்கைகள், போக்குகளின் அடிப்படையில் ஆராய்வது அறிவியல் வரலாற்றுக் (history of science) கண்ணோட்டத்திற்கு மாறானதாகும் (ராபின்ஸ்: 1967-2-4). தொல்காப்பியம் மொழியமைப்பைப் பேசும் நூல். எனவே தொல்காப்பியர் பேசுவன அனைத்தும் மொழியமைப்பிற்குரியனவாகவே கொள்ளப்பட்டு மொழியமைப்பில் அது எப்பகுதிக்குரியது இன்றைய மொழியியல் கண்ணோட்டத்தில் அது கவனிக்காமல் விடப்பட்ட (averlooked) ஒரு மொழியமைப்பின் பகுதியை ஆராய்வதா என்று ஆராய வேண்டும். இக்கண்ணோட்டத்தில் பொருளதிகாரம் பேசுவது பழந்தமிழ் மொழிப்பொருண்மையமைப்பே வாழ்வியல் செய்திகளோ, இலக்கியக் கோட்பாடோ அல்ல இலக்கியப் பொருண்மையும் (contents of literature) ஆராயப்படுவது வழக்கும் (பேச்சும்) செய்யுளுமாகிய இருவகைக் களங்களில் பயன்பட்ட பழந்தமிழே தொல்காப்பியருக்குத் தரவாய் அமைந்தது என்பதனாலேயே பொருளதிகாரத்தில்

செய்யுளியல் மட்டுமே செய்யுள் அல்லது இலக்கியக் கோட்பாட்டை முற்றிலுமாக ஆராய்வது என்ற கருதுகோளை (hypothesis) என்னுடைய ஆய்வுக்கட்டுரைகளில் சொற்பொழிவுகளில் வெளியிட்டேன் (நோ. பாலசுப்பிர மணியன், 1998,1999,2001 (அ) 2001 (ஆ) இது பின்னர் விரிவாக விளக்கப்படும்.

இதுவரை நடைபெற்ற தொல்காப்பிய ஆய்வுகள் இன்னொரு வகையிலும் குறைபாடுடையவை. "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி" (சி.பா. 4.5) எனப் பனம்பாரனாரால் சிறப்புப் பாயிரத்தில் விளக்கப்பட்டு மூன்று அதிகாரங்களால் எழுதப்பட்ட தொல்காப்பியத்தை மொழியை ஆராயும் முற்று நூலாக நோக்காமல் எழுத்தும் சொல்லும் மொழியமைப்பை ஆராய்வதாகவும் பொருளதிகாரம் இலக்கிய இலக்கணம் பேசுவதாகவும் கருதுவது பிளவுபட்ட அணுகுமுறை. அவ்வாறன்றி மூன்றதிகாரங்களும் மொழியமைப்பைப் பேசுவனவே என ஆராயும் ஒருங்கிணைந்த அணுகு முறையே தொல்காப்பியர் கூறும் செய்திகளை அவர் கருதியவாறு உணர்ந்து கொள்ள உதவும். பொருளதிகாரத்தைப் பிரித்து நோக்கும் பிளவுபட்ட அணுகுமுறையின் உச்சக்கட்டமாக எழுத்ததி காரமும் சொல்லதிகாரமும் தொல்காப்பியரால் செய்யப்பட்டவை பொருளதிகாரம் ஒரு பிற்கால ஆசிரியரால் இயற்றப்பட்டுப் பின்னால் இணைக்கப்பட்டது என்ற கருத்தும் உருவாயிற்று (ஒ.நோ. செல்வ நாயகம், 1969, சுவலபில், 1974) ஒருங்கிணைந்த அணுகுமுறையில் தொல்காப்பியத்தை முற்றுநூலாகக் கொண்டு ஆராய்ந்தால் பொருளதிகாரச் செய்திகள் வழக்கும் செய்யுளுமாய் அமைந்த பழந்தமிழ் அமைப்பின் பொருள் அமைப்பே அகமும் புறமுமாய்ப் பேசப்படும் செய்திகள் உலக வழக்கின் நிகழ்பொருளாயும் செய்யுளின் பாடுபொருளாயும் அமைவது மேற்கூறியது போல அவை தமிழின் பயன்பாட்டும் களங்கள் என்பதாலேயே என்பது தெளிவாகும்.

மேலும் ஓர் அறிவியல் நூலின் செய்திகள் அகநோக்கில் அதாவது அந்நூலில் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையிலேயே ஆராயப்பட வேண்டும். பிற மரபுகளின் அடிப்படையில் அந்நூற் செய்திகளை ஆராய்வது புறநோக்காகும். இதுவரை செய்யப்பட்ட பொருளதிகார ஆய்வுகள் புறநோக்கில், வடமொழி மரபு, மேனாட்டு மரபுகளின் அடிப்படையில் ஆராயப்பட்டவை. அதனாலேயே புற பொருளதிகாரம் பல்வகைச் செய்திகளைப் பேசுவதாக ஆராயப்பட்டது. அகநோக்கு பொருளதிகாரச் செய்திகளுக்கு முதன்மை அளித்து நோக்கில் பல்வேறு துறைகளுக்கு உரியனபோலத் தோன்றும் செய்திகள் பொருண்மை அமைப்பிற்குரியனவே என்பதைக் காட்டும்.

பொருளதிகார அமைப்புத் தருக்க முறையும் அதாவது இயல் பகுப்பு, இயல்களின் வரிசை அமைப்பு அவற்றிடையே உள்ள பொருள் தொடர்பு ஆகியவையும் பொருளதிகாரம் பேசும் செய்திகளைப் புரிந்து கொள்ள இன்றியமையாததாகும். இவ்வணுகுமுறைகளின்

அடிப்படையில் தொல்காப்பியம் பேசுவது மொழிப் பொருண்மையே. இலக்கியக் கோட்பாடோ வாழ்வியல் செய்திகளோ அல்ல என்பது இக்கட்டுரையில் விரிவாக விளக்கப்படும். முன்னதாக மொழிப்பொருண்மை (linguistic meaning) என்பது என்ன, அதன் பரிமாணங்கள் என்ன என்று புரிந்து கொள்வது பொருளதிகாரச் செய்திகளைப் புரிந்து கொள்ளத் துணை புரியும்.

## 3.பொருண்மையியல் ஆய்வு வேறுபாடுகள்

மொழியியலார் மொழி இருவகையான ஒழுங்கமைவுகளை உடையது ஒன்று வடிவொழுங்கமைவு (expression system) இன்னொன்று பொருள் ஒழுங்கமைவு (content system) என்றும் மொழியின் இலக்கணம் இவ்விரு ஒழுங்கமைவுகளுக்கும் உள்ள உறவை விளக்குவது என்றும் கூறுவர் (Gleason; 1955: 26). வடிவொழுங்கமைவு அல்லது வடிவமைப்பிற்கு உரிய செய்திகள் ஒலியன் அல்லது எழுத்தின் அமைப்பு (phonology), உருபன் அல்லது சொல்லமைப்பு (morphology) தொடர் அல்லது வாக்கிய அமைப்பு (syntax) ஆகிய உட்பகுதிகளைக் கொண்டது. இவற்றுள் சொல்லமைப்பு, தொடரமைப்பை வேறுபடுத்தியோ அல்லது ஒன்றாகவோ மொழியியலார் ஆராய்வர். தொல்காப்பியர் ஒலியமைப்பை எழுத்ததிகாரத்திலும் உருபன், தொடரமைப்பை இணைத்துத் தொடரியல் அடிப்படையில் ஒன்றாகச் சொல்லதிகாரத்திலும் விளக்கி விடுகிறார் என்பதை மேலே (1) கண்டோம். இனிப் பொருளமைப்புப் பற்றிப் பேசும் பகுதியை மொழியியலார் பொருண்மை இயலில் (semantics) ஆய்வர். ஆனால் இப்பொருண்மை இயலில் ஆராயப்படும் செய்திகள் என்னென்ன? அதன் அமைப்பு என்ன என்பதில் மொழி யியலாரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. அவற்றை ஆராயுமுன் மொழிப் பொருண்மை (Iinguistic meaning) என்பது என்ன என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

பொருண்மையியல் மொழியின் வடிவமைப்பையும் அது குறிக்கும் பரந்துபட்ட பல்வேறு கூறுகளுடைய பேசுவோரின் மனம், சூழல், சமூகம் போன்ற பல்வேறு தாக்கங்களுக்கு உட்பட்ட உலகப் பொருண்மையையும் இணைக்கும் மொழி அமைப்பின் பகுதியாகும். அது கருத்துப் பரிமாற்றம் (Communication). மனித மனத்தின் எண்ண ஓட்டம், உணர்வு, கருத்துருவாக்கம் இவற்றோடு தொடர்புடையது. ஒரு மொழி பேசுவோர் அம்மொழி மூலம் அவர் வாழும் உலகை வகைப்படுத்தி உணர்கின்றனர்.

மொழியின் வடிவமைப்புக் கூறுகள் அனைத்தும எழுத்து, உருபன், சொல், தொடர் ஆகியவை அடையாளக் குறியீடுகளே (symbols) அவை குறிப்பவை உலகப் பொருள்கள் (reality). இங்கே பொருள் என்பது பொருள்களை (things, objects) மட்டுமன்றிச் செயல்கள், உணர்வுகள், சமுதாய அமைப்பு, நம்பிக்கைகள், உறவுகள், கருத்துக்கள்

போன்ற மொழி என்ற குறியீட்டு அமைப்பு (Symboic system) குறிப்பிடும் அனைத்தையும் குறிக்கும். மொழிகளின் எழுத்துக்கள், உருபன்கள், சொல்லமைப்பு, தொடரமைப்பு போன்றவை பெருமளவில் வேறுபடு பவை. உலகப் பொருள்களிலும் மணமுறைகள், இறைக்கோட்பாடு, தொன்மங்கள், கால இடச் சூழல் வேறுபாடு (சிற்சில விலங்குகள், பருவநிலைகள், தாவரங்கள்) இவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பினும் மற்ற அனைத்துப் பொருள்களும் மானிட இனத்திற்குப் பொதுவானவை. ஆனால் ஒவ்வொரு மொழியும் உலகப் பொருண்மையை மொழிப் பொருண்மையாகக் காணும் பொழுது வெவ்வேறு அமைப்புடையதாகக் காண்கிறது. அடிப்படையான உடலுறுப்புகள், உறவு முறைகள், வண்ணங்கள் போன்றவை கூட மொழிக்கு மொழி மாறுபட்ட அமை வொழுங்குகளைப் பெற்றுள்ளன. லீச் (1981: 28) மொழிகள் அனுபவங்களை வகைப்படுத்துவதில் வேறுபடுகின்றன என்று கூறி அதற்கு எடுத்துக்காட்டாக வண்ணச் சொற்களால் விளக்கப்படும் வண்ண அமைப்பு ஹனுனு என்ற பிலிப்பைன் மொழியில் நான்கே சொற்களால் விளக்கப்பட்டு விடுகின்றது என்று கூறுகிறார். மொழிக்கு மொழி மட்டுமின்றி ஒரே மொழியிலும் கூடப் பொருண்மை அமைப்பு காலத் திற்குக் காலம் வேறுபடுவதைத் தமிழ் வண்ணச்சொற்கள் மூலம் அறியலாம். பழந்தமிழில் வெண்மை, கருமை / நீலம், செம்மை, பசுமை என்ற நான்கு சொற்களே வழங்கின. பசுமையின் பொருளில் மஞ்சள் அடங்கியிருந்தது என்பதைப் “பைங்காற் பித்திகம் (நெடுநல், 40) “பசும்பொன்“ (பெரும், 164) “பைங்காற் கொக்கு“ (நெடுநல். 15) ஆகிய தொடர்கள் காட்டும். கருப்பும், நீலமும் முற்றிலும் பிரித்துணரப் படாமல் உறழ்ந்து வந்தன. “நெறி மருப்பு எருமை நீல விரும் போத்து“ (ஐங். 91:1) “இருங்கடல்“ (புறம். 201-17) போன்ற தொடர்கள் இதனைக் காட்டும். இன்றைய தமிழில் நீலம், மஞ்சள் ஆகியவை பிரிக்கப்பட்டு தனி வண்ணச் சொற்களாகப் பயன்படுகின்றன. இவ்வாறே காதல் ஒழுக்கம் மிக உயர்வாகப் புலவரால் பாடப்பெற்ற பழந்தமிழ்க் காலத்திலும் அது “களவாக” பெற்றோர்க்குத் தெரியாமல் மறைத்துச் செய்யப்படுவதா கவே இருந்தது. ஆனால் மேனாட்டில் வயது வந்த பெண்கள் ஆண்களுடன் வெளியில் செல்வது (dating) பெற்றோருக்குத் தெரிந்தே நிகழ்வதும் தன் பெண் ஆண்களுடன் பழகாமல் தனித்து இருந்தால் இவளுக்குத் திருமணம் எவ்வாறு நிகழுமோ? எனத் தாய் கவலைப்படுவதும் மேனாட்டுப் பொருண்மை அமைப்பு, களவு, டேட்டிங் (dating) ஆகிய இரண்டும் ஒத்த நிகழ்வுகளாயினும் பொருண்மை நிலையில் வேறுபட்டவை.

உலகம் முழுவதும் மானிட இனத்திற்கு உறவு முறைகள் வேறுபடுவதில்லை. ஆனால் பண்பாட்டிற்குப் பண்பாடு அவை வேறுபட்டு அவ்வேறுபாடு மொழியில் பிரதிபலிக்கின்றது. ஒருவரது பெற்றோருடைய உடன் பிறந்தவர்களின் குழந்தைகள் ஆணாயினும் பெண்ணாயினும் தாயுடன் பிறந்தவர்க்குப் பிறந்தவராயினும் தந்தையுடன் பிறந்தவர்க்குப் பிறந்தவராயினும் அவர் வயதில் சிறியவராயினும் பெரியவராயினும்

ஆங்கிலத்தில் cousin என்றே அழைக்கப்படுவார்கள். இச்சொல்லுக்கு இணையாகத் தமிழில் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, அத்தான் / மச்சான். அத்தாச்சி / மச்சினி என்ற ஆறு சொற்கள் உள்ளன. இவை பெற்றோரின் உடன் பிறந்தவர். தாயுடன் பிறந்த ஆணா, பெண்ணா? தந்தையுடன் பிறந்த ஆணா, பெண்ணா? வயதில் பெரியவரா, சிறியவரா என்ற அடிப்படைகளில் வேறுபடுகின்றன. பண்பாட்டு வேறுபாடு மொழி அமைப்பு வேறுபாடாக அமைகிறது. இவ்வாறே ஆண், பெண் அல்லது தலைவன், தலைவி இருவர் வாழ்வில் நிகழ்பவை அனைத்தையும் அகம் என்பதும் அவை தவிர்த்த எல்லா மக்களிடையேயும் நிகழும் நிகழ்வுகள் அனைத்தையும் புறம் எனக் கொண்டதும் தமிழர் வாழ்வியல் வேறுபாடு மொழியில் சொற்பொருள் life "தன் வாழ்க்கை" public life "பொது வாழ்க்கை" என்ற தொடர்கள் இருப்பினும் அவை தமிழில் போலச் சிறப்புக் கருத்துருவாக்கம் பெற்றுத் தனிச்சொற்களால் குறிக்கப்பெற்று இலக்கியத்தின் இருபெரும் பிரிவாக உருவெடுக்கவில்லை. இவையனைத்தும் பண்பாட்டு, வாழ்வியல் கூறுகள் மொழிப் பொருண்மைக் கூறுகளாக மாறிப் பொருண்மைக் கருத்துருவாக்கம் பெறுவதாகும். இவை மொழியியலாரால் பொருண்மையியலில் ஆராயப்படுபவை.

இவ்வாறு ஒவ்வொரு மொழியும் உலகப் பொருண்மையை வெவ்வேறு அமைவொழுங்கிற்கு உட்படுத்தி உருபன்கள், சொற்கள், தொடர்கள் மூலம் விளக்குவதே அம்மொழிகளின் பொருண்மை அமைப்பாகும்.

மொழிப்பொருண்மையியலாரிடை அவர்கள் ஆயும் முறைகளிலும் ஆயும் கூறுகளிலும் வேறுபாடுகள் உள்ளன. எனவே தான் லீச் (Leech: 1981: IX, X) "பொருண்மையியல் பெரும்பாலும் திணறடிப்பதாகத் (baffling) தோன்றியிருக்கிறது ஏனெனில் அது பல அணுகுமுறைகளைக் கொண்டிருக்கிறது இவ்வெவ்வேறு அணுகுமுறைகள் எவ்வாறு தொடர் புடையன என்பதும் பொருண்மை பற்றி எழுதும் நூலாசிரியர்க்கே தெளிவாக இல்லை... இந்தக் காரணங்களாலும் பொருண்மையியல் ஆர்வத்தைத் தூண்டும் இயல்புடையது என்பதாலும் இது பல நூல்கள் உருவாவதற்கும் இடம் கொடுத்துள்ளது. பொருண் மையியல் (semantics) என்ற தலைப்பில் பல நூல்கள் வந்துள்ளன... ஒவ்வொரு புதிய புத்தகமும் அதன் ஆசிரியரின் புதிய விளக்கங்கள் கொடுக்க முயலும் ஒரு தனி முயற்சியாகும். இம்முயற்சிகள் இல்லாவிடில் பொருண்மையியல் அதன் தொடக்க கால இருட்டுக்கே போய் விடும் அபாயம் உள்ளது" என்று கூறுகிறார். இக்கருத்து பொருண் மையியலின் ஆழத்தையும் பரப்பையும் ஆய்வுச் சிக்கல்களையும் காட்டுவதுடன் இதுவரை மொழியியலாரால் ஆராய்ந்து கூறப்பட்டவை மட்டுமே பொருண்மைக் கூறுகள் அல்ல இன்னும் ஆராயப்பட வேண்டிய கூறுகள் உள்ளன என்பதைக் காட்டுகிறது. மொழியியலில் பொருண்மையியல் வளர்ந்து வரும் துறையே இன்னும் அதன் உச்சியை எட்டவில்லை என்னும் பின்புலத்தில் தொல்காப்பியம் கூறும் பொருண்மையியல் செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படும்.

## 4. பொருண்மை அமைப்பின் வேறுபாடுகள்

உலகப் பொருண்மை மொழிப் பொருண்மையாக உருப்பெற்று. மொழிக்கு மொழி வேறுபட்டு உருபன்கள் (morphemes), சொற்கள், தொடர் அமைப்புகள் போன்றவற்றால் குறிக்கப்படுவதைக் கருத்துருவாக்கம் (conceptualization) என லீச் (leech - 1981:25) குறிப்பிடுகின்றார்.

ஒன்று, பல என்ற வேறுபாடு (ஒருமை, பன்மை) அல்லது சில மொழிகளில் ஒன்று, இரண்டு, பல (ஒருமை, இருமை, பன்மை) என்பன விகுதிகளின் சேர்க்கையால் அல்லது அவற்றின் இன்மையால் குறிக்கப்படுவதும் ஆன், ஆள், ஆர், அது, அ போன்ற விகுதிகள் எண், பால்காட்டுவதும் ஐ, ஆல், ஒடு போன்ற வேற்றுமை உருபுகளில் சேர்க்கையால் பெயர் சுட்டும் பொருள்கள் செயப்படு பொருள், கருவி, உடனிகழ்ச்சி போன்ற செயற் பொருண்மைகளைத் (functional meaningi) தருவதும் ஆங்கிலத்தில் வினைக்குமுன் வரும் பெயர் எழுவாயையும் வினையை அடுத்து வரும் பெயர் செயப்படு பொருளையும் குறிக்கும் (எ-டு The cat killed the rat) படிச்சட்டமும் (pattern) பொருண்மையே. இது இலக்கணப் பொருண்மை (grammatical meaning) எனப்படும் (ஒ.நோ. Lyons 1968, Ch.9), மரம், செடி, கொடி, அன்பு, அறிவு, ஓடு, பாடு, நல்ல, கெட்ட போன்ற சொற்கள் பல்வகை உலகப் பொருள்கள், குணங்கள், செயல்கள், கருத்துக்கள் ஆகியவற்றைக் குறிப்பதும் பொருண்மையே இச்சொற்களுக்கிடையே உள்ள ஒரு பொருண்மை (synoynymy) (எ-டு ஆனந்தம், மகிழ்ச்சி) பொருள் ஒவ்வாமை (incompatibility), (எ-டு சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, கருப்பு, வெள்ளை) போன்ற பொருள் உறவுகளும் பொருண்மையே. இவை சொற்பொருண்மை (lexical meaning) அல்லது அகராதிப் பொருண்மை என்ற தலைப்பில் ஆராயப்படுகின்றன (Lyons, 1977, Cruse, 1986), சொற்கள் இணைந்து வழங்கும் வாக்கியங்களின் பொருண்மை (sentential meaning) வாக்கியங்களுக்கிடையே உள்ள பொருள் ஒற்றுமை (paraphrase). பொருள் உள்ளடக்கம் (entailment), முன் எதிர்பார்ப்பு (presupposition) போன்ற உறவுகளின் ஆய்வும் பொருண்மை அமைப்புக்குரியதே.

உலகப்பொருண்மை அல்லது வாழ்வியற் செய்திகள் மொழிப் பொருண்மையாகக் கருத்துருவாக்கம் பெறுவனவற்றுள் மொழியியலாரால் ஆராயப்படுவன மேற்கூறிய உருபு, சொல், தொடர் (phrase). வாக்கியம் போன்ற வடிவமைப்புக் கூறுகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. ஆனால் பொருண்மைக் கருத்துருவாக்கம் முழுவதும் இலக்கணப் பொருண்மை, சொற்பொருண்மை, வாக்கியப் பொருண்மை என்ற மூன்றனுள் அடங்கிவிடவில்லை. மொழியியலாரின் மேற்கூறிய பொருண்மை வகைப்பாடு உருபு, சொல், தொடர், வாக்கியம் என்ற வடிவமைப்புக் கூறுகளின் (formal

categories) அடிப்படையில் அமைந்தது. சொல், தொடர், வாக்கியம், வாக்கியக் கோவை போன்ற வடிவமைப்புக் கூறுகளைப் பயன்படுத்தி ஆனால் அவற்றில் கட்டுப் படாத மொழிக் கருத்துருவாக்க நிலை ஒன்றுள்ளது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகம், புறம், முல்லை, குறிஞ்சி, வெட்சி, வஞ்சி, களவு, கற்பு, புணர்தல், பிரிதல் போன்ற தனிச்சொற்களாலும் அறத்தொடு நிற்றல் (தொ.பொ. 203:1), படையியங்கு அரவம் (தொ.பொ. 61.1), பாக்கத்து விரிச்சி (தொ.பொ.61.1), மெய் தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல் (தொ.பொ.91.1) போன்ற தொடர்களாலும் “பின்வா என்றல்" (தொ. பொ. 112.10), “மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தல்" (தொ.பொ. 109.12இ13), “கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை இரு நிலந் தீண்டா அருநிலை" (தொ.பொ.71.1-3) போன்ற வாக்கிய அமைப்புகளாலும் விளக்கும் கருத்துருவாக்கம் அது. இக்கருத்துருவாக்கத்தின் அடிப்படையிலான மொழிப் பொருண்மை அமைப்பு நான் அறிந்தவரை இதுவரை மொழியியலாளரால் ஆராய்ந்து வரையறுக்கப்படவில்லை. தொல்காப்பியப் பொருளதி காரத்தில் அகத்திணையியல் முதல் மெய்ப்பாட்டியல் வரையிலான ஆறு இயல்களில் ஆராயப்படுவது இப்பொருண்மை அமைப்பே. உவமவியல் பேசுவது அக்கருத்துருவாக்கத்திற்குப் பயன்படும் மொழிக்கருவியே இப்பொருண்மை அமைப்பினைச் சேர்ந்ததே.

புதிதாக்கம் (creativity) மொழியின் சிறப்பியல்புகளில் ஒன்று. மொழியைப் பயன்படுத்துவது என்பது இதுவரை கேட்ட சொற்கள், தொடர் அமைப்புகளைக் கிளிப்பிள்ளை போல நினைவில் இருந்து திரும்பக் கொண்டுவந்து பயன்படுத்துவது அல்ல. இதுவரை எதிர் கொள்ளாத மொழிச் சூழல்களுக்கு ஏற்ப தெரிந்த சொற்கள், இலக்கணக் கூறுகள். தொடர் அமைப்புகளைப் பயன்படுத்தி எண்ணற்ற புதிய தொடர்கள், வாக்கியங்களை உருவாக்குதல். இப்புதிதாக்கத்திற்கு வடிவமைப்பில் சில இலக்கணக்கூறுகள் பயன்படுகின்றன. உவமை மேற்காட்டப் பெற்ற பொருளமைப்பில் பயன்படும் புதிதாக்கக் கருவி.

எனவே தொல்காப்பியம் பழந்தமிழின் வழக்கு, செய்யுள் ஆகிய இரு பயன்பாட்டுக் களங்களுக்கு உரிய பொருண்மையின் மேல்காட்டிய கருத்துருவாக்கப் படிவங்கள். அமைப்புகளையே பொருளதிகாரத்தில் ஆராய்கின்றது. இப்பல்வகைப் பொருண்மை அமைப்புகளை இலக்கணப் பொருண்மை, சொற்பொருண்மை இவற்றிலிருந்து வேறு பட்ட மொழிப் பொருண்மையையும் உட்கொண்ட தொல்காப்பியரின் பொருண்மைக் கோட்பாடு என்ன? அது அவர் இலக்கணக் கோட்பாட்டில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது என்பது பின்னர் (7) ஆராயப்படும்.

## 5.அமைப்புத் தருக்க முறை

பொருளதிகார இயல்கள் பேசும் செய்திகளின் அமைப்புத் தருக்க முறை அடிப்படையில் பார்க்கும்பொழுதும் அது பல்வேறு செய்திகளைப் பேசுவதாகக் கொள்வது பொருத்தமற்றது பொருண்மை அமைப்பின் பல்வகைக் கூறுகளையே பொருளதிகாரம் பேசுகிறது என்பது புலனாகும்.

பொருளதிகாரம் இலக்கியக் கோட்பாடு பேசும் நூலாயின் அது இலக்கியத்தின் அமைப்பு, இலக்கிய வகைகள், இலக்கியத்தின் வடிவக் கூறுகள், இலக்கிய உத்திகள், இலக்கியத்தின் பாடுபொருள் (theme) என்ற வரிசையில் செய்திகளைக் கூற வேண்டும். அகத்திணையியல் புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற ஐந்து இயல்களில் பாடுபொருள் பற்றிப் பேசி மெய்ப்பாட்டியலில் ரசக்கோட்பாட்டுடன் ஒப்பிடத்தக்க எண்வகை மெய்ப்பாடுகளையும் வேறு பல செய்திகளையும் கூறி பின் அணியியல் எனப்படத்தக்க உவமவியல் பேசி அதை அடுத்துச் செய்யுளியலில் செய்யுள் அல்லது ஆக்கப்பட்ட மொழிவகையின் (composition) உறுப்புகளாக, வடிவமைப்பு, பொருளமைப்புக் கூறுகள், செய்யுள் வகைகள் அனைத்தையும் பேசி பின் இவற்றோடு எவ்வகையிலும் தொடர்பற்றது போலக் காணப்படும் மரபியல் பேசுவது இலக்கியவியல் ஆய்வுக்கு எவ்வகையிலும் பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. பொருளதிகாரத்தை இலக்கியவியல் பேசுவது எனக்கூறும் ஆய்வு எவ்வகையிலும் பொருள் தொடர்பு அற்ற ஒரு முறையைப் பின்பற்றித் தொல்காப்பியர் நூல் செய்தார் என்று கொள்ள வைக்கிறது. ஆனால் பொருளதிகாரம் ஆராய்வது பொருண்மையியல் செய்திகளே எனக்கொண்டு நோக்கும்போது பொருளதிகார இயல் அமைப்பு பொருத்தமுடையதாகவும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தாகவும் அமைகிறது. அது பின்வருமாறு அமையும்.

அகத்திணையியல் முதல் பொருளியல் வரையிலான ஐந்து இயல்கள் வழக்கிற்கும் செய்யுளுக்கும் உரிய கருத்துப் பொருண்மையின் ஒழுங்கமைவை (System) விளக்குகின்றன. இவற்றுள்ளும் அகத்திணையியல், பொருளியல் ஒருவகை அமைப்பு முறையையும் களவியல், கற்பியல் இன்னொரு வகை அமைப்பையும் கொண்டுள்ளன. அகத்திணையியல் அகப்பொருட் செய்திகளைப் பகுப்பாய்வு செய்து. அவை பாடலுள் பயின்று வழங்கும் முறையையும் உட்கொண்டு (தொ பொ.3), திணை, முதல், கரு, உரி போன்ற அகப்பொருண்மையின் கருத்து வகைகள் (conceptual categories) தலைவன், தலைவி, தோழி, நற்றாய், கண்டோர் போன்ற பொருண்மை நிகழ்த்துவதற்குரிய மாந்தர் அவர்க்குரிய மொழி நிகழ்வுச் சூழல் அல்லது சுற்றுச்சூழல் வகைகள் அவர்கள் செயல்பாட்டில் உள்ள வரையறை அல்லது கட்டுப்பாடுகள் (எ-டு "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" தொ.பொ.37) இப்பொருண்மை வகைப்பாட்டை உணர்வதற்குத் துணைபுரியும் மொழிக் கருவியாகிய உவமை அதன் வகைகள் போன்ற செய்திகளைப்

பேசுகிறது. இவையனைத்தும் அகப்பொருள் கொள்கையாக்கத்திற்கு (theorization) உரியவை. பொருளியலும் இவ்வாறே களவியல், கற்பியலையும் உட்கொண்டு கொள்கையாக்கம், கொள்கை வரையறைக் கூறுகளைச் சொல்கிறது.

ஆனால் களவியல், கற்பியல் வேறுபட்ட அமைப்பைக் கொண்டவை. தலைவன், தலைவி இருவர் அகவாழ்வில் களவு, கற்பு ஆகிய திருமணத்திற்கு முந்திய திருமணத்திற்குப் பிந்திய இரு காலப் பகுதிகளின் நிகழ்வுகள் அவற்றின் வரைவிலக்கணம், நிகழ் வரிசை (sequence), நிகழ் சூழல் (conditions), நிகழ்காலம் (இரவுக்குறி, பகற்குறி) நிகழிடம் (மனையகம், சிறைப்புறம்), மற்ற இவற்றுடன் தொடர்புடைய செய்திகள் கருத்துக் கூறுகளாக (உழஉெநிவரயட ரமைவைள) வரிசைப்படுத்திக் கூறப்படுகின்றன. இவ்விரு இயல்களில் பகுப்பாய்வோ, கொள்கை ஆக்கமோ இல்லை. ஆனால் அகத்திணையியலில் பகுப்பாய்வு செய்து வகுக்கப்பட்ட கருத்து வகைகளான திணை, முதல், கரு, உரி ஆகியவை இவ்விரு இயல் செய்திகளுக்கும் உரியவை.

புறத்திணையியல் வேறொரு வகை அமைப்பினை உடையது. பகுப்பாய்வு செய்ததின் அடிப்படையில் ஏழு திணை வகுக்கப்பட்டு அவற்றின் பொதுப்பொருண்மை முதலில் பேசப்பட்டு அகத்திணைகளோடு கருத்து நிலையில் ஒப்பிடப்படுகின்றன. பின் அகத்திணைப் பொருண்மையின் வகைகள் (Sub-classes), நிகழ்வு, கருத்துக் கூறுகள் துறைகளாகப் பேசப்படுகின்றன. பல்வகைப் பொருட்கூறுகள் வாகையிலும் பாடாண் திணையிலும் பேசப்படுவன தமிழ்ப் புறப்பொருண்மையின் கருத்தாக்க முறையைக் காட்டுகின்றன. பழந்தமிழின். அகமாகிய காதல் வாழ்வு தவிர்த்த புறவாழ்வின் பொருண்மைக் கூறுகள் அனைத்தும் ஏழு திணைகளுள் அடக்கப்படுவது வியக்கத்தக்கது.

மெய்ப்பாட்டியல் பேசுவது மேல் ஐந்து இயல்களில் ஆராயப்பட்ட அகப், புறப் பொருண்மையின் நிகழ்வுக் கூறுகளுக்குத் (events) தொடர்புடைய மன, உடலியல் கூறுகள் (psycho-physical aspects). இவை செய்யுள் அல்லது இலக்கியத்தின் ரசக்கோட்பாடுகள் (poetic sentiments) மட்டுமல்ல என்பது. தொல்காப்பியர் நசை முதலாகிய எட்டுவகை மெய்ப்பாடுகளை 11 நூற்பாக்களில் 22 வரிகளில் பேசி பின்னர் அவற்றிலிருந்து வேறுபட்ட "உடைமை இன்புறல்" போன்ற பலவற்றை 10 நூற்பாக்களில் 68 வரிகளில் ஆராய்வதிலிருந்து புலனாகும். உடையை, இன்புறல், நடுநிலை, அருளல் போன்ற நுண்ணுணர்வுகளும் புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல் போன்ற அகப்பொருண்மையைக் காட்டும் செய்கைகளும் நிகழ்வுகளும் இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல் போன்ற மனநிலைகளும் இவற்றுள் பேசப்படுகின்றன. நகை முதலிய எட்டும் பிறவும் அகப் புறப்பொருண்மையில் உணர்ச்சி. செய்கைக் கூறுகளே தவிர இலக்கியத்திற்கு உரியவை மாத்திரம் அல்ல. இத்தொடர்பை உரையாசிரியர்

உணர்ந்திருந்தனர் என்பதை "மேலை ஒத்துக்களுள் கூறப்படும் ஒழுகலாற்றுக்கும் "காட்டலாகாப் பொருள" (தொ.பொ.243) என்பவற்றிற்கும் எல்லாம். பொதுவாகிய மனக்குறிப்பு இவையாதலின் அவற்றை வேறு கொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோர் ஒத்தாக வைத்தமையானே எல்லாவற்றோடும் இயைபுடைத்து" என்று பேராசிரியர் கூறுவதன் மூலம் அறியலாம்.

அடுத்து உவமவியல் ஆராய்வது தொல்காப்பியர் கண்ணோட்டத் தில் இலக்கியத்திற்கு அழகு சேர்க்கும் அணி அல்ல மொழிப்பொருண்மையை உணர்த்துவதற்குப் பயன்படும் ஒரு கருவியே என்பது தொல்காப்பியர் உவமையை முதற்கண் அகத்திணையியலிலேயே அறிமுகப் படுத்தி வகை கூறி அது வருமாற்றை விளக்குவதிலிருந்தே அறியலாம்.

**உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**

**தள்ளாதாகும் திணை உணர்வகையே(தொ.பொ.49)**

**உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்**

**கொள்ளும் என்ப குறி அறிந்தோரே(தொ.பொ.50)**

**உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**

**உள்ளுறுத் துரைப்பதே உள்ளுறை உவமம்(தொ.பொ.51)**

ஏனை உவமம் தான் உணர் வகைத்தே (தொ.பொ.52) என்பன உவமம் பொருண்மை உணர்த்தும் கருவியே என்பதைப் புலப்படுத்தும். பொருளியலிலும் மூன்று நூற்பாக்களில் (283-40) உள்ளுறை பற்றிப் பேசுகிறார். மேலும் உவமவியலிலும் உவமத்தின் இயல்பு. உவமை உருபுகள் ஆகியவற்றை (தொ.பொ.272-296) பேசிய பின் உவமத்திற்குப் பொருண்மையோடு உள்ள தொடர்பைக் கூறுகின்றார்.

**உவமப்பொருளின் உற்றதுணரும்**

**தெளி மருங்குளவே திறத்தியலான(தொ.பொ.291)**

உரையாசிரியர் இதனை உணர்ந்திருந்தனர் என்பது பேராசிரியர் "மற்றிரு திணைப்பொருளும் உவமம் பற்றி வழக்கினுள் அறியப்படுதலானும். உவமம் பற்றியும் பொருள் கூறுகின்றான் என்பது" (தொ.பொ.பேரா.ப. 57) எனக் கூறுவதனால் புலனாகும். இதுவன்றித் தொடர்ந்து வரும் நூற்பாக்களும் (தொ.பொ.297-302) உவமை யார், யார் கூற்றுள் வரும் அதன்கண் எவ்வகைப் பொருள் தோன்றும் என்றெல்லாம் கூறுவது உவமை, பொருளை விளக்குவதற்குரிய கருவியே என்பதைத் தெளிவாகக் காட்டும். எனவே உவமவியலின் இடம் மொழிப் பொருண்மைக் குரியதே தவிர இலக்கியத்திற்கு

அணி செய்வதல்ல என்பது தெளிவாகும். உவமவியல் அணியிலக்கணம் பேசுவதாகக் கருதப்பட்டது. வடமொழி அலங்கார சாஸ்திரத்தின் அடிப்படையில் பின் எழுந்த தண்டியலங்காரம் மாறனலங்காரம் போன்ற நூல்களின் தாக்கம் ஆகும்.

செய்யுளியல் முற்றிலும் இலக்கியக் கோட்பாடு பற்றிப் பேசும் பகுதி. செய்யுள் என்ற சொல் இயல்பான வழக்காகிய பேச்சில் நின்றும் வேறுபட்டு எண்ணியாக்கப்படும். பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகிய அனைத்து மொழி வடிவங்களையும் குறிக்கிறது (தொ.பொ. 384). இவற்றுள் நூல் தவிர மற்றவற்றை இலக்கிய வடிவங்களாகக் கொள்ளலாம். ஆகையால் இவ்வியல் இலக்கியக்கோட்பாடு பேசும் பகுதி எனக் கொள்வது பொருத்தமாகும். மீனாட்சிசுந்தரன் (1969), பெரியகருப்பன் (1975.1979) பாலகிருட்டிணன் (1998) ஆகியோர் இதனை நன்குணர்ந்து விளக்கியுள்ளனர். தொல்காப்பியர் இவ்வியலில் கூறும் செய்திகளைப் புரிந்து கொண்டு பொருளதிகாரத்தில் இதன் இடத்தைப் புரிந்து கொள்வது மற்ற இயல்கள் பேசுவது மொழிப்பொருண்மையே என்பதைப் புரிந்து கொள்ளத் துணைபுரியும்.

தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புகளாக 34 கூறுகின்றார். இவை பிற்கால யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்கள் கூறும் மாத்திரை, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற செய்யுள் வடிவம் பேசும் உறுப்புகளும் திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள் போன்ற பொருள் பற்றிய உறுப்புகளும் வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல் போன்ற வடிவம், பொருள் என்ற இரண்டையும் பற்றிய உறுப்புகளும் ஆகும். இவற்றுள் திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், மெய்ப்பாடு ஆகியவை முன் அகத்திணையியல் முதலான ஆறு இயல்களில் விரிவாகப் பேசப்பட்டவை. மீண்டும் இங்கு செய்யுள் உறுப்புகளாகக் கூறப்பட்டுச் சுருக்கமாக இலக்கணம் கூறப்படு வது உட்கொள்ளத்தக்கது. முன் அவ்வியல்களில் பேசப்பட்ட நோக்கம் மொழிப்பொருண்மையை விளக்குவது. இங்கே பேசப்படுவது செய்யுள் என்னும் இலக்கியத்தின் முற்றமைப்பின் பகுதியாக, அதன் பாடு பொருளாக எனவே முந்தைய ஐந்தியல்கள் பேசியது இலக்கியப் பாடுபொருள் அல்ல வழக்கும் செய்யுளுமாய் அமைந்த மொழியின் பொருண்மையே என்பது வலியுறுகிறது.

அடுத்து இவை தவிர பொருள் என்ற ஒன்றைச் செய்யுள் உறுப் பாகக் கூறுவதும் அதற்குக் கூறும் இலக்கணமும் கூர்ந்து ஆராய்தற்குரியன.

**இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்**

**ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி**

இதுவாகு இத்திணைக்கு உரிப்பொருள் என்னாது

பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப (தொ.பொ.509)

“இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமும் எனப்பட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இது பொருள் என்று ஆசிரியன் ஓதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலனாற் செய்யப்படுவது பொருட் கூறு எனப்படும் (தொ.பொ. பேராசிரியர் உரை, ப. 414)”

முதல் ஐந்து இயல்களில் வழக்கிற்கும், செய்யுளுக்கும் உரிய பொருண்மை அமைப்பை, திணை, முதல், கரு, உரி, களவு, கற்பு என்பனவாக வகுத்துக் கூறினார். ஆனால் இலக்கியம் செய்வோர் இவ்வமைப்புக் கட்டுப்பாட்டை மீறியும் அவற்றினின்று வேறுபட்டும் செய்யுள் செய்வார் ஆதலின் அவ்வமைப்பு முறையில் அடங்காத பொதுவான பொருளை இங்கே இலக்கியம் அல்லது செய்யுளின் சிறப்பியல்பாய் விளக்குகிறார். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் போன்ற திணைகளையும் அவற்றிற்குரிய உரிப்பொருளாக புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் போன்றவற்றையும் கூறியபின் களவு, கற்பு எனக் கைகோள்களையும் வகுத்த தொல்காப்பியர் அக்கலைச்சொற்களைப் பயன்படுத்தாது இன்பம், இடும்பை, புணர்வு, பிரிவு, ஒழுக்கம் எனப் பொதுச்சொற்களைப் பயன்படுத்துவதும் மீண்டும் பொதுவாய் நிற்றல் என்று கூறுவதும் அவ்வைந்து இயல்களில் வகுத்த பொருண்மை அமைப்பை வேறு கண்ணோட்டத்தில் பார்க்கிறார் என்பதையே காட்டுகிறது. இது செய்யுள் அல்லது இலக்கியக் கண்ணோட்டம், நெடுநல்வாடை, பட்டினப்பாலை, போன்ற பத்துப் பாட்டுப் பாடல்கள் மற்றும் பலப்பல அகப்பாடல்களில் (அகம் 396, நற். 185, குறு. 73) அகப்பொருண்மையையும் புறப்பொருண்மையையும் கலந்து செய்யுள் இயற்றுவதற்கு, அமைதி கூறும் இலக்கியக்[ கண்ணோட்டம். இவை அனைத்தும் பொருளதிகாரத்தில் இலக்கியக் கோட்பாடு பற்றிப் பேசுவது செய்யுளியல் மட்டுமே மற்ற இயல்கள் மொழிப்பொருண்மை அமைப்பைப் பேசுவனவே என்பதை வலியுறுத்துகின்றன.

அடுத்து மரபியல் பேசும் செய்திகளின் இயல்பு ஆராயப்படும். மொழியமைப்பில் அடுக்கு நிலை (Paradigmatic) உறவு தொடர் நிலை (sytagmatic) உறவு என்ற இருவகை மொழிக் கூறுகளுக்கிடையே செயல் பட்டு மொழியமைப்பை விளங்கிக்கொள்ள உதவுகின்றன. அடுக்கு நிலை ஒரே சூழலில் வரும் பல்வகை அலகுகளிடையே ஒன்றன் இடத்தில் ஒன்று வரும் வேற்றுநிலை (contrastive) உறவு. இது வடிவமைப்பில் ஒரு மொழியின் ஒலியன்கள் உருபன்கள் சொல்வகைகள் ஆகியவற்றைக் கண்டறிய உதவும்.

கட்டம் - சட்டம் -தட்டம் பட்டம் என்ற சொற்கள் அடுக்கு நிலையில் க ச த ப என்ற நான்கு வல்லெழுத்துக்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன

வந்தேன் -வந்தாய் -வந்தான் -வந்தாள் - வந்தார் -வந்தது. என்ற சொற்கள் ஏன் ஆய் ஆன் ஆள் ஆர் அது ஆகிய விகுதிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

இவ்வலகுகள் ஒன்றையடுத்து ஒன்று வருவதில் உள்ள கட்டுப்பாடுகள் தொடர்நிலை உறவு.

மெய்மயக்கத்தில் ன்சு ன்ப ண்க ண்ப போன்ற எழுத்துக்கள். என்க என்ப. காண்க காண்ப போன்று தொடர்ந்து வருவதும் நக நீப த்ச போன்ற மயக்கங்கள் வர இயலாத நிலையும் தொடர்நிலை உறவைச் சேர்ந்தது. இவ்வாறு வினைமுற்றில் செய்+த்+ஆன் செய்+கிற்+ஆன் வரு+வ்+ஆன் என பகுதி + இடைநிலை + பால்காட்டும் விகுதி என்ற வகையிலேயே வருவதும் இம்முறை மாறிவர இயலாததும் தொடர்நிலை உறவு. வந்த பையன் எனப் பெயரெச்சத்தின் பின் பெயர் வருவதும் பையன் வந்த என வர இயலாததும் தொடர்நிலை உறவுகள். இவ்வுறவுகள் பொருளமைப்பிலும் வரும்.

**இது ஓர் உயரமான மரம்**

என்ற வாக்கியத்தில் உயரமான என்ற சொல்லின் இடத்தில் குட்டையான என்ற எதிர்ச்சொல் அடுக்குநிலையில் வேறுபடும். நல்ல - கெட்ட உயர்ந்த - தாழ்ந்த போன்ற எதிர்ச்சொற்கள் இவ்வாறு வேறுபடுபவை.

இது வெள்ளைச் சட்டை - இது பச்சைச் சட்டை - இது நீலச்சட்டை - இது கறுப்புச் சட்டை - இது சிவப்புச் சட்டை

என வண்ணச் சொற்கள் இவ்வாறு ஒன்றன் இடத்தில் ஒன்று வந்து அடுக்கு நிலையில் பொருள் வேறுபடுகின்றன.

"ஞாயிறு காலையில் கிழக்கே தோன்றும்" என்ற வாக்கியத்தில் உள்ள நான்கு சொற்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்நிலையில் பொருள் உறவுடையவை. ஞாயிறு மாலையில் மேற்கே மறையும் என்ற வாக்கியத்துடன் ஒப்பிட்டால் இத்தொடர் உறவின் சிறப்பு புலப்படும். இவ்வமைப்பை மாற்றினால் பிழையான வாக்கியம் தோன்றும். ஞாயிறு காலையில் மேற்கே தோன்றும்

இவ்வாக்கியம் வடிவமைப்பில் இலக்கணப் பிழையற்ற வாக்கியம். ஆனால் பொருளமைப்பில் தொடர் உறவில் பிழையானது. இவை வாக்கியத்தில் உலகப் பொருண்மையின் மாறாத இயல்பின் அடிப்படையில் பயன்படுத்தப்படுபவை. ஆனால் சில சொற்களின் தொடர் உறவுகள் மரபின் அடிப்படையில் வருபவை.

ஆவின் கன்று - குதிரைக் குட்டி - கோழிக் குஞ்சு - தென்னம் பிள்ளை போன்ற தொடர்களில் இளம்பருவப் பெயர்களை மரபின் மூலமே அறிய வேண்டும். மாறி வழங்கினால் பொருள் நிலை பிழையான வாக்கியங்கள் வரும். இத்தகு மரபு அடிப்படையிலான சொற்களின் தொடர்நிலைக் கட்டுப்பாட்டையே இளமைப்பெயர்கள் ஆண்பாற் பெயர்கள். பெண்பாற்பெயர்கள் ஆகியவற்றைப் பேசும்போது மரபியலில் கூறுகிறார். இங்கே மரபியலில் பேசப்படுவது தனிப்பொருண்மை நிலை: இது சொல்லதிகாரத்தில் பேசப்படும் வடிவப் - பொருண்மைக் கூட்டுநிலை (MorPho-Semantic Complex) யிலிருந்து வேறுபட்டது. சொல்லதிகாரத்தில் விகுதி அடிப்படையில் பால் பகுப்பு செய்யும் பொழுது உயர்திணையில் ஆண்பால் (ஆடூஉ வறிசொல்), பெண்பால் (மகடூஉ வறிசொல்), பலர்பால் (பலரறிசொல்) என வகுத்து ன், ள், ர் ஆகிய விகுதிகளால் குறித்து (தொ.சொ. 2 5 4 7) அஃறிணையில் ஒன்றறிசொல், பலவறிசொல் என வகுத்து ஒன்றறிசொல் து, று, டு ஆகிய விகுதிகளால் குறிக்கப்படுகிறது (தொ.சொல்.8) ஒன்றன்பாலில் சேவல் பெட்டை, களிறு, பிடி என ஆண் பெண் வேறுபாடு இருப்பினும் அவ்வேறுபாட்டின் அடிப்படையில் பால் வகுக்கப்பட வில்லை. ஏனெனில் அங்கு வடிவ அல்லது விகுதி நிலையில் வேறுபாடு இல்லை.

களிறு வந்தது - பிடி வந்தது

என்றே வரும். வடிவப் பொருண்மைக் கூட்டமைப்பிலிருந்து வேறுபட்ட பொருண்மை அமைப்பிற்குரியது (ஒ.நோ.[4]) இவ்வேறுபாடு. எனவே இது பொருளதிகாரத்தில் பேசப்படுகிறது.

இவை போன்ற சொற்களிடையே உள்ள மரபு பற்றிய பொருண்மை உறவுகளையே மரபியல் ஆராய்கிறது. மொழிப் பொருண்மை இயலில் இவை சொற்சேர்க்கைக் கட்டுப்பாடுகள் (coliocational restrictions) என வழங்கப்படும். இவற்றுடன் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் போன்றோருடன் மரபு பற்றித் தொடர்புடைய சொற்கள். தாவர வகைகளுள் புல்வகை மரவகைகளின் பகுதிகளைக் குறிக்கும் மரபு பற்றி வேறுபடும் சொற்கள். நூல்வகை போன்ற செய்திகளும் இவ்வியலில் பேசப்படுகின்றன. இவை பொருண்மைத் தொடர்புடைய சொல் தொகுதிகளாகும் (associated lexicon). எனவே மரபியல் பேசுவதும் பொருண்மை அமைப்புப் பற்றிய செய்தியே. இதுவரை ஆராய்ந்தவற்றின் அடிப்படையில் பொருளதிகாரத்தில் செய்யுளியல் தவிர்த்த மற்ற இயல்களில் பேசப்படுபவை மொழிப் பொருண்மை அமைப்பிற்குரிய செய்திகளே அவை வழக்கிற்கும் செய்யுளுக்கும் உரியவை. செய்யுளியல் மட்டுமே இலக்கியக் கோட் பாடுகளை ஆராய்கிறது. இவ்விளக்கமே பொருளதிகார இயல்களின் அமைப்புத் தருக்கமுறையோடு பொருந்திவருகிறது என்பது புலனாகும்.

## 6.தொல்காப்பியத் தரவு

தொல்காப்பியர் பேசும் செய்திகளை ஆராய்வது அந்நூற்குத் தரவாய் (data) ஆசிரியர் தேர்ந்தெடுத்த செய்திகளின் தன்மையின் அடிப் படையில் அமையவேண்டும். "வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" எனப் பாயிரம் கூறுவது மட்டுமன்றி மூன்று அதிகாரங்களிலும் வழக்கிற்கும் (பேச்சிற்கும்) செய்யுளுக்கும் உரிய பொது இலக்கணத்தைப் பெரும்பாலும் கூறி வழக்கிற்கே உரியனவற்றையும் செய்யுளுக்கே உரியனவற்றையும் தனியாகப் பேசுகிறார் தொல்காப்பியர் (தொ.எ. 51,214,238 தொ.சொ. 1, 27, 39, 50, 108, 195 தொ.பொ. 213, 214,292, 613,638). இந்நிலையில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பேசுவது வழக்கும் செய்யுளுமாய் அமைந்த பழந்தமிழ் இலக்கணம் எனக் கொண்டு பொருளதிகாரம் பேசுவது மட்டும் இலக்கியவிலக்கணம் எனக் கொள்வது தொல்காப்பியத்திற்கு ஆசிரியர் தேர்ந்தெடுத்த தரவின் அடிப்படையில் பொருத்தமற்றதாகும். இதற்கு மேலாக பொருளதிகார முதல் இயலான. அகத்திணையியலின் இறுதி மூன்று நூற்பாக்களில் செய்யுட்கே உரிய சிறப்பிலக்கணம் பேசப்படுகிறது. நாடக வழக்கையும் உலகியல் வழக்கையும் இணைத்துப் பாடல் இயற்றும் பொழுது அது கலிப்பாவிலும் பரிபாடலிலும் செய்யப்படும் (தொ.பொ.56): (அவ்வாறு செய்யுள் செய்யும்பொழுது) நடுவண் ஐந்திணைப் பொருளிலும் மக்களைக் குறித்துப் பாடும் பொழுது தலைவர்கள் பெயர் சுட்டிக் கூறப் படமாட்டார் (தொ.பொ. 57) புறப்பொருள் திணைகளில் தலைவர் பெயர் சுட்டப்படலாம் (தொ) பொ.58) என்று கூறுவது இதற்கு முன் 55 நூற்பாக்களில் பேசப்பட்ட செய்திகள் வழக்கிற்கும் செய்யுளுக்கும் உரிய பொதுவான பொருண்மை இலக்கணம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. பொருளதிகாரம் காட்டும் பொருண்மை அமைப்பு பழந்தமிழ் இலக்கியமரபைப் பெரிதும் ஒத்திருப்பதற்குக் காரணம் இலக்கியம் அல்லது செய்யுளையும் தரவாக கொண்டு அவற்றையும் பகுப்பாய்வு செய்து பொருண்மை அமைப்பை வகுத்ததனாலேயே. ஆயின் வழக்கிற்கும் செய்யுளுக்கும் பொதுவாகிய பொருண்மை யமைப்பு செய்யுளில் சில சமயங்களில் வேறுபடுவதைச் கருத்தில் கொண்டே பொருள் என்ற ஒரு செய்யுள் உறுப்பையும் கூறி அது "இதுவாகு இத்திணைக்கு உரிப்பொருள் என்னாது பொதுவாய் நிற்றல்" (தொ.பொ. 509) என வகுத்ததை மேலே (5) கண்டோம். எனவே பொருளதிகாரம் செய்யுளியல் தவிர்த்த மற்ற இயல்களில் பேசுவது வழக்கிற்கும் செய்யுளுக்கும் பொதுவான பொருண்மை அமைப்பு என்பதே தொல்காப்பியத் தரவின் அடிப்படையில் பொருத்தமானதாகும்.

## 7. தொல்காப்பியம் காட்டும் மொழி அமைப்பு மாதிரி

இயற்கையில் உருவான மானிட உடல், தாவரங்கள், விலங்குகள் போன்றவைகளும் மானிடரால் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புகளும் தமக்கென ஓர் ஒழுங்கமைவையும்

(system), அவற்றிற்குரிய துணை ஒழுங்கமைவுகளையும் (sub-systems) கொண்டு அமைந்துள்ளன. மொழியின் அமைவொழுங்கு என்ன, அதன் துணை ஒழுங்கமைவுகள் என்ன என்பதில் மொழியியலாரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. பல்வகை மொழியியல் சிந்தனைக்குழுவினரும் (schools of thought) மொழியின் அமைப்பை விளக்கப் பல்வகைத் துணை ஒழுங்கமைவுகளைக் கொண்ட விளக்க மாதிரிப் படிவங்களை (descriptive models) உருவாக்கியுள்ளனர். அமைப்புமுறை மொழியியலார் (structural linguists) மொழி, ஒலியமைப்பு (phonetic structure), ஒலியனமைப்பு (phonological structure) உருபொலியனமைப்பு (Morphophonemic structure), சொல்லமைப்பு (Morphological structure), தொடர் அல்லது வாக்கிய அமைப்பு (syntactic structure) இவ்விரண்டையும் உட்கொண்ட இலக்கண அமைப்பு (grammatical structure), பொருண்மை அமைப்பு (semantic structure)ஆகிய துணை ஒழுங்கமைவுகளைக் கொண்ட மாதிரிப்படிவத்தை வகுத்தனர் (ஒ.நோ. Hocket 1958, Ch.16), ஆனால் பின் சாம்ஸ்கி என்ற அறிஞரால் உருவாக்கப் பட்ட மாற்றிலக்கண மொழியியல் (Transfrmational Generative approach) அணுகுமுறை மொழியின் இலக்கணத்தை மூன்று பகுதிகளை (Components), உடையதாகக் காட்டியது. தொடரியல் பகுதி(Syntactic component)யே மொழியமைப்பிற்கு இன்றியமையாத மையப்பகுதி (Central component); ஒலியனியல் பகுதி (Phonological component), பொருண்மையியல் பகுதி (semantic component) ஆகியவை தொடரியற் பகுதிக்கு உரிய விளக்கப்பகுதிகள் (interpretive components) என விளக்கியது (Chomosky,1965). அமைப்புமுறை, மொழியியலின் ஒலியமைப்பு, ஒலியனமைப்பு, உருபொலியனமைப்பு ஆகிய மூன்றும் மாற்றிலக்கண முறையின் ஒலியனியல் பகுதிக்குள் அடக்கப்பட்டன. சொல்லமைப்பு, தொடரமைப்பு வேறுபாடுகள் ஒதுக்கப்பட்டு அவ்விரண்டும் தொடரமைப்பின் பகுதியாக ஆராயப்பட்டன. பொருண்மையியல் பகுதி தனித்தன்மை உடையதாகக் கருதப்படாமல் தொடரியல் பகுதியின் விதிகளால் உருவான வாக்கியங்களுக்குப் பொருள்விளக்கம் கூறும் பகுதியாக மட்டுமே உருவாக்கப்பட்டது. சாம்ஸ்கியின் மொழியமைப்புக் கொள்கையும் அவர் தொடர்ந்து எழுதிய நூல்களில் பல்வகை மாற்றங்களை அடைந்தது. இது மொழியின் முற்றமைப்பு இன்னும் முழுவதுமாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. புதிய ஆய்வுச் சிந்தனைகளுக்கும் மாதிரிப் படிவங்களுக்கும் இடமளிக்கும் வகையில் உள்ளது என்பதைக் காட்டுகிறது. இக்கண்ணோட்டத்தில் தொல்காப்பியம் காட்டும் மொழி யமைப்பின் மாதிரிப்படிவம் என்ன? அது இன்றைய மொழியியலார் வகுக்கும் மாதிரிப் படிவங்களோடு ஒத்திருக்கிறதா? வேறுபடுகிறதா? அப்படிவத்தின் சிறப்பு என்ன என ஆராய்வது தொல்காப்பியத்தின் சிறப்பையும் தொல்காப்பியம் காட்டும் தமிழ் மொழியியல் சிந்தனையின் பெருமையையும் உணர்ந்து கொள்ளத் துணைபுரியும்.

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களும் மொழியமைப்பின் மூன்று பகுதிகளை மொழியமைப்புக் கண்ணோட்டத்தில் காட்டுபவை. எழுத்ததிகாரம் பழந்தமிழின் எழுத்து என்ற ஒலி - வரிவடிவக் கூட்டாய் (phono-grahemic complex) அமைந்த அடிப்படை அலகைக் கொண்ட ஒலியனமைப்பைக் காட்டும் பகுதி. இது மாற்றிலக்கண மொழியிய லாரின் ஒலியனியல் பகுதியோடு ஒப்பிடத்தக்கது (ஒ.நோ. பாலசுப்பிர மணியன், 1972, 2001 (அ) ப. 37-56) அமைப்பு முறை மொழியியலின் ஒலியியல் (பிறப்பியல்) ஒலியனியல் (நூன்மரபு மொழிமரபு) உருபொலியனியல் (புணர்ச்சி பேசும் 6 இயல்கள்) ஆகிய வற்றின் செய்திகளை அடக்கியது. சொல்லதிகாரம் வடிவப்பொருள் கூட்டாகிய (morpho-semantic complex) சொல்லை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாக வாக்கிய அமைப்பையும் வாக்கியத்தின் பகுதிகளாக வரும் பெயர் வினை ஆகிய சொற்களையும் அவற்றின் பகுதிகளாக வரும். இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் ஆராய்கிறது. தொல்காப்பியருக்கு பொருளுடைய எழுத்து வடிவங்கள் அனைத்தும் சொற்களே. அள், து, ஒடு போன்ற தனித்து வராத விகுதிகள் உருபுகளும் மரத்தை மரத்துக்கு மரத்தில் போன்ற உருபேற்ற பெயர்கள் வந்தான், வருவான் , வரும், வந்த, வந்து போன்ற வினைவடிவங்களும் சொற்களே. இச்சொற்களை அடிப்படை அலகுகளாகக் கொண்ட வாக்கிய அமைப்பை வேற்றுமையின் அடிப்படையில் விளக்குகிறார். அல்வழித் தொடர் களைக் கிளவியாக்கத்திலும் (ஒ.நோ.சொல்லதிகாரம் தெய்வச்சிலையார், உரை), வேற்றுமைத் தொடர்களை வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்றியல்களிலும் விளக்குகிறார். வாக்கிய அமைப்பைப் பேசியபின் அவ்வமைப்பின் பகுதியாக வரும் சொல்லமைப்பை ஆராய்கிறார். வாக்கிய அமைப்பையும் சொல்லமைப்பையும் விளக்கும்பொழுதே அவை காட்டும் இலக்கணப் பொருண்மை (grammatical meaning) யை விளக்கிவிடுகின்றார்.

**னஃகானொற்றே ஆடூஉ அறிசொல் - (தொ.சொ.5)**

**ளஃகானொற்றே மகடூஉ அறிசொல் -(தொ.சொ.6)**

**மூன்றாகுவதே ஒடு எனப்பெயரிய வேற்றுமைக்கிளவி**

**வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே - (தொ.சொ.73)**

போன்ற நூற்பாக்கள் இலக்கணப் பொருண்மையை விளக்குகின்றன.

இடையியலில்

**கழிவே ஆக்கம் ஒழியிசைக்கிளவி என்று**

அம்மூன்றென்ப மன்னைச் சொல்லே-(தொ.சொ.247)

கொல்லே ஐயம் -(தொ. சொ.263)

அம்ம கேட்பிக்கும் - (தொ.சொ. 274)

போன்ற நூற்பாக்களும், செயற்பொருண்மை அல்லது இலக்கணப் பொருண்மையை விளக்குவனவே. உரிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் அடிச்சொற்களாய் அமையும் உலகப்பொருண்மையை விளக்கும் அகராதிச் சொற்கள் அல்லது அகராதியன்கள் (lexical words or lexemes), (ஒ.நோ.பாலசுப்பிரமணியன்,1987,மீனாட்சிசுந்தரன்,1974) அச்சொற்களுள் அருஞ்சொற்களையே உரியியல் ஆராய்கிறது." இவ்வடிப்படையில் வாக்கிய அமைப்பு, சொல்லமைப்பு, சொற்களின் இலக்கணப்பொருள் அல்லது செயற்பொருள் (functional meaning), சொற்பொருள் அல்லது அகராதிப்பொருள் (lexical meaning) ஆகியவை அனைத்தும் சொல்லதிகாரத்தில் ஆராயப்பட்டுவிடுகின்றன. அமைப்புமுறை மொழியியலின் சொல்லியல், தொடரியல் சேர்ந்த இலக்கணப்பகுதி, பொருண்மையியல் பகுதி ஆகியவையும், மாற்றிலக்கண மொழியியலாரின் தொடரியல் பகுதி, பொருண்மையியல் பகுதி ஆகியவை கூறும் செய்திகளும் சொல்லதிகாரத்தில் தொல்காப்பியரால் ஆராயப்பட்டுவிடுகின்றன. இன்றைய மொழியியலார் கண்ணோட்டத்தில் எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் மட்டுமே மொழியின் முற்றிலக்கணத்தைப் பேசிவிடுகின்றன. அதனாலேயே இன்றைய நம் நாட்டு, மேனாட்டு ஆய்வாளர் பொருளதிகாரம் பேசுவது இலக்கியக் கோட்பாடு, ரசக் கோட்பாடு, அணிக்கோட்பாடு போன்ற பல்வகைப்பொருண்மை என்ற முடிவுக்கு வந்தனர்.

மேல் (2)ல் பொருண்மையியல் ஆய்வு இன்னும் மொழியியலில் முழுமை அடையவில்லை என்பதைக் கண்டோம். பொருண்மைக் சுருத்துருவாக்கம் இலக்கணப்பொருண்மை, சொற்பொருண்மை ஆகியவற்றுள் அடங்கிவிடவில்லை. இப்பொருண்மை மொழியின் எழுத்தும் சொல்லுமாகிய வடிவமைப்பால் கட்டுண்ட பொருண்மை. அவ்வடிவமைப்புக் கூறுகளைப் பயன்படுத்தினாலும் அவற்றால் கட்டுப்படாத மொழிக் கருத்துருவாக்க நிலை ஒன்றுள்ளது. அக்கருத் துருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்தனவே பொருளதிகாரச் செய்திகள் என்பது மேல் பகுதி (3)ல் விளக்கப்பட்டது. பொருளதிகாரச் செய்திகளையும் உட்கொண்ட தொல்காப்பியம் காட்டும் மொழியமைப் பின் மாதிரிப்படிவங்கள் பின்னிணைப்பாகக் (படம் 1.1-1.5) கொடுக்கப்பட்டுள்ளன.

அவை மொழியியலார் காட்டும் மாதிரிப் படிவங்களிலிருந்து (படம் 2, 3) வேறுபடுவதைக் காணலாம். மொழிப்பொருண்மையின் வடிவமைப்பு விதிகளுக்கு உட்படாத இப்பொருண்மைப்பகுதி, எனக்குத் தெரிந்தவரையில், இதுவரை மொழியியலாரால் ஆராயப்படாதது எனவும் அப்பகுதியில் கண்டோம். உலகப்பொருண்மை, மொழிப்

பொருண்மையாகக் கருத்துருவாக்கம் பெறும் மிகப்பெரிய பகுதி இதுவே. தொல்காப்பியர் இப்பகுதியின் சிறப்பை அறிந்து இவற்றிற்குரிய அலகுகளை வகுத்துப் பொருளதிகாரத்தில் விளக்குகிறார். இப்பொருண்மை அமைப்பிற்கு மட்டும் உரிய அலகுகளாக அகம், புறம் என்ற பொருட்பாகுபாடு, குறிஞ்சி, முல்லை, வெட்சி, வஞ்சி என்ற திணைப்பாகுபாடு, முதல், கரு, உரி, களவு, கற்பு போன்றவை வகுக்கப் பட்டு இப்பொருண்மை அமைப்பு விளக்கப்படுகிறது. இப்பொருண்மை அமைப்பையும் படத்தின் மூலம் விளக்கலாம். (படம் 1.4) இப்பொருண்மை மொழியமைப்பின் பிற பொருண்மைக் கூறுகளுடன் எவ்வாறு

கட்டமைப்புப் பெறுகிறது என்பதைப் படம் (1.5) விளக்குகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் பழந்தமிழின் பொருண்மை அமைப்பை விளக்கும் பகுதி எனப் பல்வகைச் சான்றுகளுடன் விளக்கப்பட்ட இக்கருதுகோள் தமிழ் இலக்கண மரபின் பெருமையையும் தொன்மையையும் உலக மொழியியல் ஆய்வரங்கில் மிகப்பெரிய இடத்தில் ஏற்றிவைக்கும் சிறப்புடையது. உலகம் முழுவதும், பன்னாட்டுப் பன்மொழி மொழியியல் ஆய்வாளரால் இதுவரை கண்டறியப்படாத மொழியமைப்பின் மிகப்பெரியதும் முக்கியமானதுமான ஒரு பகுதி பொருளதிகாரத்தில் ஆராயப்படுவது, தமிழ் இலக்கண மரபின் பெருமையைக் காட்டுவதாகும். தொல்காப்பியர் வரையறுப்பது முற்றிலும் அவர் தனி ஆய்வு முடிவல்ல. அவர்க்கு முந்தைய, பன்னூறாண்டு நிலவிய தமிழ் இலக்கண மரபின் தொடர்ச்சி என்பது தமிழ் மரபின் தொன்மையைக் காட்டுவதாகும். பொருளதிகாரச் செய்திகளின் கொள்கைப் பின்னணி (theoretical basis) கடந்த என் பத்தாண்டு ஆய்வில் மேலும் மேலும் விளக்கம் பெற்றுவருகிறது. எனினும் இன்னும் முழுமை பெறவில்லை. அப்பின்னணி பூரணமாக ஆராயப்பட்டால் அதனடிப்படையில் ஒரு மொழிப் பொருண்மையியல் கொள்கையை வகுக்க முடியும். அக்கொள்கை, தொல்காப்பியம் காட்டும் பழந்தமிழ் இலக்கணமரபு இன்றைய மொழியியலுக்கு அளிக்கும் கொடையாய் அமையும்.

# இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியம்

பா.இளமாறன்

தமிழ்ச்சமூகத்தின் தொன்மையான வரலாறு எழுதுவதற்கு மூல இலக்கணமாக, அடிப்படை ஆதாரமாக இன்றும் நமக்கு இருப்பது தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியமே வடவேங்கடம், தென்குமரிக்கு இடைப்பட்டதான நிலப்பரப்பில் வாழ்ந்த தமிழ்மக்களின் சமூகப்பின்புலத்தையும், வாழ்வுச்சூழலையும், மொழி அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு உருவான இவ்விலக்கணம் அவர்களின் தொன்மையினையும், அடையாளத்தினையும், செம்மொழித் தகுதி யினையும் பறைசாற்றுவதற்கு இன்றுமிக முக்கியத் தரவாகத் திகழ் கின்றது. அப்படிப்பட்ட இச்செவ்விலக்கணத்தின் ஆசிரியர் தொல்காப்பியவரின் காலம் மற்றும் சமயம் குறித்து ஆய்வாளர்களிடையே பலவகையான கருத்துமுரண்கள் உண்டு.

ஒருசாரார் இவரின் காலத்தைக் கி.மு.விலும், சமயத்தைச் சைவர் என்றும், மற்றொரு சாரார் கி.பி.யிலும், சமணர் என்றும் வெவ்வேறு வகையான சான்றாதாரங்களை முன்னிறுத்தி நிறுவியுள்ளனர். இவை குறித்த தெளிவான வரையறைகள் இன்றுவரை எட்டப்படவில்லை. இருந்தபோதிலும் இவையெல்லாவற்றையும் கடந்து தொல்காப்பியம் எனும் இவ்விலக்கணப்பிரதி இத்தனை நூற்றாண்டுகள் நிலைபெற அதன் திட்டமிட்ட முறையியலான ஒழுங்கமைவு மற்றும் செய்நேர்த்தி, எல்லாக் காலத்திற்குமான பொருத்தப்பாடு, பல்வேறு காலங்களில் எழுந்த பலப்பல உரைகள், முதனூல் வழிநூல் என்ற மரபில் பிற்கால இலக்கணங்களுக்கு முதனூலாக நின்றமைதல், தொடர்ச்சியாக வெளிவந்த பலபதிப்புகள், பலநிலை வாசிப்புச் செயல்பாடுகள் ஆகிய அனைத்தும் மிகமுக்கியக் காரணங்களாக நின்று விளங்குகின்றன.

தொல்காப்பிய அமைப்பை நோக்கும்பொழுது எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களாகப் பகுக்கப்பட்டு அதிகாரத்திற்கு ஒன்பது இயலென மொத்தம் 27 இயல்களை உள்ளடக்கி அமைகின்றது. எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் தமிழ்மொழியின் அமைப்பையும் அவை செயல்படும் முறைமையினையும் ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவந்து நிறுத்தி மொழிக்கான பன்முகப் பரிமாணங்களை வரையறை செய்கிறது. பொருளதிகாரமோ இம்மொழியைப் பேசக்கூடிய மக்களின் வாழ்நிலையை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து அவற்றைத் திணைகளின் அடிப்படையில் வகுத்து இனக்குழுச் சமூகத்திற்கான பல படிநிலைத்தன்மைகளை விளக்கி அமைகிறது.

காலமாற்றத்தினாலும், மொழியின் அமைப்பு மாற்றத்தினாலும் இப்பிரதியைத் தொடர்ந்து விளங்கிக்கொள்ள, விளக்கிச்சொல்ல உரையாசிரியர்கள் பலர்

முற்பட்டுள்ளனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் இளம்பூரணர். பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார். கல்லாடர் ஆகியோராவர். இப்படியாக உரையாசிரியர்களின் உரைகளின்வழி வேறொரு தளத்தினாலான வாசிப்புமுறையைப் பெற்ற தொல்காப்பியம் முதன்முதல் சுவடியிலிருந்து 1847ஆம் ஆண்டு அச்சுச்சாதனம் ஏறி நூலாக வடிவம் பெற்றது. இம்முதல் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்து வெளியிட்டவர் மழைவை மகாலிங்கையராவார். இவரைத்தொடர்ந்து 1858ஆம் ஆண்டு சாமுவேல்பிள்ளை. வால்ற்றர் ஜாயீஸ் என்பவர் உதவியுடன் தொல்காப்பிய மூலம் முழுவதையும் நன்னூலோடு ஒப்பிட்டுத் "தொல்காப்பிய நன்னூல்" என்றதொரு பதிப்பை வெளியிட்டார்.

இப்பதிப்புத்தான் "தொல்காப்பியம் மூலம்" முழுவதையும் உள்ளடக்கி வெளிவந்த முதல் அச்சுப்பதிப்பு ஆகும். இதைத் தொடர்ந்து தொல்காப்பியத்திற்குத் தோன்றிய பல்வேறு உரைகளோடு கூடிய அச்சுப்பதிப்புகள் தொடர்ச்சியாக இன்றுவரை வெளியிடப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறாக அச்சுப்பரவலாக்கம் - நூல்களின் உருவாக்கம் என்ற இந்தப் பின்புலத்தில் தொல்காப்பியம் 20ஆம் நூற்றாண்டில் எவ்வெத் தன்மைகளில் வாசிப்பு முறையைப் பெற்றன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை இனி விவாதிக்கவுள்ளது. இவற்றோடு 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த சில ஆய்வுகள் குறித்தும் இதில் இணைத்துப் பேசப்படவுள்ளது.

## பத்தொன்பதாம் நூற்றாண்டும் தொல்காப்பியமும்

தமிழ்மரபில் தொல்காப்பியம் தோன்றிய காலந்தொட்டுப் பல நூற்றாண்டுகளைக் கடந்து வந்திருந்தபோதிலும் 18ஆம்நூற், 19ஆம்நூற்றாண்டின் முதல்பகுதி ஆகிய காலப்பகுதிகளில் அது பெற்றிருந்த தன்மையும், வாசிப்புச் செயல்பாடும் கவனத்திற்குரிய ஒன்றாக நம்முன் உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளில் தொல்காப்பியப் பயில்வு இருந்த முறைமையினை 1885இல் சி.வை.தா. வெளியிட்ட தொல்காப்பியப் பதிப்புரையில் காணமுடிகிறது. இதில் சி.வை.தா. தொல்காப்பியக் கல்வி இக்காலங்களில் முற்றிலுமாக மறக்கடிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையை விரிவாகப் பதிவு செய்கிறார். வரதப்ப முதலியார் காலத்திலுந் தொல்காப்பியங் கற்றவர்கள் அருமையென்பது அவர் தந்தையார் வேங்கடாசல முதலியார் அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையரானபோது பிறையூரிற் றிருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறாரென்று கேள்வியுற்றுத்

தமது ஊரைவிட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம்போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையானும், வரதப்பமுதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவரென்பதனாலும்,அது காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்பமுதலியாரென்று பெயர் வந்தமையானும் பின்பு அவர் காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கண சமுசயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையானும் நிச்சயிக்கலாம்.(தாமோதரம் - பக். 121,122)

சி.வை.தா.வின் இந்தக்கூற்று தமிழ்ச்சமூகத்தின் இருதலைமுறைகளில் நிலவிய தொல்காப்பிய வாசிப்பினைப் படம்பிடித்துக்காட்டுவதாக அமைகிறது. இதனைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொல்காப்பியம் அதன் உரைகளோடு பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்புகளில் தான் தொல்காப்பியம் பற்றிய சிறுசிறு அறிமுகங்கள் இடம்பெறலாயின. இக்காலங்களில் தொல்காப்பியத்திற்கு ஒன்பது பதிப்புகள் வெளிவந்திருந்த நிலையில், அவற்றில் சி.வை.தா.வின் பதிப்புகளிலேயே பதிப்பு முன்னுரைகள் இடம் பெற்றிருந்தன. இப்பதிப்புரைகளில் சி.வை.தா. தொல்காப்பியம் குறித்தும் அதற்கு உரையெழுதியோர் குறித்தும் விவரங்களை வரிசைப்படுத்துகிறார். இதே சமயத்தில் 1856, 1875இல் வெளிவந்த கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்திலும் தொல்காப்பியம் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருப்பது இங்கு சுட்டவேண்டிய ஒன்று.

இந்தப் பின்புலத்தில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் தொல்காப்பிய வாசிப்பை முன்னெடுத்தவர்களாக பதிப்பாசிரியர்களும் கால்டுவெல் போன்ற அறிஞர்களுமே முன்னத்தி ஏராய் செயல்பட்டுள்ளனர். இவ்வாசிப்பு முழுமையானதல்ல ஆனால் அடிப்படையானது

## இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியம்

தமிழ்மொழி வரலாற்றிலும், தமிழ்ச்சமூக வரலாற்றிலும் இருபதாம் நூற்றாண்டு அதற்கு முந்தைய நூற்றாண்டுகளிலிருந்து புதியமரபை உள்வாங்கி செயல்படத் தொடங்கியது.

அச்சுக் கருவியின் அபரிமிதமான வளர்ச்சி - ஐரோப்பியக் கல்வி முறை - மேலைநாட்டு அறிஞர்களின், தமிழக அறிஞர்களின் புதிய வாசிப்பு முறை - உரைநடை வளர்ச்சி - இதழ்களின் உருவாக்கம் மற்றும் பரவலாக்கம் - நூல்களின் பெருக்கம் - கல்வியியல் நிறுவனங்களின் வளர்ச்சி ஆகியன இந்நூற்றாண்டின் தனித்துச் சுட்டப்பட வேண்டிய அம்சங்களாக அமைகின்றன.

இந்தத் தளத்தில் 20ஆம் நூற்றாண்டு, தொல்காப்பியம் எனும் பனுவலை எவ்வெத்தன்மையில் அணுகியது என்பதைக் கூர்ந்து அவதானிக்க வேண்டிய தேவையுள்ளது.

## செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில்

1901ஆம் ஆண்டு பாண்டித்துரைத் தேவரவர்களால் மதுரையில் "நான்காம் தமிழ்ச்சங்கம்" தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் உருவாக்கப்பட்ட பிறகு இதன் முக்கியச் செயல்பாடுகளில் ஒன்றாகச் 'செந்தமிழ்' எனும் இதழ் தொடங்கப்பட்டது. இச்செந்தமிழ் இதழ் வழியாகத்தான் தொல்காப்பியம் குறித்த விவாதங்கள் முதன்முதல் முன்னெடுக்கப் பட்டன.

தொல்காப்பியம் பற்றிய விவாதத்தை ஆய்வுநிலையில் செந்தமிழின்வழி நிகழ்த்தியவர் அதன் முதல் பத்திராசிரியர் இரா. இராகவையங்கார் அவர்களே.

1885இல் சி.வை.தா. வெளியிட்ட பொருளதிகார உரைப்பதிப்பு முழுவதும் நச்சினார்க்கினியருடையதல்ல. அதன் பின்னான்கு இயல்கள் பேராசிரியர் என்னும் வேறொரு உரையாசிரியரால் எழுதப்பட்டது என்பதை 1902ஆம் ஆண்டின் இறுதியில் முதல் இதழாக வெளிவந்த "செந்தமிழ்" இதழில் இரா. இராகவையங்கார் அவர்கள் அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரைகாரர் பேராசிரியரென்பது என்று தலைப்பில் பதிவுசெய்கிறார். இவ்விவாதமே தொல்காப்பியம் ஆராய்ச்சி வரலாற்றில் முதல்நிலை விவாதமாக அமைந்தது எனலம்

இதனைத் தொடர்ந்து தொல்காப்பிய நூலின் அமைப்பு, அதன் ஆசிரியர், காலம், சமயம், உரையாசிரியர் மரபு ஆகியன குறித்த விவாதங்களும் மேலெழுப்பப்பட்டன. "செந்தமிழ்" இதழோடு 1923இல் தொடங்கப்பட்ட "செந்தமிழ்ச்செல்வி" இதழும், 1925இல் தொடங்கப் பட்ட தமிழ்ப்பொழில் இதழும் தொல்காப்பிய ஆய்வை வளப்படுத்து வதில் இணைந்து செயல்படத் தொடங்கின.

இம்மூன்று இதழ்களிலும் இரா. இராகவையங்கார். மு. இராகவையங்கார், எஸ். வையாபுரிப்பிள்ளை. வே. முத் சாமி ஐயர், ந.மு. வேங்கடசாமி நாட்டார். கே.எஸ். நவநீதகிருஷ்ணபாரதி, மயிலை சீனி. வேங்கடசாமி, நாராயணையங்கார், டி.என். அப்பனையங்கார், பி.சா.சு., தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், நீ. சுந்தசாமிப்பிள்ளை உள்ளிட்ட இன்னும் பலரும் மேற்கொண்ட ஆய்வுகள் தொல்காப்பிய ஆய்வில் புதிய பல பாதைகளை உருவாக்கித்தந்தன.

இதில் வையாபுரிப்பிள்ளையின் தொல்காப்பியம் பற்றிய கட்டுரைகள் பல்வேறு சர்ச்சைகளையும், விவாதங்களையும் பலர் நிகழ்த்த அடிப்படைக் காரணமாய் அமைந்தது. இக்கட்டுரைகளில் தொல்காப்பியரின் காலத்தினைக் கி.பி.5 என்றும் சமயத்தைச் சமணர் என்றும் வையாபுரிப்பிள்ளை கூற அவருக்கு மாற்றாகப் பதிலளிக்கும் விதத்தில் அறிஞர்கள் பலரும் தொல்காப்பியத்திலிருந்து தரவுகள் பலவற்றைச் சேகரித்து விவாதிக்கத் தொடங்கினார். இந்த விவாதங்கள் தொல்காப்பியரின் காலத்தை மிகவும் தொன்மையானது என்றும் சமயத்தைச் சைவம் என்றும் கூறி கருத்துரைத்தது. இதில் விரிவான விவாதத்தை நிகழ்த்தியவர்களுள் மயிலை சீனி வேங்கடசாமி உள்ளிட்ட பல அறிஞர்கள் இடம்பெறுகின்றனர். இவ்வாறாகத் தொல்காப்பியத்தின் அடிப்படை சார்ந்த பல கருத்துவாதங்கள் பலநிலைகளில் முன்னெடுக்கப் பட்டன.

## தொல்காப்பியம்: அறிமுகம் : விவரணை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் குறித்த அறிமுகங்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக அமைய 20ஆம் நூற்றாண்டிலோ அதன் வளர்ச்சி பல படிநிலைகளைக் கண்டது. இதற்குப் பல காரணங்கள் இந்நூற்றாண்டில் இருந்தபோதிலும் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியையே மிகமுக்கிய முதன்மைக்காரணமாகச் சுட்டவேண்டியுள்ளது. 19ஆம் நூற்றாண்டின் கல்விப்புலத்தில் நன்னூலே பெரும்பங்காற்றியுள்ளதை அதற்கு வெளிவந்த பதிப்புகள் மற்றும் பாடநூல்கள் வழியாகப் பெறமுடிகிறது. ஆனால் தொல்காப்பியத்திற்கோ 20ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியிலேதான் அதற்கான களோடு கூடிய பதிப்புகள் வெளியிடப்படும் பணி நிறைவடைந்தது.

இந்தப் பின்புலத்தில் தொல்காப்பியம் பாடத்திட்டத்தில் இடம்பெறத் தொடங்கியது. இவைதவிர, தமிழரின் தமிழ்ச்சமூகத்தின் தொல்பிரதியாகவும் தொல்காப்பியம் அடையாளப்படுத்தப்பட்டது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 20ஆம் நூற்றாண்டில் தொல்காப்பியத்திற்கான பல அறிமுகநூல்களும், விவரணை நூல்களும் எழுதப்பட்டன.

தொடக்கக் காலத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்து முத்துசாமி ஐயர், பெயர் விழையாத ஒருவர். மு. இராகவையங்கார், கா.சு. பிள்ளை ஆகியோர் விவரணை நிலையில் தங்களுடைய ஆய்வுகளை முன்னெடுத்தனர். இவ்வாய்வுகள் தொல்காப்பியத்தின் ஒரு பகுதியாயமைந்த பொருளதிகாரத்தினைத் தமிழர் வாழ்வோடு இணைத்து விவாதித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து தொல்காப்பியத்தைப் புறநிலையிலும், அகநிலையிலும் நின்று விளக்கும் நூல்களாகப் பலவற்றைச் சுட்டலாம். அவற்றில் லெ.ப.கரு. இராமநாதனின் “தொல்காப்பியச் செல்வம், ந. சுப்புரெட்டியாரின் “தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை”

அ.கி. நாயுடுவின் “தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்”, ப. அருணாசலத்தின் “தொல்காப்பியம்”, சி. இலக்குவனாரின் “தொல்காப்பிய ஆராய்ச்சி“. புலவர் குழந்தையின் “தொல்காப்பியர் காலத் தமிழர்“, சாமி சிதம்பரனாரின் “தொல்காப்பியத் தமிழர், தமிழோ வியனின் “தொல்காப்பியர் காலம்”, மொ. அ. துரைஅரங்கனாரின் “தொல்காப்பிய நெறி” வ. சுப. மாணிக்கனாரின் “தொல்காப்பியக் கடல்”, பொற்கோவின் “தொல்காப்பிய அறிமுகம்”.தமிழண்ணலின் “தொல்காப்பியர்”,க. வெள்ளைவாரணாரின் “தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்”, சோ.ந. கந்தசாமியின் “தொல்காப்பியத் தெளிவு”. கு.மோகனராசுவின் “தொல்காப்பிய விருந்து”.க.ப. அறவாணனின் “அற்றைநாட் காதலும் வீரமும்”, முதலான இன்னும் பல நூல்கள் தொல்காப்பியம் குறித்த பன்முகத் தரவுகளை அறிமுக நிலையிலும், விவரணை நிலையிலும், ஆராய்ச்சி நிலையிலும் விரிவாகப் பதிவுசெய்துள்ளன.

இந்நூல்கள் தவிர சோம. இளவரசு, இரா. இளங்குமரன் ஆகியோரின் இலக்கண வரலாறுகள், நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய வரலாறுகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவைகளும் தொல்காப்பியம் குறித்து அறிமுகநிலையில் நின்று தரவுகள் பலவற்றை வழங்குகின்றன.இவைதவிர ஏராளமான கட்டுரைகள் தொல்காப்பியத்தின் பன்முகங்களை விவரித்து நிற்கின்றன.

## தொல்காப்பியமும் ஒப்பீட்டு ஆய்வுகளும்

தொல்காப்பியம் குறித்து ஒப்பீட்டு நிலையில் பல ஆய்வுகள் தமிழில் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவ்வாய்வுகள் இரண்டு நிலைகளில் அமைந்து காணப்படுகின்றன.

அ. பிறமொழி இலக்கண நூல்களோடு ஒப்பிடல்

ஆ. தமிழில் தோன்றிய பிற இலக்கண நூல்களோடு ஒப்பிடல், தொல்காப்பியத்தைப் பிறமொழிகளில் உள்ள இலக்கண நூல்களோடு ஒப்பிட்டுக் கட்டுரைகள் பல எழுதப்பட்டுள்ளன. இவற்றில் வடமொழி யில் உள்ள பாணினியோடு தொல்காப்பியத்தை ஒப்பிட்டு அவற்றின் தனித்தன்மைகள் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் கு. மீனாட்சி யின் “அஷ்டாத்தியாயிலும், தொல்காப்பியத்திலுமுள்ள இலக்கணக் கோட்பாடுகள்” க.பாலசுப்பிரமணியனின் “தொல்காப்பியமும், பாணினீயமும் ஓர் ஒப்பாய்வு” முதலான இன்னும் பல கட்டுரைகள் இத்துறையில் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியவை.

இதேபோல் தொல்காப்பியத்தைத் தமிழில் தோன்றிய பிற இலக்கண நூல்களோடு ஒப்பிட்டுப் பல ஆய்வுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்குப் பிறகு தமிழில் 30க்கும் மேற்பட்ட இலக்கண நூல்கள் இன்று கிடைக்கின்றன. இவ்விலக்கண நூல்களோடு தொல்காப்பியத்தைப் பலநிலைகளில் ஒப்பிட்டுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் தொல்காப்பியத்தை நன்னூலோடும், நேமிநாதத்தோடும், வீரசோழியத்தோடும் என இன்னும் பல இலக்கண நூல்களோடும் ஒப்பிட்டு ஆய்வுகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இவ்வாய்வுகள் அனைத்தும் தொல்காப்பியத்தின் காலப்படிநிலை வளர்ச்சியைப் பதிவுசெய்வதோடு தொல்காப்பியம் பிற்காலங்களில் ஒன்றுபடும். வேறுபடும் இடங்களையும் துல்லியமாகப் பதிவுசெய்கிறது.

## தொல்காப்பியமும் மொழியியலும்

19ஆம் நூற்றாண்டில் எல்லிஸ், கால்டுவெல் உள்ளிட்ட மேலைநாட்டு அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்ட மொழியியல் சார்ந்த அடிப்படை ஆய்வுகள் 20ஆம் நூற்றாண்டில் பெருவளர்ச்சி பெற்று அமைந்தது. இம்மொழியியல் சார்ந்த துறையில் இருபதாம் நூற்றாண்டில் பல அறிஞர்கள் தலைசிறந்த நூல்கள் பலவற்றை உருவாக்கியுள்ளனர்.

இவர்கள் தொல்காப்பியத்தை மொழியியல் நோக்கில் அணும் அவற்றின் பன்முகத்தன்மைகளை உலகறியவும் செய்தனர். தெபொம் வி.ஐ. சுப்பிரமணியன், கு. மீனாட்சி, மோ. இஸ்ரேல், அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம், சு. பாலசுப்பிரமணியன். இ. முருகையன் என இன்னும் பலர் தொல்காப்பியத்தை மொழியியல் நோக்கில் ஆராய்ந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

செ.வை. சண்முகத்தின் “தொல்காப்பியத் தொடரியல்“, அகத்தியலிங்கத்தின் “தொல்காப்பிய உருவாக்கம்“, “தொல்காப்பியக் கவிதையியல்“, “தொல்காப்பிய மொழியியல்“ (ப-ர்).இஸ்ரேலின் Treatment of Morphology in Tolkappiyam' முதலான பல நூல்கள் இத்துறையில் தனித்து விளங்குகின்றன. இவை தவிர தொல்காப்பியத்தை மொழி. யியல் நோக்கில் விவாதித்த ஆய்வேடுகள். நூல்கள், கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

## தொல்காப்பியமும் பிற ஆய்வுகளும்

தொல்காப்பியம் குறித்து வரலாறு, சமூகவியல், மானிடவியல் கவிதையியல், நவீனகோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து பல ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அவற்றில் தொல்காப்பியத்தின் பொருளதிகாரமே இவ்வாய்வுகள் நிகழ்வதற்கு மிகப்பெரிய அடித்தளமாக அமைந்தது எனலாம்.

தொல்காப்பியத்தில் உள்ள மனிதர்களின் பாகுபாடு, திருமணமுறை பெண்பற்றிய பதிவுகள், கவிதையியலுக்கான உருவாக்கமுறை ஆகியவை குறித்துப் பல கட்டுரைகள் விவாதித்துள்ளன.

சின். கோதில் மொழியனின் - “தொல்காப்பியத்தில் சாதிநெறி”, பெ.நா. கமலாவின் - “தொல்காப்பியத்தில் நவீன சிந்தனைகள்”, பொ.வேல்சாமி, அ.மார்க்ஸின் - “தொல்காப்பிய உருவாக்கத்தின் பண்பாட்டு அரசியல்”, நாகார்ஜுனனின் - “மெய்ப்பாட்டியல் நோக்கில் மேற்கத்திய புனைகதை”, எம்.டி. முத்துக்குமாரசாமியின் - “மெய்ப்பாட்டியலின் செய்திக் குறிப்பினை உயிர்த்தல்” ஜமாலனின் “தமிழ்மொழியும் தமிழ்ச் சமூகமும்”. கா.சிவத்தம்பியின் “தொல்காப்பியமும் கவிதையும்”, ராஜ்கௌதமனின் - “அறிவுட் பொதுமையாக்கத்தில் தொல்காப்பியக் கொடை”, பிரேம் ரமேஷின் “தொல்காப்பியம் உருவாக்கும் உடல் / பிரதி வரைபடத்தின் கோடுகளைக் கலைப்பதும் ஆங்காங்கு நீட்டி வளைப்பதும்” மகாராசனின் “தொல்காப்பியத்தில் சமூகப்படிநிலைகள்”, “தொல்காப்பியத்தில் பெண் ஆண் பற்றிய கருத்தாக்கம்” முதலான நூல்களும் கட்டுரைகளும் தொல்காப்பியத்தை நவீனகால வாசிப்புக்கு உட்படுத்தி வளப்படுத்தியுள்ளன.

## தொல்காப்பியம் : மொழிபெயர்ப்புகள்: உரைகள்:

20ஆம் நூற்றாண்டில் தொல்காப்பியம் பல நிலைகளில் ஆராயப்பட்டதோடு அவற்றைப் பிறமொழிகளில் மொழிபெயர்க்கக் கூடிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இம்மொழிபெயர்ப்புகள் தொல்காப்பியத்தை வேறொரு தளத்தில் கொண்டு செல்வதற்கு ஏதுவாக அமைந்தன. மலையாளம் உள்ளிட்ட சில இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் பல மொழிபெயர்ப்புகள் தொல்காப்பியத்திற்கு வெளி வந்துள்ளன. ஆனால் இவை போதுமானதல்ல. அனைத்து இந்திய மொழிகளிலும், அயல்மொழிகளிலும் தொல்காப்பியத்தின் நேர்த்தியான மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவேண்டும். அவ்வாறு வெளி யிட்டால்தான் தமிழரின் தொன்மைமரபு அடையாளப்படும்.

தொல்காப்பியம் குறித்து இடைக்காலங்களில் பல வாசிப்பு முறைகள் உருவாகின. அவற்றில் உரையாசிரியர்களின் வாசிப்புச் செயல்பாடு தமிழ் மரபில் தனித்துச் சுட்டத்தக்கது. தொல்காப்பியத்திற்கு உருவான இவ்வாசிப்புகள் அதாவது உரைகள் குறித்து 20ஆம் நூற்றாண்டில் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாய்வுகள் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் அதற்கான பொருள்கோடலை எவ்வாறு தங்கள் காலங்களில் நிகழ்த்தினர் என்பதை மதிப்பிடுவதாக அமைந்து காணப்படுகின்றது

தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர். சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரின் உரைகளை மதிப்பிட்டு அவர்களின் உரைத்திறன். உரைநெறி எனும் நிலைகளில் ஆய்வுகள் நூல்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன. அவை சா. கிருட்டினமூர்த்தியின் "இளம்பூரணர் உரை", மு. சந்தானத்தின் "பேராசிரியர் உரைத்திறன்". சோ.ந. கந்தசாமியின் "தெய்வச்சிலையார் உரைத்திறம்", க குருசாமியின் "இளம்பூரணர் உரைநெறி", "பேராசிரியர் உரைநெறி", "சேனாவரையர் உரைநெறி", "நச்சினார்க்கினியர் உரைநெறி" ஆகியன.

## தொல்காப்பிய அடைவுகள்

தொல்காப்பியம் பற்றிய பல்வேறு தரவுகளைப் பலநிலைகளில் தொகுத்து அடைவுகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வடைவுகள் தொல்காப்பியத்தை ஆராய்வதற்கான அடிப்படைக் கருவிநூல்களாகவும் செயல்பட்டுள்ளன.

இவற்றுள் திரு. ம.ஆ. நாகமணி அடிகளாரின் 'தொல்காப்பியப் பொருளதிகார மேற்கோள் விளக்க அகராதி". க.ப. அறவாணனின் "தொல்காப்பிய ஒப்பியல்", அவரது துணைவியாருடன் சேர்ந்து வெளியிட்டுள்ள "தொல்காப்பியக் களஞ்சியம்", வ. ஜெயதேவன், ப.வெ. நாகராஜனின் "தொல்காப்பிய அகராதி", ப.வெ. நாகராஜன் மற்றும் விஷ்ணுகுமாரனின் "தொல்காப்பியச் சிறப்பகராதி", இரா. இளங் குமரனின் "தொல்காப்பியம் சொற்பொருட் களஞ்சியம்", கூ.த. திருநாவுக் கரசு. மு. சண்முகம் பிள்ளை, ச. மெய்யப்பன், கோ, கிருட்டிணமூர்த்தி, ச.வே. சுப்பிரமணியன், மதுகேஸ்வரன் ஆகியோரின் "தொல் காப்பியத்தின் பதிப்பு அடைவுகள்" என இன்னும் பல கருவி நூல்கள் இத்துறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நூல்கள் தொல்காப்பியம் குறித்து நிகழ்த்தப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான செயல்பாடுகளைப் பதிவுசெய்வனவாகவும் அவற்றின் தரவுகளை வழங்கக் கூடியனவாகவும் அமைகின்றன.

இவை தவிர 20ஆம் நூற்றாண்டில் குறிப்புரை எழுதியவர்கள், புத்துரை எழுதியவர்கள் என தனியே ஒரு நீண்ட பட்டியல் காணப்படுகிறது

நிறைவாக

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தொல்காப்பியப் பனுவல் பெற்றிருந்த தன்மையிலிருந்து 20ஆம் நூற்றாண்டில் அது அடைந்த பன்முகவாசிப்பு முறைமையினை மேற்சொல்லப்பட்ட விவரங்களின் வழி புரிந்துகொள்ளமுடியும். இக்கட்டுரையில் அந்தந்தப் பகுப்பின்கீழ் கட்டுரையின் பக்கஅளவு கருதி சான்றுக்காகவே சில நூல்களும்,

கட்டுரைகளும் எடுத்தாளப்பெற்றுள்ளன. இவைதவிர ஏராளமான அறிஞர்களின் நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் தொல்காப்பியம் குறித்து வெளிவந்துள்ளன. அவையனைத்தும் குறித்து ஒட்டுமொத்தமாக வேறொரு தருணத்தில் பதிவுசெய்யப்படும். பதிவு செய்யப்பட்ட இவற்றை நோக்கும்பொழுது தொல்காப்பியப் பனுவல் வாசிக்கப்பட்ட முறைமையை ஓரளவு அவதானிக்கமுடிகின்றது. இந்த வாசிப்பை நாம் கையில்கொண்டு இனி தொல்காப்பியம் அதாவது 21ஆம் நூற்றாண்டில் எவ்வெந்நிலைகளில் வாசிக்கப்படவேண்டும். ஆராயப்பட வேண்டும் என்பதை நோக்கிய பயணமாக அமையவேண்டும்.

பயிற்சி வினாக்கள்

1. தொல்காப்பியம் எழுந்ததன் நோக்கம் - கட்டுரைக்க
2. தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியம் குறித்துக் கட்டுரைக்க
3. கா.சிவத்தம்பியின் கட்டுரையை விவரிக்க
4. இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியத்தின் வளர்ச்சியை விவரிக்க

**பாட நூல்**

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , சென்னை

**பார்வை நூல்கள்**

1. கா. சிவத்தம்பி, 2007 - தொல்காபியமும் கவிதையும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு
2. ஜீன் லாசரஸ், கு பகவதி (ப.ஆ), 1998 – தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், கருத்தரங்கக் கட்டுரைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. அகத்தியலிங்கம், 1999 - தொல்காப்பியம் கவிதையியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை
4. வ.சு.ப மாணிக்கம், 2010 - தொல்காப்பியப் புதுமை, ராமையா பதிப்பகம், சென்னை
5. புலவர் குழந்தை, 2007 - தொல்காப்பியர் காலத் தமிழர், பூப்புகார் பதிப்பகம், சென்னை
6. பா. இளமாறன், 2008 - தொல்காப்பியம் பன்முக வாசிப்பு ‘மாற்று’ வெளியீடு, எண் 176, 2 பிளாக், தொல்காப்பியர் தெரு, எம்.எம்.டி.ஏ காலனி, சென்னை – 106 (தொ.பே.எண் 9382853646)
7. கா. சிவத்தம்பி, 1982 - இலக்கணமும் சமூக உறவுகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு

**தா. கிருபா வெள்ளையம்மாள்**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை**

**சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி – 627 007**

**9788928517**